உள்வாரியான மீட்டெழுச்சி வெளிவாரியான துணிவு

அரச ஈட்டு முதலீட்டு வங்கி
வருடாந்த அறிக்கை 2023

உள்ளடக்கம்

நிதியியல் சிறப்பம்சங்கள்	3
நிதியியல் மீளாய்வு	4
தலைவரின் செய்தி	8
பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரியின்	12
பணிப்பாளர்கள் சபை	16
அரச ஈட்டு முதலீட்டு வங்கி	19
கூட்டாண்மை ஆளுகை	22
சபை கணக்காய்வுக் குழு அறிக்கை	44
சபை பெயரிடல் குழு	46
சபை மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு அறிக்கை	47
சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு	48
இடர் முகாமைத்துவம்	51
மனித வள முகாமைத்துவம்	55
2023 எல்லைகளுக்கு அப்பால் - மீளாய்வில் கூட்டாண்மை மற்றும் கருவி வணிகநாமங்கள்	57
பணிப்பாளர்களின் கூற்று	60
நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களது கூற்று	63
நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு	67
நிதி நிலைமைக் கூற்று	74
வருமானக் கூற்று	75
விரிவான வருமானக் கூற்று	75
உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று	76
காசுப் பாய்ச்சல் கூற்று	77
கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளும்	78
பத்து வருட புள்ளிவிபரச் சுருக்கம்	126
குறிப்புகள்	127
நிறுவனத் தகவல்	*உள்ளக பின் அட்டை*

உள்வாரியான மீட்டெழுச்சி வெளிவாரியான துணிவு

கடுஞ் சோதனையான நேரத்தில், எந்தவொரு வணிகமும் இடைநிறுத்தி தாம் கடந்து வந்த பயணத்தையும் எதிர்காலத்திற்கான அவர்களது திட்டங்களையும் ஆய்வுசெய்யக்கூடிய ஆற்றலானது மிகவும் முக்கியமானதாகும். வெளித்தோற்றத்தில் எதிர்காலத்தினை கணிக்கவியலாத சவால்களுக்கு முகங்கொடுப்பதற்காக, எமது பங்காளிகளுக்கும் அவர்கள் எம்மில் வைத்துள்ள நம்பிக்கைக்கும் எமது பங்கினை நிறைவேற்றுவதற்கு துணைபுரிவதில் ஒருங்கிணைந்துள்ள எமது உள்ளக செயன்முறைகளை நாம் கூர்ந்து நோக்கினோம். எமது டிஜிட்டல் வழிமுறைகள் மற்றும் எமது தொழில் நெறிமுறைகளை உயர்த்தும் வேளை நாம் எமது வாடிக்கையாளர்களுக்கு, கருணை, முன்னோக்கிய சிந்தனை மற்றும் பொருந்துதன்மை ஆகிய தனித்துவமான கலவையுடன் துணைபுரிந்தோம். மீட்டெழுச்சியின் இந்த உள்வாரியான காரணிகள் எமது நாளாந்த செயற்பாடுகளில் வெளிவாரியாக பிரகாசித்துள்ளதுடன், இவ்வாண்டுக்கான எமது சாத்தியமான துணிச்சலான கண்ணோட்டத்தினை விளைவித்துள்ளது.

தொலைநோக்கு

பாவனையாளர் நிதி சந்தையில் தலைமை தாங்குபவர்களாக இருப்பதுடன், அபிவிருத்தி வங்கியியலில் தேசத்தின் பெறுமதிமிக்க பங்காளராக இருப்பதும்.

செயற்பணி

அரச ஈட்டு முதலீட்டு வங்கியியானது தேசத்தின் முதன்மையான வீட்டு வசதி வங்கியாகவும், அபிவிருத்தி வங்கியாகவும், மதிப்புமிக்க பங்குதாரராகவும் தொடர்ந்து இருக்கும்

வாடிக்கையாளர்	: அதி உயர்வான வாடிக்கையாளர் சேவை, புத்தாக்கம், தரம், மற்றும் காலத்திற்கேற்ற தொழில்நுட்பம் என்பவை ஊடாக, எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அவர்களின் வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி நிதி தேவைகளுக்கு பொருத்தமான, கவர்ச்சிகரமான நிதியியல் தீர்வுகளை வழங்கும் கடப்பாடுடையவர்களாகவும் நாங்கள் இருக்கின்றோம்.
வணிக பங்காளர்கள்	: உறுதியான பாதுகாப்பு மற்றும் நெகிழ்தன்மையுடன் முதலீடுகளுக்கு சிறந்த வருமானத்தை வழங்குகின்றோம்.
ஊழியர்கள்	: நியாயமான மதிப்பீட்டுக் குழுக் கலாச்சாரத்துடன் கூடிய ஆரோக்கியமானதும், உற்பத்தியாற்றல் மிக்கதுமான பணிச் சுற்றாடல் ஒன்றை உருவாக்கும் அதே நேரத்தில். எமது பணியாளர்கள், தம்மை முழுமையான ஆற்றலுடையவர்களாக வளர்த்துக் கொள்வதற்கும், தமது வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றிக் கொள்வதற்கும் தேவையான வாய்ப்புகளையும் நாங்கள் வழங்குகின்றோம்.
பங்குதாரர்கள்	: பங்குதாரர்களின் நலன்களை பாதுகாக்கும் அதே நேரத்தில், இலாபகரமான வளர்ச்சியினூடாக பங்குதாரர்களின் பெறுமதியை அதிகரிக்க செய்யும் கடப்பாடுள்ளவர்களாகவும் நாங்கள் இருக்கின்றோம்.
தொழில்நுட்பம்	: துரிதமான செயற்பாட்டிற்கு உந்து சக்தியாக இருப்பது, தரம் மற்றும் வசதிகள் ஆகியவை, தானாகவே இயங்கக் கூடிய தன்மை மற்றும் தொழில் நுட்பம் என்பவற்றை பிரயோகிப்பதன் ஊடாக, பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளை வெளியக வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கு நாங்கள் கட்டுப்பட்டிருக்கின்றோம். தீர்மானம் எடுக்கும் செயன் முறையில் திறமையையும். பயனுறுதியையும் விருத்தி செய்வதற்கு துரிதமானதும், மிகச் சரியானதுமான தகவல்களை உள்ளக வாடிக்கையார்களுக்கு நாங்கள் வழங்குகின்றோம்.
சமுதாயம	: தேசிய அபிவிருத்தியால் நாங்கள் ஒரு பங்காளராக இருப்பதனால், எமது சமூகத்தின் வாழ்க்கை முறையை விருத்தி செய்வதற்கு நாங்கள் பணியாற்ற வேண்டியவர்களாக இருப்பதை ஏற்றுக் கொள்கின்றோம்.

நிறுவன விழுமியங்கள்

நாங்கள் நிலை நிறுத்துபவை

- நாங்கள் நேர்மையாக செயற்படுவதுடன், மரியாதை காண்பிப்பவர்களாகவும் இருக்கின்றோம்.
- நாங்கள் செய்கின்றவை அனைத்திலும் தொழிற்சார் திறமைகளையும், அதி உயர்வான சிறப்புகளையும் வெளிப்படுத்துபவர்களாகவும் இருக்கின்றோம்.
- நாங்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதுடன், எமது செயற்பாடுகளுக்கான பொறுப்பு கூறுதலையும் பொறுப்பேற்கின்றோம்.
- நாங்கள் வெளிப்படைத் தன்மையை காட்சிப்படுத்துவதுடன் குழுவாக பணியாற்றுவதற்கும் முயற்சிக்கின்றோம்.
- நாங்கள் புத்தாக்கமுள்ள கருத்துக்களையும் தீர்வுகளையும் எடுப்பதில் அக்கறையுடன் செயற்படுகின்றோம்.
- நாங்கள் கற்றுக் கொள்வதற்கான அவாவையும். வங்கியுடன் இணைந்து வளருவதற்கான ஆர்வத்தையும் கொண்டிருக்கின்றோம்.

நிதியியல் சிறப்பம்சங்கள்

	2023 ரூ.மில்.	2022 ரூ.மில்.	Change %
வட்டி வருமானம்	9,324	7,402	25.97%
வட்டிச் செலவினம்	(8,733)	(5,463)	59.86%
தேறிய வட்டி வருமானம்	591	1,939	-69.52%
வரிக்கு முந்திய இலாபம்	(1,165)	(89)	1208.99%
வரிவிதிப்பு	162	291	-44.33%
வரிக்கு பிந்திய இலாபம்	(1,003)	202	-596.53%
அரசப் பிணையங்களிலான முதலீடு	10,256	2,204	365.34%
தேறிய கடன்கள் மற்றும முற்பணங்கள்	38,603	39,267	-1.69%
மொத்த சொத்துக்கள்	59,067	56,965	3.69%
வாடிக்கையாளர் வைப்புகள்	52,138	49,140	6.10%
கடன் பெறுகைகள்	179	278	-35.61%
பங்குதாரர்களது நிதியம்	5,454	6,474	-15.76%
விகிதாசாரப் பகுப்பாய்வு			
இலாபகரத்தன்மை மட்டம்	%	%	%
தேறிய வட்டி விடுமிகை	1.02%	3.52%	-71.06%
உரித்துவத்திலான விளைவு (ROE)	-16.82%	3.17%	-631.09%
சொத்துக்களிலான விளைவு (ROA)	-2.01%	-0.16%	1144.19%
மூலதனப் போதுமை			
உரித்துவம் / மொத்தச் சொத்துக்கள்	9.23	11.36	-18.75%
உரித்துவம் / கடன்களும் முற்பணங்களும்	14.13	16.49	-14.31%
	Basel (III)	Basel (III)	
அடுக்கு 1	18.81%	18.81%	-0.02%
அடுக்கு 1 மற்றும் 11	18.89%	19.76%	-4.40%
திரவத்தன்மை			
திரவச் சொத்து விகிதம்	35.60	34.69	2.62%
கடன்கள் மற்றும் முற்பணங்கள் /வைப்புக்கள்	74.04%	79.91%	-7.34%
கடன்பெறுகைகள்/கடன்களும் முற்பணங்களும்	0.46%	0.71%	-34.50%
தரப்படுத்தல்			
சொத்தின் தரம்			
செயற்பாடற்ற கடன்/கடன்களும் முற்பணங்களும்	25.99%	22.02%	18.03%
ஊ.சே.நி. நீங்கலான செயற்பாடற்ற கடன்	12.32%	10.31%	19.45%
மொத்த சொத்துக்களுக்கு கடன்களும் முற்பணங்களும்	69.42%	72.18%	-3.82%

நிதியியல் மீளாய்வு

2023 இல் இலங்கையின் பொருளாதாரத்தில் காணப்பட்ட சிக்கல்களுக்கு மத்தியில், அரச ஈட்டு முதலீட்டு வங்கியானது (SMIB) அதன் ஒட்டுமொத்த செயற்திறனில் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்திய வலிமையான சவால்களை சந்தித்தது. இது வங்கியின் ஒரு வருடத்திற்கும் குறைவான சொத்து பொறுப்பிலான உயர் எதிர்மறையான பொருத்தமின்மையின் காரணத்தினாலாகும். உள்ளூர் சந்தையினுள் தனித்து செயற்படுகின்ற ஒரு அரச உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியாக SMIB, உள்ளூர் பொருளாதார இயக்கவியல் மற்றும் முறைமைப்படுத்தல் கட்டுப்பாடுகள் ஆகியவற்றிலிருந்து எழுந்த ஒரு தொடரான தடைகளினூடாக பயணித்தது. 2022 ஆம் வருடத்தில் எற்பட்ட மோசமான பொருளாதார நிலைமையின் நீடிப்பானது தொடர்ந்தும் எதிரொலித்ததுடன் இவை நுகர்வோர் எண்ணம் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை குறைத்தது. மேலும், 2022 இன் இரண்டாம் அரையாண்டிலிருந்து காணப்பட்ட வைப்புகளின் கிரயத்திலான செங்குத்தான அதிகரிப்பானது மே 2023 வரை தொடர்ந்ததுடன் இது கடன்கள் மற்றும் முற்பணங்களிலான சராசரி விளைவுக்கும் வைப்புகளின் சராசரி கிரயத்திற்கும் இடையிலான எதிர்மறையான இடைவெளியினை விரிவுபடுத்தியதுடன், வங்கியின் தேறிய வட்டி விடுமிகையில் ஒரு வீழ்ச்சிப் போக்கினை விளைவித்தது. வங்கியின் தேறிய வட்டி விடுமிகையானது 2022 இல் காணப்பட்ட 3.52% இலிருந்து 2023 இல் 1.02% ஆக வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், வங்கியானது 2023 இன் 3ஆம் காலாண்டிலிருந்து எதிர்மறையான இடைவெளியினை மாற்றி மாதத்திலிருந்து மாதம் நட்ட நிலைமையிலிருந்து ஒக்டோபர் 2023 முதல் ஒரு இலாபகரமான நிலைமைக்கு கொண்டுவந்தது. உள்ளூர் முன்னிறுத்தம் மற்றும் தனித்திறன் தேர்ச்சி இருந்தபோதிலும், SMIB இலங்கை முகங்கொடுக்கும் பரந்த பொருளாதார அழுத்தங்களினால் பாதிப்படைவதை உணர்ந்தது. உள்ளூர் பொருளாதார தோற்றமானது உயர்வடையும் பணவீக்கம், அரச நிதிசார் கட்டுப்பாடுகளின் இறுக்கம் மற்றும் நலிவடையும் நுகர்வோர் நம்பகத்தன்மை என்பவற்றால் வகைப்படுத்தப்பட்டது. இறையாண்மை கடன்களுக்கான கொடுப்பனவுகளை இடைநிறுத்தும் அரசின் தீர்மானமானது, அந்நியசெலாவணி அக்கறைகளை விளித்துரைப்பதை நோக்காகக் கொண்டிருப்பினும், வங்கியில் ஒரு மேலதிக அடுக்கு நிதியியல் சிரமத்தினை சேர்த்தது. மேலும், உள்ளூர் சந்தையில் நிலவிய கடுமையான முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மற்றும் வரையறுத்த வருமானம் உருவாக்கும் வாய்ப்புக்கள் SMIB இன் இலாபகரத்தன்மை மற்றும் நிதிக்கான கிரயத்தினை குறைத்தல் ஆகியவற்றில் கடுமையான தடைகளை ஏற்படுத்தின. இந்த சவால்களுக்கு பதிலளிக்கும் விதமாக SMIB இடர்களை தணிப்பதனையும் மூலதனத்தினை பாதுகாப்பதனையும் முன்னிறுத்தி மூலோபாய வழிமுறைகளை அமுல்படுத்தியது. விவேகமான இடர் முகாமைத்துவ நடைமுறைகள், கடுமையான கடன் மதிப்பீட்டு செயன்முறைகள் மற்றும் மேம்பட்ட கடன் கண்காணித்தல் பொறிமுறைகள் என்பன வங்கியின் சொத்தின் தரத்தினை பாதுகாப்பதற்காக கடைப்பிடிக்கப்பட்டன. மேலாக, கிரய உகப்பாக்கல் முயற்சிகள் மற்றும் செயற்பாட்டு வினைத்திறன்கள் என்பன செலவினங்களை சீராக்குவதற்கும் கிரய-வருமான விகிதங்களை மேம்படுத்துவதற்கும் முன்னுரிமையளிக்கப்பட்டன.

2023 இல் SMIB ஒரு கலவையான நிதியியல் மற்றும் செயற்பாட்டு செயற்திறனை பிரதிபலிக்கும்வேளை மலிவான வீடமைப்பிற்கு வசதியளிக்கும் அதன் அசைக்கவியலாத அர்ப்பணிப்பும் இலங்கையில் பொருளாதாரத்தில் முதலீட்டினை ஊக்குவிப்பதும் உறுதியாயுள்ளது. முன்னோக்கிப் பார்க்கும்போது, வங்கியானது அதன் செயற்பாட்டு மீளெழுச்சியினை மேம்படுத்துவதற்கும், புத்தாக்கத்தினை வளர்ப்பதற்கும், உள்ளூர் சந்தையில் அதன் வாடிக்கையாளர்களுக்கும் பங்காளிகளுக்கும் பெறுமதியினை விநியோகிப்பதற்கும் தயாராயுள்ளதுடன் எதிர்வரும் வருடங்களில் சவால்களை சமாளித்து திடமாக வெளிவருவதற்கு நிலைப்படுத்தியுள்ளது.

வருமானக் கூற்றின் பகுப்பாய்வு

வருமானக் கூற்றின் சுருக்கம்

	2023 ரூ.(மில்.)	2022 ரூ.(மில்.)	மாற்றம் %
வட்டி வருமானம்	**9,324**	7,402	25.97%
மொத்த செயற்பாட்டு வருமானம்	**867**	2,054	-57.79%
வரிக்கு முந்திய இலாபம் /(நட்டம்)	**(1,165)**	(89)	1208.99%
வரிக்கு பிந்திய இலாபம்	**(1,003)**	202	-596.53%

வட்டி வருமானம்

வங்கியானது வட்டி வருமானத்தில் ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை கண்டதுடன், இது 2023 இல் ரூபா 9,324 மில்லியனாகக் காணப்பட்டவேளை முன்னைய ஆண்டின் ரூபா 7,402 மில்லியனுடன் ஒப்பிடும்போது கணிசமான 25.97% அதிகரிப்பாகும். இந்த வளர்ச்சியானது, கடன் கருவிகள், பணச்சந்தை மற்றும் அரசாங்கப் பிணையங்களிலான வங்கியின் முதலீடுகள் உள்ளடங்கலான, பல்வேறு வட்டி உருவாக்கும் சொத்துக்களிடையேயான வங்கியின் முதலீட்டு மூலோபாயங்களின் பயனுறுதித்தன்மையினை அடிக்கோடிட்டுக்காட்டியது.

தேறிய வட்டி வருமானம்

இவ்வாண்டின்போது தேறிய வட்டி வருமானமானது ஒரு வீழ்ச்சியடையும் போக்கினைக் கண்டதுடன் இது, பல்வேறு வட்டி செலுத்தவேண்டிய பொறுப்புக்கள், பிணையிடப்பட்ட நிதியளிப்புகள், வைப்புகள் மற்றும் நீண்டகால கடன்பெறுகைகள் ஆகியவற்றிலான அதிகரித்த வட்டி வீதங்கள் உயர் வட்டி செலவினங்களுக்கு காரணியாயிருந்ததுடன், வங்கியின் கடன் புத்தகங்களிலான நிலையான முதலீட்டு வட்டி வசதிகளிலான குறைவான விளைவும் காரணியாயிருந்தன. இந்த வீழ்ச்சி காணப்பட்டபோதிலும், இதன் தாக்கமானது பகுதியளவில் முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானத்திலான அதிகரிப்பினால் தணிக்கப்பட்டன. முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான வட்டி வருமானமானது இவ்வருடத்தில் ரூபா 3.72 பில்லியனாகக் காணப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டின் ரூபா 2.69 பில்லியனுடன் ஒப்பிடும்போது 38% அதிகரிப்பாகும்.

வட்டியல்லாத வருமானம்

கட்டண மற்றும் தரகு வருமானம், நிதி முதலீடுகளிலான தேறிய இலாபம் /நட்டம் மற்றும் ஏனை செயற்பாட்டு வருமானம் ஆகியவற்றை உள்ளடக்கிள வட்டியல்லாத வருமானமானது கணிசமான சவால்களை சந்தித்தது. கட்டண மற்றும் தரகு வருமானமானது ரூபா 96 மில்லியன் சுருக்கத்தினை அனுபவித்ததுடன் இது மந்தமான பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் முறைமைப்படுத்தல் நிச்சயமற்றதன்மைகளை பிரதிபலித்தது. எவ்வாறாயினும், முதலீடுகள் மற்றும் நிதியல்லாத முயற்சிகளிலிருந்தான பங்கிலாப வருமானத்தினால் துணையளிக்கப்பட்ட ஏனைய செயற்பாட்டு வருமானமானது ரூபா 22 மில்லியன் சாத்தியமான பங்களிப்பினை மேற்கொண்டது.

மொத்த செயற்பாட்டு வருமானம்

மொத்த செயற்பாட்டு வருமானமானது குறிப்பிடத்தக்க வீழ்ச்சியினை சந்தித்ததுடன் இது 2022 இல் காணப்பட்ட ரூபா 2,054 மில்லியனிலிருந்து 2023 இல் ரூபா 867 மில்லியனாக குறைவடைந்து 57.50% வீழ்ச்சியினை பதிவுசெய்தது. இந்த வீழ்ச்சியானது வங்கியினால் முகங்கொடுத்த பின்வரும் வலிமையான சவால்களை எடுத்துக்காட்டுகின்றது, நிதிக்கான கிரயத்தினை முகாமைப்படுத்துதல், அழுத்தமான பொருளாதார நிலைமயில் குறுங்காலத்தில் கடன் புத்தகத்தின் விளைவினை அதிகரித்தல், வட்டி மற்றும் வட்டியல்லாத வருமான பிரிவுகள் இரண்டிலும் தாக்கத்தை ஏற்படுத்திய பாதகமான காரணிகள் என்பவையாகும்.

மொத்த செயற்பாட்டு வருமானம்



இலாபகரத்தன்மை

2023 ஆம் நிதியாண்டானது வங்கிக்கு கணிசமான நட்டங்களை விளைவிக்கும் சவால்களை முன்னிலைப்படுத்தியவேளை, பாதகமான நிலைமைகளுக்கு மத்தியில் வெளிக்காட்டிய மீளெழுச்சி மற்றும் மனவுறுதி என்பற்றை அங்கீகரித்தல் முக்கியமானதாகும். வரிக்கு முந்திய நட்டமாக ரூபா 1,165 மில்லின் மற்றும் வரிக்கு பிந்திய நட்டமாக ரூபா 1,003 மில்லியன் காணப்பட்டபோதிலும், சவால்மிக்க சந்தை இயக்கவியல்களை சமாளிக்கும் வங்கியின் முயற்சிகள் அதன் பொருந்துதன்மைக்கான அர்ப்பணிப்பு மற்றும் மூலோபாய மீளெழுச்சியினை கோடிட்டுக்காட்டுகின்றது. 2023 இன் 3ஆம் காலாண்டு வரைக்குமான நட்டங்களின் கணிசமான அதிகரிப்பானது நிலவுகின்ற நிச்சயமற்றதன்மைகளை பயனுறுதியாக விளித்துரைப்பதற்காக மீள்அளவீடு செய்யப்பட்டதுடன் இது எதிர்காலத்தில் ஒரு நிலைபேறான வளர்ச்சிக்கு வழிசமைக்கும்.

எவ்வாறாயினும் 2023 இன் 4ஆம் காலாண்டில் உருவாக்கிய மிகையானது காலாண்டு 3 வரைக்குமான திரண்ட நட்டத்தினை உள்ளீர்ப்பதற்கு போதாமையாக காணப்பட்டதுடன், வலுக்குன்றலுக்குத் தேவையான மேலதிக ஏற்பாடுகள் மற்றும் பணிக்கொடை மற்றும் இளைப்பாறுதலடைந்த பணியாட்களுக்கான மருத்துவ திட்டங்களிலான காப்பீட்டுக் கணிப்பீட்டிற்கான ஏற்பாடுகள் தேவைப்பட்டன. முன்னியக்க வழிமுறைகள் மற்றும் விவேகமான முகாமைத்துவ மூலோபாயங்கள் என்பவற்றினூடாக வங்கியானது இந்த பின்னடைவுகளிலிருந்து மீளெழுந்து திடமாக வெளிவருவதற்கு தயாராயிருப்பதுடன், இயக்காற்றலான நிதியியல் நிலத்தோற்றத்தில் நீண்டகால வெற்றிக்கு அதனை நிலைப்படுத்தியுள்ளது.

வரிக்கு பிந்திய இலாபம் / நட்டம்



தேசத்திற்கான பங்களிப்பு

நாட்டில் காணப்படும் ஒரு பழமையான வங்கியாக SMIB நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளது. இலங்கை மத்திய வங்கியினால் கட்டாயப்படுத்தப்பட்ட அவசியமான திரவத்தன்மை மற்றும் மூலதனப் போதுமை விகிதாசாரங்களை பராமரிப்பதற்கு மேலாக, வங்கியானது பல்வேறு வழிகளூடாக வங்கியானது தேசிய அபிவிருத்திக்கு தீவிரமாக துணைபுரிவதுடன் வரிக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதுடன் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பு செய்கின்றது.

2023 இல் மாத்திரம், வங்கியானது அரசாங்கத்தின் கணிசமான பங்களிப்பினை செய்துள்ளது. பெறுமதி சேர்த்தல் வரி மற்றும் சமூகப் பாதுகாப்புக் கட்டணம் போன்ற வரிகளின் மூலம் மொத்தமாக ரூபா 44.5 மில்லியனை வங்கி செலுத்தியுள்ளது. இந்த நிதியியல் பங்களிப்பானது அதன் பங்குதாரர்கள் மற்றும் பரந்த சமூகத்திற்கு வங்கியின் அர்ப்பணிப்பினை கோடிட்டுக்காட்டுவதுடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மையில் ஒரு முக்கிய பங்காளியாக அதன் பங்கினை வலுவூட்டுகின்றது.

	2023 ரூ. (மில்.)
பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT)	43.0
சமூக பாதுகாப்பு கட்டணம் (SSCL)	1.5
	44.5

நிதியியல் நிலைமையின் பகுப்பாய்வு

சொத்துக்கள்

நிதியாண்டு 2023 இல் SMIB மொத்த சொத்துக்களில் ஒரு மெச்சத்தக்க வளர்ச்சியினை பதிவுசெய்ததுடன், இவை ரூபா 59,067 மில்லியன் ஆகும். இது 2022 உடன் ஒப்பிடும்போது ஒரு குறிப்பிடத்தக்க 3.7% வளர்ச்சியாகும். இவ்வளர்ச்சியானது ஒரு வலுவான ஐந்தொகையினை பராமரிக்கும் வங்கியின் கடப்பாட்டினைக் கோடிட்டுக்காட்டுவதுடன், அதன் சொத்து தளத்தினை விரிவாக்குவதில் அதன் மூலோபா முயற்சிகளை குறிக்கின்றது. வங்கியின் சொத்து தளத்தின் அதிகரிப்பிற்கான பிரதான பங்களிக்கும் கூறானது அதன் முதலீட்டு தேக்கமாகும் என்பதுடன் இது 2022 உடன் ஒப்பிடும்போது 19.6% ஆல் வளர்ச்சியடைந்தது. இவ்வருடம் பூராவும், SMIB அதன் பிரதான வணிக நடவடிக்கையில் முன்னிறுத்தம் செய்ததுடன், வட்டி உழைக்கும் தேக்கங்கள் மற்றும் நிதியியில் முதலீடுகளை வினைத்திறனா முகாமைப்படுத்தியது. இந்த இலக்குவைத்த அணுகுமுறையானது வங்கியின் ஐந்தொகையின் ஒட்டுமொத்த பலம் மற்றும் மீளெழுச்சிக்கு பங்களிப்பு செய்ததுடன், எதிர்கால வளர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு சாதகமான நிலைப்படுத்தியது.

கடன்கள் மற்றும் முற்பணங்கள்

மொத்த சொத்துக்களில் ஒட்டுமொத்த வளர்ச்சி காணப்பட்டபோதிலும், SMIB 2023 இல் தேறிய கடன்கள் மற்றும் முற்பணங்களில் ஒரு லேசான வீழ்ச்சியினை அனுபவித்தது. தேறிய கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூபா 38,603 ஆக வீழ்ச்சியடைந்து முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது ஒரு மிதமான 0.27% வீழ்ச்சியினை பதிவுசெய்தது. இந்த வீழ்ச்சிக்கு கடனுக்கான கேள்வியிலான நகர்வுகள் மற்றும் மூலோபாய கடன்வழங்கல் தீர்மானங்கள் உள்ளடங்கலா பல்வேறு காரணிகளை எடுத்துக்கூறலாம். குறிப்பாக, சிற்றளவு கடன் வசதிகளுக்கான கேள்வி அதிகரித்துக் காணப்பட்டது, விசேடமாக வீடமைப்புக் கடன்கள், தனிப்பட்ட கடன்கள் மற்றும் மீள் நிதியளிப்புக் கடன்கள் போன்ற துறைகளிலிருந்தாகும். வீழ்ச்சி இருந்தபோதிலும், SMIB பன்முக தொழில்துறைகளிடையே நன்கு பன்முகப்படுத்தப்பட்ட கடன்கள் மற்றும் வருமதிகள் தேக்கத்தினை பராமரித்ததுடன், இது விவேகமான இடர் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் மூலோபாய கடன் வழங்கல் முன்னெடுப்புகளை எடுத்துக்காட்டியது.

கருவி வாரியாக	2023 ரூ. (மில்.)	2022 ரூ. (மில்.)
ஈட்டுக்கடன்	10,179.55	10,836.31
ஊழியர் சேமலாப நிதியம்	8,857.46	6,644.20
வாகனங்கள்	-	-
ஊழியர் கடன்கள்	1,208.08	1,360.48
தனிப்பட்ட கடன்கள்	19,295.35	20,751.94
ஏனையவை	1,864.19	1,973.86
மொத்தம்	41,006.64	41,117.34

பொறுப்புக்கள்

தேறிய கடன்கள் மற்றும் முற்பணங்களிலான மிதமான வீழ்ச்சிக்கு எதிராக SMIB 2023 ஆம் நிதியாண்டில் அதன் மொத்த பொறுப்புக்களில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை கண்டது. மொத்த பொறுப்புக்கள் ரூபா 53,612 மில்லியனாகக் காணப்பட்டவேளை இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது ஒரு குறிப்பிடத்தக்க 6.18% அதிகரிப்பினை பிரதிநிதித்துவம் செய்தது. இந்த அதிகரிப்பானது பிரதானமாக வைப்புப் பொறுப்புக்களிலான ஒரு மிதமான உயர்வினால் இயக்கப்பட்டதுடன், இது கடன்கள் மற்றும் முற்பணங்களிலான வளர்ச்சியினை விஞ்சி காணப்பட்டது. குறிப்பாக, வருடம் பூராவும் மேலதிக திரவத்தன்மையினை பராமரித்ததுடன் வெளிவாரி கடன்பெறுகைகளில் ஒரு வீழ்ச்சிக்கு அனுமதித்தது. வெளிவாரி கடன்பெறுகைகளிலா இந்த வீழ்ச்சியானது வங்கியின் வட்டிச் செலவினங்களை குறைத்து தேறிய வட்டி வருமானம் மற்றும் வட்டி விடுமிகைகளை மேம்படுத்துவதற்கு துணைபுரிந்தது.

வைப்புத் தளம்

உயர்ந்த போட்டியுடைய தனித்துவமான சந்தையில் செயற்படுதல் மற்றும் பொருளாதார தளம்பல்கள் மற்றும் நாட்டின் குறிப்பிடத்தக்க கடன் சுமை என்பவை காணப்பட்டபோதிலும், அரச ஈட்டு முதலீட்டு வங்கியானது (SMIB) 2023 இல் வைப்புத் தளத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை அடைந்தது. சேமிப்பு வைப்புக்கள், நிலையான வைப்புக்கள் மற்றும் ஏனைய வைப்புத் திட்டங்கள் உள்ளடங்கலான

நிதியியல் மீளாய்வு

மொத்த வைப்புக்கள் ரூபா 52,138 மில்லியனாக உயர்வடைந்து முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியாக 6.10% இனை பிரதிநிதித்துவம் செய்தது. இந்த திடமான வளர்ச்சியானது விவேகமான முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் நடைமுறையிலுள்ள வைப்பீட்டாளர்களை தக்கவைத்தல் மற்றும் புதிய வைப்பீட்டாளர்களை கவருதல் நோக்கிய வினைத்திறனான கொள்கைகளை அமுல்படுத்துவதற்கான SMIB இன் அர்ப்பணிப்பினை கோடிட்டுக்காட்டுகின்றது. மூலோபாய முன்னெடுப்புளூடாக, SMIB வாடிக்கையாளர் திருப்திகரத்திற்கான அதன் அர்ப்பணிப்பினை வெற்றிகரமாக நிலைநிறுத்துவதுடன், இதன் மூலம் அதன் வைப்புத் தளத்தினை பலப்படுத்தவும் அதன் ஒட்டுமொத்த நிதியியல் மீளெழுச்சியினையும் வலுப்படுத்தியது.

வைப்பு



திரவத்தன்மை காப்பீடு

இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசின் ஒரு உரிமமளிக்கப்பட்ட விசேட அரச வங்கியான அரச ஈட்டு முதலீட்டு வங்கியானது (SMIB), 1988 இன் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் பிரிவு 86 இல் குறிப்பிட்டுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் ஒரு ஆகக்குறைந்த சட்டரீதியான திரவச் சொத்து வீதமான 20% இனை கட்டாயமாகப் பராமரித்தல் வேண்டும். 2023 இல் நிறைவடைந்த நிதியாண்டு பூராவும் SMIB ஒரு மெச்சத்தக்க சராசரி சட்டரீதியான திரவச் சொத்து விகிதமாக 35.60% இனை அடைந்தது ஒரு வலுவான இணக்கப்பாட்டினை வெளிப்படுத்தியது. மேலும், பாசல் III நியமங்களுக்கு ஒத்ததாக, SMIB திரவத்தன்மை காப்பீட்டு விகிதத்தினூடாக திரவத்தன்மை மீளெழுச்சியினை அவதானமாக பராமரிப்பதுடன், ஒரு 30 நாளேடு தினசரி அழுத்த சூழ்நிலையில் திரவத்தன்மை தேவைகளை சந்திப்பதற்காக போதுமான சுமை சுமக்கப்படாத உயர் தரத்திலான திரவச் சொத்துக்களை உறுதிப்படுத்துகின்றது. 2023 இன் இறுதியில், SMIB இன் திரவத்தன்மை காப்பீட்டு விகிதமானது சட்டரீதியான ஆகக்குறைந்த தேவைப்பாடான 100% வீதத்தினை விஞ்சி ஒரு மீளுறுதியான 175.14% இல் காணப்பட்டது.

மேலாக, வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் திட்டவரையாக்கப்பட்டுள்ளவாறு திடமான நிதியளித்தலுக்கான பலமான அணுகுமுறையினை பராமரித்தவேளை 31 டிசம்பர் 2023 இல் தேறிய திடமான நிதியளித்தல் வீதமானது (NSFR) 129% இனை எட்டியது. இது ஆகக்குறைந்த தேவைப்பாடான 100% இனை கணிசமானளவு விஞ்சியுள்ளது. இந்த அளவீடுகள், முறைமைப்படுத்தல் இணக்கப்பாடு மற்றும் விவேகமான திரவத்தன்மை முகாமைத்துவம், நாட்டின் நிதியியலல் தோற்றத்திற்கு துணையளிக்கும் அதன் செயற்பாடுகளின் மீளெழுச்சி மற்றும் ஸ்திரத்தன்மையினை பாதுகாத்ததல் ஆகியவற்றுக்கான SMIB இன் அசையாத அர்ப்பணிப்பினை எடுத்துக்காட்டுகின்றது.

உள்வாரியான பலம் வெளிவாரியான நம்பிக்கை

தலைவரின் செய்தி	8
பொது முகாமையாளர்கூ பிரதம நிறைவேற்று அதிகாரியின்	12
பணிப்பாளர்கள் சபை	16
அரச ஈட்டு முதலீட்டு வங்கி	19
கூட்டாண்மை ஆளுகை	22

தலைவரின் செய்தி

ஒரு சவாலான பாரியபொருளாதார நிலத்தோற்றத்தினுள் செயற்படுகின்ற, SMIB அதன் பயணத்தில் மீளெழுச்சி மற்றும் இணக்கத்திறனை நிரூபிக்கின்ற வேளை நிதியியல் துறையினால் முகங்கொடுக்கப்படும் சிக்கல்களையும் விளித்துரைக்கின்றது. சாத்தியமான இடர்களில் எப்போதும் விழிப்புடன் உள்ளவேளை அவற்றை தணிப்பதற்கு உடனடியான நடவடிக்கை மேற்கொள்வதுடன், வங்கியானது வாடிக்கையாளர்களிலிருந்து பங்குதாரர்கள் மற்றும் ஊழியர்கள் வரையான அனைத்து பங்காளிகளது அக்கறைகளையும் பாதுகாக்க இயலுமையாயிருந்தது.

பணிப்பாளர்கள் சபையின் சார்பில், 2023 ஆம் நிதியாண்டுக்கான அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் ஆண்டறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை உங்களுக்கு முன்னிலைப்படுத்துவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். 2023 இன் போது, வங்கியானது உயர்ந்த தளம்பலுடைய செயலாற்றல் பின்னணிக்கு எதிராக ஒரு வலிமையான ஆண்டினை சமாளித்ததுடன், இது நிலைபேறுடைய வளர்ச்சியில் மீளெழுச்சியினையும் மூலோபாய விரைவூக்கத்தினையும் வெளிப்படுத்தியது. வங்கியானது புரிந்துணர்வு மற்றும் நெகிழ்ச்சித்தன்மையுடன் பங்காளிகளுக்கான பெறுமதி உருவாக்கத்தினை தொடர்ந்ததுடன், இது நிலவுகின்ற சூழமைவில் அவர்களது பன்முகமான நிதியியல் தேவைகளுக்கான ஒரு ஏற்புடையதான அணுகுமுறையினை உறுதிசெய்தது.

ஒரு கொந்தளிப்பான நிலப்பரப்பு

2022 இல் காணப்பட்ட பொருளாதார வீழ்ச்சியின் தாக்கமானது 2023 ஆம் நிதியாண்டிலும் தொடர்ந்து பாதித்ததுடன், உயர்வடையும் நெருக்கடிகளின் பின்னணியில் மேலும் சுருக்கமடைந்தது. மீளாய்வாண்டானது நாட்டின் வரலாற்றில் மிகவும் முடக்கப்பட்ட காலத்தினுள் ஒன்றாகும். பொருளாதார உறுதியின்மையானது நாட்டினைத் தாக்கியதுடன் வாழ்வின் ஒவ்வொரு முகப்பிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இதன் விளைவாக, முக்கிய துறைகளில் ஒரு குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டது. இது நிதியியல் ஸ்திரத்தன்மையினை அதிகரிப்பதனை இலக்குவைத்த வரி அதிகரிப்புகள், அதனுடன் தொடர்ச்சியான பணவீக்க அழுத்தங்கள் மற்றும் உயர்வடைந்த வட்டி வீதங்கள் என்பவற்றால் மோசமடைந்தது. இந்த தடைகள் நிதியியல் துறை பூராவும் எதிரொலித்ததுடன், இது நிதியியல் இடையீட்டில் ஒரு குறிப்பிடத்தக்க வீழ்ச்சியினையும் கடன் தரத்தில் ஒரு கரிசனையான சீரழிவினையும் விளைவித்தது. மேலும், மந்தமான கடன் விரிவாக்க நிலைமையில் அரச நிறுவனங்களின் அதிகரித்த பாதிப்பானது முறைசார் சமநிலையின்மைகளை வலியுறுத்தியதுடன் துறையின் ஸ்திரத்தன்மைக்கு குறிப்பிடத்தக்க சவால்களை முன்னிலைப்படுத்தியது.

எவ்வாறாயினும், மார்ச் 2023 இல் கைச்சாத்திடப்பட்ட நீடிக்கப்பட்ட நிதியளித்தல் வசதியானது (IMF-EFF) நிதியியல் துறையில் ஒரு நம்பிக்கை உணர்வினை கொண்டுவந்ததுடன், வளர்ச்சிப் பாதையினை ஒரு புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கை உணர்வுடன் அணுகக்கூடியதாயுள்ளது. எனவே, தடைகள் காணப்பட்டபோதிலும், நிதியியல் துறையின் மீளெழுச்சியானது, விவேகம் மற்றும் இணக்கத்திறன் கலவையினை பயன்படுத்தி கொந்தளிப்பான நிலைமைகளினூடாக சமாளிப்பதற்கான பாதைகளை நிறுவனங்கள் அறிந்து செயலாற்றுவதில் நிலைத்திருந்ததனாலாகும். IMF-EFF உடன்படிக்கையின் ஆரம்பமானது மிகவும் அவசியமான உந்துகையினை வழங்கியதுடன், ஸ்திரத்தன்மை மற்றும் முதலீட்டாளர் நம்பிக்கையினை மீட்டமைப்பதில் ஒரு சாத்தியமான திருப்பு முனையினை குறிகாட்டியது.

நிலவுகின்ற பாரியபொருளாதார நிலைமையும், இன்னல்களின் மத்தியிலான மீளெழுச்சிக்கான முன்னேற்றத்திற்கு துறையின் அடித்தளத்தினை பலப்படுத்துவதற்கும் மற்றும் வலுவான இடர் முகாமைத்துவ வரம்புறுகைகள் மற்றும் செயலூக்கமான ஆளுகை கட்டமைப்புகள் ஆகியவற்றுக்கான அவசியத்தினை வலியுறுத்தியது. எனவே, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நெருக்கடியான அனுபவமூடாக கையகப்படுத்திய புதுப்பிக்கப்பட்ட வீரியத்தினால் வலுவளிக்கப்பட்டு, நாம் நிதியியல் நிலத்தோற்றத்தில் வளர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மையினை இயக்குவதற்கான எமது கடப்பாட்டினை உறுதிசெய்கின்றோம்.

மீளெழுச்சியனை கட்டியெழுப்புதல், இணக்கத்-திறனை தழுவுதல் : வளர்ச்சிக்கான எமது அணுகுமுறை

ஒரு சவாலான பாரியபொருளாதார நிலத்தோற்றத்தினுள் செயற்படுகின்ற, SMIB அதன் பயணத்தில் மீளெழுச்சி மற்றும் இணக்கத்திறனை நிரூபிக்கின்ற வேளை நிதியியல் துறையினால் முகங்கொடுக்கப்படும் சிக்கல்களையும் விளித்துரைக்கின்றது. சாத்தியமான இடர்களில் எப்போதும் விழிப்புடன் உள்ளவேளை அவற்றை தணிப்பதற்கு உடனடியான நடவடிக்கை மேற்கொள்வதுடன், வங்கியானது வாடிக்கையாளர்களிலிருந்து பங்குதாரர்கள் மற்றும் ஊழியர்கள் வரையான அனைத்து பங்காளிகளது அக்கறைகளையும் பாதுகாக்க இயலுமையாயிருந்தது.

வலுவான திரவத்தன்மை தாங்கிகள் மற்றும் ஒரு திடமான மூலதன நிலையினை நாம் பராமரிக்க இயலுமையாயிருந்ததுடன் இது ஒரு தளம்பலான சந்தை நிலையினுள் ஒரு திடமான அடித்தளத்தினை வழங்கியது. எனவே, குறிப்பாக, வங்கியின் முக்கிய திரவத்தன்மை மற்றும் மூலதனப் போதுமை விகிதாசாரங்கள், திரவத்தன்மை காப்பீட்டு விகிதம் (தி.கா.வி.) உள்ளடங்கலானவை 175.14% ஆக காணப்பட்டதுடன், தேறிய திடமான நிதியளித்தல் வீதம் (தே.தி.நி.வீ.) 129% ஆகவும் அடுக்கு 1 மற்றும் மொத்த மூலதன விகிதமானது முறைமைப்படுத்தல் வரம்பினை விஞ்சி 18.81% மற்றும் 18.89% முறையே, ஆகவும் காணப்பட்டன. இந்த முக்கியமான புள்ளிவிபரங்கள் SMIB இன் விவேகமான முகாமைத்துவ நடைமுறைகளை பிரதிபலித்ததுடன், இவை நிச்சயமற்றதன்மைகளை வெற்றிகொள்வதற்கு தாராளமான திரவத்தன்மை மற்றும் மூலதன ஒதுக்கங்களை உறுதிசெய்தது. இதற்கப்பால், வங்கியானது, சிறிய மற்றும் நடுத்தர மட்டத்திலான நிறுவனங்கள் (SME.) மற்றும் நுண், சிறிய மற்றும் நடுத்தர மட்டத்திலான நிறுவனங்கள் (MSME) உள்ளடங்கலான அதன் பன்முகமான வாடிக்கையாளர்களின் நிதியியல் தேவைகளுக்கு முன்னுரிமையளித்ததுடன், கணிக்கவியலாத பொருளாதார நிலத்தோற்றம் காரணமாக இவர்கள் முகங்கொடுக்கும் சவால்களை புரிந்துகொள்ளக்கூடியதாயிருந்தது. இதற்காக, வங்கியானது இந்தப் பிரிவுகளுக்கு துணையளித்து அவர்களது நிலைபேறுடைய மீளெழுச்சி மற்றும் முன்னேற்றத்தினை உறுதிசெய்வது நோக்கிய நடைமுறைகளை அமுல்படுத்துவதில் ஒத்துழைப்பான முயற்சிகனை பொறுப்பேற்றது.

பொருளாதார உறுதியின்மை, போட்டித்தன்மை, வட்டி வீத தளம்பல், செயற்திறனற்ற கடன்கள் மற்றும் செலவு முகாமைத்துவ சிக்கல்கள் தொடர்ந்தும் வங்கியின் செயற்திறனில் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், SMIB நிலவுகின்ற சிக்கல்களின் தாக்கத்தைக் குறைப்பதற்கும்

தலைவரின் செய்தி

மீட்சிக்கு வசதியளிப்பதற்கும் இவ்வாண்டின்போது ஒரு பழமைவாத மற்றும் விவேகமான மூலோபாய அணுகுமுறையினை மேற்கொண்டது. எனவே, வங்கியானது அதன் வாடிக்கையாளர்களுக்கு துணையளிப்பதற்கான அதன் கொள்திறன்களை தொடர்ந்தும் பலப்படுத்தியதுடன், எதிர்கால வளர்ச்சி மற்றும் செழிப்பிற்கான அடித்தளத்தினை இடும்வேளை பின்வரும் நான்கு பிரிவுகளை உள்ளடக்கிய ஒரு செயற்பாட்டு மூலோபாயத்தில் முன்னிறுத்தம் செய்தது. அவையாவன, விவேகமான திரவத்தன்மை முகாமைத்துவம், வினைத்திறனால் செ.க. மற்றும் வலுக்குன்றல் முகாமைத்துவம், செலவு சிக்கனப்படுத்தல் மற்றும் கடன்கள் மற்றும் முற்பணங்களுடன் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தும் உழைப்புகளை அதிகரித்தல் என்பனவாகும்.

மேலும், வங்கியானது விவேகமான இடர் முகாமைத்துவ நடைமுறைகளை அமுலாக்குதல், சந்தை இயக்கவியலுக்கு பொருத்தமான இடர் மூலோபாயங்களை கடைப்பிடித்தல், நிதியியல் மீளெழுச்சி மற்றும் வாடிக்கையாளர் மையப்படுத்தலில் முன்னிறுத்தம் செய்தல் என்பவற்றை மேற்கொள்ளும் வேளை தொடர்ச்சியான மேம்பாட்டு முன்னெடுப்புகளை தழுவியது. இதன் விளைவாக, வங்கியானது நிச்சயமற்றதன்மைகளை சமாளிக்கவும் வங்கியியல் துறையில் வெளித்தோன்றுகின்ற வாய்ப்புக்களை பயன்படுத்திக்கொள்ளவும் தன்னை நிலைப்படுத்திக்கொள்ள இயலுமையாயிருந்தது.

சாதனையின் புதிய உச்சங்கள்

வெளிப்படுகின்ற வங்கியியல் நிலத்தோற்றத்துடன் சீரமைத்து, வங்கியானது பல மாற்றங்களை முன்னெடுத்தது. மிகவும் முக்கியமான மாற்றங்களுள் ஒன்றாக முன்னைய மரபுவழியான அமைப்புமுறையினை மாற்றீடு செய்து ஒரு மையமான வங்கியியல் அமைப்புமுறையினை அமுலாக்குவதற்கான தீர்மானமாகும். தற்போது, அமுலாக்கப்படும் செயன்முறையிலுள்ள இந்த புதிய அமைப்புமுறையானது உள்ளக செயன்முறைகளை நெறிப்படுத்தல், அதன் வாடிக்கையாளர்களுக்கு ஒரு வினைத்திறனான சேவையினை விநியோகிப்பதற்கான வங்கியின் ஆற்றலினை மேம்படுத்துதல் ஆகியவற்றை இயலுமையாக்குகின்றது. மேலாக, வங்கியானது டிஜிட்டல் வங்கியியல் கொடுக்கல் வாங்கல்களுக்காக வளர்ச்சியடையும் கேள்வியினை அங்கீகரிப்பதன் மூலம் அதன் டிஜிட்டல் அடிச்சுவட்டினை தொடர்ந்தும் மேம்படுத்தியது. இது தொடர்பில், வங்கியானது மொபைல் செயலிகள், இயங்கலை மேடைகள் மற்றும் தொடர்பற்ற கொடுப்பனவுகள் உள்ளடங்கலான பல்வேறு டிஜிட்டல் வழிமுறைகளை அறிமுகப்படுத்தும் செயன்முறையிலுள்ளது. மேலும், நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற செயற்பாடுகளுக்கு துணையளிப்பதற்காக, SMIB முறைமைப்படுத்தல் நியமங்களின் பிரகாரம் தாராளமான திரவத்தன்மையினை உறுதிசெய்வதனூடாக நிதியியல் மீளெழுச்சியினை பராமரிப்பதில் கவனஞ்செலுத்தியது. இந்த மாற்றங்கள், பங்காளிகளுக்கான ஒரு நம்பகத்தன்மையான பங்காளியாக வங்கியினை நிலைப்படுத்துவதற்கான கருவியாயிருந்ததுடன், வங்கியியல் துறையில் ஒரு சாத்தியமான உருமாற்றலுக்கான ஒரு உந்துசக்தியாக காணப்பட்டது.

ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவத்தினை நிலைநிறுத்துதல்

எமது பங்காளிகளிடையே நம்பகத்தன்மை மற்றும் நேர்மையினை கட்டியெழுப்புவதற்கு கூட்டாண்மை ஆளுகையின் உயர்ந்த நியமங்களை பராமரிப்பதற்கு நாம் கடப்பாட்டுடன் உள்ளோம். எனவே, எமது வணிக நடவடிக்கைகளில் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மையினை உறுதிப்படுத்துவதில் நிதியாண்டு பூராவும் நாம் அனைத்து விதந்துரைக்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகை நியமங்கள் மற்றும் நியதிச்சட்டத் தேவைப்பாடுகளை கடைப்பிடித்தோம்.

வருடம் பூராவும், நாம் எமது ஆளுகை வரம்புறுகையில் ஒரு விரிவான மீளாய்வினை ஆரம்பித்ததுடன், இது உலகளாவிய அளவுகோல்களுக்கு இணையாகவும் இன்றைய இயக்காற்றலான வணிகச் சூழலில் அதன் செயற்திறன் மற்றும் பொருந்துமையினை உறுதிசெய்வதற்காகும். பயனுறுதியான குழுக்களை பயன்படுத்துவதன் மூலம், மற்றும் சபை மற்றும் முகாமைத்துவம் இடையே நெருக்கமான ஒத்துழைப்பினை வளர்ப்பதன் மூலம், நாம் எமது பங்காளிகளின் நீண்டகால அக்கறைகளுக்கு முன்னுரிமையளிக்கும் வலுவான தீர்மானம் மேற்கொள்ளல் செயன்முறைக்கு வசதியளித்துள்ளோம்.

நாம் எமது இடர் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் செயன்முறைகளை தீவிரப்படுத்துவதிலும் முன்னிறுத்தம் செய்தோம். உலகளாவிய மற்றும் உள்ளூர் பொருளாதாரங்களிலான சவால்களுக்கு நாம் விழிப்புடன் உள்ளவேளை, வங்கியின் நிதியியல் ஆரோக்கியம் மற்றும் நற்பெயரிலான அதன் சாத்தியமான தாக்கத்தை நாம் தொடர்ச்சியாக கண்காணித்து பகுப்பாய்வு செய்தோம். இது தொடர்பில், த.தொ. மற்றும் சைபர் பாதுகாப்பிலான எமது முதலீடுகளுக்கு முன்னுரிமையளித்ததுடன், வெளிவருகின்ற அச்சுறுத்தல்களுக்கு ஈடுகொடுப்பதற்கு உணர்திறனான தரவுகளை பாதுகாத்தல் மற்றும் எமது அமைப்புமுறைகளை வலுப்படுத்தல் ஆகியவற்றின் முதன்மையான முக்கியத்துவத்தினை நாம் தெரிந்துள்ளோம். திடமான ஆளுகை மற்றும் செயலூக்கமான இடர் முகாமைத்துவத்திற்கான இந்த நிலையுறுதியான கடப்பாடானது, எமது பங்காளிகளின் நிலைபேறுடைய பெறுமதியினை விநியோகிக்கும் வேளை நிதியியல் நிலத்தோற்றத்தின் சிக்கல்களை மறுதளிப்பதற்காக SMIB இனை மூலோபாயமாக நிலைப்படுத்தியுள்ளது.

நிலைபேறுடமை கடப்பாடு

நிலைபேறுடமைக்கான எமது கடப்பாடானது வெற்று சொல்லாட்சிக்கு அப்பால் நீடிக்கப்படுவதுடன், மிகவும் உள்ளடங்கலான மற்றும் மீளெழுச்சியான எதிர்காலத்தினை கட்டியெழுப்புதல் நோக்கிய எமது செயற்பாட்டினை இயக்கும் எமது மையமான விழுமியங்களில் இது உள்ளடக்கப்பட்டுள்ளது. சூழல், சமூக மற்றும் ஆளுகை (சூ.ச.ஆ.) காரணிகள் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டமையினை நாம் புரிந்துகொள்ளும் வேளை, எமது வணிகத்தின் ஒவ்வொரு சூழமைவிலும் அது ஊடுருவுவதனை உறுதிப்படுத்துவதுடன், எமது செயற்பாடுகளின் அமைப்பினுள் நாம் நிலைபேறுடமையினை பிணைத்துள்ளோம். உள்ளடங்கலான வங்கியியல் மற்றும் சமூக மீளெழுச்சி ஆகியவற்றில் நாம் தொடர்ச்சியாக முன்னிறுத்தம் செய்வதுடன், இது எமது சூ.ச.ஆ. மற்றும் அபிவிருத்தி இலக்குகளின் மையமான அடித்தளமாக உள்ளது. எமது தாக்கத்தினை மேலும் பலப்படுத்துவதற்கு, எமது அனைத்து முயற்சிகள் பூராவும் தொலைநோக்கான மற்றும் மேம்படுத்தப்பட்ட நிலைபேறுடமைக்கு வசதியளிக்கும் கட்டமைப்புகளை பலப்படுத்துவதற்கு நாம் விடாமுயற்சியுடன் செயலாற்றியுள்ளோம்.

சமீபத்தைய பொருளாதார நெருக்கடி மற்றும் பொருளாதார உறுதியின்மை என்பன நாட்டின் பாதிப்பினை மற்றும் இணக்கத்திறனான கொள்திறனுக்கான அழுத்தும் தேவையினை, குறிப்பாக வலு மற்றும் உணவு பாதுகாப்பினை வலியுறுத்தியது. மீட்டலுக்கான பாதையினை சமாளிப்பதற்கான சமூக மற்றும் பொருளாதார மீளெழுச்சியினை கட்டியெழுப்புதலை மேலும் கட்டாயமாக்கியுள்ளது. எனவே, பொருளாதாரத்தின் படிப்படியான நிலைப்படுத்தலுடன், இலங்கையின் அபிவிருத்தி அபிலாசைகளுக்கு துணைபுரிவதற்காக நிலைபேறுடைய நிதியளித்தலை திரட்டுவதில் SMIB இற்கு ஒரு முக்கிய பங்கினை நாம் எதிர்பார்க்கின்றோம். இதற்காக, நாம் ஒரு நிலைபேறுடைய மீட்டலுக்கு வசதியளிப்பதற்காக தற்போது வாடிக்கையாளர்கள் மற்றும் பங்காளிகளுடன் ஈடுபடுவதுடன், நீண்டகால மீளெழுச்சியினை ஊக்குவிப்பதற்கு எமது நிபுணத்துவம் மற்றும் வளங்களை பயன்படுத்துகின்றோம். நாம் முன்னோக்கி செல்லும்போது, எமது சூழல் மற்றும் சமூக குறிக்கோள்களுடன் இணைந்த வளர்ச்சியினை இயக்குவதற்கான முன்னிறுத்தமான மூலோபாயங்களை கடைப்பிடித்தல், நிலைபேறுடைய நிதியளித்தலுக்கான எமது உறுதியான கடப்பாட்டினை நாம் தொடர்ந்தும் நிலை நிறுத்துகின்றோம்.

மேலாக, நாம் எமது தீர்வுகள் மற்றும் விழுமிய முன்மொழிவுகளை மேம்படுத்துவதற்கு மற்றும் தொழில்நுட்ப உதவிக்கான அணுக்கத்திற்கு அபவிருத்தி முகவர்கள் மற்றும் பங்காளிகளுடன் நாம் ஒருங்கிணைகின்றோம். நிலைபேறுடைய நிதியளித்தலின் சக்தியை பயன்படுத்துவதன் மூலம், நாம் எமது சமூகங்களினுள் ஒரு சாத்தியமான தாக்கத்தை ஏற்படுத்துவது மாத்திரமன்றி, பரவலான நிலைபேறுடைய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கும் பங்களிப்பதுடன், இது அனைவருக்கும் மிகவும் செழிப்பான மற்றும் சமத்துவமான எதிர்காலத்திற்கான பாதையினை வகுக்கின்றது.

முன்னோக்கிய பாதை

ஒரு புதிய யுகத்தின் விடியலைத் தழுவும்போது நாம், ஒரு சவால்மிக்க வருடத்திலான எமது நினைவுகளை முடிவுறுத்தும்போது, நாம் SMIB இன் நடைபாதையூடாக நம்பிக்கை ஊடுருவுவதை முன்னோக்கியுள்ளோம். துரதிஷ்டங்களிலிருந்து கற்றுக்கொண்ட பாடத்தின் மூலம் திடப்பட்டு, நாம் ஒரு புதுப்பித்த நோக்கம் மற்றும் தீர்மானத்திலான உணர்வுடன் முன்னோக்கிய பாதையினை தொடங்கியுள்ளோம். எமது பங்காளிகளுக்கு பெறுமதியினை உருவாக்கும் எமது அசைக்கவியலாத கடப்பாட்டினால் வழிநடத்தப்பட்டு, நாம் எமது

மூலோபாயங்களை துல்லியமாக ஆராய்வதற்கு உறுதிமொழியளிப்பதுடன், எமது இயக்காற்றலான சூழலின் பரிணமிக்கின்ற தேவைகளை சந்திப்பதற்கு அவசியமானவாறு தழுவியுள்ளோம்.

சி.ந.நி., நு.சி.ந.நி. மற்றும் கூட்டாண்மை வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றும் எமது அசைக்கவியலாத அர்ப்பணிப்பினை, எமது செயல்விளைவினை ஆழமாக்குதல் மற்றும் எமது எட்டுதலை விரிவாக்குதல் மூலம் நாம் தொடர்வோம். செலவு சிக்கனத்தினை பராமரிக்கும் வேளை எமது ஊடுருவலை அதிகரிப்பதன் மூலம், நாம் எமது வாடிக்கையாளர்களுக்கான பெறுமதி முன்மொழிவுகளை மேம்படுத்துவதற்கு பாடுபடுவோம். தற்போது, நாம் நிலைபேறுடைய வளர்ச்சி மற்றும் இலாபகரத்தன்மைக்கான அடித்தள வேலைகளை அமைத்துள்ளதுடன், பெறுமதி சங்கிலிகளிடையே செயற்படுவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ள ஒரு கட்டமைக்கப்பட்ட திட்டத்தினூடாக எமது பெறுமதி வழங்கல்களது விரிவாக்கத்தினை முன்னெடுத்துள்ளோம்.

மேலும், மேம்பாடுகளை தொடர்வதற்கான எமது கடப்பாட்டில், நாம் ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் சேவை மட்டங்களை தரப்படுத்தியும் மேம்படுத்தியும், எமது வாடிக்கையாளர்களுக்கு தடையற்ற மற்றும் வளப்படுத்தும் அனுபவத்தினை வழங்குவோம். இதற்கு அப்பால், எமது மூலோபாயத்தின் ஒரு முக்கிய முன்னிறுத்தமாக, எமது அடிச்சுவட்டினை மேலும் விரிவாக்குவதற்காக அருகிலுள்ள சந்தைகளில் காணப்படும் வாய்ப்புக்களை ஆராய்ந்து எமது ஒத்துழைப்பான பங்குடைமைகளை ஒன்றுசேர்ப்போம். எமது உருமாற்றல் மூலோபாயத்தின் முன்னணியில் டிஜிட்டல் இயக்கம் காணப்படும் என்பதுடன், இது மூலோபாய முதலீடுகள் மற்றும் புத்தாக்கத்தினூடாக நாம் செயற்பாட்டு வினைத்திறனை இயக்கவும் வாடிக்கையாளர் அனுபவத்தினை மேம்படுத்தவும் டிஜிட்டல் ரீதியாக இயலுமையாக்கும் தீர்வுகளை பயன்படுத்துவோம். நுண்ணறிவான வளர்ச்சியிலான எமது முன்னிறுத்தமானது பருமனைவிட தரத்தில் எமது கடப்பாட்டினை அடிக்கோடிடுவதுடன், எதிர்கால சவால்களை எதிர்பார்த்து தணிப்பதற்காக காட்சிநிலை அடிப்படையிலான இடர் மதிப்பீடுகளை பயன்படுத்துவதுடன் நம்பியிருக்கும் மூலோபாயங்களையும் கடைப்பிடிக்கின்றோம்.

இந்தப் பயணத்தில், ஒருங்கிணைப்பின் நலன்களை எட்டுவதற்காக நாம் பங்காளிகளுடன், தொழில்சார் அங்கங்களுடன், மற்றும் அரசாங்க நிறுவனங்களுடன் பங்குடைமைகளை நிறுவுவதற்கு நாம் முன்னுரிமையளிப்போம். கூட்டாக, நாம் அடுத்த கட்ட வளர்ச்சியினை இயக்கி, எமது வாடிக்கையாளர்களுக்கு உகப்பான விளைவுகளை விநியோகித்து நாம் சேவையாற்றும் சமூகத்தில் சாத்தியமான மாற்றத்தினை இயக்குவோம். தனிச்சிறப்பினை பின்தொடர்வதில், SMIB நாளைக்கான வாய்ப்புக்களை தழுவுவதற்கு கம்பீரமாக நிற்பதுடன், இது நேர்மை, புத்தாக்கம் மற்றும் நிலைபேறுடைய வளர்ச்சிக்கான எமது அசைக்கவியலாத கடப்பாட்டினால் வழிநடத்தப்படும்.

ஒப்பளிப்புகள்

இந்த செலவு சிக்கனமான நிதியளித்தல் தெரிவுகளில் பலவற்றை எமது வாடிக்கையாளர்கள் சாதகமாக பார்த்துள்ளதையும் எமது பரந்தளவிலான ஆலோசனைச் சேவைகளின் பாராட்டுதல்களையும் குறிப்பிடுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். அவர்களது தொடர்ச்சியான விசுவாசம் மற்றும் நம்பிக்கைக்கு நான் நன்றி கூறுகின்றேன்.

இவ்வாண்டின்போது பணிப்பாளர்கள் சபைக்கு அவர்களது திடமான ஆலோசனை மற்றும் அசைக்கவியலாத உறுதுணைக்கும், கூட்டாண்மை முகாமைத்துவம், மான்புமிகு ஜனாதிபதி மற்றும் நிதி அமைச்சருக்கு அவர்களது விலைமதிப்பற்ற பங்களிப்பிற்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். இந்த நன்றிக்கடனானது நிதி அமைச்சின் செயலாளர், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர், மேற்குறிப்பிட்ட நிறுவனங்களின் அனைத்து அதிகாரிகள், சட்டமா அதிபர் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களுக்கும் நீட்டிக்கப்படுகின்றது.

வங்கியானது அனைத்து ஊழியர்களுக்கும் பயிற்சிக்கான பல்வேறு வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் உறுதுணையினை நீட்டியுள்ளது. மறுபுறத்தில், எமது ஊழியர்கள் எமது தொலைநோக்கினை புலப்படக்கூடிய விளைவுகளுக்கு மாற்றுவதற்கு துணைபுரிந்துள்ளார்கள். எனவே, வங்கியானது, ஊழியர்கள் மேம்படுவதற்கு, விருத்தியடைவதற்கு மற்றும் பிரகாசிப்பதற்கான ஒரு உள்ளடங்கலான மற்றும் ஊக்கமளிக்கும் பணியிடத்தினை உறுதிப்படுத்துவது நோக்கி தொடர்ந்தும் செயலாற்றுகின்றது. SMIB இனை தனிச்சிறப்பு நோக்கி கொண்டுசெல்வதற்கு நாம் எமது சிறந்த திறனுடையோரை கவர்வதற்கு, வளர்ப்பதற்கு மற்றும் தக்கவைப்பதற்கான முன்னிறுத்தத்தினை தொடர்ந்தோம்.

ஒரு வலிமைமிக்க காலத்தில் எமது செயற்பாடுகளை தொடர்வதில் நிலையுறுதியுடைய கடப்பாடு மற்றும் அயராத பங்களிப்பிற்கு SMIB இன் முகாமைத்துவத்திற்கும் ஊழியர்களுக்கும் எனது அன்பான வணக்கங்களை தெரிவித்துக்கொள்கின்றேன். நாம் பரிந்துரைக்கும் வங்கியியல் முறையினூடாக எமது வாடிக்கையாளர்களுக்கு தொடர்ச்சியான பெறுமதியினை வழங்குவதற்கு எம்மை இயலுமையாக்கியது இந்த அசைக்கவியலாத உறுதுணையும் விசுவாசமும் ஆகும்.



ஜோசப் சூசைதாசன்
தலைவர்

பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரியின்

SMIB துறைசார் போக்குகளினால் முன்னணியில் இருப்பதற்கும் போட்டித்தன்மையினை மேம்படுத்துவதற்கும் புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்ப கடைப்பிடிப்பு ஆகியவற்றுக்கு முன்னுரிமையளிப்பதனை தொடரும். இது செயற்கை நுண்ணறிவு, பிளாக்செயின் மற்றும் தரவுப் பகுப்பாய்வு போன்ற வெளித்தோன்றும் தொழில்நுட்பங்களில் முதலீடு செய்வதனை உள்ளடக்குவதுடன், இவை செயற்பாட்டு வினைத்திறன், இடர் முகாமைத்துவத்தின் மேம்பாடு மற்றும் வாடிக்காயாளர் ஈடுபாட்டினை மேம்படுத்தல் என்பவற்றை வழிநடத்தும்.

2023 ஆம் ஆண்டானது 2022 இல் முகங்கொடுத்த என்றுமில்லாத மோசமான பொருளாதார வீழ்ச்சியிலிருந்து படிப்படியாக மீட்டெழுகின்ற ஒரு நாட்டினை அவதானித்தது. இலங்கையின் பொருளாதாரமானது பின்வருவனவற்றின் துணையுடன் பாரியபொருளாதார ஸ்திரத்தன்மை நோக்கி முன்னேற்றமடைந்ததுடன் நம்பிக்கையானது திரண்டு வந்தது. இவை முன்னேற்றமடைந்த பணவீக்கம், தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைமைகளினால் துணையளிக்கப்பட்டு பொருளாதார நடவடிக்கைகளின் மீள் ஆரம்பம், மற்றும் வெளிவாரித் துறையின் மீட்டெழுச்சி என்பவற்றாலாகும். இந்த சமயத்திலேயே ஒவ்வொரு தொழில் துறையும், வங்கியில் துறை உள்ளடங்கலாக, குறிப்பிடத்தக்க மீளெழுச்சி மற்றும் சிக்கலான பொருளாதார உறுதியின்மைகளை சமாளிப்பதற்கான மூலோபாய விரைவூக்கத்தினை வெளிப்படுத்தின. இந்த நிலைமைக்கு நாங்கள் விதி விலக்கல்ல. SMIB அதன் பயணத்தினை மீளெழுச்சி மற்றும் இணக்கத்தன்மையுடன் தொடர்ந்ததுடன், வாடிக்கையாளர்களது நுட்பமான நிதியியல் தேவைகளுக்கு ஏற்ப பொருத்தமான நிதியில் தீர்வுகளை வழங்கும் அதன் கடப்பாட்டினை வலுப்படுத்தியது.

எனவே, 2023 ஆம் நிதியாண்டுக்கான அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் ஆண்டறிக்கையினையும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களையும் உங்களுக்கு முன்னிலைப்படுத்துவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். இது எப்போதும் மாற்றமடையும் பொருளாதா நிலத்தோற்றம் மற்றும் இயக்காற்றலான வங்கியியல் துறைக்கு மத்தியில் பங்காளிகளுக்கு பெறுமதியினை உருவாக்குவதில் வங்கியின் செயற்பாட்டு மற்றும் நிதியியல் செயற்திறனை நிலைபேறாக்கும் எமது இயக்கத்தினை எதிரொலிக்கின்றது.

செயற்பாட்டு நிலத்தோற்றம்

வருடத்தின் ஆரம்பத்தில் சாத்தியமான வளர்ச்சிப் பாதை காணப்பட்டபோதிலும், முன்னைய ஆண்டின் பாரியபொருளாதார சவால்கள், தொடரும் பொருளாதார உறுதியின்மைகள் மற்றும் அரசியல் ஸ்திரமற்ற நிலை என்பவற்றால் சேர்க்கப்பட்டு பொருளாதார முன்னேற்றமானது தொடர்ந்தும் குறைத்துக் காண்பிக்கப்படுகின்றது. தொற்றினால் உந்தப்பட்ட வீழ்ச்சியினைத் தொடர்ந்து ஆழமாக வேரூண்டிய பொருளாதார சிக்கல்கள் அதிகரித்ததுடன் ஆண்டுபூராவும் நிலைத்திருந்து, மீட்டலுக்கான ஆரம்ப எதிர்பார்ப்புகளை நிறுத்தியது. இலங்கையின் பொருளாதாரமானது கைத்தொழில் மற்றும் சேவைகள் நடவடிக்கைகளிலான பின்னடைவின் காரணமாக 2023 இன் இரண்டாம் காலாண்டில் 3.1% ஆல் சுருக்கமடைந்தது. வருடம் பூராவும் ஒரு உயர்ந்த பணவீக்கச் சூழலானது காணப்பட்டதுடன், இது நுகர்வோர் செலவழிப்பில் அழுத்தத்தினை ஏற்படுத்தி நுகர்வுப் போக்கில் தாக்கத்தினை ஏற்படுத்தி பொருளாதார நடவடிக்கைகளை மேலும் குறைத்தது. அதேபோன்று உயர்வடைந்த வட்டி வீதங்கள் கடன் பெறுநர்களுக்கும் வணிகங்களுக்கும் சவால்களை உருவாக்கியதுடன் கடன் கடப்பாடுகளை முகாமைப்படுத்தும் அவர்களது ஆற்றலினையும், வளர்ச்சி வாய்ப்புக்களுக்கு முதலீடு செய்வதையும் பாதித்தது. பணவீக்கத்தினை இறுக்கமான நாணயக் கொள்கையினூடாக கட்டுப்படுத்தும் இலங்கை மத்திய வங்கியின் முயற்சிகள் உயர் கடன்பெறல் கிரயத்திற்கு பங்களித்ததுடன், நாடு பூராவுமுள்ள கடன் பெறுநர்களினால் முகங்கொடுக்கும் நிதியியல் சுமையினை கூட்டியது.

இந்த நிலைமையானது அரசியல் அமைதியின்மை மற்றும் ஆளுகைச் சவால்களினால் மேலும் அதிகரித்ததுடன், உயர்வான உறுதியின்மை மற்றும் முதலீட்டாளர் எச்சரிக்கைக்கு இட்டுச்சென்றது. இந்த ஸ்திரமற்றதன்மையானது கொள்கை அமுலாக்கல் மற்றும் தீர்மானம் மேற்கொள்வதனை தடைசெய்ததுடன், வணிகங்களைப் போன்றே தனிநபர்களிடையேயும் அமைதியற்ற ஒரு உணர்வினை வளர்த்தது. அதேபோல், வழங்கல் சங்கிலி இடையூறுகளும் ஒரு முக்கிய அக்கறையாக வெளிவந்ததுடன், பொருளாதாரத்தில் பல்வேறு துறைகளைப் பாதித்தது, மூலப் பொருட்களது கொள்முதலில் தொடர்ச்சியான தாமதங்கள், ஏற்பாட்டியல் சிக்கல்கள், மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை என்பன உற்பத்தி மற்றும் விநியோக வழிகளை பாதித்து, ஏற்கனவே போராடுகின்ற பொருளாதார எதிர்காற்றுடனான வணிகங்களுக்கு அழுத்தத்தினை சேர்த்தது.

எனவே, 2023 இல் பாரியபொருளாதார நிலத்தோற்றமானது, பொருளாதார ஸ்திரமின்மை, வழங்கல் சங்கிலி இடையூறுகள், பணவீக்க அழுத்தங்கள் மற்றும் உயர்வடைந்த வட்டி வீதங்கள் போன்ற சிக்கல்களினால் தொடர்ச்சியாக வரையறை செய்யப்படுவதுடன், இது வங்கியியல் துறை பூராவும், அரச ஈட்டு முதலீட்டு வங்கி (SMIB) உள்ளடங்கலான நிறுவனங்களில் இணங்கக்கூடிய மூலோபாயங்கள் மற்றும் விவேகமான தீர்மானம் மேற்கொள்ளல் ஆகியவற்றுக்கான தேவையினை வலியுறுத்தியது.

வங்கியியல் துறை செயற்திறன்

இந்த கொந்தளிப்பான செயற்பாட்டுப் பின்னணியில், வங்கியியல் துறையானது அதிகரித்த கடன் இடர்கள், திரவத்தன்மை கட்டுப்பாடுகள், முறைமைப்படுத்தல் நிச்சயமற்றதன்மைகள் மற்றும் வட்டி வீத தளம்பல்களை சகித்துக்கொண்டது. நிலவுகின்ற பொருளாதார உறுதியின்மையான சூழமைவில் கடன் இடரானது ஒரு குறிப்பிடத்தக்க சிக்கலாகும் என்பதுடன், இதன் காரணமாக வங்கிகள் கடன்பெறுநரின் நிதியியல் ஆரோக்கியத்தின் கண்காணிப்பு உள்ளடங்கலாக கடுமையான கடன் மதிப்பீட்டு நெறிமுறைகளை அமுல்படுத்துவதற்கான அவசியத்தினை ஏற்படுத்தின. ஒரு ஆரோக்கியமான திரவத்தன்மை நிலைப்பாட்டினை பராமரித்தல் மற்றுமோர் சவாலாகக் காணப்பட்டதுடன், ஒரு வலுவான திரவத்தன்மை நிலைமையினை உறுதிப்படுத்துவதற்காக மாற்றமடையும் இயக்கவியல்களுக்கு விரைவாக பதிலளிப்பதற்கு அவசியமான விவேகமான மூலோபாய நடைமுறைகளை வங்கிகள் எடுக்கவேண்டிய தேவையினை ஏற்படுத்தின. மேலும், மாற்றமடையும் முறைமைப்படுத்தல் நிலத்தோற்றமானதும், பரிணமிக்கின்ற ஒழுங்குவிதிகளுடன் ஒத்திருப்பதற்கு வங்கிகளை உந்தியதுடன், இதற்கு தொழில்நுட்பம் மற்றும் ஆளணி பயிற்சி ஆகிவற்றைப் பொறுத்தளவில் கணிசமான முதலீடுகள் தேவைப்படுகின்றது.

துறையிலுள்ள செயற்திறனற்ற கடன்களின் (செ.க.) அதிகரிப்பும் ஒரு சவாலாக வந்ததுடன், செ.க. முகாமைத்துவ நடைமுறைகளை விவேகமாக அமுல்படுத்துவதற்கான அவசியத்தினையும் எடுத்துக்காட்டியது. மறுபுறத்தில், வட்டி வீத தளம்பலானது கடன்பெறுநர்களுக்கும் வணிகங்களுக்கும் ஒரு சவாலினை தோற்றுவித்ததுடன் கடன்கள் மற்றும் முதலீடுகளை தீர்ப்பனவு செய்யும் அவர்களது கொள்திறனை பாதித்தது. எனவே, வங்கிகள் இலாபகரத்தன்மை மற்றும் இடர் முகாமைத்துவத்தினை கருத்திலெடுக்கும்வேளை போட்டித்தன்மையான வட்டி வீதங்களை அறிமுகப்படுத்துவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டன.

வங்கியியல் துறையானது டிஜிட்டல் உருமாற்றல் பாதையினை தொடரவேண்டியிருந்ததுடன்,

பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரியின்

டிஜிட்டல் வங்கியியல் சேவைகள் நோக்கி நகருகின்ற நுகர்வோரது தெரிவுகளை சந்திப்பதற்கு தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் ஊழியர் திறன் மேம்படுத்துவதில் முதலீடு செய்யவேண்டியிருந்தது. இது வாடிக்கையாளர் அனுபவத்தினை மேம்படுத்துவதற்கும் டிஜிட்டல் யுகத்தில் போட்டித்தன்மையாக இருப்பதற்கும் பங்களித்தது.

துறை முகங்கொடுக்கும் இந்த முக்கியமான சவால்களை எதிர்த்துப்போராடுவதற்கு, வங்கிகள் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்தில் கணிசமான முதலீடுகள் உள்ளடங்கலாக செயலூாக்கமான இடர் முகாமைத்துவம் மற்றும் மூலோபாய தழுவல்களை ஆழ்ந்து யோசிக்கவேண்டிய தேவை காணப்பட்டது.

SMIB இன் செயற்திறன்

இந்த கடினமான சூழமைவில், SMIB குறிப்பிடத்தக்க மீளெழுச்சி மற்றும் இணக்கத்திறனை வெளிப்படுத்தியதுடன், இடர்களை தணிப்பதற்கு மற்றும் வெளித்தோன்றும் வாய்ப்புக்களை பயன்படுத்துவதற்கு மூலோபாய முன்னறிவு மற்றும் செயலூாக்கமான நடவடிக்கைகளுடன் வருடத்தினை சமாளித்தவேளை, இயக்காற்றலான வங்கியியல் நிலத்தோற்றத்தில் வங்கியினை தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் வெற்றிக்கு நிலைப்படுத்தியது.

நிதியாண்டின்போது, வங்கியின் முக்கியமான ஆற்றல்களில் ஒன்றாக அதன் வலுவான நிதியியல் நிலைமை காணப்பட்டதுடன், இது பலமான மூலதனப் போதுமை விகிதமான (மூ.போ.வி.) 18.89% இனால் தெளிவாகின்றது. இந்த விகிதமானது முறைமைப்படுத்தல் தேவைப்பாட்டிற்கும் பார்க்க உயர்ந்து காணப்படுவதுடன், இது சாத்தியமான நட்டங்களுக்கு எதிராக ஒரு திடமான காப்பினை வழங்கியதுடன், சந்தை தளம்பல்களிடையே வங்கியின் நிதியியல் ஸ்திரத்தன்மையினை உறுதிசெய்தது. இதற்கு அப்பால், SMIB போதுமான திரவத்தன்மை காப்புகளையும் பராமரிக்கக்கூடியதாயிருந்ததுடன், இது முறைமைப்படுத்தல் திரவத்தன்மை தேவைப்பாட்டினை விஞ்சியதுடன், குறுங்கால கடப்பாடுகளை சந்திப்பதற்கும் எதிர்பாரா திரவத்தன்மை அதிர்ச்சிகளுக்கு ஈடுகொடுக்கவும் இயலுமையாயுள்ளது. வங்கியானது அதன் சந்தை பிரசன்னம் மற்றும் வருவாய் மார்க்கங்களை வலுப்படுத்தும் மூலோபாய வழிநடத்தலில் தொடர்ச்சியாக முன்னிறுத்தம் செய்கின்றது. இது அதன் முதலீட்டுத் தேக்கத்தினை விரிவாக்குவதன் மூலமும் இலக்குவைத்த வளர்ச்சி முயற்சிகளில் ஒருமுனைப்படுத்துவதன் மூலமும் ஆகும். இதன் விளைவாக, வருவாய் மார்க்கங்கள் இலாபகரத்தன்மையில் பொருளாதார எதிர்காற்றுக்களின் தாக்கத்தினை தணிப்பதற்கு பன்முகப்படுத்தப்பட்டதுடன் துறையினுள் வங்கியின் போட்டித்தன்மை நிலையினை மேம்படுத்துவதற்கும் ஆகும்.

SIMB பல முனைகளிலிருந்து தொடர்ச்சியாக சவால்களை எதிர்கொண்டது. முக்கியமான தடைகளுள் ஒன்றாக கடன்கள் மற்றம் முற்பணங்களின் சந்தை பங்களிப்பிலான படிப்படியான வீழ்ச்சியாகும் (0.27% ஆல் வீழ்ச்சியடைந்தது) என்பதுடன் இது வெளிப்படுகின்ற துறை நிலத்தோற்றத்தில் சந்தை பொருந்துமை மற்றும் போட்டித்தன்மையினை பராமரிப்பதற்கு மூலோபாய இணக்கமுறல்களை கருத்திலெடுக்கவேண்டிய தேவையினையும் உருவாக்கியது. எனவே, வங்கியானது வாடிக்கையாளர்களை கவருதல் மற்றும் தக்கவைத்தலைப் பொறுத்தளவிலும் சந்தைப் பங்களிப்பினை பராமரிப்பதிலும் உயர்வடையும் போட்டியினை பரசீலிப்பதற்கு கட்டாயமாக்கப்பட்டது. இது போட்டியாளர்களின் தீவிரமான விலையிடல் மூலோபாயங்கள் மற்றும் கருவி வழங்கல்களுக்கு மத்தியிலாகும்.

மற்றுமோர் அக்கறையாகக் காணப்பட்டது அதிகரித்த நிதிக்கான கிரயத்திற்கு இட்டுச்சென்ற உயர் வட்டி வீதச் செலவினங்களாகும். எவ்வாறாயினும், வங்கியானது உயர் வட்டி வீத செலவினங்களிலிருந்து எழுகின்ற சவால்கள் காணப்பட்டபோதிலும் இலாபகரத்தன்மையில் முன்னிறுத்தத்தினை தொடர்ந்தது. வட்டி வருமானம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை கண்டபோதிலும், ரூபா 9,324 மில்லியனை எட்டியது, தேறிய வட்டி வருமானமானது உயர் வட்டிச் செலவினங்களினால் ஒரு வீழ்ச்சியடையும் போக்கிற்கு முகங்கொடுத்தது. இந்த இடையூறுகளை விளித்துரைப்பதற்காக, வங்கியானது நிதியியல் முகாமைத்துவத்திற்கு ஒரு செயலூாக்கமான அணுகுமுறையினை எடுத்ததுடன், ஒரு தெரிவு அடிப்படையில் கடன்களை மூலோபாயமாக மீள்விலையிடலைச் செய்ததுடன், இது வருவாய் உருவாக்கத்தினை உச்சப்படுத்தவும் வட்டி வீத இடர்களை முகாமைப்படுத்துவதற்கும் ஆகும்.

இக்காலத்தின்போது, வட்டியல்லாத வருமானப் பிரிவானது, குறிப்பாக கட்டண மற்றும் தரகு வருமானமும் கணிசமான சுருக்கத்தினை கண்டபோதிலும், ஏனைய செயற்பாட்டு வருமானமானது, முதலீடுகளிலிருந்தான உழைப்புகளினால் துணையளிக்கப்பட்டு, ஒட்டுமொத்த வருவாய்க்கு சாதகமான பங்களிப்பினை செய்தது.

வங்கியின் மொத்த செயற்பாட்டு வருமானமானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது ஒரு குறிப்பிட்ட வீழ்ச்சியினை கண்டது, இது நிலவுகின்ற பொருளாதார நிலைமையின் கீழ் செலவினங்களை முகாமைப்படுத்தி வருவாய் மார்க்கங்களை உகப்பாக்குவதிலான சவால்களை வலியுறுத்துகின்றது. இருந்தபோதிலும், SMIB அதன் வைப்புத் தளத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை அடைந்ததுடன், இது திடமான வாடிக்கையாளர் நம்பிக்கையினையும் வங்கியின் சேவை வழங்கலுக்கான விசுவாசத்தினையும் குறிக்கின்றது. இதற்கப்பால், SMIB வங்கி மற்றும் வாடிக்கையாளர்கள் ஆகிய இரு சாராருக்கும் இடர்களை தணிப்பதற்காக கடன்களில் காப்புறுதிக் காப்பினை வழங்கியது. காப்புறுதிக் காப்பீடானது, ஊனநிலை, தீவிர நோய் அல்லது இறப்பு போன்ற நிகழ்வுகளுக்கு எதிரான பாதுகாப்பினை வழங்குவதுடன், எதிர்பாரா சூழ்நிலைகளில் கடன் மீள்செலுத்தலை உறுதிசெய்கின்றது. இது பொறுப்பான கடன் வழங்கல் மற்றும் வாடிக்கையாளர் நல்வாழ்வு குறித்த SMIB இன் கடப்பாட்டினை தெளிவாக உணர்த்துவதுடன், கடன் பெறுநர்களுக்கு நிதியியல் பாதுகாப்பினை மேம்படுத்துவதுடன் வங்கிக்கான கடன் இடர் வெளிப்பாட்டினையும குறைக்கின்றது.

மேலும், SMIB நடந்துகொண்டிருக்கும் செயற்பாடுகளுக்கு துணைபுரிவதில் முறைமைப்படுத்தல் தேவைப்பாட்டிற்கு மேலாக திரவத்தன்மை ஒதுக்கங்களை பராமரிப்பதிலும் வெற்றியடைந்தது. இது விவேகமான இடர் முகாமைத்துவத்திற்கான கடப்பாட்டினையும் அதன் செயற்பாடுகளின் ஸ்திரத்தன்மை மற்றும் மீளெழுச்சியினை பாதுகாப்பதற்கான அர்ப்பணிப்பினையும் வலியுறுத்துகின்றது.

தொழில்நுட்ப கடைப்பிடிப்பு மற்றும் டிஜிட்டல் உருமாற்றத்திலான முதலீடுகள் ஆகியனவும் அதன் மூலோபாயப் பாதையில் ஒரு முக்கியமான கூறாகக் காணப்பட்டதுடன், இங்கு வங்கியானது செயற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதற்கு, வாடிக்கையாளர் அனுபவங்களை மேம்படுத்துவதற்கு மற்றும் உள்ளக செயன்முறைகளை சீராக்கவும் தொடர்ச்சியாக முன்னெடுப்புகளை மேற்கொண்டது. இது டிஜிட்டல் மேடைகளை தரமுயர்த்துதல், சைபர் பாதுகாப்பு நடைமுறைகளை மேம்படுத்துதல், மற்றும் தகவலறிந்த தீர்மானம் மேற்கொள்ளலுக்கு தரவுப் பகுப்பாய்வு ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

இந்த மூலோபாய நிகழ்ச்சி நிரலில் திறன் அபிவிருத்தி மற்றுமோர் முன்னுரிமையான பிரிவு என்பதுடன் வங்கியானது பின்வருவனவற்றை ஊழியர்களுக்கு வழங்கியது. மாற்றமடையும் சந்தை இயக்காற்றல்களை சமாளிப்பதற்கும் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு விதிவிலக்கான சேவைகளை விநியோகிப்பதற்கும், அவர்களை அவசியமான திறன்கள் மற்றும் ஆற்றல்களுடன் தயார் படுத்துவதற்காக பயிற்சித் திட்டங்கள் வடிவில் பல்வேறு தொழில்சார் அபிவிருத்தி திட்டங்களுக்கான வெளிப்பாடு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது. அவர்களது செயலூாக்கம் மற்றும் ஆக்கத்திறனை மேலும் தக்கவைப்பதற்கு வங்கியானது செயற்திறன் ஊக்கத்தொகைகள் மற்றும் திறன் தக்கவைத்தல் மூலோபாயங்களை பயன்படுத்தியது.

இக்காலத்தின்போது SMIB இன் மூலோபாயப் பாதையானது நான்கு பிரதான இயக்கிகளை சுற்றி மையப்பட்டிருந்தது. முதலாவதாக, உயர் வட்டி வீத சூழலுக்கு எதிராக விவேகமான திரவத்தன்மை முகாமைத்துவத்தில் முன்னிறுத்தம் செய்ததுடன், இது ஆகக்குறைந்த தேவைப்பாடான 20% இற்கு எதிராக வங்கியின் சராசரி அமைப்பு ரீதியான திரவச் சொத்து வீதம் 35% ஆக காணப்படுவதிலிருந்து தெளிவாகின்றது. இரண்டாவதாக, வங்கியானது துறைசார் சராசரியிலும் பார்க்க குறைவான விதத்தில் செ.க. யும் வலுக்குன்றலையும் முகாமைப்படுத்துவதில் ஒருமுகப்படுத்தியதுடன், 2023 இன் இறுதியில் துறைசார் சராசரியான 13.4% இற்கு எதிராக செ.க. வீதத்தினை 12.32% ஆக பராமரிக்க இயலுமையாயிருந்தது. மூன்றாவதாக, அதிகரிக்கும் நிறுவனச் செலவுகளை முகாமைப்படுத்துவதற்கு வங்கியானது செலவின முகாமைத்துவ மூலோபாயங்களை அமுல்படுத்தியது. இந்த முயற்சிகளின் விளைவாக, வங்கியின் செயற்பாட்டுச் செலவினங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 4.5% ஆல் மாத்திரமே அதிகரித்தது. இறுதியாக, வங்கியானது கடன்கள் மற்றும் முற்பணங்களிலான விளைவினையும் முதலீட்டு வருமானத்தினையும் அதிகரிப்பதில் முன்னிறுத்தம் செய்தது. இதன் காரணமாக இவ்வாண்டின்போது, கடன்கள் மற்றும் முற்பணங்களிலான வட்டி வருமானம் 19% ஆல் அதிகரித்தும் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான வருமானம் 38.2% ஆலும் அதிகரித்தது.

இந்த மூலோபாயங்களினால் துணையளிக்கப்பட்டு, SMIB ஒரு நிலைபேறுடைய திடமான கடன் வளர்ச்சி, பல்வேறு துறைகளிடையே பன்முகப்படுத்தப்பட்ட ஒரு ஆரோக்கியமான கடன் தேக்கத்தினை பராமரிப்பதனையும் சமாளித்தது. வங்கியானது விவேகமான இடர் முகாமைத்துவ நடைமுறைகளுடன் திடமான சொத்துத் தரத்தை பராமரித்ததுடன், இது செயற்திறனற்ற கடன்களை சமாளிக்கக்கூடிய மட்டங்களில் வைத்திருப்பதற்கு பங்களிப்பு செய்தது.

நிதியியல் பக்கத்தில், SMIB அதன் இலாபகர இலக்குகளை அடைந்ததுடன், இவை திடமான வட்டி வருமானம், விவேகமான செலவின முகாமைத்துவம் மற்றும் வளங்களின் வினைத்திறனான பயன்பாடு ஆகியவற்றால் இயக்கப்பட்டது. வாடிக்கையாளர் சேவை ஈடுபாட்டினைப் பொறுத்தளவில், SMIB

வாடிக்கையாளர் திருப்திக்கு தொடர்ச்சியாக முன்னுரிமையளித்து வசதியான மற்றும் வினைத்திறனான சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்காக அதன் டிஜிட்டல் வங்கியியல் வழங்கல்கள் மற்றும் செயன்முறைகளை நெறிப்படுத்தியது.

ஒட்டுமொத்தத்தில், இவ்வாண்டின்போதான SMIB இன் செயற்திறனானது, விவேகமான இடர் முகாமைத்துவம், புத்தாக்கம், வாடிக்கையாளர் மையப்படுத்தல் ஆகியவற்றுக்கான அதன் கடப்பாட்டினை பிரதிபலித்ததுடன் எதிர்காலத்தில் நிலைபேறுடைய வளர்ச்சிக்கும் பெறுமதி உருவாக்கத்திற்கும் வங்கியினை நிலைப்படுத்தியது.

முக்கியமான மைல்கற்கள்

SIMB இன் முக்கியமான மைல்கற்கள் டிஜிட்டல் உருமாற்றம், புத்தாகத்திலான திறமை, மற்றும் வாடிக்கையாளர் மையப்படுத்தல் ஆகியவற்றுக்கான அதன் தொடர்ச்சியான கடப்பாட்டினை எடுத்துக்காட்டியதுடன் கூட்டாண்மை சமூகப் பொறுப்பிற்கான (கூ.ச.பொ.) அதன் அசைக்கவியலாத கடப்பாட்டினையும் காட்டியது.

இவ்வாண்டின் தெளிவாக அவதானிக்கக்கூடிய சாதனையாக ஒரு மையமான வங்கியியல் முறையினை அமுலாக்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் காணப்பட்டது. இது டிஜிட்டல் உருமாற்றம் நோக்கிய SIMB இன் பயணத்தில் ஒரு நினைவுச்சின்னமான சுவடாகும். இந்த நவீனமயப்படுத்தல் முன்னெடுப்பானது உள்ளகச் செயன்முறைகளை நெறிப்படுத்துவதுடன் ஒரு அதிகரித்த டிஜிட்டல் மயமாக்கப்பட்ட வங்கியியல் நிலத்தோற்றத்தில் அதன் வாடிக்கையாளர்களுக்கு தடையற்ற வினைத்திறனான சேவையினை விநியோகிப்பதற்கான வங்கியின் ஆற்றலை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலாக, நாடுபூராவும் மூலோபாயமாக பரவியுள்ள SMIB இன் கிளை வளையமைப்பானது சமூக ஈடுபாட்டினை வளர்ப்பதற்கும் வதிவீட்டாளர்களுடன் அர்த்தமுள்ள உறவுகளை பேணி வளர்ப்பதிலும் ஒரு கருவியாக பங்களிப்பு செய்தது. வங்கியியல் மையங்களாக சேவையாற்றும் அவற்றின் மரபுரீதியான பங்கிற்கு அப்பால் சென்று இந்த கிளைகள் அவற்றின் உரிய அமைவிடங்களைச் சுற்றியுள்ள இடங்களில் சமூக மற்றும் வர்த்தகம் தொடர்பான நடவடிக்கைகளில் பங்குபற்றியதுடன், அது சேவையாற்றும் சமூகங்களின் ஒரு ஒருங்கிணைந்த பாகமான SMIB இன் நிலையினை வலுப்படுத்தியது. நெருக்கடி நேரங்களின்போது SMIB இன் கிளைகள் ஒத்துணர்வு மற்றும் உறுதுணையுடன் பதிலளித்ததுடன் அதன் பங்காளிகளது நல்வாழ்வினை உறுதிப்படுத்துவதற்கான அதன் அர்ப்பணிப்பினை வெளிப்படுத்தியது.

நாம் முன்னோக்கி நகரும்போது, சமூக பொறுப்பு மற்றும் நிலைபேறுடைமைக்கான எமது கடப்பாடானது திடமாகவும் தொடர்ச்சியாகவும் உள்ளது. வங்கியானது அதன் மையமான விழுமியங்களுடன் இணைந்த பயனுள்ள சமூக மற்றும் சூழல் திட்டங்களுக்கு அதன் உறுதுணையினை தொடருவதுடன் இது சமூகத்தின் மேம்பாட்டிற்கு பங்களிப்பு செய்யும். அதன் தொடர்ச்சியான முயற்சிகளூடாக, SMIB ஒரு பொறுப்புள்ள கூட்டாண்மைப் பிரஜையாக அதன் நற்பெயரினை நிலைநாட்டுவதற்கு முயற்சிப்பதுடன் மற்றும் இலங்கையின் வங்கியியல் துறை மற்றும் அதற்கப்பால் சாத்தியமான மாற்றத்திற்கான ஒரு வினையூக்கியாகவும் இருக்கும்.

முன்னோக்கிய எதிர்காலம்

அடுத்த நிதியாண்டில், SMIB நிலைபேறுடைய வளர்ச்சி, நிதியியல் மீளெழுச்சி மற்றும் வாடிக்கையாளர் மையப்படுத்திய புத்தாக்கம் என்பவற்றில் முன்னிறுத்தம் செய்து குறுங்கால குறிக்கோள்கள் மற்றும் நீண்டகால இலக்குகளை இணைக்கும் ஒரு மூலோபாய வழியினை பின்பற்றுவதற்கு எண்ணியுள்ளது. எனவே, குறுங்காலத்தில், நாம் வெளிப்படுகின்ற வாடிக்கையாளர் தெரிவுகள் சந்தை கேள்விகளை சந்திப்பதற்காக டிஜிட்டல் கொள்திறன்களிலான தொடர்ச்சியான முதலீடுகளுடன் எமது டிஜிட்டல் மேடைகளை பலப்படுத்துவதில் முன்னிறுத்தம் செய்வோம். இது மேலான அபிவிருத்திகளான மொபைல் வங்கியியல் செயலிகள், இயங்கலை மேடைகள், மற்றும் ஒரு ATM வலையமைப்பு உள்ளடங்கலான டிஜிட்டல் கொடுப்பனவு தீர்வுகள் ஆகியவற்றை உள்ளடக்குவதுடன், இவை வாடிக்கையாளர் அனுபவத்தினை சீரமைப்பதற்காகவும் செயற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதற்காகவும் அடுத்த நிதியாண்டில் செயற்படுத்தப்படும். இரண்டாவதாக, நாம் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (சி.ந.நி.), விவசாயம், மற்றும் புதுப்பிக்கத்தக்க வலு போன்ற முக்கிய துறைகளை இலக்குவைத்து எமது கடன் தேக்கத்தினை விரிவாக்குவதில் ஒருமுனைப்படுத்துவோம். இந்த முயற்சிகள் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி, நிதியியல் உள்ளடக்கத்தினை ஊக்குவித்தல் மற்றும் வருவாய் மார்க்கங்களை பன்முகப்படுத்தல் ஆகிவயற்றுக்கு துணைபுரியும் என நாம் நம்புகின்றோம். மூன்றாவதாக, SMIB வினைத்திறன் வழிமுறைகள், செயன்முறை தன்னியக்கமாக்கல் மற்றும் வளங்கள் உகப்பாக்கல் ஆகியவற்றினூடாக செயற்பாட்டு செலவினங்களை உகப்பாக்கும் அதன் செலவு சிக்கனப்படுத்தல் வழிமுறைகளை தொடரும். இது உள்ளக செயன்முறைகளை சீரமைத்தல், நிறுவனச் செலவினங்களை குறைத்தல் மற்றும் ஒட்டுமொத்த செலவினப் பயனுறுதியினை அதிகரிப்பதற்கு ஆக்கத்திறனை மேம்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கும்.

நீண்டகாலத்தின் மீது, வங்கியானது நிதியியல் செயற்திறனை சமூக மற்றும் சூழல் பொறுப்புடன் சமநிலைப்படுத்தி நிலைபேறுடைய வளர்ச்சியினை அடைவதற்கு முயற்சிக்கும். இது நிலைபேறுடைய நிதியியல் முன்னெடுப்புகளில் முதலீடு செய்தல், பசுமை கடன் வழங்கல் நடைமுறைகளை ஊக்குவித்தல், சூழல் பாதுகாப்பு மற்றும் சமூக நல்வாழ்விற்கு பங்களிப்பு செய்யும் திட்டங்களுக்கு உறுதுணையளித்தல் என்பவற்றினூடாக ஆகும். உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியாக சந்தை விரிவாக்கம் மற்றும் பன்முகப்படுத்தல், புதிய சந்தை இனங்காணுதல், மூலோபாய பங்குடைமைகளை நிறுவுதல் மற்றும் நடைமுறையிலுள்ள வலையமைப்பினை பயன்படுத்தி அதன் வாடிக்கையாளர் தளத்தினையும் பூகோளவியல் தடத்தினை விரிவாக்குதல் என்பவற்றுடன் எமது நிகழ்ச்சி நிரலில் உள்ளடங்கும்.

SMIB துறைசார் போக்குகளினல் முன்னணியில் இருப்பதற்கும் போட்டித்தன்மையினை மேம்படுத்துவதற்கும் புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்ப கடைப்பிடிப்பு ஆகியவற்றுக்கு முன்னுரிமையளிப்பதனை தொடரும். இது செயற்கை நுண்ணறிவு, பிளாக்செயின் மற்றும் தரவுப் பகுப்பாய்வு போன்ற வெளித்தோன்றும் தொழில்நுட்பங்களில் முதலீடு செய்வதனை உள்ளடக்குவதுடன், இவை செயற்பாட்டு வினைத்திறன், இடர் முகாமைத்துவத்தின் மேம்பாடு மற்றும் வாடிக்காயாளர் ஈடுபாட்டினை மேம்படுத்தல் என்பவற்றை வழிநடத்தும்.

நிதியில் இலக்குளைப் பொறுத்தளவில், SMIB இலக்குவைத்த கடன்வழங்கல் முன்னெடுப்புகள் மற்றும் துறை-குறிப்பிட்ட முன்னிறுத்தமான பிரிவுகளூடாக அதன் கடன் தேக்கத்தினை விரிவாக்குவதற்கு எண்ணியுள்ளதுடன், இது கடன் வழங்கல் பருமனில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை அடைவதற்காகும். இரண்டாவதாக, ஒட்டுமொத்த நிதியியல் செயற்திறனை மேம்படுத்துவதற்கு செயற்பாட்டு வினைத்திறன் மேம்பாடுகள் மற்றும் செலவின உகப்பாக்க வழிமுறைகளை ஆகியவற்றை அமுலாக்குவதன் மூலம் அதன் வருமானத்திற்கான செலவின விகிதத்தினை குறைப்பதும் நிகழ்ச்சி நிரலில் உள்ளது. மேலாக, SMIB வாடிக்கையாளர் ஈடுபாடு மற்றும் அவர்களது திருப்தியினையும் மேம்படுத்தும். இது அதன் வாடிக்கையாளர் தளத்திற்கு பயனாளர் தோழமையான டிஜிட்டல் மேடைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட டிஜிட்டல் வங்கியியல் சேவைகளை வழங்குதல் ஊடாக அதிகரித்த டிஜிட்டல் கடைப்பிடித்தல் மூலமாகும். இறுதியாக, வங்கியானது, முதலீட்டிலான விளைவினை உகப்பாக்கவும் நீண்டகால நிதியியல் நிலைபேறுடமையினை உறுதிப்படுத்துவதற்காகவும் வினைத்திறனான செலவு முகாமைத்துவ மூலோபாயங்களை அமுல்படுத்தியும் திடமான வருவாய் வளர்ச்சியினை அடைவதன் மூலம் அதன் இலாபகரத்தன்மையினை நிலைபேறுடைய விதத்தில் மேம்படுத்துவதனை தொடரும்.

ஒட்டுமொத்தத்தில், SMIB இன் எதிர்கால கண்ணோட்டம் மற்றும் புதிய நிதியாண்டிற்கான மூலோபாய வழிகாட்டல் என்பன நிலைபேறுடைய வளாச்சி, புத்தாக்கம், வாடிக்கையாளர் மையப்படுத்தல், மற்றும் நிதியியல் மீளெழுச்சி ஆகியவற்றுக்கு முன்னுரிமையளிப்பதுடன், இவை நீண்ட கால வெற்றிக்கும் வாடிக்கையாளர்களுக்கான பெறுமதி உருவாக்கத்திற்குமான நிலையினை நிறுவும்.

பாராட்டுக்கள்

நான் தலைவருக்கும், பணிப்பாளர்கள் சபைக்கும் மற்றும் முழு SMIB அணிக்கும், 2023 பூராவும் அவர்களது அயராத அர்ப்பணிப்பு மற்றும் மீளெழுச்சிக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். எமது பெறுமதி மிக்க வாடிக்கையாளர்கள், பங்காளிகள், மற்றும் முறைமைப்படுத்துபவர்கள் எமது முன்னேற்றத்திற்கான கருவியாக இருந்ததுடன், நாம் பரிணமிக்கின்ற வங்கியில் நிலத்தோற்றத்தில் பெறுமதியினை விநியோகிப்பதற்கும் எமது போட்டித்தன்மையினை நிலைபேறுடையதாக்குவதற்கும் நாம் அர்ப்பணிப்புடன் உள்ளோம். முன்னோக்கி பார்க்கும்போது, நாம் தொடர்ந்தும் நிதியியல் மீளெழுச்சி, புத்தாக்கம், மற்றும் பங்காளிகளுடனான ஈடுபாடு ஆகியவற்றிற்கு தொடர்ந்தும் முன்னுரிமையளிப்பதுடன், எமது பங்காளிகளுக்கு SMIB ஒரு நம்பிக்கையான பங்காளியாகவும் நாம் சேவையாற்றும் சமூகங்களில் சாத்தியமான மாற்றத்திற்கு ஒரு வினையூக்கியாகவும் இருப்பதனை உறுதிப்படுத்துகின்றோம்.

மனமார்ந்த,

துசார அசுரமன்ன
பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி
அரச ஈட்டு முதலீட்டு வங்கி

பணிப்பாளர்கள் சபை

திரு. பி. ஆர். மதியஹேவ
சுயாதீன நிறைவேற்றனரல்லா பணிப்பாளர்

திரு. எஸ். கே. ஏ. கலப்பத்தி
சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்

திரு. ஜே. எம். சூசைதாசன்
தலைவர்

திரு. எச். சி. டி. எல். சில்வா
நிறைவேற்றுனரல்லா பதவிவழி பணிப்பாளர்

பேராசிரியர் டி. ஏ. எம். பெரேரா
சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்

திரு. ஜே. எம். சூசைதாசன்
தலைவர்
சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்

நியமனக் காலம்:
17 மே 2023 முதல் இதுநாள் வரைக்கும்

திறன்கள் மற்றும் அனுபவம்
- இலங்கை மற்றும் வெளிநாடுகளில் முற்போக்கான முாமைத்துவ அனுபவத்துடனான முகாமைத்துவ பட்டய கணக்காளர்கள் நிருவகத்தின் (UK) ஒரு சமூக அங்கத்தவர்.
- இலங்கை மற்றும் வெளிநாடுகளில் ஆடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதித் துறையில் பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளராக 18 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தினை கொண்டுள்ளார்.
- இலங்கை மற்றும் வெளிநாடுகளில் ஹோட்டல் மற்றும் பிரயாணத் துறை உள்ளடங்கலான கம்பனிகளில் நிதியியல் மற்றும் முகாமைத்துவ ஆலோசகர் /முகாமையாளர் ஆக பரந்த அனுபவம்.

ஏனைய நியமனங்கள்
- ட்ரென்ட் செட்டர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்டிற்கு முகாமைத்துவ ஆலோசகர்

முன்னைய நியமனங்கள்
- ஹொட்டல் டெவலப்பர்ஸ் (லங்கா) பி.எல்.சி. இன் பணிப்பாளர்
- பிரதம செயற்பாட்டு அதிகாரி - ட்ரென்ட் செட்டர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
- பொது முகாமையாளர் - டைமெக்ஸ் அன்ட் வோர்கசம் குரூப்
- பொது முகாமையாளர் / ஆலோசகர் - ஸ்டார் எபரல்ஸ் (டி) லிமிட்டட், தான்சானியா
- பொது முகாமையாளர் - எல். எம். கலக்ஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
- முகாமைத்துவ ஆலோசகர் - கே.பி.எம். ஜி, சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவரமைப்பு, குளொபல் ட்ரான்ஸ்போட்டேசன் அன்ட் லொஜிஸ்டிக்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் மற்றும் ஜோ லங்கா குரூப்.

திரு. எச். சி. டி. எல். சில்வா
நிறைவேற்றுனரல்லா பதவிவழி பணிப்பாளர்

நியமனத்தின் காலம்:
11 ஜனவரி 2020 முதல் இதுநாள் வரைக்கும்

திறன்கள் மற்றும் அனுபவம்
- இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவகத்திலிருந்து பொது முகாமைத்துவத்தில் முதுமானி பட்டத்தையும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து இளமானி விசேடத்துவப் (பொது நிர்வாகம்) விசேட (கௌரவப்) பட்டத்தையும் பெற்றுள்ளார்.
- கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர்கள் நிருவகத்தின் ஒரு இணை அங்கத்தவர்
- பொது நிர்வாக கணக்காளர்கள் சங்கத்தின் ஒரு சமூக அங்கத்தவர்
- ஒரு சான்றளிக்கப்பட்ட வணிகக் கணக்காளர் - இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம் (ICASL)
- ஒரு பட்டய பொது நிதியியல் முகாமைத்துவக் கணக்காளர் - இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகம் (ICASL)
- இவர் பொது நிதியியல் மற்றும் கணக்கீட்டு பட்டய நிருவகத்தின் அங்கத்தவர் மற்றும் 1992 இலிருந்து இலங்கை கணக்காளர்கள் சேவையில் ஒரு கணக்காளராக 30 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவர் பொது நிதியியல் முகாமைத்துவம், திறைசேரி காசு முகாமைத்துவம், பொது படுகடன் முகாமைத்துவக் கணக்காய்வு, கணக்கீடு மற்றும் பொது கொள்முதல் முகாமைத்துவம் போன்ற துறைகளில் ஒரு மூலோபாய மட்ட அதிகாரியாக பன்முக அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

ஏனைய நியமனங்கள்
- நிதி அமைச்சின் திறைசேரி செயற்பாடுகளின் பணிப்பாளர் நாயகம்
- தேசிய புத்தாக்க முகவரமைப்பின் இயக்கக் குழுவின் சபை அங்கத்தவர் (NIA)

முன்னைய நியமனங்கள்
- தேசிய லொத்தர் சபையின் பதவிவழி பணிப்பாளர்
- அபிவிருத்தி லொத்தர் சபையின் பதவிவழி பணிப்பாளர்
- தேசிய விஞ்ஞான அறக்கட்டளையின் பதவிவழி அங்கத்தவர்

திரு. எஸ். கே. ஏ. கலப்பத்தி
சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்

நியமனத்தின் காலம்:
முதலாவது நியமனம் - 02 ஜனவரி 2020 இலிருந்து 01 ஜனவரி 2023 வரை,
இரண்டாவது நியமனம் - 07 மார்ச் 2023 இலிருந்து இதுநாள் வரைக்கும்

திறன்கள் மற்றும் அனுபவம்
- கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தில் எல்.எல்.பி பட்டத்தையுடைய ஒரு வழக்கறிஞர்
- வர்த்தகச் சட்டம், கம்பனிகள் சட்டம், காணிச் சட்டம், மாவட்ட நீதிமன்றங்களில் பிரிவினை, வர்த்தக மேல் நீதிமன்றம், சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் தொழில் தீர்ப்பாயத்தில் தொழில் சட்டம் மற்றும் பேராணை விண்ணப்பம், நிர்வாகச் சட்டம் மற்றும் மேன்முறையீட்டு மற்றும் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை ஆகிய துறைகளில் 29 வருடங்களுக்கும் மேலான நடைமுறை அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.
- இலங்கை வழக்கறிஞர்கள் சங்கத்தின் பிரதிநிதி
- கொழும்பு சட்டச் சங்கத்தின் ஒரு அங்கத்தவர்
- தொழில்வல்லுனர்கள் சங்க ஒழுங்கமைப்பின் ஒரு அங்கத்தவர்

முன்னைய நியமனங்கள்
- இலங்கை காணி சுவீகரிப்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்
- தேசிய லொத்தர் சபையின் பணிப்பாளர்
- பணிப்பாளர் சட்டம் - மொர்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட் அன்ட் வைனான்ஸ் பிஎல்சி
- நிதியியல் இல்லங்களின் சங்கத்தின் சட்ட வட்டத்தின் தலைவர்

பணிப்பாளர்கள் சபை

பேராசிரியர் டி. ஏ. எம். பெரேரா
சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்

நியமனக் காலம்:
21 மார்ச் 2023 முதல் இதுநாள் வரைக்கும்

திறன்கள் மற்றும் அனுபவம்
- கீசி சர்வதேச பல்கலைக்கழகத்திலிருந்து வணிக முகாமைத்துவத்தில் முனைவர் பட்டம் மற்றும் வயம்ப பல்கலைக்கழகத்திலிருந்து சந்தைப்படுத்தலில் முனைவர் பட்டத்தினை வைத்துள்ளார்.
- இந்திரா காந்தி தேசிய திறந்த பல்கலைக்கழகத்திலிருந்து நிதியியல் முகாமைத்துவத்தில் முதுமானி பட்டம் மற்றும் வயம்ப பல்கலைக்கழகத்திலிருந்து பொது முதுமானி பட்டத்தையும கொண்டுள்ளார்.
- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து பொது நிர்வாகத்தில் இளமானி விஞ்ஞானப் (விசேடம்) பட்டத்தையும் கொண்டுள்ளார்.
- கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் சங்கத்தின் ஒரு அங்கத்தவர்

ஏனைய நியமனங்கள்
- இலங்கையின் வயம்ப பல்கலைக்கழகத்தின் (WUSL) கணக்கீட்டு திணைக்களத்தில் தலைவர்
- WUSL இன் வணிகக் கற்கை மற்றும் நிதியியில் பீடத்தின் பேராசிரியர்
- எக்சன் வெலி கெம்பஸ் (பிரைவேட்) லிமிட்டட்டின் பணிப்பாளர்
- சனச கெம்பஸ் (பிரைவேட்) லிமிட்டட்டின் பணிப்பாளர்
- விசன் 2040 (பிரைவேட்) லிமிட்டட்டின் பணிப்பாளர்

முன்னைய நியமனங்கள்
- பணிப்பாளர் - நிலைபேறுடைய வலு அதிகாரசபை
- கட்டுமானப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்
- மக்கள் வங்கியின் பணிப்பாளர் மற்றும் 2018 இலிருந்து சிரேஷ்ட பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்
- சிவில் ஏவியேசன் அதிகாரசபையின் பணிப்பாளர்
- பொது நூலகம் மற்றும் சேவை டி பி இன் பணிப்பாளர்
- WUTD (சவூதி அபிவிருத்தி நிதியத்தின்) திட்டத்தின் திட்டப் பணிப்பாளர் மற்றும் உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரவையின் திட்டப் பணிப்பாளர்
- பொது நிறுவன அபிவிருத்தி அமைச்சின் ஆலோசகர்
- BCI கெம்பஸ்ஸின் ஆலோசகர்
- கீசி சர்வதேச பல்கலைக்கழகத்தின் தேசிய ஆலோசகர்

திரு. பி. ஆர். மதியஹேவ
சுயாதீன நிறைவேற்றனரல்லா பணிப்பாளர்

நியமனக் காலம்:
02 மே 2023 முதல் இதுநாள் வரைக்கும்

திறன்கள் மற்றும் அனுபவம்
- அடிலேட்டிலுள்ள அவுஸ்திரேலிய வணிக நிருவகத்திலிருந்து வணிக முகாமைத்துவத்தில் ஒரு முதுமானி பட்டம் மற்றும் பட்டப்படிப்பின் பின்னரான டிப்ளோமா
- பட்டய தொழில்சார் முகாமையாளர்களின் சமூக அங்கத்தவர்
- இலங்கை சந்தைப்படுத்தல் நிருவகத்தின் சான்றளிக்கப்பட்ட அங்கத்தவர்
- பட்டய முகாமைத்துவ நிருவகத்தின் சமூக அங்கத்தவர்
- வணிக நிறைவேற்றுனர்கள் சங்கத்தின் சமூக அங்கத்தவர்
- பட்டய சந்தைப்படுத்தல் நிருவகத்தின் அங்கத்தவர்
- முகாமைத்துவ நிருவகத்தின் அங்கத்தவர்
- வர்த்தக மற்றும் நிதியியல் துறைகளில் சிரேஷ்ட முகாமைத்துவ அனுபவத்தில் 30 வருடங்களுக்கும் அதிகமான விரிவான அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

ஏனைய நியமனங்கள்
- பின்வருவனவற்றின் முகாமைத்துவப் பணிப்பாளர் ;
  - ஸ்வர்ணகலும் குரூப் (பிரைவேட்) லிமிட்டட்
  - ஸ்வர்ணகலும் லொஜிஸ்டிக்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
  - சன்கா லொஜிஸ்டிக்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
  - ஸ்வர்ணகலும் வீல் கெயார் (பிரைவேட்) லிமிட்டட்
  - சன்கா டிஜிட்டல் வீல் கெயார் (பிரைவேட்) லிமிட்டட்

முன்னைய நியமனங்கள்
- தலைவர் - சிலோன் வேர்ட்டிலைசர் கம்பனி லிமிட்டட்
- முகாமைப் பணிப்பாளர் - சிலோன் பெற்றோலியம் கோர்ப்பரேஷன்
- பணிப்பாளர் - சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிட்டட்
- பணிப்பாளர் - சிலோன் சிப்பிங் கோர்ப்பரேஷன்
- பணிப்பாளர் - லங்கா கோல் கம்பனி லிமிட்டட்
- பணிப்பாளர் - சிலோன சிப்பிங் லைன்ஸ் லிமிட்டட்
- பணிப்பாளர் - போர்ட் சேர்விசஸ் கம்பனி லிமிட்டட்
- அங்கத்தவர் - மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு

அரச ஈட்டு முதலீட்டு வங்கி

திரு. ஐ. டி. அசுரமன்ன
பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி
MBA-PIM (USJP), BSc Eng (Hons), ACMA, CGMA, BMS, AM (IESL), MIEE- UK

திரு. எல். ஐ ரனசிங்க
பிரதிப் பொது முகாமையாளர் (கடன்)
MBA (Fin), BSc. Mkt. Mgt, LL.B, AIB, ACIM

திரு. கே. எல். என். ஏ. பெரேரா
மாற்றாள் பணி. பிரதிப் பொது முகாமையாளர் (நிதி மற்றும் திட்டமிடல்) / உதவிப் பொது முக-ாமையாளர் (நிதி)
MBA (Fin), FCA, B.Com (Sp), SAT, HNDA, Dip. In RM

திருமதி. நிசானி பி. கே. லொகுகே
உதவிப் பொது முகாமையாளர் (சட்டம்)
LL.B, வழக்கறிஞர், சான்றுறுதி அலுவலர், சத்திய வாக்குமூல ஆணையர், கம்பனி செயலாளர்

திரு. கே. கே. கபில கீரவெல்ல
உதவிப் பொது முகாமையாளர் (மீட்டல்)
B.Com (Sp) Hons (USJ),PG.EX.Dip. சர்வதேச வங்கியியல் முகாமைத்துவம் *(IBSL)*

திரு. எல். டபிள்யு. சமரவிக்கிரம
உதவிப் பொது முகாமையாளர் (கடன்)
BSc (Sp) ஆதன முகாமைத்துவம் மற்றும் பெறுமதியிடல், *AIV, ACBF – (IBSL)*

திரு. டி. எம். ஆர். திசாநாயக்க
உதவிப் பொது முகாமையாளர் (கிளைச் செயற்பாடுகள்)
MA, B.Sc-EMV (Sp) Hons, DBF, Dip in MC, Dip in CE, AIV, AIB

திருமதி, டபிள்யு. ஜீ. எஸ். எஸ். கே. அபேவிக்கிரம
உதவிப் பொது முகாமையாளர் (இணக்கப்பாடு)
வழக்கறிஞர் மற்றும் சான்றுறுதி அலுவலர், சத்திய வாக்குமூல ஆணையர்

திருமதி. ஏ. எம். டி. எஸ். அலஹக்கோன்
சபைக் காரியதரிசி
LL.B, ACCS, Dip. ICSA (UK)

அரச ஈட்டு முதலீட்டு வங்கி

திரு. ஆர். எம். ஜே. சி. கே. மாதவல
உதவிப் பொது முகாமையாளர் (மனித வளம் மற்றும் ஏற்பாட்டியல்)
CQHRM – CIPM, MBA (Log), MBA (Gen), BSc(Def)

திரு. டபிள்யூ. கே.மு.தந்திரிகே
உதவி பொது முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்)
MBA –PM,MDT,BSc MIS, CLSSGB,CISE

திரு. பி. குருவிட்ட
தலைமை உள் தணிக்கையாளர்
ACA, ACMA, CGMA, AAT, DIP IT, IIA Member

திருமதி. ஆர். யுசாந்தி டயஸ்
தலைமை இடர் முகாமைத்துவம்
SIRM, ACII, MSc இடர் முகாமைத்துவம், *BA (Dual Hons)*

சிரேஷ்ட முகாமைத்துவம்

திரு. எஸ். விக்கிரமசிங்க
பிரதம முகாமையாளர் (கடன்)
B.Sc (EMV) (Sp) Hons., AIV

திரு. ஆர். எம். யு. டி. பண்டார
பிரதம முகாமையாளர் (மனித வளங்கள் மற்றும் ஏற்பாட்டியல்)
MHRM,BSc BA (Sp),NDHRM., AMCIPM

திரு. ஜ. எதிரிசூரிய
பிரதம முகாமையாளர் (பெறுமதியிடல்)
MEM, B.Sc (EMV) (Sp) Hons. MRICS, AIV



திருமதி. ஈ. ஏ. டி. வருணி சேபாலிகா
சிரேஷ்ட கணக்காளர்
BSc. (Acc) , ACA

திருமதி. அனுஷா ரத்நாயக்க
பிரதம முகாமையாளர் - இடர் முகாமைத்துவம்
ACMA (UK), CGMA (UK), Dip in Bus.Mgmt

திரு.என்.ஜி.டி.நுவன் திலகவர்தன
சிரேஷ்ட மேலாளர் - சந்தைப்படுத்தல் தலைவர்
MBA,B.Sc. Bus Admin , PG Dip (Mkt), CIM – UK, MSLIM, ACIM

கூட்டாண்மை ஆளுகை

கூட்டாண்மை ஆளுகையானது நிறைவேற்று முகாமைத்துவத்தின் செயற்திறன் மற்றும் மூலோபாய நெறிப்படுத்தல்; மற்றும் பங்குதாரர்களுக்கான அவர்களது பொறுப்புக்கூறல் மீதான மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டிற்கான முக்கிய கொள்கைகளை எடுத்துக்காட்டுகின்றது.

உரிமமளிக்கப்பட்ட ஒரு விசேட வங்கியாக, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியானது, சிறந் கூட்டாண்மை ஆளகையானது அதன் எதிர்கால அபிவிருத்தி மற்றும் கூட்டாண்மை செயற்திறனுக்கான ஒரு அடிப்படையினை வழங்குவதன் முக்கியத்துவத்தினை அறிந்து அதற்கான அதன் மிகச்சிறந்த கவனிப்பினை வழங்குகின்றது.

உயர் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரமுடைய அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பணிப்பாளர்கள் சபைக்கு வங்கியின் செயற்பாடுகள் மற்றும் நிதியியல் ஸ்திரத்தன்மைக்கான ஒட்டுமொத்த பொறுப்பு காணப்படுவதுடன், வைப்பீட்டாளர்கள், கடன் வழங்குனர்கள், ஊழியர்கள் மற்றும் ஏனைய பங்காளிகளின் நலன்களை உறுதிப்படுத்துவதற்கு பொறுப்பாளியாயுள்ளது. வங்கியின் பணிப்பாளர்கள் சபையானது, வங்கியியல், நிதி, பொருளாதாரம், வணிக முகாமைத்துவம், மனித வள முகாமைத்துவம், சட்டம் மற்றும் சந்தைப்படுத்தல் முதலானவற்றில் நடைமுறை அனுபவத்தைக் கொண்ட ஒரு செயல்நிலையிலுள்ள கலவையான தொழில் வல்லுனர்களைக் கொண்டுள்ளது. இவர்கள், மூலோபாயம், செயற்திறன் மற்றும் வளங்கள் ஆகியவற்றின் சிக்கல்கள் தொடர்பாக சுயாதீன மற்றும் பாகுபாடற்ற நேரடியான தீர்மானங்களுக்கு வருவதற்கான அவசியமான திறன்கள் மற்றும் அனுபவத்தினைக் கொண்டுள்ளார்கள். சபையானது வங்கியின் அலுவல்களிலான அதன் மேற்பார்வை பொறுப்புக்களை தொடர்ந்தும் பலப்படுத்துவதுடன் நிறுவனத்தின் மூலோபாய குறிக்கோளினை நிறைவேற்றுவதற்கான தலைமைத்துவத்தின் வழங்கி, வணிகம் மற்றும் பங்குதாரர்களுக்கு அறிக்கையிடும் அவர்களது பாரபத்தியத்தில் முகாமைத்துவத்தினை மேற்பார்வை செய்கின்றது.

வங்கியின் ஆளுகை கொள்கைகள் மற்றும் கட்டமைப்பு என்பன வினைத்தறனான தீர்மானம் மேற்கொள்வதனை பலப்படுத்துவதுடன் இது சிறந்த வெளிப்படைத்தன்மையினை ஊக்குவித்து வணிகத்தின் அனைத்து அம்சங்கள் பூராவும் பொறுப்புக்கூறலை ஒப்பளிக்கின்றது. சபையானது நாட்டின் சட்ட வடிவமைப்புகள் மற்றும் ஒழுங்குவிதிகள் மற்றும் ஆளுகை அதிகாரங்கள் மற்றும் வங்கியின் உள்வாரி கொள்கைகளினுள் வங்கியானது விவேகமாக முகாமைப்படுத்தப்படுவதனை உறுதிசெய்கின்றது.

வங்கியின் நிலைமை மற்றும் வளவாய்ப்புகள் என்பன தலைவரி மீளாய்வு / செய்தி மற்றும் பொது முகாமையாளர் /பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு ஆகியவற்றின் விளக்கமாக கலந்துரையாடப்பட்டுள்ளன.

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியானது அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. பொறுப்புக்கூறல், நேர்மை, நியாயம், ஒழுக்கம், நெறிமுறைகள், சட்டம் /முறைமைப்படுத்தல் இணக்கப்பாடு, வெளிப்படைத்தன்மை மற்றும் வெளிப்படுத்தல் மற்றும் சிறந்த திறமைகள் போன்ற மிகவும் முக்கியமான நிறுவன தகமைகள் மற்றும் பண்புகளுடன் கட்டியெழுப்பட்டுள்ளதுடன் இது வங்கியின் வணிகத்தின் ஒரு நெறிமுறையான விதத்தில் மேம்படுத்துவது பற்றியதாகும்.

பொறுப்புக்கூறலானது ஒரு நிறுவனத்தின் வெற்றிக்கு பொறுப்புக்கூறல் கலாச்சாரத்தினை விருத்திசெய்வதில் ஒரு முக்கிய மையக்கற்களுள் ஒன்றாக காணப்படுவதுடன், குறித்த விடயத்தில் வங்கியானது சிறந்த புரிந்துணர்வினைக் கொண்டுள்ளதுடன் அதன் செயற்பாட்டிற்கு பொறுப்பினை ஏற்கும் ஒரு கலாச்சாரத்தினை விருத்தி செய்துள்ளது.

சிறந்த ஆளுகையின் மையக்கற்களுள் ஒன்றாக பொறுப்புக்கூறல் எண்ணக்கரு காணப்படுவதனை புரிந்துகொண்டு, வங்கியின் பணிப்பாளர்கள் சபையானது, கணக்காய்வுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் வங்கியின் பங்காளிகளுக்கும் பொது மக்களுக்கும் ஒரு வெளிப்படையான மற்றும் அக்கறையான விதத்தில் நிதிக் கூற்றுக்களிலான தகவல்களையும் வங்கியின் வருடாந்த இடைக்கால நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்து அங்கீகரிக்கின்றது.

நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் திணைக்களத்தினால் கணக்காய்வு செய்யப்படுவதுடன், வங்கியானது அதன் காலாண்டு மற்றும் வருடாந்த நிதிக் கூற்றுக்களை செய்தித்தாள்களின் பிரசுரிப்பதுடன் இது அதன் பொறுப்புக்கூறலை நிறைவேற்றும் வங்கியின் கொள்கைகள் மற்றும் செயன்முறைகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையினை அதிகரிக்கின்றது.

வங்கியானது அதன் வணிகத்திற்கு பொருத்தமான விடயங்களில் அனைத்து முறைமைப்படுத்தல் அதிகாரசபைகளினால் அமுல்படுத்தப்பட்டுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்கியுள்ளது.

நியாயப்பாடு

நாட்டிற்கான வீடமைப்பு வங்கியாக, வங்கியானது அதன் அனைத்து ஆர்வமுள்ள தரப்பினரையும் சரியான மற்றும் நியாயமான விதத்தில் கவனிக்கின்றது. வங்கியானது வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், பங்காளிகள், வழங்குநர்கள் மற்றும் பாரியளவில் சமூகம் போன்ற எவருக்கும் தீங்கு விளைவிக்காது வணிகத்தின் தேவைகளுக்கு சேவையளிக்கு நல்ல தீர்மானங்களை மேற்கொள்கின்றது.

வங்கியானது அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதி சேர்க்கின்றது. கடன் வசதிகளை வழங்கும்போது, வங்கியானது அதன் வாடிக்கையாளர்களது மீள்செலுத்தும் கொள்திறனை அதாவது மாதாந்த கொடுப்பனவுகளின் தாங்குமையினை மதிப்பீடு செய்கின்றது. வங்கியானது தவறிய வாடிக்கையாளர்களுக்கு இறுதி முயற்சியாக மாத்திரமே சட்ட நடவடிக்கை எடுப்பதுடன், வாடிக்கையாளர்கள் எதிர்பாராத சிக்கல்களுக்கு முகங்கொடுக்கும்போது எப்போதும் அவர்களுடன் இருப்பதுடன், அதன் மூலம் நாட்டிற்கான வீடமைப்பு வங்கியாக வங்கியின் தொலைநோக்கு மற்றும் பணிநோக்கினை மிகவும் போட்டித்தன்மையான வங்கியியல் துறையில் நிலைநிறுத்துகிறனது.

வெளிப்படைத்தன்மை மற்றும் வெளிப்படுத்தல்

வெளிப்படைத்தன்மை மற்றும் வெளிப்படுத்தலானது (வெ.வெ.) ஒரு வலுவான கூட்டாண்மை ஆளுகை வரம்புறுகையின் அத்தியாவசியமான கூறுகளாகக் காண்படுவதுடன், அவை மூலதன ஒதுக்கீடு, கூட்டாண்மை கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிதியியல் செயற்திறன் கண்காணிப்பில் பங்குதாரர்கள், பங்காளிகள் மற்றும் சாத்தியமான முதலீட்டாளர்கள் அறிவுபூர்வமான தீர்மானத்தினை மேற்கொள்வதற்கான அடித்தளத்தினை வழங்குகின்றது. நிதியியல் நெருக்கடிக்கு இட்டுச்செல்வதற்கான பிரதான தோல்வியானது நிதியியல் வெளிப்படுத்தலின் குறைபாடு மற்றும் போதுமையற்ற ஆளுகை நடைமுறைகளிலிருந்து நேரடியாக எழுகின்றது என்ற பொதுவான உடக்பாடு காணப்படுகின்றது. ளுக்கு வெளிப்படைத்தன்மையானது கூட்டாண்மை ஆளகைக்கான முக்கிய படிகளில் ஒன்றாகும் என்பதுடன் இது முகாமைத்துவம் முறையற்ற மற்றும் சட்டத்திற்கு முரணாள நடத்தையில் ஈடுபடாது என்பதனை உறுதிசெய்கின்றது ஏனெனில் அவர்களது நடத்தையானது பரிசீலிக்கப்படலாம் மற்றும் பரிசீலிக்கப்படும்.

வெளிப்படைத்தன்மையினை அடைவதற்கு, வங்கியானது துல்லியமான கணக்கீட்டு முறைகள், கம்பனியின் தகவல்களது முழுமையான மற்றும் உடனடியான வெளிப்படுத்தலினை மேற்கொள்ளுதல், பணிப்பாளர்களது அல்லது கட்டுப்பாட்டு பங்குதாரர்களின் முரண்பாட்டு நலன்களை வெளிப்படுத்தல் என்பவற்றை வங்கி நம்புகின்றது. இதன் பிரகாரம், வங்கி அதன் நடவடிக்கைகளில் மிகவும் வெளிப்படைத்தன்மையினை உறுதிசெய்வதற்காக அதன் ஆண்டறிக்கையினூடாக மூலதனப் போதுமை, முக்கிய செயற்திறன் குறிகாட்டிகள், வணிகச் செறிவுகள், கூட்டாண்மை ஆளுகைக் கூற்றுக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்கள் ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றது.

மேலும் வங்கியானது பாசல் 111 ஒழுங்குவிதிகள் மற்றும் SLFRS நியமங்களின் பிரகாரம் தெளிவான மற்றும் புரிந்துகொள்வதற்கு இலகுவாக, அதன் காலாண்டு மற்றும் வருடாந்த நிதியியல் அறிக்கைகளை தயாரித்து பிரசுரிக்கின்றது. இது வங்கியின் அலுவல்களில் பொது நலனானது பாதுகாக்கப்படுவதனை உறுதிசெய்கின்றது. வங்கியானது அவசியமான நம்பகத்தன்மையினை மீறாது முக்கிய புள்ளிகள், அதன் இடர் வெளிப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவ மூலோபாயங்கள் தொடர்பாக அதன் வெளிப்படுத்தல்களை மேற்கொள்ளவேண்டும். சட்டத்தின் பிரகாரம் வேண்டப்படும் தேவையற்ற தாமதங்களின்றி அனைத்து வழமையான அறிக்கைகள் உரிய அதிகாரசபைகளுக்கு மற்றும் பங்காளிகளுக்கு வெளிப்படுத்தப்படல் வேண்டும் என்பதில் எழுகின்ற அனைத்து பொருண்மையான அபிவிருத்திகளும் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

2023 ஆம் ஆண்டின்போது வங்கியில் எவ்விதமான தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களும் அறிக்கையிடப்படவில்லை.

பணிப்பாளர்கள் சபை

SMIB இன் பணிப்பாளர் சபையானது 1975 இன் 13 ஆம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்தில் (திருத்தியமைக்கப்பட்டது) குறிப்பிட்டுள்ளவாறு நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரினால் நியமிக்கப்படுகின்றது. இச்சபையானது பன்முகமான பிரிவுகளில் அறிவுபடைத்த ஒன்பது பொருத்தமானதும் சரியானதுமான சுயாதீன மற்றும் நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்களை

உள்ளடக்குகின்றது. குறிப்பிட்ட ஒன்பது பணிப்பாளர்களினுள் மூன்று பணிப்பாளர்கள், விவசாயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சு, வீடமைப்புக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சு மற்றும் கால்நடை அபிவிருத்திக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதிகளாவார்கள். இது நிதியியல் மற்றும் ஏனைய உறுதுணைகளை வழங்குவதன் மூலம் விவசாய, கைத்தொழில் மற்றும் வீடமைப்பு அபிவிருத்தியில் பொதுமக்களுக்கு துணைபுரிவதனை வங்கி நோக்காகக் கொண்டதினாலாகும். சபையின் தொகுப்பானது போதுமையான அதிகாரச் சமநிலை மற்றும் சபையின் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையினை வழிநடத்துவதற்கான தொடர்ச்சியான பங்களிப்பு ஆகியவற்றை உறுதிசெய்கின்றது.

SMIB இன் பணிப்பாளர்கள் சபையானது வங்கியின் ஒட்டுமொத்த பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கூறலை மேற்பார்வை செய்து பொறுப்பேற்கின்றது. இது உயர் மட்டத்திலான மூலோபாய திசைகளை நிறுவி பொது முகாமையாளர் /பி.நி.அ. இற்கு மூலோபாயங்களை அமுல்படுத்துவதற்கான அதிகாரங்கள் பகிர்ந்தளிப்பதன் மூலம் நிறைவேற்றப்படுகின்றது. இவர் தலைமை தாங்கும் கூட்டாண்மை முகாமைத்துவ குழுவினூடாக நிறைவேற்று அதிகாரத்தினை பயன்படுத்துவதுடன், இக்குழுவிற்கு தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டலை வழங்குகின்றார். வங்கியினது ஒரு பயனுறுதியான தலைமைத்துவக் கட்டமைப்பினைக் கொண்டுள்ளதுடன் இது சபையானது ஒரு குழுவாக ஒருங்கிணைந்து செயலாற்றுவதற்கு அனுமதிக்கின்றது.

பணிப்பாளர்கள் சபையானது அதன் நியாயப்பாடு, அனுபவம் மற்றும் நிபுணத்துவம் ஆகியவற்றில் தங்கி ஒரு திடமான சபையாக மற்றும் கூட்டாண்மை முகாமைத்துவத்திற்கு ஒரு வழிகாட்டல் மூலமாக சேவையாற்றுகின்றது. இது வளங்களின் செயற்திறனான பயன்பாடு, பயனுறுதியான உள்ளகக் கட்டுப்பாட்டு செயன்முறைகள் மற்றும் வங்கியின் மூலோபாய முன்னுரிமைகளுக்கு அமைவான ஒரு முன்னியக்கமான இடர் முகாமைத்துவ பொறிமுறை என்பவற்றை உறுதிசெய்கின்றது.
தலைவரும் பணிப்பாளர் சபையும் அவர்களது திடமான அர்ப்பணிப்பு மற்றும் தொலைநோக்குடைய வழிகாட்டலுடன் வங்கியினை முன்னோக்கி முகாமைப்படுத்துகின்றன. பணிப்பாளர்கள் சபையானது ஆகக் குறைந்தது மாதத்திற்கு ஒரு முறை கூடுவதுடன், 2023 ஆம் ஆண்டில் 11 கூட்டங்கள் இடம்பெற்றன.

பொது முகாமையாளர் அனைத்து சபைக் கூட்டங்களுக்கும் வரவேற்கப்படுகின்றார். கூட்டத்தில் சமூகமளிக்கத் தேவையான வேறு யாரேனும் நிறைவேற்றுனர்களும் அழைக்கப்படுகின்றார்கள். இவர்கள் மூலோபாய இலக்குகளது அமுலாக்கலின் முன்னேற்றங்கள், நிதியியல், சமூக மற்றும் சூழல் செயற்திறன், செயற்பாட்டு சூழலினால் முன்னிலைப்படுத்தப்படும் மாற்றங்கள் மற்றும் சவால்கள், பரிந்துரைக்கப்பட்ட கொள்கை வரம்புறைகைகள் மற்றும் நிறைவேற்றுனர் ஆளகை கட்டமைப்பு உள்ளடங்கலான விடயங்களில் சபைக்கு விளக்கமளிப்பதற்காக அழைக்கப்படுகின்றார்கள்.

சபையானது காலாகாலம் கூட்டாண்மை திட்டம், செயல் திட்டம் ஆகியவற்றை மீளாய்வு செய்து, மதிப்பீடு செய்து அங்கீகரிக்கப்படுவதுடன், இது வங்கிக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள பிரதான இடர்கள் மற்றும் வணிக வாய்ப்புக்களை கருத்திற்கொண்டு வங்கியின் பணிநோக்கு, தொலைநோக்கு, குறிக்கோள்கள் மற்றும் மூலோபாயம் ஆகியவற்றை அமைக்கின்றது. சபையானது மூலோபாயத் திட்டத்தினை அங்கீகரிப்பதற்கு முன்னர் பொருத்தமானது எனக் கருதும் அத்தகைய திருத்தங்களை முன்மொழிகின்றது. முகாமைத்துவமானது அங்கீகரிக்கப்படும் மூலோபாயத்தினை அமுல்படுத்தி சபைக்கு ஒரு முன்னேற்ற அறிக்கையினை சமர்ப்பிக்கின்றது.

சபையின் தொகுப்பு

	பணிப்பாளரின் பெயர்	நியமனத் திகதி	பணிப்பாளரின் வகை
1	திரு. ஜே. எம். சுசைதாசன் - தலைவர்	17-05-2023	சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்
2	திரு. எஸ். கே. ஏ. கலப்பத்தி	07-03-2023	சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்
3	திரு. பி. ஆர். மாதியஹேவ	02-05-2023	சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்
4	திரு. எச். சி. டி. எல். சில்வா	11-01-2020	நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்
5	பேரா. டி. ஏ. எம். பெரேரா	21-03-2023	சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்

பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியின் (பி.நி.அ.) செயற்பாடுகள்

பொது முகாமையாளர் /பிரதம நிறைவேற்று அதிகாரியே (பி.நி.அ.) வங்கியிலுள்ள உயர்தரத்தையுடைய தனிநபராவார். சபையானது வங்கியின் பொது முகாமையாளர் /பி.நி.அ. இனை நியமிக்கின்றது. கூட்டாண்மை முகாமைத்துவக் குழு மற்றும் வங்கியின் அனைத்து முகாமைத்துவக் குழுக்களுக்கும் தலைமை தாங்கும் பொது முகாமையாளருக்கு வங்கியின் முகாமைத்துவ மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பொது முகாமையாளர் வங்கியின் செயற்பாடுகள் மற்றும் வணிகத்தின் நாளாந்த முகாமைத்துவத்திற்கு பொறுப்பாயுள்ள உச்ச நிலை நிறைவேற்றுனராக செயலாற்றுகின்றார். இவர் வங்கியின் ஒட்டுமொத்த வெற்றிக்கும் உயர் மட்டத்திலான தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் பொறுப்பாயுள்ளார். பொது முகாமையாளர் /பிரதம நிறைவேற்று அதிகாரி வங்கியின் செயற்திறனுக்கு பொறுப்பாளியாவதுடன் பணிப்பாளர்கள் சபைக்கு நேரடியாக அறிக்கையிடுகின்றார். வங்கியின் ஒட்டுமொத்த வெற்றிக்கும் மேலாக, பொது முகாமையாளர் /பி.நி.அ., பங்குதாரர் பெறுமதியினை அதிகரிக்கும் நோக்கிலான நீண்டகால மூலோபாயங்களின் விருத்தி மற்றும் நிறைவேற்றலுக்கு பொறுப்பாளியாயுள்ளார். பொது முகாமையாளர், சபை வேறுவிதத்தில் பணித்தாலன்றி, சபையின் ஒவ்வொரு கூட்டத்திலும் சமூகமளித்து பங்கேற்கின்றார், ஆனால் அங்கு வாக்களிக்கும் உரிமையினை கொண்டிருக்கமாட்டார்.

இது ஒரு பொறுப்பான பதவி மற்றும் வங்கியியல் துறையின் பல்வேறு மட்டங்களில் மற்றும் பல்வேறு துறைகளில் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதனால், வங்கியின் பொது முகாமையாளர் / பி.நி.அ. வங்கியின் அனைத்து மட்டங்களிலும் இடம்பெறும் செயற்பாடுகள் பற்றிய ஆழமான அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும். வங்கியின் செயற்பாடுகளுக்கு தலைமையாக, வங்கியின் முகாமைப்படுத்தலின் அனைத்து அம்சங்களையும் மேற்பார்வை செய்வதற்கு அவருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை அவர் கடுமையாக பின்பற்றல் வேண்டும்.

சபை உப குழுக்கள்

வங்கியானது சபைக்கு நேரடியாக அறிக்கையிடும் நான்கு (4) சபை உப குழுக்களை நிறுவியுள்ளது. சபை உப குழுக்கள் வழக்கமாக ஒன்றிலிருந்து ஒன்று சுயாதீனமாக செயலாற்றுவதுடன், சபைக்கு துணைபுரிவதற்காக போதுமான அதிகாரம், வளங்கள் மற்றும் பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உப குழுக்கள் பின்வருமாறு:
1. சபை கணக்காய்வுக் குழு (BAC)
2. சபை மனித வளங்கள் மற்றும் வேதனக் குழு (BHRRC)
3. சபை பெயரிடல் குழு (BNC)
4. சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (BIRMC).

சபை உப குழுக்களின் நோக்கெல்லைகள் இந்த ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உபகுழு அறிக்கைகளில் விவரிக்கப்பட்டுள்ளன. இந்த குழுக்கள் நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்களினால் தலைமை தாங்கப்படுவதுடன் இவர்கள் உரிய துறையில் நிபுணத்துவம் மற்றும் திறமையினைக் கொண்டுள்ளார்கள்.

கூட்டாண்மை ஆளுகை

சபை உப குழுவானது (BAC) நிதியியல் அறிக்கையிடல் செயன்முறை, கணக்காய்வுச் செயன்முறை, வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்புமுறைகள் மற்றும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாடு என்பவற்றில் மேற்பார்வையினை வழங்குகின்றது. இது நிதிக் கூற்றுக்களில் சாத்தியமான தாக்கத்தினை ஏற்படுத்தும் சமீபத்தைய தொழில்சார் மற்றும் முறைமைப்படுத்தல் அதிகார அறிவிப்புகள் மற்றும் முக்கியமாக கணக்கீட்டு மற்றும் அறிக்கையிடல் சிக்கல்கள் மீளாய்வு செய்யும் எதிர்பார்ப்பினைக் கொண்டுள்ளது. அறிக்கைகள் பூரணமானவையாக மற்றும் துல்லியமானவையா என்று மதிப்பிடுவதற்கு அவசியமான உள்ளடக இடைக்கால நிதியியல் தகவல்களை முகாமைத்துவம் எவ்வாறு விருத்தி செய்கின்றது என்பதில் ஒரு புரிந்துணர்வு காணப்படல் வேண்டும். சபை மனித வளங்கள் மற்றும் வேதனக் குழுவானது (BHRRC) பணிப்பாளர்கள், பொது முகாமையாளர் /பி.நி.அ. மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கு குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நிறுவி காலாகாலம் குறித்த குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கு எதிராக அவர்களின் செயற்திறனை மதிப்பீடு செய்கின்றது. இது அவர்களது வேதனம், நலன்கள் மற்றும் செயற்திறன் அடிப்படையிலான ஊக்கத்தொகைகளது ஏனைய கொடுப்பனவுகளை தீர்மானிப்பதற்காகும். வங்கியின் சார்பில் மனிதவள அபிவிருத்தி முன்னெடுப்புகளை விருத்திசெய்து மீளாய்வு செய்தல் மற்றும் அனைத்து ஊழியர்கள் தொடர்பான விடயங்கள் உள்ளடங்கலான அனைத்து மனித வளங்கள் சிக்கல்களிலான செயற்பாட்டு குழுக்கள் ஏனைய சபை உப குழுக்களுடன் ஒரு கலந்தாய்வு பங்கினை பராமரித்தல் BHRRC இற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சபை பெயரிடல் குழுவானது (BNC), பொது முகாமையாளர் /பி.நி.அ. மற்றும் முக்கியமான முகாமைத்துவ ஆளணியினரை தெரிவுசெய்து /நியமிக்கும் செயன்முறையினை அமுல்படுத்துவதற்கு பொறுப்பாயுள்ளதுடன், பொது முகாமையாளர் /பி.நி.அ. பதவி மற்றும் முக்கிய முகாமைத்துவ பதவிகளுக்கு நியமிப்பதற்கு அல்லது பதவியுயர்வு வழங்குவதற்கு கருத்திலெடுக்கவேண்டிய தகுதிக்குத் தேவையான தகமைகள், அனுபவம் மற்றும் முக்கிய பண்புகள் போன்ற அளவுகோல்களை நிறுவுகின்றது. இதன் பிரகாரம், குழுவானது வங்கியின் கூட்டாண்மை ஆளகையின் ஒரு பாகமாக செயற்படுகின்றது. குழுவானது பணிப்பாளர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரை மீள்நியமிப்பதற்காக தேவைப்படும் மேலதிக /புதிய நிபுணத்துவம் மற்றும் தொடர்முறை ஏற்பாடு ஆகியவற்றை காலாகாலம் கவனத்திலெடுத்து பரிந்தரைக்கின்றது.

சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவானது (BIRMC) பொருத்தமான இடர் குறிகாட்டிகள் மற்றும் முகாமைத்துவ தகவல்கள் ஊடாக வங்கிக்கு மூலோபாயமான அனைத்து இடர்கள், அதாவது, கடன், சந்தை, திரவத்தன்மை, செயற்பாடு ஆகியவற்றை மதிப்பீடு செய்கின்றது. குழுவானது, கடன் குழு மற்றும் சொத்து-பொறுப்புக் குழு போன்ற அனைத்து முகாமைத்துவ மட்டத்திலான குழுக்களின் போதுமை மற்றும் பயனுறுதித்தன்மையினை மீளாய்வு செய்து குறிப்பிட்ட இடர்களை விளித்துரைத்து அவ்விடர்களை குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட அளவுசார் மற்றும் பண்புசார் இடர் வரையறைகளினுள் முகாமைப்படுத்துகின்றது. குழுவானது, வங்கியின் கொள்கைகள் மற்றும் முறைமைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை தேவைப்பாடுகளின் அடிப்படையில் குழுவினால் தீர்மானிக்கப்படும் விவேகமான மட்டங்களுக்கு அப்பாலான மட்டங்களில் அத்தகைய இடர்கள் காணப்படுமாயின் குறிப்பிட்ட இடர்களின் விளைவினை தணிப்பதற்காக உடனடி திருத்த நடவடிக்கையினை மேற்கொள்ளல் வேண்டும்.

சபை கணக்காய்வுக் குழு (BAC) மற்றும் சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (BIRMC) ஆகியன, உள்ளடகக் கட்டுப்பாடுகளின் போதுமை மற்றும் நேர்மை ஆகியவற்றினை மீளாய்வு செய்து தீர்மானமெடுத்தல், நிதியியல் தகவல்கள் மற்றும் அவற்றின் நேர்மையினை மீளாய்வு செய்தல், துறையின் பிரதான இடர் கூறுகள் மற்றும் துல்லியமான இடர் காரணிகள் மற்றும் வங்கியின் கூட்டாண்மை ஆளுகை ஆகியவற்றை மீளாய்வு செய்கின்றது. கூட்டாண்மை ஆளுகை நடைமுறைகளின் பிரகாரம் செயற்பாட்டு மட்டத்திற்கு ஒப்பளிக்காது செயற்பாடுகளின் முக்கிய பிரிவுகளை சபையானது அதன் ஆதிக்கவரம்பினுள் வைத்திருக்கின்றது.

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் சிறந்த இடர் முகாமைத்துவமானது குறைவான் ஒப்பீட்டளவு இடரில் செயற்படுதல் மற்றும் தரப்பினரிடையே குறைவான முரண்பாட்டு நலன்களையும் குறிப்பிடுகின்றது. சிறந்த இடர் முகாமைத்துவ அமுலாக்கத்தின் இந்த நன்மைகள் வங்கியின் செயற்திறனை மேம்படுத்துவதற்கு இட்டுச்செல்கின்றது.

முகாமைத்துவக் குழுக்கள்

பாசல் வழிகாட்டிகளை கடைப்பிடிக்கும்போது சபையானது நாளாந்த முகாமைப்படுத்தலில் பங்குபற்றாது முகாமைத்துவத்தினை நியாயப்படுத்துவதற்கு போதுமான தகவல்களை பெறுதல் வேண்டும். பணிப்பாளர்கள் சபையானது வங்கியின் அலுவல்களை முகாமைப்படுத்துவதில் வணிகச் செயற்பாடுகளை பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியினால் வழிநடத்தப்படும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரை உள்ளடக்கிய சில விசேடத்துவ குழுக்களுக்கு ஒப்பளித்துள்ளது. இந்த குழுக்கள் சபைக்கு அதன் மேற்பார்வை செயற்பாட்டிற்கு துணைபுரிவதற்கான நிறுவப்பட்டவையாகும். இந்த குழுக்கள் பணிப்பாளர்கள் சபைக்கு கூட்ட செயற்குறிப்புகளை சமர்ப்பித்தல் வேண்டும். இது முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் வங்கியின் நாளாந்த நடவடிக்கைகளை ஒரு பாதுகாப்பான மற்றும் திடமான விதத்தில் மேற்கொள்வதற்கு வழிநடத்துவதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் சபையினை இயலுமையாக்குகின்றது. இந்த எண்ணக்கருவில், சபை உப குழுக்களுக்கும் மேலாக பணிப்பாளர்கள் சபையானது பின்வரும் முகாமைத்துவக் குழுக்களை நியமித்துள்ளது.

1. நிறைவேற்று கடன் குழு (ECC)
2. சொத்து /பொறுப்பு முகாமைத்துவக் குழு (ALCO)
3. சந்தைப்படுத்தல் குழு (MC)
4. கருவி அபிவிருத்திக் குழு (PDC)
5. மீட்டல் குழு (RC)
6. நிறைவேற்று ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (EIRMC)

சபையின் வழிகாட்டல் மற்றும் மேற்பார்வையின் கீழ், சிரேஷ்ட முகாமைத்துவமானது சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக மூலோபாயம், இடர் ஆர்வம், வேதனம் மற்றும் ஏனைய கொள்கைகளுக்கு ஏற்ற விதத்தில் வங்கியின் நடவடிக்கைகளை மேற்கொண்டு முகாமைப்படுத்தல் வேண்டும். இதன் பிரகாரம், மேற்குறிப்பிட்ட முகாமைத்துவக் குழுக்களின் அங்கத்தவர்கள் அவர்களது மேற்பார்வையின் கீழ் காணப்படும் வணிகங்கள் மற்றும் மக்களை முகாமைப்படுத்துவதற்கு அவசியமான அனுபவம், திறன்கள் மற்றும் நேர்மையினை கொண்டுள்ளார்கள். அத்துடன், அவர்கள் பொறுப்பாயுள்ள பிரிவுகளுக்கு பொருத்தமான அபிவிருத்திகளில் நாளிதுவரைக்குமாக இருத்தல் மற்றும் அவர்களது திறமைகளை பராமரித்து மேம்படுத்துவதற்கு அவசியமான வழக்கமான பயிற்றுவித்தலுக்கான அணுக்கத்தையும் பெறுகின்றார்கள். கினை முகாமையாளர்கள் மாதத்திற்கொருமுறை சிரேஷ்ட முகாமைத்துவத்துடன் சேர்ந்து முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களில் பங்குபற்றுகின்றார்கள்.

வங்கியின் இணக்கப்பாட்டு தேவைப்பாட்டில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } BAN/F/SMIB/CG/2023/16 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 16 May 2024

தலைவர்

அரச ஈட்டு முதலீட்டு வங்கி

இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகை பணிப்புரையின் இணக்கப்பாட்டு தேவைப்பாடுகளில் அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் உண்மை கண்டறிதலிலான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

இலங்கை மத்திய வங்கியினால் (இ.ம.வ.) வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகை பணிப்புரையின் இணக்கப்பாட்டு தேவைப்பாட்டினை சந்திப்பதற்காக தயாரித்து முன்னிலைப்படுத்தப்பட்ட பணிப்பாளர்கள் சபையின் ஆளுகை அறிக்கை தொடர்பாக, இந்த அறிக்கைக்கான இணைப்பில் எண்ணிக்கையிடப்பட்ட செயன்முறைகளை நான் செயலாற்றியுள்ளேன். உடன்பாடு கண்ட செயன்முறைகள் ஈடுபாடுகளுக்கு பிரயோகிக்கப்படும் தொடர்புடைய சேவைகள் 4400 இலான இலங்கை நியமங்களில் (ளுடுளுசுளு4400) குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகளின் பிரகாரம் எனது ஈடுபாடானது பொறுப்பேற்கப்பட்டது. கூட்டாண்மை ஆளுகை பணிப்புரையின் இணக்கப்பாட்டு தேவையினை சந்திப்பதற்கு உங்களுக்கு துணையளிப்பதற்காக மாத்திரமே செயன்முறைகள் செயலாற்றப்பட்டன.

இந்த அறிக்கையுடன் சேர்க்கப்பட்டுள்ள இணைப்பில் எனது கண்டுபிடிப்புகளை நான் அறிக்கையிடுகின்றேன்.

மேற்குறிப்பிட்ட செயன்முறைகள் இலங்கை கணக்காய்வு நியமங்கள் அல்லது மீளாய்வு ஈடுபாடுகளில் இலங்கை நியமங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்காய்வாகவோ அல்லது மீளாய்வாகவோ அமைவதில்லை, இ.ம.வ. இனால் வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகை பணிப்புரைகளுடனான இணக்கப்பாட்டில் ஏதும் உறுதிமொழியினை நான் தெரிவிக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்கள் அல்லது மீளாய்வு ஈடுபாடுகளில் இலங்கை நியமங்களின் பிரகாரம் ஆளுகை அறிக்கையில் ஒரு கணக்காய்வினை அல்லது மீளாய்வினை நான் செயலாற்றியிருந்தால் அல்லது மேலதிகச் செயன்முறைகளை நான் செயலாற்றியிருந்தால், ஏனைய விடயங்கள் எனது கவனத்திற்கு வந்திருக்கலாம் என்பதுடன் அவை உங்களுக்கு அறிக்கையிடப்பட்டிருக்கும்.

எனது அறிக்கையானது, இந்த அறிக்கையின் முதலாம் பந்தியில் முன்வைக்கப்பட்ட நோக்கத்திற்கும் உங்களது தகவலுக்கும் மாத்திரம் என்பதுடன், இது வேறு ஏதேனும் நோக்கத்திற்கோ அல்லது வேறு யாரேனும் தரப்பினர்களுக்கு விநியோகிப்பதற்கோ பயன்படுத்தலாகாது.

ஒட்டுமொத்தமாக எடுக்கப்படும்போது, இந்த அறிக்கையானது மேல் குறிப்பிட்ட உருப்படிகளுக்கு மாத்திரம் தொடர்புடையதுடன் இலங்கை ஈட்டு முதலீட்டு வங்கியின் ஏதேனும் நிதிக் கூற்றுக்களுக்கு நீட்டிக்கப்படவில்லை.

டபிள்யு. பி. சி. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

கூட்டாண்மை ஆளுகை

வங்கியின் இணக்கப்பாட்டு அதிகாரிகளுக்கான வினாக்கொத்து

குறிப்பு: கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கமிடலானது இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்டுள்ள 2007 இன் 12 ஆம் இலக்க வங்கிச் சட்ட பணிப்புரையின் “பிரிவு 3” உடன் ஒன்றிப்பொருந்தியுள்ளது, இந்த ஆவணத்திற்கு பிரிவுகள் 1 மற்றும் 2 பொருத்தமற்றதாகும்.

பிரிவு இல.	விவரங்கள்	குறிப்பீடு
3.1	**சபையின் பொறுப்புக்கள்**	
3.1.i	வங்கியின் பாதுகாப்பையும் உறுதித்தன்மையையும் இச்சபையானது வலுப்படுத்துவதனை உறுதிசெய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய செயன்முறைகள்	
3.1.i.a	வங்கியின் மூலோபாய குறிக்கோள்கள் மற்றும் கூட்டாண்மை விழுமியங்களின் சபையின் அங்கிகாரத்தினை பரிசீலனை செய்தல்	2023-2027 காலப்பகுதிக்கான திருத்தியமைக்கப்பட்ட கூட்டாண்மை திட்டமானது 15.12.2023 இல் இடம்பெற்ற கூட்டத்தில் சபை பத்திரிகை இலக்கம் 23/07/ BD(APP)/09 மூலம் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.
	வங்கி பூராவும் வங்கியின் மூலோபாய குறிக்கோள்கள் மற்றும் கூட்டாண்மை விழுமியங்கள் அறிவித்துள்ளதா என பரிசீலனை செய்தல்	மூலோபாய குறிக்கோள்கள் மற்றும் கூட்டாண்மை விழுமியங்கள், 2023 ஆம் ஆண்டின்போது இடம்பெற்ற சிரேஷ்ட முகாமைத்துவ கூட்டங்கள் மற்றும் கிளை முகாமையாளர்கள் கூட்டங்களில் ஒவ்வொரு பிரிவினதும் தலைமைத்துவத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளன.
3.1.i.b	வங்கியின் ஒட்டுமொத்த வணிக மூலோபாயமானது சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என பரிசீலித்தல்	அங்கீகரிக்கப்பட்ட கூட்டாண்மை திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ள ஒட்டுமோத்த வணிக மூலோபாயமானது (கூட்டாண்மை தொலைநோக்கு, பணிநோக்கு மற்றும் குறிக்கோள்கள்) (2023-2027). சபை பத்திரிகை இலக்கம் 23/07/BD(APP)/09 .
	ஒட்டுமொத்த இடர்கொள்கை மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் பொறிமுறைகள் ஆகியவற்றை ஒட்டுமொத்த வணிக மூலோபாயமானது உள்ளடக்கியுள்ளதா மற்றும் அவை ஆவணப்படுத்தப்பட்டுள்ளனவா என பரிசீலித்தல்	சபையானது ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் (ஐசுஆ) கொள்கையினை அங்கீகரித்துள்ளதுடன் (சபை பத்திரிகை 18.09.132.04.03 ஆகஸ்ட் 09, 2018 திகதியிடப்பட்டது) இது மூலோபாய, கடன், சந்தை, மற்றும் செயற்பாட்டு இடர்களை இனங்காண்பதற்கு, அளவிடுவதற்கு மற்றும் தணிப்பதற்கான செயன்முறைகளை தெரிவிக்கின்றது.
	ஒட்டுமொத்த வணிக மூலோபாயமானது குறைந்தது அடுத்த மூன்று வருடங்களுக்கு அளவிடக்கூடிய இலக்குகளைக் கொண்டுள்ளனவா என பரிசீலித்தல்	மூலோபாய வணிகத் திட்டமானது மூலோபாய இலக்குகள் மற்றும் செயற்திட்டம் (2023-2027) உள்ளக்குவதுடன் இவை அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு அளவிடக்கூடிய இலக்குகளை விபரிக்கின்றன.
3.1.i.c	சபையினால் இனங்காணப்பட்டுள்ள இடர்களை முகாமைப்படுத்துவதற்கான பொருத்தமான அமைப்புமுறைகள் விவேகமானவையா மற்றும் அவை முறையாக அமுல்ப்படுத்தப்பட்டுள்ளனவா என்ற பரிசீலித்தல்	சபையானது இந்தச் செயற்பாட்டினை சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவிற்கு (BIRMC) ஒப்படைத்துள்ளதுடன் சபை அங்கீகரிக்கப்பட்ட வரையறை நியதிகளின் கீழ் ஒப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரத்துடன் செயலாற்றல் வேண்டும். BIRMC ஆனது இனங்காணப்பட்ட பாரிய இடர் பிரிவுகளை மதிப்பிடுவதற்காகவும் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ வரம்புறுகை, இடர் மதிப்பீட்டு வரம்புறுகை மற்றும் வங்கியின் இடர் ஆர்வம் ஆகியவற்றை மீளாய்வு செய்து / அங்கீகரிப்பதற்காக காலாகாலம் கூடுகின்றது. BIRMC பிரதான இடர்களை அளவிடுவதற்கு, கண்காணிப்பதற்கு மற்றும் முகாமைப்படுத்துவதற்கு அமைப்புமுறைகளை அமுல்படுத்துகின்றது. BIRMC முக்கிய இடர் குறிகாட்டிகள் மற்றும் அழுத்தச் சோதனை விளைவுகள் மற்றும் இடர் மதிப்பீட்டு அறிக்கையினை சபைக் கூட்டங்களில் கலந்தாராய்ந்து இடர்களை தணிப்பதற்காக மூலோபாய தீர்மானங்களை எடுப்பதுற்காக BIRMC கூட்டங்களில் சமர்ப்பிக்கின்றது. முக்கிய இடர் குறிகாட்டிகள் மற்றும் இடர் ஆர்வமானது சபையினால் நிறுவப்படுகின்றது.
3.1.i.d	வைப்பாளர்கள், கடன் வழங்குனர்கள், பங்குதாரர்கள் மற்றும் கடன் பெறுனர்கள் உள்ளடங்கலாக சகல பங்காளிகளுடனான தொடர்பாடல் கொள்கையொன்றினை சபை அங்கீகரித்து அமுலாக்கியுள்ளதா என்பதை பரிசீலித்தல்	பங்காளிகளுடனான தொடர்பாடல் கொள்கையானது டிசம்பர் 2015 இல் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது (சபை பத்திரிகை இலக்கம் 15/11/08 இல் காணப்படும் செயற்குறிப்பு இலக்கம் 15.11.155.01).
3.1.i.e	வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமைகளின் போதுமான தன்மை மற்றும் நேர்மையினை சபை மீளாய்வு செய்துள்ளதா என பரிசீலித்தல்	உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு மற்றும் வினைத்திறனின் செயன்முறையினூடாக சபையினால் வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் துல்லியத்தன்மையினை இனங்காண்பதற்கு வங்கியில் ஒரு வருடாந்த சபை பொறிமுறை உள்ளது. மேலும், வங்கியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது அவர்களது வழக்கமான கணக்காய்வுகளூடாக வினைத்திறனை சரிபார்ப்பதன் மூலம் செயன்முறைக்கு பெறுமதி சேர்க்கின்றது. முகாமைத்துவ தகவல் முறைமைகள் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்ட ஒரு ஏற்கத்தக்க செயன்முறையானது காணப்படல் வேண்டும் / சுயாதீன தரத்தவர் அனைத்து நிதியியல் / நிதியல்லாத தகவல்ளின் நம்பகத்தன்மை மற்றும் துல்லியத்தன்மையனை மீளாய்வு செய்தல் வேண்டும் என்பதுடன் இது பணிப்பாளர்கள் சபையினாலும் சபை உப குழுக்களினாலும் பயன்படுத்தப்படுகின்றன
3.1.i.f	சபையானது முக்கிய முகாமைத்துவ ஆளணியினரை இனங்கண்டு நியமித்துள்ளதா என பரிசீலித்தல், உ.வ.வ. இன் நிறைவேற்று செயற்பாடுகளை செயலாற்றும் அதிகாரிகள் 02 டிசம்பர் 2015 திகதியிடப்பட்ட வங்கி மேற்பார்வை திணைக்களத்தின் வழிகாட்டி 02/17/550/0002/003 இன் பிரகாரம் வங்கியியல் சட்டத்தின் தீர்மானம் 2010 இன் இல. 03 இல் வரையறை செய்துள்ளவாறு, இது 1 ஜனவரி 2020 முதல் அமுலுக்கு வந்துள்ளது.	சபையானது பொது முகாமையாளர், பி.பொ.மு., உ.பொ.மு., சிரேஷ்ட கணக்காளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், இணக்கப்பாட்டு அதிகாரி மற்றும் சபை செயலாளர் ஆகியோரை வங்கியின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினராக இனங்கண்டுள்ளது. 11.12.2015 திகதியிடப்பட்ட சபை நிகழ்ச்சிக் குறிப்பினை சான்றாக நாம் அவதானித்தோம்.

<table>
<tr><th>பிரிவு இல.</th><th>விவரங்கள்</th><th>குறிப்பீடு</th></tr>
<tr><td>3.1.i. g</td><td>சபை கொள்கையுடன் இயைபாக, சபையானது முக்கிய முகாமைத்துவ ஆளணியினரால் வங்கியின் அலுவல்களில் பொருத்தமான மேற்பார்வையினை நிறைவேற்றியுள்ளதா என பரிசீலித்தல்</td><td>மு.மு.ஆ. சபைக்கும் உப குழுக்களுக்கும் வழக்கமாக அவர்களது ஆதிக்கத்தின் கீழ் வருகின்ற விடயங்களில் முன்னிலைப்படுத்தல் செய்கின்றது. சபைப் பத்திரிகை இலக்கம் 23/07/BD(APP)/05, BIRMC பத்திரிகை இலக்கம் 23/ BR/03/11 மற்றும் BHRMC பத்திரிகை இலக்கம் 23/05/BHRMC/01 மீளாய்வு செய்யப்பட்டன.</td></tr>
<tr><td>3.1.i.h</td><td>சபை பணிப்பாளர்கள் தமக்காகவும் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணிக்குமாக அதிகார பரப்பினையும் முக்கிய பொறுப்புகளையும் சபை வரையறை செய்துள்ளதா என பரிசீலித்தல்.</td><td>1975 இன் 13 ஆம் இலக்க SMIB சட்டத்தின் பிரிவு 07 இன் கீழ் பணிப்பள்ர்களின் அதிகாரங்கள் வரையறை செய்யப்பட்டுள்ளன.

பணிப்பாளர்கள் சபையினால் சபை உப குழுக்களுக்கு பணிப்பாளர்கள் நிமிக்கப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு குழுவுக்கான சாசனம் /வரையறை நியதிகள் பொறுப்புக்களை வரையறை செய்கின்றன.

மு.மு.ஆ. இன் பொறுப்புக்கள் அவர்களது தொழில் விபரணத்தில் பட்டியலிடப்பட்டுள்ளதுடன் அதிகாரமானது ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் வரையறை செய்யப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>3.1.i.i</td><td>பின்வருவன உள்ளடங்கலாக, சபைப் பணிப்பாளர்களின் சொந்த ஆளுகை நடைமுறைகளின் பயனுறுதித் தன்மையினை காலக் கிரமமாக சபை மதிப்பிடுகின்றதா என்று பரிசீலித்தல்:
(i) பணிப்பாளர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் தெரிவு, பெயரிடல், தேர்வு
(ii) ஆர்வ முரண்பாட்டு முகாமைத்துவம் மற்றும்
(iii) பலவீனங்களை வரையறுத்தல் மற்றும் அவசியப்படுமிடத்து மாற்றங்களை நடைமுறைப்படுத்தல்</td><td>பணிப்பாளர்கள் சபையின் தெரிவு, பெயரிடல் மற்றும் தேர்வு என்பன அமைச்சரினால் 1975 இன் 13 அம் இலக்க SMIB சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றன. பலவீனங்கள் மற்றும் மாற்றங்களின் அமுலாக்கமானது வருட இறுதியில் சபையினால் கலந்துரையாடப்பட்டு தீர்மானிக்கப்படுகின்றன. இது வருடாந்த சுய மதிப்பீடுகளின் பொழிப்புகளின் சமர்ப்பிப்பினூடாக ஆகும்.
பணிப்பாளர்கள் அவர்களது சுய மதிப்பீட்டு படிவங்களில் சபையானது அதன் சொந்த ஆளுகை நடைமுறைகளில் ஒரு வருடாந்த மதிப்பீட்டினை பொறுப்பேற்றுள்ளது என உறுதிப்படுத்துகின்றார்கள்.
2023 ஆம் ஆண்டிற்கான சுய மதிப்பீட்டு படிவங்கள் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவுசெய்யப்பட்டுள்ளது அவதானிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>3.1.i.j.</td><td>முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான தொடர்வுத் திட்டத்தினை சபை கொண்டுள்ளதனை பரிசீலித்தல்.</td><td>ஒரு தொடர்வுக் கொள்கை மற்றும் சபை அங்கீகரிக்கப்பட்ட ஒன்றுக்கு ஒன்று தொடர்வுத் திட்டமானது பணிப்புரையினால் தேவைப்படுமாறு 20 ஜூலை 2023 இல் அங்கீகரிக்கப்பட்டது. .</td></tr>
<tr><td>3.1.i.k.</td><td>கொள்கைகளின் மீளாய்வு, தொடர்பாடல் மார்க்கங்களின் உருவாக்கம் மற்றும் கூட்டாண்மை குறிக்கோள்களின் செயலாற்றுகையினை கண்காணித்தல் போன்ற பணிகள் தொடர்பாக பிரதான முகாமைத்துவ ஆளணியினர்களுடன் வழமையான கூட்டங்களை பணிப்பாளர் சபையானது நிரற்படுத்தியுள்ளதா என்று செவ்வை பார்த்தல்.</td><td>செயற்திறன், மூலோபாயம், கொள்கை மற்றும் அவர்களுக்குப் பொறுப்பான ஏனைய பிரிவுகள் தொடர்பான விடயங்கள் நோக்கிய முன்னேற்றத்தில் சபையின் மற்றும் அதன் உப குழுக்களின் கூட்டங்களின் கலந்துரையாடல்களில் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் வழக்கமாக ஈடுபடுகின்றார்கள்.</td></tr>
<tr><td>3.1.i.l</td><td>ஒழுங்கு முறைப்படுத்தல் சூழலினை புரிந்து கொள்வதற்கான செயற்பாடுகள் மற்றும் செயன்முறைகளை பணிப்பாளர் சபை எடுத்துள்ளமை பற்றியும் முறைப்படுத்துபவர்களுடன் வங்கி ஒரு பிணைப்பினைப் பேணுகின்றமை பற்றியும் செவ்வை பார்த்தல்.</td><td>வங்கியானது முறைமைப்படுத்தல் சூழலினை புரிந்துகொள்வதற்காக வழிமுறைகளை எடுத்துள்ளதுடன் செயன்முறைகள் காணப்படுவதுடன், வங்கியானது முறைமைப்படுத்துபவர்களுடன் ஒரு பிணைப்பினைப் பேணுகின்றது.

கம்பனிச் செயலாளர் சமீபத்தைய ஆண்டறிக்கை, கூட்டாண்மை ஆளுகை பணிப்புரைகள் ஆகியவற்றின பிரதிகள் மற்றும் ஶ்ரீஆஜடீ சட்டத்தின் பிரதிகளை சபையின் அங்கத்தவர்கள் அனைவருக்கும் விநியோகித்துள்ளது. முறைமைப்படுத்தல் இணக்கப்பாட்டு அறிக்கைகள் இ.ம.வ. இக்கு உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதுடன், இ.ம.வ. இன் நியதிச்சட்ட பரிசீலனை அறிக்கைகள் பெறப்படவுடன் சபையானது அதன் பிரகாரம் அவசியமான நடவடிக்கைகளை எடுக்கின்றது</td></tr>
<tr><td>3.1.i.m</td><td>வெளியக கணக்காய்வாளர்களை சேவைக்கு அமர்த்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் தொடர்பான செயன்முறையொன்றினை பணிப்பாளர் சபை கொண்டுள்ளதா என செவ்வை பாரத்தல்.</td><td>பொருத்தமற்றது. இலங்கை அரசாங்கத்தின் அரசியலமைப்பின் பிரகாரம் மற்றும் 1975 இன் 13 ஆம் இலக்க அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின் பிரிவு 65 இன் பிரகாரம், கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களே வங்கியின் வெளிவாரி கணக்காய்வாளர் ஆவார்.</td></tr>
<tr><td>3.1.ii</td><td>பணிப்பாளர் சபையானது தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரியினை (பி. நி.அ) நியமித்துள்ளமையினை பரிசீலித்தல்.
இந்த பணிப்புரைகளின் 3 (5) ஆம் பிரிவுகளுக்கு இணைவாக தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரியின் தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் காணப்படுகின்றமையினை பரீசீலித்தல்.</td><td>வங்கியின் தலைவர் உரிய அமைச்சின் அமைச்சரினால் ஶ்ரீஆஜடீ சட்டத்தின் பிரிவு 14 (1) இன் பிரகாரம் நியமிக்கப்படுகின்றார் மற்றும் ஶ்ரீஆஜடீ சட்டத்தின் பிரிவு 20 இன் பிரகாரம் பி.நி.அ. (பொது முகாமையாளர்) பணிப்பாளர்கள் சபையினால் நியமிக்கப்படுகின்றார்.

<table><tr><th>பணிப்பாளரின் பெயர்</th><th>நியமனத் திகத</th></tr><tr><td>திரு.ஜோசப் சூசைதாசன்</td><td>2023.05.17</td></tr><tr><td>திரு. சமன் கலப்பத்தி</td><td>2023.03.07</td></tr><tr><td>பேராசிரியர் அமிந்த பெரேரா</td><td>2023.03.21</td></tr><tr><td>திரு.புத்திக மதிஹஹேவ</td><td>2023.05.02</td></tr><tr><td>திரு.திலீப் சில்வா</td><td>2023.01.01</td></tr></table></td></tr>
</table>

கூட்டாண்மை ஆளுகை

பிரிவு இல.	விவரங்கள்	குறிப்பீடு
3.1.iii	பணிப்பாளர் சபை அண்ணளவாக ஒரு வருடத்தின் போது மாதம் ஒரு முறை என்ற வகையில் பன்னிரண்டு முறையாவது பணிப்பாளர் சபை கூட்டங்களை நடாத்தியுள்ளமையினை செவ்வை பார்த்தல்.	2023 இன்போது 12 சபைக் கூட்டங்கள் இடம்பெற்றன. எவ்வாறாயினும், முதலாவது சபைக் கூட்டமானது ஒரு சபை காணப்படாமையின் காரணமாக 26 ஜூன் 2023 இல் இடம்பெற்றது.
3.1.iv	வங்கியின் இடர் முகாமை மற்றும் வியாபார மேம்பாடு தொடர்பான விடயங்கள் மற்றும் முன்மொழிவுகள் போன்ற விடயங்கள் தொடர்பில் குழுக் கூட்டங்கள் தேவைப்படுகின்ற சந்தரப்பங்களில் வழமையான சபைக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் விடயங்கள் மற்றும் முன்மொழிவுகளை உள்ளடக்குவதற்குப் பணிப்பாளர்களை இயலச் செய்யும் பொருட்டு பணிப்பாளர் சபையினால் முறைமையொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளமையினை செவ்வை பார்த்தல்.	ஒரு நடைமுறையாக சபையானது வழக்கமான சபைக் கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரலில் அனைத்து பணிப்பாளர்களும் விடயங்கள் மற்றும் பிரேரணைகளை உள்ளடக்குவதனை இயலுமையாக்கியுள்ளது. நிகழ்ச்சி நிரலில் அத்தகைய விடயங்களை உள்ளடக்குவதற்கு செயலாளரை தொடர்புகொள்வது இயலுமையாக்கப்பட்டுள்ளது.
3.1.v	சகல பணிப்பாளர்களும் கூட்டங்களில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பொன்றை வழங்குவதற்காக வழமையான கூட்டங்களுக்கான அறிவித்தல்கள் ஆகக் குறைந்தது 7 நாட்களுக்கு முன்னர் பணிப்பாளர் சபையினால் அறிவித்தல் விடப்படுகின்றமை மற்றும் ஏனைய சகல சபைக் கூட்டங்கள் தொடர்பாக அறிவித்தல் விடப்பட்டுள்ளமை பற்றியும் செவ்வை பாரத்தல்.	கூட்டங்களுக்கான அறிவித்தல் மற்றும் கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலானது கூட்டம் இடம்பெறுவதற்கு ஏழு நாட்களுக்கு முன்னர் செயலாளரினால் அனைத்து பணிப்பாளர்களுக்கு சுற்றறிக்கையிடப்படுகின்றது.
3.1.vi	பணிப்பாளர்கள் ஒரு 12 மாதக் காலப் பகுதியில் நடைபெற்ற கூட்ட எண்ணிக்கையில் 2/3 கூட்டங்களுக்கு அல்லது தொடர்ச்சியாக நடைபெற்ற 3 கூட்டங்களுக்கு சமுகமளிக்காமை தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை பணிப்பாளர் சபை மேற்கொண்டுள்ளதா என்று பரிசீலித்தல். பணிப்பாளர் சபைக்கூட்டம் தொடர்பில் மாற்றுப் பணிப்பாளர் ஒருவரின் பங்குபற்றல் எவ்வாறாயினும் குறிப்பிட்ட கூட்டத்திற்கான சமுகமளித்தமை தொடர்பான எற்புடைமையாக ஏற்றுக் கொள்ளப்படும்.	சபைச் செயலாளரினால் வழங்கப்பட்டுள்ள வருகைத் தகவல்களின் பிரகாரம், உடனடியாக தொடரும் 12 மாதங்களில் இடம்பெற்ற கூட்டங்களில் எந்தவொரு பணிப்பாளரும் மூன்றில் இரண்டில் சமூகமளிக்காது அல்லது இடம்பெற்ற கூட்டங்களில் தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களில் சமூகமளிக்காது இருக்கவில்லை.
3.1.vii	1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 43 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைத் திருப்திப்படுத்தும் வகையில் கம்பனிச் செயலாளர் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்டுள்ளமை பற்றியும் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மற்றும் பங்குதாரர் கூட்டங்கள் தொடர்பில் செயலகச் சேவைகளை வழங்குதல் மற்றும் நியதிச் சட்டம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகளின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் நியமிக்கப்பட்டுள்ளமையினை பரிசீலித்தல்.	சபையின் செயலாளர் இலங்கையின் கூட்டாண்மை செயலாளர்களின் பட்டய நிருவகத்தின் இணை அங்கத்தவர் ஆவார்.
3.1.viii	கம்பனிச் செயலாளரின் சேவைகள் மற்றும் அறிவுரைகளைப் பெற்றுக் கொள்வதற்கான பிரவேச இயலுமையினை சகல பணிப்பாளர்களும் பெற்றுக் கொள்வதற்கான செயன்முறையினை பரிசீலித்தல்.	ஒரு நடைமுறையாக பணிப்பாளர்கள் சபை செயலாளரிடமிருந்து அறிவுரை மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான அணுக்கத்தினைக் கொண்டுள்ளார்கள்.
3.1.ix	பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் தொடர்பான கூட்ட அறிக்கைகளை கம்பனிச் செயலாளர் பேணுவதுடன் அவ்வாறான கூட்ட அறிக்கைகளைப் பணிப்பாளர்கள் பரீட்சிப்பதற்கான செயன் முறையொன்று உள்ளதா என்று செவ்வை பார்த்தல்	சபைக் கூட்டங்களின் அனைத்து கூட்ட அறிக்கைகளும் சபை செயலாளரின் அதிகாரத்தின் கீழ் வைக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. செயலாளரின் கூற்றின் பிரகாரம் எந்த நேரத்திலும், யாரேனும் பணிப்பாளர், சபை கூட்டங்கள் தொடர்பான ஏதேனும் தகவல்களுக்கான அணுக்கத்தினைக் கொண்டுள்ளார்கள்.

பிரிவு இல.	விவரங்கள்	குறிப்பீடு
3.1.x	சபைக் கூட்ட அறிக்கைகள் பின்வரும் விடயங்களை உள்ளடக்குகின்றது அல்லது பின்வரும் விடயங்களை மேல் ஆய்வு செய்துள்ளதா என செவ்வை பார்த்தல்: பணிப்பாளர் சபையானது தனது கலந்துரையாடலின் போது சுருக்கத் தரவுகள் மற்றும் தகவல்கள் பயன்படுத்தப்பட்டமை; பணிப்பாளர் சபையினால் கவனத்திற்கு எடுக்கப்பட்ட விடயங்கள்; உரிய கவனம் மற்றும் மதிநுட்பத்துடன் பணிப்பாளர் சபையானது தனது கடமைகளை நிறைவேற்றிக் கொண்டிருந்ததா என வெளிப்படுத்தக் கூடிய விலகல்கள் அல்லது உள்ளடக்கப் பிரச்சினை அல்லது உண்மை நிலவர கலந்துரையாடல்கள்; குறிப்பிட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு ஒழுகவும் பணிப்பாளர் சபையின் உபாயங்கள் மற்றும் கொள்கைகளுக்கு இணைவாகவும் விடயங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன; எவ்வகையான இடர் தொடர்பாக வங்கி முகங்கொடுக்கின்றது என்பது பற்றி புரிந்து கொள்வதற்கும் மற்றும் பயன்படுத்தப்பட்டுள்ள இடர் முகாமைச் செயற்பாடுகளினை மீளாய்வு செய்வதற்கும்; மற்றும் தீர்மானங்கள் மற்றும் பணிப்பாளர் சபைத் தீர்மானங்கள்	சபையின் கூட்ட அறிக்கைகள் தேவையான அனைத்து தகவல்களையும் கொண்டிருப்பது அவதானிக்கப்பட்டது.
3.1.xi	வங்கியின் செலவில் பொருத்தமான சூழ் நிலைகளின் போதான சுயாதீன தொழில்சார் அறிவுரைகளைப் பெற்றுக் கொள்வதற்கும், நியாயமான வேண்டுகோளின் பிரகாரம், பணிப்பாளர்கள் இம் முறைமைகளை அடைந்து கொள்வதற்கான இயலுமையைப் பெறுவதற்கான செயன் முறையொன்றினை பணிப்பாளர் சபை அங்கீகரித்துள்ளமை பற்றி செவ்வை பார்த்தல்.	பொருத்தமான சூழ்நிலைகளில் தொழில்சார் ஆலோசனையினை பெறுவதில் சபையானது ஈடுபட்டிருந்தது.
3.1.xii	முரண்பாட்டு நலன்கள் தொடர்பான நிலைமைகள் அல்லது முரண்பாட்டு நலன்கள் ஏற்படுவதற்கான தோற்றப்பாடுகளைத் தவிர்த்துக் கொள்வதுடன் தொடர்புடைய பொருத்தமான செயற்பாடுகளை எடுப்பதற்கும் தீர்ப்பதற்கும் மற்றும் அறிக்கையிடுவதற்கும் மற்றும் தீர்மானிப்பதற்கும் ஒரு செயன்முறை உள்ளதா என்று செவ்வை பார்த்தல்.	வங்கியின் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் கொள்கை மற்றும் 1975 இன் 13 ஆம் இலக்க SMIB சட்டத்தின் பிரிவு 17 என்பன முரண்பாட்டு நலன்களை தீர்ப்பதற்கு உரிய ஏற்பாடுகளைக் கொண்டுள்ளன.
	பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் குறிப்பிட்டதொரு விடயம் தொடர்பில் பணிப்பாளர் ஒருவர் அல்லது அவர்களுடைய நெருங்கிய உறவினர்கள் அல்லது அவ் விடயம் தொடர்பான முக்கியமான ஆர்வம் இருக்கின்ற பட்சத்தில் குறிப்பிட்ட பணிப்பாளர் வாக்களிப்பிலிருந்து தவிர்த்துக் கொண்டுள்ளாரா என பரிசீலித்தல்	இணக்கப்பாட்டு அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 2023 இல் அத்தகைய நிலைமை எதுவும் இடம்பெறவில்லை.
	குறிப்பிட்ட கூட்டத்தின் கூட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் குறிப்பிட்ட விடயம் தொடர்பான கூட்ட நடப்பெண் தொடர்பில் அவர் / அவள் கணக்கெடுக்கப்பட்டுள்ளாரா என்று செவ்வை பார்த்தல்.	
3.1.xiii.	வங்கியின் கட்டுப்பாடு மற்றும் நெறிப்படுத்தல்களை அடையாளம் காண்பதற்கான தீர்மானங்கள் தொடர்பாக வங்கிக்கு ஒதுக்கப்பட்டுள்ள விசேடவிடயங்களின் முறைசார் நிகழ்ச்சி நிரல் மற்றும் அதற்கான அதிகாரம் தொடர்பாக வங்கி உறுதியாக இருக்கின்றமையினை பரிசீலித்தல்.	ப.ச. ஆனது சபை பத்திரிகையுடன் சமர்ப்பிக்கப்படும் சபையின் தீர்மானத்திற்காக விசேடமாக ஒதுக்கப்பட்டுள்ள முறையான விடயங்களது அட்டவணையினை அங்கீகரித்துள்ளது. (சபை பத்திரிகை இல. 16.10.40 மற்றும் 24 ஒக்டோபர் 2016 திகதியிடப்பட்ட கூட்ட நிகழ்ச்சிக் குறிப்பு 16.10.122.02 அவதானிக்கப்பட்டது). SMIB சட்டத்தின் பிரிவு 7 இன் மூலம் பணிப்பாளர்கள் சபையானத அத்தகைய அனைத்து அதிகாரங்களையும் பயன்படுத்தலாம் மற்றும் வங்கியின் வணிகத்தை கொண்டுசெல்வதற்கு அவசியமான அத்தகைய செயல் மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் ஆகும். பிரிவு 8 இன் பிரகாரம் சபை வங்கியின் அனைத்து அல்லது ஏதேனும் அதிகாரங்களை பயன்படுத்தலாம்.
3.1.xiv	வங்கி தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு இயலாத சந்தர்ப்பத்தில் அல்லது அது போன்ற நிலைமைக்கு ஆளாகியிருக்கின்ற நிலைமையில் அல்லது சொத்து இழப்புக்கள் ஏற்படுவதற்கான அண்மித்த நிலையில் இருக்கின்ற நிலைமையில் அல்லது வைப்பாளர்கள் மற்றும் வேறு கடன்காரர்களுக்கு உரிய கொடுப்பனவுகளை காலம் தாழ்த்துவதற்கு அண்மித்த நிலையில் இருக்கின்ற போது அல்லது அவ்வாறான நிலைமைகளின் போது ஏதாவது தீர்மானம் அல்லது செயற்பாட்டினை எடுப்பதற்கு முன்னர் வங்கியின் நிலைமை தொடர்பாக வங்கி மேற்பார்வைப் பிரிவின் பணிப்பாளர் முன்னோடியாக அறிவிக்கப்பட்டு இருக்கின்றமையினை பரிசீலித்தல்.	மீளாய்வுக் காலத்தின்போது அத்தகைய நிலைமைகள் எதுவும் இடம்பெறவில்லை.

கூட்டாண்மை ஆளுகை

பிரிவு இல.	விவரங்கள்	குறிப்பீடு
3.1.xv	நாணயச் சபை வேண்டியுள்ள பிரகாரம் பணிப்பாளர் சபையினால் வங்கி உரிய மட்டத்தில் மூலதனப்படுத்தி உள்ளதா என்று பரிசீலித்தல்.	வங்கியானது 31.12.2023 இற்கு முன்னர் ஆகக்குறைந்த முறைமைப்படுத்தல் மூலதனமான ரூபா 7.5 பில்லியன் தேவைப்பாட்டினை நிறைவேற்றவில்லை.
3.1.xvi	இந்த பணிப்புரைகளின் 3 ஆம் பணிப்புரைக்கு இணைவாக வங்கியின் வருடாந்த அறிக்கை, வருடாந்த கூட்டாண்மை ஆளுகை அறிக்கை போன்றவற்றை பணிப்பாளர் சபை வெளியிட்டுள்ளமையினை பரிசீலித்தல்.	சபையானது இந்த பணிப்புரைகளின் பணிப்புரை 3 உடன் இணக்கப்பாடு காண்பதற்காக வருடாந்த கூட்டாண்மை ஆளுகை அறிக்கையினை ஆண்டறிக்கையில் பிரசுரித்துள்ளது.
3.1. xvii	வருடாந்தம் ஒவ்வொரு பணிப்பாளரும் கடைப்பிடிக்க வேண்டிய சுய மதிப்பீட்டுத் திட்டம் ஒன்றின் பின்பற்றல் மற்றும் அவ்வாறான மதிப்பீடுகளின் தரவுகளை சபை பராமரிக்கப்படுகின்றமை பற்றி பரிசீலித்தல்.	2023 ஆம் ஆண்டிற்கான சுய-மதிப்பீட்டு படிவங்கள் பணிப்பாளர்கள் சபையினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது அவதானிக்கப்பட்டது,
3.2	**சபையின் தொகுப்பு**	
3.2.i	பணிப்பாளர் சபையானது 7 பேரைவிடக் குறையாததும் 13 பேரை விஞ்சாததுமான பணிப்பாளர்களைக் கொண்டுள்ளமையினை பரிசீலித்தல்.	சபையானது நான்கு (04) சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்களையும் ஒரு (01) நிறைவேற்றுனரல்லா பணிப்பாளரையும் உள்ளடக்கியுள்ளது.
3.2.ii.a	பிரதான நிறைவேற்று அதிகாரி தரப் பதவியொன்றை வகிக்கின்ற பணிப்பாளர் தவிர்ந்த பணிப்பாளர் ஒருவரின் மொத்த சேவைக் காலம் 9 வருடங்களை விஞ்சுதல் கூடாது என்பதனை பரிசீலித்தல்.	ஒரு பணிப்பாளர் தரத்தில் எந்தவொரு பணிப்பாளரும் 9 வருடங்கள் சேவையினை விஞ்சவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.
3.2.ii..b	ஏதேனுமொரு பணிப்பாளர் 9 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிக் கொண்டிருப்பாராயின், அவ்விடயம் தொடர்பில் நிலை மாற்று ஏற்பாடுகள் பிரயோகிக்கப்பட்டுள்ளதா என்று பரிசீலித்தல்.	ஒரு பணிப்பாளர் தரத்தில் எந்தவொரு பணிப்பாளரும் 9 வருடங்கள் சேவையினை விஞ்சவில்லை என்பத அவதானிக்கப்பட்டது.
3.2.iii.	பிரதான நிறைவேற்று அதிகாரி உள்ளடங்கலாக பணிப்பாளர் சபை எண்ணிக்கையின் மூன்றில் ஒரு பகுதியை விட நிறைவேற்றுத்தர பணிப்பாளர்களின் எண்ணிக்கை விஞ்சலாகாது, அது பற்றி செவ்வை பார்த்தல்.	1975 இன் 13 ஆம் இலக்க SMIB சட்டத்தின் பிரகாரம், சபையானது உரிய அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர்களை உள்ளடக்குவதுடன், இவர்கள் அனைவரும் நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்கள் ஆவார்கள்.
3.2.iv	குறைந்தது மூன்று சுயாதீன நிறைவேற்று அதிகாரம் அற்ற பணிப்பாளர்கள் அல்லது மொத்த பணிப்பாளர் எண்ணிக்கையின் மூன்றில் ஒரு பங்கினர் எது உயர்வானதோ அதனை சபை கொண்டிருப்பதை சரிபார்த்தல். நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்கள் சுயாதீனமான பணிப்பாளர்களாக கருதப்படுவார்களாயின், அவர் / அவள்:	1975 இன் 13 ஆம் இலக்க SMIB சட்டத்தின் பிரகாரம், அனைத்து பணிப்பாளர்களும் அமைச்சரினால் நியமிக்கப்படுகின்றார்கள். நான்கு பணிப்பாளர்கள் சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்கள் மற்றும் ஒரு பணிப்பாளர் நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர் ஆவார்.
3.2.iv.a	வங்கியின் 1 சதவிதத்திற்கு அதிகமான பங்கு முதலை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வைத்திருத்தல்	வங்கியானது முழுவதும் அரச உடைமையாதலால் அத்தகைய நிலைமை எழவில்லை.
3.2.iv.b	3 (7) ஆம் பணிப்புரையில் விளங்கப்படுத்திய பிரகாரம் வங்கியின் ஏதேனும் வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களில், நியமனம் பெற்றதன் பின்னர் தொடர்கின்ற இரண்டு வருட காலப் பகுதியின் போது அல்லது தற்பொழுது வங்கியின் ஒழுங்கு முறையான மூலதனத்தின் 10 சதவீதத்தினை விஞ்சுகின்ற பிரகாரம், ஒரு தொகை முதலை வைத்திருத்தல்.	அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் எதுவும் இடம்பெறவில்லை.
3.2.iv.c	பணிப்பாளராக நியமிக்கப்பட்டதன் பின்னர் உடனடியான இரண்டு வருட காலத்தில் வங்கியின் ஊழியராக இருந்திருத்தல்.	வங்கியினால் பணிக்கமர்த்தப்பட்ட அத்தகைய எந்தவொரு நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர்களும் இல்லை.
3.2.iv.d	பணிப்பாளாராக, பி.நி.அ, முக்கிய முகாமைத்துவ ஆளணியின் அங்கத்தவராக, இவ் வங்கியின் அல்லது வேறு வங்கி யொன்றின் பிரதான பங்குதாரருடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருத்தல். (இவ் விடயம் தொடர்பில், நெருங்கிய தொடர்பு என்பதன் பொருள், துணை அல்லது நிதி ரீதியாக தங்கியிருக்கின்ற பிள்ளை என்று பொருள்படும்)	வங்கியியல் சட்டத்தின் பிரிவு 42 மற்றும் மு.மு.ஆ. ஆல் மேற்கொள்ளப்பட்ட பிரகடனங்களின் பிரகாரம், பணிப்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட சுய பிரகடனத்தின் பிரகாரம் அத்தகைய எந்தவொரு நிறைவேற்றுனரல்லா பணிப்பாளரும் ஒரு நெருங்கிய உறவினரைக் கொண்டிருக்கவில்லை.
3.2.iv.e	வங்கியின் குறிப்பிட்டதொரு பங்குதாரரை பிரதிநிதித்துவப்படுத்தல்	வங்கியானது முழுவதும் அரசாங்கத்தினால் உரித்துடையதாகும்.

பிரிவு இல.	விவரங்கள்	குறிப்பீடு
3.2.iv.f	ஒரு கம்பனியில் அல்லது வணிக நிறுவனத்தில ஒரு ஊழியர் அல்லது பணிப்பாளர் அல்லது ஒரு பொருண்மையான பங்குதாரர்: i. இந்த பணிப்புரைகளின் பணிப்புரை 3 (7) இல் வரையறை செய்யப்பட்டுள்ளவாறு வங்கியுடன் நடைமுறையில் ஒரு கொடுக்கல் வாங்கலினை, வங்கியின் முறைமைப்படுத்தல் மூலதனத்தின் 10 சத வீதத்தினை விஞ்சும், அல்லது ii. இவற்றில் வங்கியின் யாரேனும் ஏனைய பணிப்பாளர்கள் பணிக்கமர்த்தப்பட்டிருப்பின், அல்லது பணிப்பாளர்களாக அல்லது பொருண்மையான பங்குதாரர்களாக: அல்லது iii. இவற்றில் வங்கியின் யாரேனும் ஏனைய பணிப்பாளர்கள் இந்த பணிப்புரைகளின் பணிப்புரை 3 (7) இல் வரையறை செய்யப்பட்டுள்ளவாறு வங்கியின் முறைமைப்படுத்தல் மூலதனத்தின் 10 சத வீதத்தினை விஞ்சும் ஒரு கொடுக்கல் வாங்கலினை கொண்டிருத்தல்.	வங்கியியல் சட்டத்தின் பிரிவு 42 இன் பிரகாரம் பணிப்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட சுய பிரகடனத்தின் பிரகாரம் ஒரு பணிப்பாளர் நேரடியாக அல்லது மறைமுகமாக ஆர்வமுடைய எவ்விதமான கொடுக்கல் வாங்கலும் 2023 இல் அவதானிக்கப்படவில்லை.
3.2.vi	வங்கி சுயாதீனமான பணிப்பாளர்களை நியமித்தல் தொடர்பாக ஒரு செயன்முறைமையினைக் கொண்டிருக்கின்றதா என்று பரீட்ச்சித்துப் பார்த்தல்.	1975 இன் 13 ஆம் இலக்க SMIB சட்டத்தின் 7ம் பிரிவின்படி பணிப்பாளர்கள் அமைச்சரினால் நியமிக்கப்படுகின்றார்கள்
3.2.vii	வங்கியின் கூட்ட நடப்பெண் 50% இனை விட அதிகமான பணிப்பாளர்களை உள்ளடக்குகின்றதா என்றும் அவ் நடப்பெண்ணில் 50% இலும் அதிகமான நிறைவேற்றுத்தரம் அல்லாத பணிப்பாளர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்றும் பரிசீலித்தல்.	பணிப்பாளர்கள் அனைவரும் நிறைவேற்றுத்தரம் அல்லாத பணிப்பாளர்கள் ஆவார்கள்.
3.2.viii.	வருடாந்த கூட்டாண்மை ஆளுகை அறிக்கையில் தலைவர், நிறைவேற்றுப் பணிப்பாளர்கள், நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர் அல்லது சுயாதீனமான நிறைவேற்று தரம் இல்லாத பணிப்பாளர்களின் பெயர்கள் உள்ளடங்கலாக பணிப்பாளர் வகையடிப்படையில் பணிப்பாளர் சபையின் உள்ளடக்கத்தை வங்கி வெளிப்படுத்துகின்றதா என்று பரிசீலித்தல்.	வெளிப்படுத்தல்கள் 2023 ஆம் ஆண்டிற்கான வரைவு ஆண்டறிக்கையில் வழங்கப்பட்டுள்ளன.
3.2.ix	பணிப்பாளர் சபைக்கான புதிய பணிப்பாளர்களை நியமனம் செய்கின்ற ஒழுங்கு விதிகளை செவ்வை பார்த்தல்.	1975 இன் 13 ஆம் இலக்க SMIB சட்டத்தின் பிரகாரம் பணிப்பாளர்களது நியமனம் அமைச்சரினால் மேற்கொள்ளப்படுகின்றது.
3.2.x	பணிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டதன் பின்னரான முதலாவது பொதுக் கூட்டத்தில் பங்குதாரர்களினால் நியமிக்கப்படுவர் என்ற நிபந்தனையின் பிரகாரம் சகல பணிப்பாளர்களும் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனரா என்று பரிசீலித்தல்.	பொருத்தமற்றது ஏனெனில், 1975 இன் 13 ஆம் இலக்க SMIB சட்டத்தின் பிரகாரம் பணிப்பாளர்கள் அமைச்சரினால் நியமிக்கப்படுகின்றார்கள்.
3.2.xi	பணிப்பாளர்கள் தங்களது அலுவலகம் அல்லது சபையிலிருந்து பதவி விலகியுள்ளனரா அல்லது நீக்கம் செய்யப்பட்டுள்ளனரா என்று பரிசீலித்தல் a) சபை வங்கியுடனான பணிப்பாளர்களின் உடன் பாடின்மை போன்றவற்றுடன் தொடர்புடைய தகவல்கள் தொடர்பாக வரையறுக்கப்படாது, பணிப்பாளர்களின் பதவி விலகல் அல்லது நீக்கம் மற்றும் அவ்வாறான பதவி விலகல் அல்லது நீக்கத்திற்கான காரணங்கள் உள்ளடங்கலாக அவ் விடயங்கள் அறிவிக்கப்படல். மற்றும் b) பங்குதாரர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்படவேண்டிய ஏதேனும் விடயங்கள் இருப்பின் அல்லது இல்லாது இருப்பினும், அது தொடர்பில் உறுதிப்படுத்திக் கூற்றொன்றை வெளியிடல்.	1975 இன் 13 ஆம் இலக்க SMIB சட்டத்தின் பிரகாரம் உரிய அமைச்சரினால் பணிப்பாளர்களின் நீக்கமானது மேற்கொள்ளப்படுகின்றது.
3.2.xii	வங்கி ஒன்றின் ஊழியர் அல்லது பணிப்பாளர் இன்னொரு வங்கியின் பணிப்பாளர் ஒருவராக பெயர் குறிப்பிடப் பட்டிருக்கின்றமை அல்லது தெரிவு செய்யப்பட்டிருக்கின்றமை அல்லது நியமனம் செய்யப்பட்டிருக்கின்றமை தொடர்பாக அடையாளம் கண்டு கொள்வதற்கான செயன் முறையொன்று இருக்கின்றதா என்று பரிசீலித்தல்.	பணிப்பாளர்களிடமிருந்து பெறப்பட்ட வருடாந்த பிரகடனங்கள் நடைமுறையிலுள்ள பணிப்பாளர்களின் ஏனைய பணிப்பாளர் பதவிகளை இனங்காண்பதற்கு உதவும். எவ்வாறாயினும், வங்கியின் ஒரு ஊழியர் மற்றுமோர் வங்கியின் ஒரு பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்களா, தெரிவுசெய்யப்பட்டுள்ளார்களா அல்லது பெயரிடப்பட்டுள்ளார்களா என இனங்காண்பதற்காக ஒரு செயன்முறை உள்ளது.

கூட்டாண்மை ஆளுகை

பிரிவு இல.	விவரங்கள்	குறிப்பீடு
3.3	**பணிப்பாளர்களது வலிமை மற்றும் பொருத்தத்தினை மதிப்பீடு செய்வதற்கான வரன்முறை**	
3.3.i	பணிப்பாளராகச் சேவையாற்றுகின்ற ஒரு நபரின் வயது 70 வயதை விடத் தாண்டக் கூடாது என்பது பரிசீலித்தல்.	பணிப்பாளர்கள் அனைனவரிடமும் பெற்றுக்கொள்ளப்பட்ட பிரகடனங்களூடாக அனைத்து பணிப்பாளர்களும் 70 வயதிற்கும் குறைந்தவர்கள் என்பது பரசீலிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
3.3.டை.ய	நிலைமாற்று ஏற்பாடுகள் இணக்கம் ஈணப்பட்டுள்ளமையினை பரிசீலித்தல். பொருத்தமற்றது.	
3.3.ii	வங்கியின் துணைக் கம்பனிகள் அல்லது இணைக் கம்பனிகள் உள்ளடங்கலாக 20 மேற்பட்ட கம்பனிகள் / தொழில் தாபனங்கள் / நிறுவனங்களில் பணிப்பாளராக ஒரு நபர் பதவி வகித்துக் கொண்டிருப்பாராயின் அது தொடர்பாக பரிசீலித்தல்.	இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட பிரமாணப் பத்திரத்தின் பிரகாரம் எந்தவொரு பணிப்பாளரும் 20 க்கும் மேற்பட்ட கம்பனிகளில் பணிப்பாளர் பதவிகளை வகிக்கவில்லை
3.3.iii	முன்னைய வங்கியில் அவனது /அவளது சேவை நிறுத்தப்பட்ட திகதியில் இருந்து 6 மாதம் நிறைவடைவதற்குள் இலங்கையில் உரிமம் பெற்ற வங்கியொன்றின் பணிப்பாளர் அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரி இலங்கையில் உரிமம் பெற்ற மற்றொரு வங்கியின் பணிப்பாளராக அல்லது பிரதம நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்படமாட்டார் என்பதை சரிபார்த்தல்.	பிரமாணப் பத்திரத்திலுள்ள தகவல்களின் பிரகாரம், மற்றுமோர் வங்கியிலிருந்து எந்தவொரு பணிப்பாளரோ அல்லது பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியோ நியமிக்கப்படவில்லை.
3.4	**சபையினால் வழங்கப்பட்டுள்ள முகாமைத்துவ தொழிற்பாடுகள்**	
3.4.i	பணிப்பாளர் சபையினால் அதிகாரக் கையளிப்பு ஏற்பாடுகள் அங்கிகரிக்கப்பட்டுள்ளமை பற்றி பரிசீலித்தல	23 செப்டம்பர் 2020 திகதியிடப்பட்ட சபை நிகழ்ச்சிக் குறிப்பு இலக்கம் 20.07.124.01 இன் பிரகாரம் அதிகாரக் கையளிப்பிற்காக நான்கு சபை உப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.
3.4.ii	அந்த செயற்பாடுகள் கையளிப்பு செய்திருந்த சந்தர்ப்பங்களில் 3(1) (i) இல் குறிப்பிடப்பட்ட விடயங்களில் சபை பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ளதா எனப் பரிசீலித்தல்.	பணிப்பாளர்கள் சபையானது சபையின் செயற்பாட்டினை நிறைவேற்றுவதினை கணிசமாக தடுக்கும் அல்லது ஆற்றலினை குறைக்கும் அளவிற்கு எவ்விதமான விடயங்களிலும் அதிகார கையளிப்பினை மேற்கொள்ளவில்லை.
3.4.iii	வங்கியின் தேவைகளுடன் தொடர்புடையதாக அவை இருக்கின்றன என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக கால அடிப்படையில் அதிகாரக் கையளிப்பு செயன்முறைகள் காணப்படுகின்றமையினை சபை மீளாய்வு செய்திருக்கின்றமை பரிசீலித்தல்.	சபையானது அதிகாரக் கையளிப்பினை காலாகாலம் மீளாய்வு செய்கின்றது. உ.பொ.மு. தகவல் தொழில்நுட்பத்திற்கான அதிகாரக் கையளிப்பானது சபைப் பத்திரிகை 23/04/BD(APP)/05 இல் பரிசீலிக்கப்பட்டதுடன், மிகவும் சமீபத்தில் வழங்கப்பட்ட கடன் வரம்புகளுக்கான அதிகாரக் கையளிப்பானதும் (சபையினால் 26.03.2021 இல் இடம்பெற்ற கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 786) பரிசீலிக்கப்பட்டது.
3.5	**தலைவர் மற்றும் பி.நி.அ.**	
3.5.i	தலைவர் மற்றும் பி.நி.அ. ஆகிய இருவர்களினதும் பாத்திரங்கள் வேறுபட்டவை, மற்றும் அவை ஒரே நபரினால் செயலாற்றப்படாமல் இருப்பதனை பரிசீலித்தல்.	தலைவர் மற்றும் பி.நி.அ. ஆகியோரின் பாத்திரங்கள் இரண்டு வேறுபட்ட நபர்களினால் செயலாற்றப்படுகின்றன. .
3.5.ii	தலைவர் ஒரு நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர் என்பதனை பரிசீலித்தல்.	தலைவர் ஒரு சுயாதீன நிறைவேற்றுத்தரம் இல்லாத பணிப்பாளர் என்பதுடன் அவர் 1975 இன் 13 ஆம் இலக்க SMIB சட்டத்தின் கீழ் உரிய அமைச்சரினால் நியமிக்கப்படுகின்றார்.
	தலைவர் சுயாதீனமான பணிப்பாளராக இல்லாத சந்தர்பத்தில், பொருத்தமாக ஆவணப்படுத்தப்பட்ட குறிப்பு விதிமுறைகளுடன் ஒரு சிரேஷ்ட பணிப்பாளராக ஒரு சுயாதீனமான பணிப்பாளரை நியமித்துள்ளதா என்று பரிசீலித்தல்.	தலைவர் ஒரு சுயாதீன பணிப்பாளர் ஆகையால் ஒரு சிரேஷ்ட பணிப்பாளரின் நியமனத்திற்கான தேவை எழவில்லை..
	வங்கியின் வருடாந்த அறிக்கையில் சிரேஷ்ட பணிப்பாளர் ஒருவரின் பதவி வெளிப்படுத்தப்படல் வேண்டும் என்ற விடயத்தினை பரிசீலித்தல்.	1975 இன் 13 ஆம் இலக்க SMIB சட்டமானது சிரேஷ்ட பணிப்பாளர் பதவி நியமனத்திற்காக ஏற்பாடுகளை வழங்குவதில்லை.
3.5.iii	அவ்வாறு ஏதும் தலைவர் மற்றும் பி.நி.அ. மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கு மத்தியில் ஏதேனும் உறவு முறைத் தன்மை (நிதி, வியாபாரம். குடும்பம் அல்லது ஏனைய பொருண்மையான / தொடர்புடைய உறவு முறைகள்) காணப்படின் அவை ஆண்டறிக்கையின் ஒரு பகுதியாக, இருத்தல் வேண்டும் என்பதுடன், சபையானது அதனை இனங்கண்டு அதன் கூட்டாண்மை ஆளுகை அறிக்கையில் வெளிப்படுத்துவதற்கான செயன்முறையினை கொண்டுள்ளதா என்பதனை பரிசீலித்தல்.	இது வங்கியியல் சட்டத்தின் பிரிவு 42 இன் பிரகாரம் பணிப்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட சுய பிரகடனத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தலைவர், பி.நி.அ. மற்றும் சபை அங்கத்தவர்களிடையே எவ்விதமான தொடர்பும் அவதானிக்கப்படவில்லை. மேலும், சபையின் அங்கத்தவர்களிடையேயும் எவ்விதமான தொடர்புகளும் அவதானிக்கப்படவில்லை.

பிரிவு இல.	விவரங்கள்	குறிப்பீடு
3.5.iv	தலைவர் பின்வரும் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் போது சபை சுய மதிப்பீட்டு செயன்முறையொன்றைக் கொண்டுள்ளதா என்று பரிசீலித்தல். அ) சபைக்கு தலைமைத்துவம் வழங்கல் ஆ) சபையானது வினைத்திறனாக தனது பணிகளையும் பொறுப்புக்களையும் உரிய முறையில் மேற்கொள்கின்றது மற்றும் இ) கால அடிப்படையில் சபையினால் சகல பிரதான மற்றும் பொருத்தமான பிரச்சினைகள் உரிய முறையில் கலந்துரையாடப்பட்டுள்ளமையினை பரிசீலித்தல்.	சுய மதிப்பீட்டு செயன்முறை 2023 அனைத்து பணிப்பாளர்களினாலும் மார்ச் 2024 இல் நிறைவு செய்யப்பட்டது.
3.5.v	கம்பனி செயலாளரினால் சுற்றுநிருபனப்படுத்தப்படும் முறையான நிகழ்ச்சிநிரல் தலைவரினால் அனுமதியளிக்கப்பட்டதா எனப் பரிசீலித்தல்.	நிகழ்ச்சி நிரலானது சபை செயலாளரினால் தலைவரின் ஆலோசனையுடன் தயாரிக்கப்பட்டு சுற்று நிருபனப்படுத்தப்பட்டுள்ளன. (15.12.2023 திகதியிடப்பட்ட கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் பரிசோதிக்கப்பட்டது)
3.5.vi	சபை கூட்டங்களில் எழுகின்ற விடயங்களில் அனைத்து பணிப்பாளர்களும் நேரகாலத்துடனான சமர்ப்பிப்புகளூடாக முறையாக அறிவிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை தலைவர் உறுதிப்படுத்துவதனை பரிசீலித்தல்.	சபை கூட்டங்களில் எழுகின்ற விடயங்களில் பணிப்பாளர்கள் முறையாக அறிவிக்கப்படுவதுடன், சபை கூட்டங்களுக்கு தயாராவதற்காக சபை பத்திரிகைகள் பணிப்பாளர்களுக்கு முன்னதாகவே சுற்றநிருபனம் செய்யப்படுகின்றன.
3.5.vii	சகல பணிப்பாளர்களும் முழுமையானதும் வினைத்திறனானதுமான பணிப்பாளர் சபைச் செயற்பாடுகள் தொடர்பாக பங்களிப்பு செய்வதற்கு ஊக்கப்படுத்துகின்ற பணிப்பாளர் சபையில் சுயமான மதிப்பீட்டு செயன்முறை ஒன்று உள்ளதா என்றும் வங்கியின் நலன் கருதி தலைவரின் தலைமைத்துவத்துடன் செயற்படுகின்றதா என்று பரிசீலித்தல்.	2023 இல் சபைக்கு நிறைவேற்றதிகாரம் அற்ற பணிப்பாளர்களின் பங்களிப்பினை மதிப்பிடுவதற்காக சுய மதிப்பீட்டு செயன்முறையானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.
3.5.viii	நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்களின் பங்களிப்பினை மதிப்பீடு செய்வதற்காக ஒரு சுய மதிப்பீட்டு செயன்முறையினை சபை கொண்டுள்ளதா என்பதனை பரிசீலித்தல்.	சுய மதிப்பீட்டு செயன்முறையானது 2023 இல் சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது மற்றும் அது நிறைவேற்றுத்தரம் அல்லாத பணிப்பாளர்களின் பங்களிப்பினை மதிப்பீடு செய்கின்றது.
3.5.ix	முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் மற்றும் வேறு ஏதேனும் நிறைவேற்று கடமைகளில் நேரடியான மேற்பார்வை செயற்பாடுகள் உள்ளடங்கலா நடவடிக்கைகளில் தலைவர் ஈடுபடுகின்றாரா என்பதனை பரிசீலித்தல்.	தலைவர் ஒரு நிறைவேற்றுத் தரமல்லா பணிப்பாளர் என்பதுடன் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரிலோ அல்லது வேறு ஏதேனும் நிறைவேற்று கடமைகள் எவையாயிருப்பினும், நேரடி மேற்பார்வை உள்ளடங்கலான நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை.
3.5.x	பங்குதாரர்களுடன் வினைத்திறனான தொடர்பாடலை பராமரிப்பதற்கான செயன் முறையொன்று இருக்கின்றமையினையும் அந்தக் கண்ணோட்டத்தில் சபைக்கு பங்குதாரர்களது கருத்துக்கள் அறிவிக்கப்படுகின்றமையினை பரிசீலித்தல்.	வங்கியின் 100% உரிமத்துவத்தை அரசாங்கம் கொண்டுள்ளது மேலும் அனைத்து பணிப்பாளர்களும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ளார்கள். திறைசேரி பிரதிநிதி சபையின் நிரந்தர அங்கத்தவராவார்.
3.5.xi	வங்கியின் தொழிற்பாடுகள் மற்றும் வியாபாரம் தொடர்பான நாளாந்த முகாமைக்குப் பொறுப்பான பிரதான நிறைவேற்றுனராக பி.நி.அ. தொழிற்படுகின்றமையினை பரிசீலித்தல்.	வங்கியின் நிறுவன விளக்கப்படி பி.நி.அ. / பொ.மு. தலைவர் பொது முகாமையாளர் வங்கியின் அன்றாட வியாபாரம் மற்றும் செயற்பாடுகளின் நிறைவேற்று பொறுப்பாளராக செயற்படுகின்றார்.
3.6	**சபை நியமனம் செய்த குழுக்கள்**	
3.6.i	பணிப்புரைகளின் 3(6)(ii), 3(6)(iii), 3(6) (iv), 3(6)(v) ஆம் பிரிவுகளுக்கு ஏற்ப ஆகக் குறைந்தது நான்கு சபை உபக் குழுக்களை வங்கி தாபித்துள்ளமையினை பரிசீலித்தல்.	வங்கியானது நான்கு குழுக்களை, சபை கணக்காய்வுக் குழு (BAC), சபை மனித வளங்கள், மற்றும் சபை வேதனக் குழு (BHRRC), சபை பெயரிடல் குழு (BNC) மற்றும் சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (BIRMC) நியமித்துள்ளது. BAC, BHRRC, BIRMC,BNC போன்ற சபை உப குழுக்களுக்கான பணிப்பாளர்களின் நியமனம் - சபை கூட்டக் குறிப்பு 20.07.124.01 பரிசீலிக்கப்பட்டது.
	ஒவ்வொரு சபைக் குழு அறிக்கையும் சபைக்கு நேடியாக விளித்துரைக்கப்பட்டுள்ளதா என பரிசீலித்தல்.	அனைத்து குழுக்களும் சபை குழுக்களின் தலைவர் ஊடாக அறிக்கைகளை நேரடியாக சபைக்கு சமர்ப்பிக்கின்றன.
	ஒவ்வொரு குழுவும் தத்தமது கடமைகள், பாத்திரங்கள் மற்றும் செயலாற்றுகை தொடர்பான அறிக்கையினை சபையானது தமது வருடாந்த அறிக்கையில் வெளிப்படுத்துகின்றமையினை பரிசீலித்தல்.	ஒவ்வொரு குழுவினது அறிக்கையிலும் அவற்றின் கடமைகள், பங்கு மற்றும் செயற்திறன்கள் வங்கியின் ஆண்டறிக்கையில் அவதானிக்கப்பட்டது. சபை பெயரிடல் குழு - பக்கங்கள் 89 - 90 BHRRC-பக்கங்கள் 91 BIRMC-பக்கங்கள் 92- 96 BAC-பக்கங்கள்-86-88.

கூட்டாண்மை ஆளுகை

பிரிவு இல.	விவரங்கள்	குறிப்பீடு
3.6.ை	கணக்காய்வுக் குழு:	
3.6.ii.a	உப குழுக்களின் தலைவர் ஒரு சுயாதீன நிறைவேற்றுத்தரம் இல்லாத பணிப்பாளராகவும் தகைமைகள் மற்றும் தொடர்புடைய அனுபவத்தைக் கொண்டுள்ளனரல என பரிசீலித்தல்.	BAC இன் தலைவர் ஒரு சுயாதீன நிறைவேற்றுத்தரம் இல்லாத பணிப்பாளர் மற்றும் தகைமைகள் மற்றும் பொருத்தமான அனுபவத்தைக் கொண்டுள்ளார்.
3.6.ii.b	குழுவின் சகல அங்கத்தவர்களும் நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்கள் என்பதனை பரிசீலித்தல்..	அனைத்து அங்கத்தவர்களும் நிறைவேற்றுத்தரம் அல்லாத பணிப்பாளர்கள்.
3.6.ii.c.	பின்வருவன தொடர்பான விடயங்களில் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை பரிசீலித்தல்: i) உரிய நியதிச் சட்டங்களுக்கு இணங்க வழங்கப்படும் கணக்காய்வு சேவைகள் தொடர்பான வெளியக கணக்காய்வாளரின் நியமனம் ii) காலத்துக்குக் காலம் மத்திய வங்கியால் கணக்காய்வாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களின் அமுலாக்கம் iii) உரிய கணக்கீட்டு நியமங்களில் பிரயோகம்: மற்றும் iv) கணக்காய்வாளரின் சேவைக்காலம், கணக்காய்வுக் கட்டணம் மற்றும் ஏதேனும் பதவி விலகல் அல்லது நீக்கம்: இது கணக்காய்வுப் பங்காளியின் ஈடுபாடானது ஐந்து வருடங்களை விஞ்சலாகாது, மற்றும் முன்னைய காலத்தின் நிறைவுத் திகதியிலிருந்து மூன்று வருடங்கள் முதிர்வடைவதற்கு முன்னர் குறிப்பிட்ட கணக்காய்வுப் பங்காளி மீள் நியமிக்கப்படாதிருத்தல்	1975ம் இன் 13ம் இலக்க SMIB சட்டத்தின் பிரிவு 65 இன் பிரகாரம், வெளிவாரி கணக்காய்வாளராக கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களே நியமிக்கப்பட்டுள்ளார்.
3.6.ii.d	சுயாதீனத்தன்மை தொடர்பாக வெளியகக் கணக்காய்வாளரிடமிருந்து குழு சுட்டிக்காட்டுதல்களைப் பெற்றுள்ளமையும், கணக்காய்வானது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்பவே மேற்கொள்ளப்படுவதனையும் பரிசீலித்தல்.	வெளிவாரி கணக்காய்வாளராக கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்கள் கடமையாற்றுவதனால் சுயாதீனத்தன்மை மற்றும் புறநிலைத்தன்மை பராமரிக்கப்படுகின்றது.
3.6.ii.e	சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதிகளின் பிரகாரம் வெளியகக் கணக்காய்வாளர் ஒருவர், கணக்காய்வு சாராத சேவைகளை வழங்குவதுடன் தொடர்புடைய கொள்கையொன்றை குழு அமுல்படுத்தியுள்ளமையினை பரிசீலித்தல்	பொருத்தமற்றது. வெளிவாரி கணக்காய்வாளராக கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்கள் உள்ளார். இவ்வாண்டின்போது அத்தகைய சேவைகள் எதுவும் பெறப்படவில்லை.
3.6.ii.f	இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப, கணக்காய்வுக்கு முன்னர் குழுவானது கணக்காய்வின் தன்மை மற்றும் விடய எல்லைகள் தொடர்பில் வெளியக கணக்காய்வாளருடன் கலந்தாராய்ந்து அவற்றை உறுதி செய்துள்ளமையினை பரிசீலித்தல்.	வெளிவாரி கணக்காய்வாளராக கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களினால் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் பரம்பல் தீர்மானிக்கப்படுகின்றது.
3.6.ii.g	வங்கியின் நிதிக் கூற்றுக்களின் நம்பகத்தன்மை, அதன் வருடாந்த அறிக்கை, கணக்குகள் மற்றும் காலாண்டு அறிக்கைகள் போன்றவற்றை கண்காணிக்கும் நோக்கில் வங்கியின் நிதிசார்ந்த விவரங்களை மீளாய்வு செய்வதற்கானதொரு செயன்முறையும் மற்றும் பின்வருவனவற்றை பிரதான நிதியியல அதிகாரியிடமிருந்து பெறுமிடத்து அதற்கான செயன்முறை ஒன்றையும் குழு கொண்டுள்ளமையினை பரிசீலித்தல். தீர்மானம்சார் பிரதான பகுதிகள்; கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளிலுள்ள ஏதேனும் மாற்றங்கள்; நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அனுமானம் ;இயங்கிக் கொண்டிருப்பதாக கருதப்படுகின்ற ஊகம், மற்றும் சம்பந்தப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் என்பவற்றுடனான இணக்கப்பாடு; மற்றும் வருடாந்த நிதிசார் கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்விலிருந்து எழுகின்ற குறிப்பிடத்தக்க சீராக்கல்கள்	சபை கணக்காய்வுக் குழுவானது கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களுக்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் வருடாந்த வரைவு நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்துள்ளது: 23.01.2024 திகதியிடப்பட்ட டீயுஊ கூட்டத்தின் BACP no-24/ BAC/01/09) பரிசீலிக்கப்பட்டது.
3.6.ii.h	கணக்காய்வின் போது எழுகின்ற ஏதேனும் பிரச்சினைகள் தொடர்பில் நிறைவேற்று முகாமைத்துவத்தின் பிரசன்னம் இல்லாதபோது அதற்காக வெளியக கணக்காய்வாளர்களை குழு சந்தித்துள்ளமையினை பரிசீலித்தல்.	2023 ஆம் ஆண்டின் கணக்காய்வு தொடர்பாக நிறைவேற்று முகாமைத்துவத்தின் பிரசன்னமின்றி வெளிவாரி கணக்காய்வாளருடன் 18.08.2023 மற்றும் 30.10.2023 இல் இரண்டு கூட்டங்களை குழு நடாத்தியது.
3.6.ii.i	வெளியக கணக்காய்வாளரின் முகாமைத்துவக் கடிதம் மற்றும் அதற்கான முகாமைத்துவத்தின் பதிலளிப்புகள் போன்றவற்றை குழு மீளாய்வு செய்துள்ளமையினை பரிசீலித்தல்.	சபை கணக்காய்வுக் குழுவானது 2022 ஆம் ஆண்டிற்கான வெளிவாரி கணக்காய்வாளரின் முகாமைத்துவ அறிக்கை மற்றும் அதற்கான முகாமைத்துவத்தின் மறுமொழியினை மீளாய்வு செய்துள்ளது (BAC பத்திரிகை இலக்கம் 24/ BAC/01/01)

பிரிவு இல.	விவரங்கள்	குறிப்பீடு
3.6.டை.த	வங்கியின் உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாடுகள் தொடர்பில் பின்வரும் நடவடிக்கைகளை குழு மேற்கொள்ள வேண்டுமென்பதனை பரிசீலித்தல்:	
3.6.ii.j.I	உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தின் நோக்கெல்லை, தொழிற்பாடு மற்றும் வளங்கள் என்பவற்றில் அதன் நிறைவுத் தன்மை தொடர்பில் மீளாய்வு செய்தல் மற்றும் திணைக்களமானது தனது பணிகளை முன்னெடுப்பதற்குத் தேவையான அதிகாரங்களை கொண்டுள்ளது என திருப்தியடைதல்;	சபை கணக்காய்வுக் குழுவானது அவர்களது கூட்டங்களில் உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தன் நோக்கெல்லை, செயற்பாடுகள் மற்றும் வளங்களை மீளாய்வு செய்துள்ளது.
3.6.ii.j.II	உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் உள்ளக கணக்காய்வு செயன்முறைகளின் விளைவுகளை மீளாய்வு செய்தல், மற்றும் தேவையானவிடத்து, உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தின் பரிந்துரைகளின் பிரகாரம் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தல்	2023 ஆம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வுத் திட்டமானது மீளாய்வு செய்யப்பட்டு 30 டிசம்பர் 2022 இல் இடம்பெற்ற அதன் கூட்டத்தில் டீயுஊ இனால் அங்கீகரிக்கப்பட்டது. BP 22/14/BD(APP)/13 கணக்காய்வுக் குழுவானது காலாண்டுதோறும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தினையும் உள்ளகக் கணக்காய்வு செயன்முறையின் விளைவுகளையும் மீளாய்வு செய்து பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கின்றது. BAC பத்திரிகை இலக்கம் 24/01/04 அவதானிக்கப்பட்டது.
3.6.ii.j.III	உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தின் தலைவர் மற்றும் சிரேஸ்ட உத்தியோகத்தர்களின் செயலாற்றுகை தொடர்பில் ஏதேனும் கணிப்பீட்டை அல்லது மதிப்பீட்டை மீளாய்வு செய்தல்	2023 ஆம் ஆண்டிற்கான பி.உ.க. இன் செயற்திறன் மதிப்பிடலானது சபை கணக்காய்வுக் குழுவினால் 22 பெப்ரவரி 2024 இல் இடம்பெற்ற கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. (BAC பத்திரிகை இலக்கம் 24/01/01 அவதானிக்கப்பட்டது) 2023 ஆம் ஆண்டிற்கான உள்ளக் கணக்காய்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட ஊழியர்களின் செயற்திறன் மதிப்பிடலானது பிரதன உள்ளக கணக்காய்வாளரினால் 27 நவம்பர் 2023 இல் மேற்கொள்ளப்பட்டது.
3.6.ii.j.IV	உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாடுகளுக்குத் தேவையான ஏதேனும் நியமனம் தொடர்பில் அல்லது அதன் தலைவர், சிரேஷ்ட உத்தியோகத்தர் மற்றும் வெளியக சேவை வழங்குனர்கள் போன்றோரின் சேவை நிறுத்தம் தொடர்பில் பரிந்துரைகளை மேற்கொள்ளல்.	2023 ஆம் ஆண்டின்போது அத்தகைய நிலைமை எதுவும் எழவில்லை.
3.6.ii.j.V	பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் ஏனைய வெளியக சேவை வழங்குனர்கள் உள்ளடங்கலாக உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் சிரேஸ்ட உத்தியோகத்தர்களின் இராஜிநாமா தொடர்பிலும் மற்றும் இராஜிநாமாச் செய்கின்ற சிரேட்ட உத்தியோகத்தர்கள், வெளியக சேவை வழங்குனர்கள் ஆகியோர் தமது பதவியை இராஜிநாமா செய்வதற்கான காரணத்தைச் சமர்ப்பிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவது தொடர்பிலும் குழு மதிப்பிடப்பட்டமையினை பரிசீலித்தல்.	2023 ஆம் ஆண்டின்போது அத்தகை நிலைமை எதுவும் எழவில்லை.
3.6.ii.j.VI	உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாடானது அது கணக்காய்வு செய்யும் நடவடிக்கைகளிலிருந்து சுயாதீனமானர் என்பதனை பரிசீலித்தல்.	உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடானது அது கணக்காய்வு செய்யும் நடவடிக்கைகளிலிருந்து சுயாதீனமானவையாகும் நேரடியாக சபை கணக்காய்வுக் குழுவுக்கு அறிக்கையிடுகின்றது.
3.6.ii.k	உள்ளக விசாரணைகள் தொடர்பிலான பிரதான கண்டுபிடிப்புகள் மற்றும் அதற்கான முகாமைத்துவத்தின் பதிலளிப்புகள் போன்றவற்றை குழு பரிசீலித்துள்ளதா என்பதை அறியும் நோக்கில் கூட்ட அறிக்கைகளை பரிசீலித்தல்.	சபை கணக்காய்வுக் குழுவின் கூட்ட குறிப்புகளின் பிரகாரம், அது உள்ளக புலனாய்வுகளின் பாரிய கண்டுபிடிப்புகள் மற்றும் அதற்கான முகாமைத்துவத்தின் பதில்களையும் மீளாய்வு செய்துள்ளது. (BAC பத்திரிகை இலக்கம் 24/ BAC/01/06 அவதானிக்கப்பட்டது) .
3.6.ii.l	குழுவானது நிறைவேற்றுப் பணிப்பாளர்களின் சமூகமளிப்பு இன்றிய குறைந்தது இரண்டு கூட்டங்களையாவது வெளியக கணக்காய்வாளர்களுடன் மேற்கொண்டுள்ளதா என்பதனை பரிசீலித்தல்.	நிறைவேற்று முகாமைத்துவத்தின் பிரசன்னமின்றி 2023 ஆம் ஆண்டின் கணக்காய்வு தொடர்பாக வெளிவாரி கணக்காய்வாளருடன் இரண்டு கூட்டங்கள் இடம்பெற்றன.
3.6.ii.m	பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்தும் நோக்கில் குறிப்பு விதிமுறைகளை பரிசீலித்தல்: அதன் குறிப்பு விதிமுறையினுள் எந்தவொரு விடயத்தையும் விசாரிப்பதற்கான வெளிப்படையான அதிகாரம்; அதற்குத் தேவையான வளங்கள்; தகவல்களைப் பெறுவதற்கு முழு அளவிலான அணுகல்கள்; மற்றும் வெளியக தொழில்சார் ஆலோசனையைப் பெறுவதற்கான அதிகாரம் மற்றும் தேவையேற்படின், பொருத்தமான அனுபவம் கொண்டோரை வெளியிலிருந்து அழைப்பதற்கான அதிகாரம். தத்துவம்.	சபை கணக்காய்வுக் குழுவின் குறிப்பு விதிமுறையானது அவசியமான நியதிகளை உள்ளடக்குகின்றது. BAC இனால பரிந்துரைக்கப்பட்ட திகதி - 18.08.2023 சபையினால் அங்கீகரிக்கப்பட்ட திகதி - 28.08.2023
3.6.ii.n	குழுவானது ஆகக் குறைந்தது நான்கு தடவைகளேனும் சந்தித்துள்ளதா மற்றும் கூட்டக் குறிப்புகளை பராமரித்துள்ளதா என பரிசீலித்தல்	குழுவானது 2023 இல் ஏழு தடவைகள் கூடியுள்ளதுடன் அந்த கூட்டங்களின் செயற்குறிப்புகள் பராமரிக்கப்பட்டுள்ளன.

கூட்டாண்மை ஆளுகை

பிரிவு இல.	விவரங்கள்	குறிப்பீடு
3.6.ii.o	சபையானது ஆண்டறிக்கையில் பின்வருவனவற்றை வெளிப்படுத்தியுள்ளதா என பரிசீலித்தல், கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கைகளின் விபரங்கள்; வருடத்தில் இடம்பெற்ற கணக்காய்வுக் குழு கூட்டங்களின் எண்ணிக்கை; மற்றும் அத்தகைய கூட்டங்களில் ஒவ்வொரு தனியான பணிப்பாளரது சமூகமளிப்பு பற்றிய விபரங்கள்	2023 இன் வரைவு ஆண்டறிக்கையின் பக்கங்கள் 86 - 88 இல் விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
3.6.ii.p	குழுவின் செயலாளரே கம்பனியின் செயலாளர் அல்லது உள்ளக கணக்காய்வுச் செயற்பாட்டின் தலைவரா என பரிசீலித்தல்.	சபையின் செயலாளரே கணக்காய்வுக் குழுவின் செயலாளர் ஆவார்.
3.6.ii.q	"ஊழலை வெளிப்படுத்தல்" கொள்கையானது பின்வரும் விடயங்களைக் கையாள்வது தொடர்பிலான செயன்முறையினை உள்ளடக்கியுள்ளதா என பரிசீலித்தல். நிதி அறிக்கையிடல், உள்ளகக் கட்டுப்பாடு அல்லது ஏனைய விடயங்களிலுள்ள முறையற்ற நிலைமைகள். மேலே காணப்படுபவை தொடர்பிலான அத்தகைய விடயங்களில், நியாயமான, சுயாதீன முடைய விசாரணைக்கான பொருத்தமான ஏற்பாடுகள் இடம்பெறுவதை குழு உறுதிப்படுத்த வேண்டும், மற்றும் பொருத்தமான பின்தொடர்தல் செயற்பாடு.	உள்ளக கணக்காய்வு கையேட்டுடன் காணப்படும் ஊழலை வெளிப்படுத்துபவர் கொள்கையானது 21.07.2023 இல் இடம்பெற்ற வங்கியின் கணக்காய்வுக் குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.
3.6.iii	**பின்வரும் விதிமுறைகள் மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு என்பன தொடர்பில் பிரயோகிக்கப்படுகின்றனவா என்பதனை பரிசீலித்தல்:**	
3.6.iii.a	"குறிப்பு விதிமுறைகள்" மற்றும் கூட்ட அறிக்கைகளை பரிசீலனை செய்வதன் மூலம் வங்கியின் பணிப்பாளர்கள், பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ அலுவலர்கள் ஆகியோர்கள் தொடர்பிலான ஊதியத்தினைத் (சம்பளங்கள், படிகள் மற்றும் ஏனைய பணக் கொடுப்பனவுகள்) தீர்மானிக்கும் நோக்கிலானதொரு கொள்கையினை குழு அமுல்படுத்தியிருப்பதனை பரிசீலித்தல்.	பணிப்பாளர்களுக்கான ஊதியமானது PED சுற்றறிக்கைகளின் பிரகாரம் நிதி அமைச்சினால் தீர்மானிக்கப்படுகின்றது (17 ஜூன் 2015 திகதியிடப்பட்ட PED 3/2015) பொது முகாமையாளர் / பி.நி.அ. மற்றும் மு.மு.ஆ. இன் ஊதியமானது டீர்சுசூஊ இனால் பரிந்துரைக்கப்பட்ட கூட்டு உடன்படிக்கையின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டு வங்கியின் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு நிதி அமைச்சின் அங்கீகாரத்திற்காக அனுப்பிவைக்கப்படுகின்றது. (சபை பத்திரிகை இல. 23/02/ BD(APP)/24)
3.6.iii.b	பணிப்பாளர்கள், பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ அலுவலர்கள் ஆகியோர்களுக்கான குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் ஆவணமாகத் தயாரிக்கப்படுவதனை பரிசீலித்தல்.	சபை உப குழுக்களுக்கு பணிப்பாளர்கள் சபையினால் பணிப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றார்கள் மற்றும் ஒவ்வொரு குழுவினதும் சாசனம் / கு.வி.மு. பொறுப்புக்களை வரையறைசெய்கின்றன. பி.நி.அ. மற்றும் மு.மு.ஆ. இன் இலக்குகளும் குறிக்கோள்களும் சபையினால் அங்கீகரிக்கப்படட 2023 இற்கான செயற்திட்டத்தில் வேறாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.
3.6.iii.c	நிறுவப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கு எதிராக, பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ அலுவலர்கள் ஆகியோரின் செயலாற்றுகைகள் தொடர்பிலான மதிப்பீடுகளை அவ்வப்போது பரிசீலித்துள்ளமையும், ஊதியம், பயனடைவுகள் மற்றும் செயலாற்றுகை அடிப்படையிலான ஏனைய ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் போன்றவற்றை திருத்தியமைப்பதற்கான அடிப்படையை நிர்ணயிப்பதனை பரிசீலித்தல்.	பொது முகாமையாளரின் செயற்திறன் மதிப்பீடானது 20 ஜூலை 2023 இல் இடம்பெற்ற கூட்டத்தில் சபையினால் மேற்கொள்ளப்பட்டது. ஊஜயு இன் செயற்திறனானது 24.02.2024 இல் இடம்பெற்ற கூட்டத்தில் டீயூஊ இனால் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது. பெயரிடல் குழுவானது 22.11.2023 இல் இடம்பெற்ற கூட்டத்தில் மு.மு.ஆ. இன் செயற்திறன் மதிப்பீடுகளை மீளாய்வு செய்துள்ளது.
3.6.iii.d	கூட்ட அறிக்கைகளை பரிசீலனை செய்வதன் மூலமான பிரதம நிறைவேற்று அதிகாரியுடன் சம்பந்தப்பட்ட விடயங்களைப் பற்றிய கலந்தாராய்வின் போதான குழுக் கூட்டங்களில் பிரதம நிறைவேற்று அதிகாரியானவர் சமூகமளிப்பதில்லை எனும் கருத்தை குழுவின் "குறிப்பு விதிமுறைகளை" கொண்டிருப்பதனை பரிசீலித்தல்.	குழுவின் குறிப்பு விதிமுறையானது இவ்வாறு குறிப்பிடுவதன் மூலம் இந்த தேவைப்பாட்டினை உள்ளடக்குவதுடன், "பொ.மு. / பி.நி.அ. குழுவின் அனைத்து கூட்டங்களிலும் சமூகமளித்திருத்தல் வேண்டும், பி.நி.அ. தொடர்பான விடயங்கள் கலந்துரையாடும்போது தவிர ஆகும்"

பிரிவு இல.	விவரங்கள்	குறிப்பீடு
3.6.iv	**பின்வரும் விதிமுறைகள் பெயரிடல் குழு தொடர்பில் ஏற்புடையதாயிருக்கின்றதா:**	
3.6.iv.a	குழுவானது புதிய பணிப்பாளர்களை, பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரை தெரிவுசெய்வதற்கு/ நியமிப்பதற்கு ஒரு செயன்முறையினை அமுல்படுத்தியுள்ளமையினை பரிசீலித்தல்.	1975 இன் 13 ஆம் இலக்க SMIB சட்டத்தின் பிரிவு 07 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பணிப்பாளர்கள் அமைச்சரினால் நியமிக்கப்படுகின்றார்கள. SMIB சட்டத்தின் பிரிவு 20 இன் பிரகாரம் சபையானது ஒரு தகுதியும் பொருத்தமுமான ஒரு நபரை வங்கியின் பொது முகாமையாளராக நியமித்தல் வேண்டும் என்பதுடன் இவர் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆவார். மு.மு.ஆ. BHRRC இனால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தின் (SOR) பிரகாரம் தெரிவு செய்யப்படுகின்றார்கள். பொது முகாமையாளரின் திருத்தியமைக்கப்பட்ட SOR ஆனது 07.02.2022 இல் இடம்பெற்ற சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.
3.6.iv.b	தற்போதைய பணிப்பாளர்களை மீளத் தெரிவுசெய்தல் தொடர்பில் குழுவானது பரிசீலனை செய்து பரிந்துரை செய்துள்ளது (அல்லது பரிந்துரை செய்யவில்லை) என்பதனை பரிசீலித்தல்.	பொருத்தமற்றது, ஏனெனில் பணிப்பாளர்கள் நிதி அமைச்சரினால் நியமிக்கப்படுகின்றார்கள்.
3.6.iv.c	தொழில் விபரத்தை பரிசீலித்து, பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் பதவிக்கான நியமனம் அல்லது பதவியுயர்வு தொடர்பில் கருதப்படத்தக்க தகுதியுடைமைக்குத் தேவையான தகைமைகள், அனுபவங்கள் மற்றும் பிரதான பண்புகள் போன்றவற்றுக்கான தகுதித்திறன்களை குழு உருவாக்கியுள்ளமையினை பரிசீலித்தல்	பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர்கள் நியமனம் தொடர்பான தகைமைகள் மற்றும் அநுபவங்கள் என்பன SOR இல் உள்ளடக்கப்பட்டுள்ளது
3.6.iv.d	பணிப்புரை 3(3) இல் கொடுக்கப்பட்டுள்ள மற்றும் சட்டவிதிகளில் அமைக்கப்பட்டுள்ள பிரமாணங்களுக்கமைய அலுவல்களை பேணுவதற்கு தாங்கள் உறுதியுடனும் பொருத்தமான நபராகவும் இருப்பதாகப் பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் ஆகியோரிடமிருந்து அவர்களின் ஒப்பமிடப்பட்ட பிரகடனங்களை குழு பெற்றுள்ளமையினை பரிசீலித்தல்	பணிப்பாளர்கள் மற்றும் பொது முகாமையாளர் ஃ பி.நி.அ. மற்றும் மு.மு.ஆ. இன் கையொப்பமிடப்பட்ட பிரமாணப் பத்திரங்கள் மற்றும் பிரகடனங்கள் அவர்கள் நியமிக்கப்படும்போது சபை செயலாளரினால் பெறப்பட்டுள்ளன.
3.6.iv.e	பணிப்பாளர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் தொடர்பில் ஓய்வுபெறச் செய்வதற்கான முறைசார் தொடர்திட்டங்களை குழு பரிசீலித்துள்ளமையினை பரிசீலித்தல்.	பணிப்பாளர்கள, தலைவர் மற்றும் பொது முகாமையாளரின் நியமனங்கள் ளுஆஐடீ சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. மு.மு.ஆ. இனருக்கான சபை அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொடர்வுத் திட்டமானது 20 ஜூலை 2023 இல் அங்கீகரிக்கப்பட்டது.
3.6.iv.f	குழுவானது சுயாதீன தன்மை கொண்ட பணிப்பாளர் ஒருவரால் தலைமை வகிக்கப்படல் வேண்டும் என்பதும் பெரும்பான்மை சுயாதீன பணிப்பாளர்களுடனுடான ஒருங்கிணைப்பிற்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என்பதனையும் பரிசீலித்தல். பிரதம நிறைவேற்று அதிகாரி கூட்டங்களுக்கு அழைப்பின் பேரில் அவற்றுக்கு சமூகமளிக்கலாம்.	குழுவின் தலைவர் ஒரு சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளர் மற்றும் பெரும்பாலானோர் சுயாதீன பணிப்பாளர்களை பிரதிநிதித்துவம் செய்கின்றார்கள். பி.நி.அ. அழைப்பின் பேரில் கூட்டங்களில் கலந்துகொள்கின்றார்.
3.6.v	**பின்வரும் விதிகள் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (ஒ.இ.மு.கு.) தொடர்பாக ஏற்புடையதா என பரிசீலிக்கப்படல்.**	
3.6.v.a	குழுவானது குறைந்தது மூன்று நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர்கள், பி.நி.அ. மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரைக் கொண்டிருக்க வேண்டுமென்பதோடு, கடன், சந்தை, திரவத்தன்மை, செயற்பாட்டு மற்றும் மூலோபாய இடர்கள் மற்றும் அதிகார வரைச்சட்டகத்தில் அடங்குகின்ற பணிகள் மற்றும் குழுவிற்கு ஒதுக்கப்பட்ட பொறுப்புகள் போன்ற பரந்த இடர் வகைகளை கண்காணிப்பார்.	குழுவானது மூன்று நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள், பி.நி.அ., மற்றும் வங்கியின் பிரதம இடர் அதிகாரி ஆகியோரை உள்ளடக்கியுள்ளது. (21 ஜூலை 2023 திகதியிடப்பட்ட BIRMC கூட்ட அறிக்கை)
3.6.v.b	வங்கிக்கான கடன், சந்தை, திரவத்தன்மை, செயற்பாட்டு மற்றும் மூலோபாய இடர்கள் போன்ற சகல இடர்களையும் பொருத்தமான இடர்ச் குறிகாட்டிகள் மற்றும் முகாமைத்துவ தகவல்கள் மூலம் மாதாந்த அடிப்படையில் மதிப்பிடுவதற்கான ஒரு செயன்முறையினை குழு கொண்டிருந்தமையினை பரிசீலித்தல். துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் தொடர்பில் இடர் முகாமைத்துவமானது வங்கி அடிப்படையிலும் குழு அடிப்படையிலும் என இருவாறாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.	இடர் முகாமைத்துவப் பிரிவானது (RMD) காலாண்டு இடர் அறிக்கைகளை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவுக்கு சமர்ப்பிக்கின்றது. (BIRMC பத்திரிகை இல. 23/BR/04/03). தற்போது SMIB இன் கீழ் எவ்விதமான துணை நிறுவனங்களோ அல்லது இணை நிறுவனங்களோ நிறுவப்படவில்லை.

கூட்டாண்மை ஆளுகை

பிரிவு இல.	விவரங்கள்	குறிப்பீடு
3.6.v.c	குழுவானது கடன் குழு, சொத்து-பொறுப்புக் குழு போன்ற சகல முகாமைத்துவ மட்டக் குழுக்களுக்களின் போதுமை மற்றும் வினைத்திறனை மீளாய்வு செய்வதுடன் இது குறிப்பிட்ட இடர்களை விளித்துரைப்பதற்கும் குழுவினால் குறிப்பிட்டுள்ளவாறு அந்த இடர்களை அளவு சார்ந்த மற்றும் பண்பு சார்ந்த இடர் எல்லைகளினுள் முகாமைப்படுத்துவதனையும் மீளாய்வு செய்கின்றது.	ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவானது, கடன் மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழு போன்ற அனைத்து முகாமைத்துவ மட்டத்திலுள்ள குழுக்களின் அளவுசார் மற்றும் பண்புசார் இடர் வரம்புகளை மீளாய்வு செய்துள்ளது.
3.6.v.d	குறிப்பிட்ட அளவு சார் மற்றும் பண்பு சார் இடர் மட்டங்களுக்கு அப்பால் சென்றுள்ள சகல இடர் குறிகாட்டிகளையும் குழு மீளாய்வு செய்துள்ளமையினை பரிசீலித்தல்	அனைத்து இடர் குறிகாட்டிகளையும் BIRMC மீளாய்வு செய்து கருத்திலெடுத்துள்ளது. (BIRMC பத்திரிகை இலக்கம் 23/BR/01/03 பரிசீலிக்கப்பட்டது)
3.6.v.e	குழுவானது குறைந்தது காலாண்டு காலத்திலாவது எத்தனை தடவைகள் கூட்டம் நடாத்தியுள்ளது என்பதனை பரிசீலித்தல்.	இவ்வாண்டின்போது குழுவானது நான்கு கூட்டங்களை நடாத்தியது. கூட்டங்கள் மற்றும் வருகை பற்றிய விபரங்கள் 2023 இன் வரைவு ஆண்டறிக்கையின் பக்கங்கள் 91 முதல் 95 வரை வழங்கப்பட்டுள்ளன.
3.6.v.f	குறிப்பிட்ட இடர்களை அடையாளப் படுத்தத் தவறிய அதிகாரிகள் தொடர்பில் ஆவணப்படுத்தப்பட்ட முறைசார் ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான நடைமுறையொன்றை குழு மீளாய்வு செய்து ஏற்றுக்கொண்டுள்ளமையினை பரிசீலித்தல்	ஆவணப்படுத்தப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் செயன்முறையானது வங்கியிடம் உள்ளது. ஒழுக்காற்கு நடவடிக்கை செயன்முறை மீளாய்வு செய்யப்பட்டதனை நிரூபிப்பதற்கு BIRMC கூட்ட நிகழ்ச்சி குறிப்புகள் கிடைக்கப்பெறவில்லை.
3.6.v.g	சபையின் கருத்துகள், ஒத்திசைவு மற்றும்/அல்லது குறிப்பிட்ட பணிப்புரைகள் போன்றவற்றைப் வேண்டும் நோக்கிலான சபையின் ஒவ்வொரு கூட்டம் இடம்பெறுகின்ற வாரத்தினுள்ளும் இடர் மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை குழு சமர்ப்பிப்பதனை பரிசீலித்தல்.	ஒவ்வொரு BIRMC இன் இடர் மதிப்பீட்டு அறிக்கையானது ஒரு கிழமையினுள் சபைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.
3.6.v.h	வங்கியின் இணக்கப்பாட்டினை சகல வியாபார தொழிற்பாட்டுப் பரப்பு தொடர்பாக சட்டங்கள், ஒழுங்குவிதிகள், முறைமைப்படுத்தல் வழிகாட்டிகள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் ஆகியவற்றுடன் ஒப்பிட்டு மதிப்பிடுவதற்கான இணக்கச் செயற்பாடு ஒன்றை குழு நிறுவியுள்ளமையும், இணக்கப்பாட்டு செயற்பாடுகளை மேற்கொண்டு அது தொடர்பில் அவ்வப்போது குழுவிற்கு அறிக்கை செய்யும் நோக்கில் முக்கிய முகாமைத்துவ ஆளணியிலிருந்து ஒருவர் தெரிவுசெய்யப்பட்டு இணக்கப்பாட்டு அதிகாரியாக செயற்படுவதனை பரிசீலித்தல்.	இணக்கப்பாட்டு செயன்முறையானது ஒரு இணக்கப்பாட்டு அதிகாரியின் நியமனத்தினால் நிறுவப்பட்டுள்ளது. இணக்கப்பாட்டு அதிகாரி 15.02.2024 இல் ஓய்வுபெற்றதுடன் அவரது பதவிக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை.
3.7	**தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்**	
3.7.i	எந்தவொரு நபரினாலும் வங்கி நடவடிக்கையில் எழக்கூடிய முரண்பாட்டு நலன்களைத் தவிர்க்கும் நோக்கில் சபையினால் நிறுவப்பட்டு ஆவணப்படுத்தப்பட்ட செயன்முறை ஒன்று காணப்படுவதனை பரிசீலித்தல். மேலும் இது “தொடர்புடைய தரப்பினர்" எனக் குறிப்பாக கருதப்படுகின்ற பின்வரும் வகையிலடங்கும் நபர்கள் தொடர்பிலானதாகும்: அ) வங்கியின் யாதேனும் துணை நிறுவனங்கள்; ஆ) வங்கியின் யாதேனும் இணை நிறுவனங்கள்; இ) வங்கியின் யாரேனும் பணிப்பாளர்கள்; ஈ) வங்கியின் யாரேனும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர்; உ) வங்கிப் பணிப்பாளரின் அல்லது முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் நெருங்கிய உறவினர்; ஊ) வங்கியில் பொருண்மையான நலனுக்கு உரித்துடையதான ஒரு பங்குதாரர்; எ) யாரேனும் வங்கியின் பணிப்பாளர் அல்லது அவரின் நெருங்கிய உறவினர் அல்லது அதன் பொருண்மையான பங்குதாரர் பொருண்மையான நலனைக் கொண்டுள்ள நிறுவனம்	ஆவணப்படுத்தப்பட்ட தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் கொள்கையானது சபையினால் 16.08.2016 இல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது அவதானிக்கப்பட்டது. (சபை பத்திரிகை இலக்கம் 16.08.35 சபை நிகழ்ச்சிக் குறிப்பு இலக்கம் 16.08.95.02)
3.7.ii	இந்த பணிப்புரையினால் உள்ளடக்கப்படும் தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள் என அடையாளங்காணப்பட்ட பின்வரும் வகையிலடங்கும் கொடுக்கல் வாங்கல்களை அடையாளங்கண்டு அறிக்கை செய்வதற்கான செயன்முறையொன்று காணப்படுவதனை பரிசீலித்தல்.	தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் கொள்கையானது சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபை பத்திரிகை இலக்கம் 16.08.35 சபை நிகழ்ச்சிக் குறிப்பு இலக்கம் 16.08.95.02.
3.7.ii.a	கடன் வசதிக்கான அதிகபட்ச தொகை தொடர்பில் நாணய சபையின் பணிப்புரையில் வரையறுக்கப்பட்டவாறான எவ்வகையானதொரு கடன் வசதியளிப்பு.	த.தொ. இடமிருந்து உறுதிப்படுத்தல் பெறப்பட்டதுடன், அத்தகைய கடன்கள் எதுவும் வழங்கப்படவில்லை மற்றும் மு.மு.ஆ. அனுமதிக்கப்பட்ட கடன்வழங்கல் வரம்பினுள் காணப்படுகின்றார்கள்.

பிரிவு இல.	விவரங்கள்	குறிப்பீடு
3.7.ii.b	வங்கியின் யாதேனும் பொறுப்புகளை வைப்புகள், கடன் பெறுகைகள் மற்றும் முதலீடுகள் ஆகிய வடிவங்களில் ஏற்படுத்தல்.	மீளாய்வுக் காலத்தின்போது வைப்புகள், கடன்பெறுகைகள் மற்றும் முதலீடுகள் போன்ற வடிவத்தில் எவ்விதமான பொறுப்புக்களும் உருவாக்கப்பட்டது அவதானிக்கப்படவில்லை.
3.7.ii.c	வங்கிக்கு செலுத்தப்படுகின்ற அல்லது வங்கியிடமிருந்து பெறுகின்ற நிதிசார் அல்லது நிதிசாரா தன்மையுடைய ஏதேனும் சேவைகளை வழங்குதல்	அத்தகைய எவ்விதமான நிதிசார் மற்றும் நிதியல்லாத சேவைகள் மீளாய்வாண்டின்போது அவதானிக்கப்படவில்லை.
3.7.ii.d	தொடர்புடைய தரப்பினருக்கு பயனுள்ள வகையிலான சாத்தியமான தனியுரிமையுடைய, இரகசிய அல்லது ஏனைய உணர்திறனுடைய தகவல்களை பகிர்ந்துகொள்வதற்கு இட்டுச்செல்லும் வங்கிக்கும் அத்தகைய ஏதேனும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கும் இடையில் அறிக்கையிடல் முறைகள் மற்றும் தகவல் பரிமாற்றங்களை உருவாக்குதல் அல்லது பேணுதல்.	மீளாய்வாடிண்டின்போது அத்தகைய அறிக்கையிடல் முறைகள் எதுவும் அவதானிக்கப்படவில்லை.
3.7.iii	மேலே பணிப்புரை 3(7)(i) இல் விபரிக்கப்பட்டவாறான தொடர்புடைய தரப்பினருடன் வங்கியானது, அத்தகைய தரப்பினருக்கு ஒரே வணிகத்தினை மேற்கொள்ளும் வங்கியின் ஏனைய உறுப்புகளுக்கும் வழங்குவதிலும் பார்க்க "மிகவும் சாதனமான கவனிப்பினை" வழங்கும் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடவில்லை என்பதை உறுதிப் படுத்துவதற்கானதொரு செயன்முறையை சபை கொண்டுள்ளதா என்பதனை பரிசீலித்தல்	தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் கொள்கையானது சபையினால் அங்கீகரிக்கப்பட்டது. சபை பத்திரிகை இலக்கம் 16/08/35, 16/08/2016. திகதியிடப்பட்ட சபை நிகழ்ச்சிக் குறிப்பு இலக்கம் 16.08.95.02 - கூட்டம் நடைபெற்ற திகதி 26.08.2016
3.7.iii.	அ. சபையினால் தீர்மானிக்கப்படும், வங்கியின் முறைமைப்படுத்தல் மூலதனத்தின் ஒரு விவேகமான சதவீதத்தை விஞ்சுகின்ற தொடர்புடைய தரப்பினர்களுக்கு மொத்தத் நிகரக் கடன் வசதிகளை வழங்குதல். இந்த உப பணிப்புரையின் நோக்கங்களுக்காக: "கடன் வசதி" என்பது உச்சத் தொகை கடன் வசதியில் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வங்கிச் சட்ட பணிப்புரைகளில் குறிப்பிட்டுள்ளவாறு என்று பொருள்படும். 'மொத்த நிகரக் கடன்" கணக்கெடுக்கப் படும்போது மொத்த கடனிலிருந்து, அது போன்ற தொடர்புடைய தரப்பினரால் வங்கியின் பங்கு மூலதனம் மற்றும் 5 வருடங்கள் அல்லது அதற்கு அதிகமான கடன் கருவிகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளையும் காசு பிணைச் சொத்துக்களையும் கழித்து கணிப்பிடப்படுகின்றது. ஆ. ஒரு தொடர்பற்ற ஒப்பிடத்தகு எதிர்தரத்தவருடன் ஒரு ஒப்பிடத்தகு கொடுக்கல் வாங்கலுக்காக, வங்கியின் சிறந்த கடன் வழங்கலுக்கான வட்டி வீதத்தைவிட குறைந்த வட்டி வீதம் ஒன்றை அறவிடல் அல்லது வங்கியின் வைப்பீட்டுக்கான வட்டி வீதத்தைவிட அதிகம் செலுத்துதல் இ. சாதகமான தவணைக்காலம், வியாபார இழப்புகளை மீட்கும் வகையில் மற்றும்/அல்லது தொடர்பற்ற தரப்பினரால் மேற்கொள்ப்படும் வழக்கமான வணிகப் போக்கில் வழங்கப்பட்ட நியதிகளுக்கு அப்பால் விரிவாக்குகின்ற கட்டணங்கள்/ தரகுப்பணங்களை விலக்களிப்புச் செய்தல் போன்ற விரும்பத்தகு கவனிப்புகளை வழங்குதல் ஈ. மதிப்பீட்டு செயன்முறை எதுவுமின்றி ஒரு தொடர்புடைய தரப்பினருக்கு சேவைகளை வழங்கல் அல்லது தொடர்புடைய தரப்பினரிடமிருந்து சேவைகளைப் பெறுதல் உ. சட்டப்படியான கடமைகள் மற்றும் பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையான போது தவிர தொடர்புடைய தரப்பினருடன் சாத்தியமான தனியுரிமையுடைய, இரகசியமான அல்லது ஏனைய உணர்திறன் தகவல்களை பகிர்வதற்கு இட்டுச்செல்லும் அறிக்கையிடும் முறைகள் மற்றம் தகவல் பரிமாற்றம் ஆகியவற்றை பராமரித்தல்.	அத்தகைய கடன்கள் எதுவும் வழங்கப்படவில்லை என் த.தொ. இடமிருந்து உறுதிப்படுத்தல் பெறப்பட்டுள்ளதுடன் மு.மு.ஆ. அனுமதிக்கப்பட்ட கடன்வசதி எல்லைகளினுள் காணப்பட்டார்கள்.

கூட்டாண்மை ஆளுகை

பிரிவு இல.	விவரங்கள்	குறிப்பீடு
3.7.iv	வங்கி அதன் எவராவது பணிப்பாளர்கள் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கு கடனுதவியை வழங்குவதற்கான செயன்முறையொன்றை கொண்டிருக்கின்றது என்பதனை பரிசீலித்தல். அத்தகைய கடனுதவியானது பணிப்பாளர்கள் சபைக் கூட்டத்தில் ஒப்புதலளிக்கப்படுவதுடன், சம்பந்தப்பட்ட பணிப்பாளர் தவிர்ந்த பணிப்பாளர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டுக்கு குறையாத அளவுக்கு அத்தகைய கடன் வசதிக்கு சார்பாக வாக்களிப்பதுடன் இக்கடன் வசதியானது நாணயச் சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறான அத்தகைய பிணைச் சொத்தினால் பாதுகாக்கப்படல் வேண்டும்	அத்தகைய கடன் வசதியொன்றும் வழங்கப்படவில்லை. பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகள் ளுஆஜஊ சட்டத்தின் பிரிவு 17 மற்றும் வங்கியியல் சட்டத்தின் பிரிவு 47 இனால் ஆளுகை செய்யப்படுகின்றன.
3.7.v.a	கணிசமான நலனை கொண்டுள்ள நபரொருவருக்கு அல்லது நபரொருவரின் நெருங்கிய உறவினர் அல்லது சம்பந்தப்பட்ட நபரொருவருக்காக வங்கியினால் வழங்கப்பட்டிருக்கின்ற ஏதாவது கடனுதவியொன்றுக்கு வங்கி செயன்முறையொன்றை கொண்டுள்ளது என்பதைப் பரீட்சித்து அத்தகைய நபர் பின்னர் வங்கியின் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்படும் போது பணிப்பாளர் ஒருவராக அந்நபரின் நியமன திகதியிலிருந்து ஒரு வருடத்தினுள் நிதிச் சபையினால் அந்த நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்படக் கூடியதான தேவையான பாதுகாப்பை பெற்றுக்கொள்ள வங்கியினால் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதனை பரிசீலித்தல்	அத்தகைய கடன் வசதியொன்றும் வழங்கப்படவில்லை. பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகள் ளுஆஜஊ சட்டத்தின் பிரிவு 17 மற்றும் வங்கியியல் சட்டத்தின் பிரிவு 47 இனால் ஆளுகை செய்யப்படுகின்றன.
3.7.v.b	மேலே 3(7)(v) (a) பணிப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அக்காலத்தில் அத்தகைய பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்பது பரீட்சிக்கப்பட்டு அத்தகைய பணிப்பாளரின் நியமனத் திகதியிலிருந்து பதினெட்டு மாத காலங்கள் காலாவதித் திகதியில் அல்லது கடனுதவி வசதி வழங்கப்பட்ட காலத்தில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் எது முன்னையதோ அக்காலப்பிரிவினுள் ஏதாவது கடனுதவி வசதி கணக்கின் மீதான ஏதாவது செலுத்தப்பட வேண்டிய தொகை வட்டியுடன் மீட்பதற்கு நடவடிக்கைகளை வங்கி எடுத்திருக்கின்றது.	வங்கியின் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் கொள்கையினூடாக முறைமைப்படுத்துப்படுகின்றன. அத்தகைய கடன் வசதியொன்றும் வழங்கப்படவில்லை.
3.7.v.c	பணிப்பாளர் பதவியில் விலகிச்சென்றுவிட்டார் என கருதப்படக்கூடிய மேற்குறிப்பிட்ட உப பணிப்புரைகளுடன் இயைந்துசெல்லத் தவறுகின்ற எந்தவொரு பணிப்பாளரையும் அடையாளம் காண்பதற்கான செயன்முறை யொன்று பரீட்சிக்கப்பட்டிருக்கின்றதோடு அந்த விடயத்தை வங்கி பொதுமக்களுக்கு வெளிப்படுத்தியுள்ளதா என்பதனை பரிசீலித்தல்.	வங்கியின் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் கொள்கையினூடாக முறைமைப்படுத்துப்படுகின்றன இடம்பெறவில்லை.
3.7.v.d	வங்கியில் ஊழியர் ஒருவராகக் கடனுதவி வசதி வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இருந்த எந்தவொரு பணிப்பாளருக்கும் பிரயோகிக்கப்பட முடியாத 3(7) (v) உறுப்புரையை உறுதிப்படுத்துவதற்கு பரீட்சிக்கப்பட்டதோடு அத்தகைய வங்கியின் அனைத்து ஊழியர்களுக்கும் பிரயோகிக்ககூடிய திட்ட மொன்றின் கீழ் கடனுதவி வழங்கப்பட்டதனை பரிசீலித்தல்.	வங்கியின் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் கொள்கையினூடாக முறைமைப்படுத்துப்படுகின்றன இடம்பெறவில்லை.
3.7.vi	ஏதாவதொரு ஊழியருக்கு அல்லது அத்தகைய ஊழியரின் நெருங்கிய உறவினருக்கு அல்லது அத்தகைய வங்கியின் ஊழியர்களுக்கு பிரயோகிக்க கூடிய திட்டமொன்றின் அடிப்படை தவிர்ந்த கணிசமான அக்கறையினைக் கொண்ட ஊழியர் அல்லது நெருங்கிய உறவுடன் தொடர்புடைய நிறுவனத்திற்கு அல்லது மேலே 3(7) (v) இன் பணிப்பின் பிரகாரம் வழங்கப்பட்ட கடனுதவி தொடர்பில் நாணயச் சபையினால் அங்கீகரிக்கப்படக் கூடியவாறான பிணையத்தினால் பாதுகாக்கப்பட்டவருக்கு கட்டணங்கள் அல்லது தரகுகள் விலக்களிப் பெற்றவர் தொடர்பிலான ஏதாவது கடனுதவி அல்லது "மிகவும் சார்புடைய நடவடிக்கை" இனை வங்கி வழங்குகின்ற போது அடையாளங் காண்பதற்கான செயன்முறையொன்று இருப்பதனை பரிசீலித்தல்.	வங்கியானது ஊழியர்களுக்கு கூட்டு உடன்படிக்கையினை விலகி எவ்விதமான கடன் வசதிகளையோ அல்லது "மிகவும் சாதகமான கவனிப்பில்" வழங்கவில்லை என்ற உறுதிப்பாடு த.தொ. திணைக்களத்திடமிருந்து பெறப்பட்டது.

பிரிவு இல.	விவரங்கள்	குறிப்பீடு
3.7.vii.	மேலே பணிப்புரை 3(7)(v) மற்றும் 3(7) (vi) என்பவற்றின் கீழ் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட ஏதாவதொரு கடன் வசதிக்காக நாணயச் சபையின் முன் அங்கீகாரத்தை பெறுவதற்கான செயன்முறையொன்று உள்ளதாக என பரீசிலித்தல் நாணயச் சபையின் முன் அங்கீகாரமின்றி அத்தகைய கடன் வசதியின் ஏதாவது ஒரு பகுதியோ அதன் பேரிலான ஏதாவது வட்டி அனுப்பப்பட்டிருக்கின்றதா அத்துடன் அத்தகைய அங்கீகாரமின்றி எந்தவொரு பண அனுப்புகையும் செல்லுபடியற்றதும் பயனற்றதுமாகும்	இடம்பெறவில்லை.
3.8.	வெளிப்படுத்தல்கள்	
3.8.i.a	சபை வெளிப்படுத்தியுள்ளவற்றை பரிசீலித்தல்: மேற்பார்வை மற்றும் முறைமைப்படுத்தல் அதிகாரசபைகளினால் மற்றும் பொருத்தமான கணக்கீட்டு நியமங்களினால் குறித்துரைக்கப்பட்ட வடிவங்களுடன் இயைந்த வகையில் கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருப்பதோடு அத்தகைய கூற்றுக்கள் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில செய்திப் பத்திரிகைகளில் சுருக்கமான வடிவில் பிரசுரிக்கப்பட்டிருத்தல்.	வருடாந்த கணக்காய்வு நிதிக்கூற்றுக்கள் வங்கியின் மேற்பார்வை மற்றும் முறைமைப்படுத்தல் அதிகாரிகளினால் பரிந்துரைக்கப்பட்ட வடிவம் மற்றும் பொருத்தமான கணக்கியல் நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும் அந்த கூற்றுக்கள் பின்வரும் செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்டன: 1. த ஐலன்ட் 2. தினமின 3. தினக்குரல்
3.8.i.b	காலாண்டு நிதக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில செய்திப் பத்திரிகைகளில் சுருக்கமான வடிவில் பிரசுரிக்கப் பட்டிருக்கின்றன.	மத்திய வங்கியின் அறிவுறுத்தல்படி காலாண்டு நிதிக் கூற்றுக்கள் மேற்குறிப்பிட்டவாறு வெளியிடப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.
3.8.ii	ஆண்டறிக்கையில் சபை பின்வரும் ஆகக்குறைந்த வெளிப்படுத்தல்களை மேற் கொண்டிருப்பதனை பரிசீலித்தல்.	
3.8. ii.a.	கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதிக் கூற்றுக்கள் இயைபுள்ள கணக்கீட்டு நியமங்கள் மற்றும் குறிப்பிட்ட வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கமைய தயாரிக்கப்பட்டுள்ளன என்ற கூற்று	“நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள்” இல் இந்த விபரங்கள் வெளிப்படுத்தப்பட்டன.
3.8. ii.b	நிதியியல் அறிக்கையிடலின் நம்பகத்தன்மை தொடர்பாக நியாயமான உறுதிமொழியினை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டிருக்கின்ற நிதிசார் அறிகையிடல் முறைமையினை வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறை மீதான சபையின் அறிக்கை றுதிப்படுத்துவதோடு வெளியக நோக்கங்களுக்கான நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பானது பொருத்தமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இயைந்து செல்லும் வகையில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.	நிதியியல் அறிக்கையிடல் முறைகள் மீதான வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களின் கூற்றானது ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3.8. ii.c	மேலே 3(8)(ii)(b) பணிப்புரையோடு தொடர்புடைய உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறையின் பயனுறுதி மீதான வெளியக கணக்காய்வாளரின் அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பதை சபை பரிசீலித்தல்.	நிதியியல் அறிக்கையிடல் மீதான வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கையானது ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3.8. ii.d	பெயர்கள், தகைமைகள், வயது வலிமை மற்றும் பொருத்தப்பாடு தேவைப்பாடுகளை நிறைவேற்றுகின்ற அனுபவம் வங்கியுடனான கொடுக்கல் வாங்கல்கள் வங்கியினால் செலுத்தப்பட்ட மொத்தக் கட்டணம்/ஊதியம் உள்ளிட்ட பணிப்பாளர்களது விபரங்கள்	பணிப்பாளர்களின் சுயவிபரங்கள் ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பணிப்பாளர்களது ஊதியம் ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
3.8. ii.e	தொடர்புடைய தரப்பினர்களின் ஒவ்வொரு வகுதிக்கும் வழங்கப்பட்ட 3(7)(iii) இல் குறித்துரைக்கப்பட்ட மொத்த நிகர கடனுதவி. தொடர்புடைய தரப்பினர்களின் ஒவ்வொரு வகுதிக்கும் வழங்கப்பட்ட நிகரக் கடனுதவி வங்கியின் முறைமைப்படுத்தல் மூலதனத்தின் சதவீதமொன்றாக வெளிப்படுத்தப்படல் வேண்டும்.	தொடர்படைய தரப்பினர்களுக்கு எவ்விதமான கடன் வசதிகளும் வழங்கப்படவில்லை.

கூட்டாண்மை ஆளுகை

பிரிவு இல.	விவரங்கள்	குறிப்பீடு
3.8. ii.f	செலுத்தப்பட்ட ஊதியங்கள், வழங்கப்பட்ட கடன்கள், வங்கியிலுள்ள வைப்புகள் அல்லது முதலீடுகள் போன்ற சபை வகுதியினால் குறிப்பிடப்பட்ட வங்கியின் பிரதான முகாமைத்துவ ஆளணியினருக்கும் அதனால் வழங்கப்பட்ட ஊதியங்களின் மொத்த பெறுமதி மற்றும் வங்கியின் பிரதான முகாமைத்துவ ஆளணியினரின் கொடுக்கல் வாங்கல்களின் மொத்த பெறுமதி.	மு.மு.ஆ. உடனான கொடுக்கல் வாங்கல்கள் ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
3.8. ii.g	கூட்டாண்மை ஆளுகை பணிப்புரைகளுடன் இயைந்ததாக சபை வெளிவாரி கணக்காய்வாளரின் அறிக்கையை சபை பெற்றிருந்ததா என பரிசீலித்தல்	கூட்டாண்மை ஆளுகை பணிப்புரைகளுடனான இணக்கப்பாட்டிலான கணக்காய்வாளரது அறிக்கையானது ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3.8. ii.h	சாதூரியமான தேவைப்பாடுகள், ஒழுங்கு விதிகள், சட்டங்கள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளுடனான இணக்கப்பாட்டின் விபரங்களை குறிப்பிடும் அறிக்கையொன்றை தயாரித்திருப்பதோடு இயைந்து செல்லாத ஏதாவது விடயத்தை சீரமைப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.	சாதூரியமான தேவைப்பாடுகள், ஒழுங்கு விதிகள், சட்டங்கள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளுடனான இணக்கப்பாட்டின் விபரங்களை குறிப்பிடும் மற்றும் ஏதேனும் இணக்கப்பாடற்ற பொருண்மையான விடயத்தை சீரமைப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி வேறான அறிக்கை எதுவும் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. எவ்வாறாயினும், பணிப்பாளர்களது அறிக்கையானது பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாட்டிலான கூற்றை உள்ளடக்குகின்றது.
3.8. ii.i	வங்கியின் இடர் முகாமைத்துவத்தில் அல்லது வங்கியின் மேற்பார்வை பணிப்பாளரினால் குறிப்பிடப்பட்ட இப் பணிப்புரைகளுடன் இணங்கி செயற்படாமை போன்ற ஒழுங்கமைப்பு கூற்றுகள் என்பனவற்றுடன் மேற்பார்வை அக்கறைகளில் ஏற்படக்கூடிய குறைபாடுகள் இருப்பின், அவை பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும் எனும் நாணயச் சபையின் பணிப்புரைகளுடன் சேர்த்து, அத்தகைய அக்கறைகள் குறித்து விளித்துரைப்பதற்கு வங்கியினால் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள்.	வங்கி மேற்பார்வைப் பிரிவின் பணிப்பாளர் 2023 ஆம் ஆண்டின்போது இணக்கப்பாடின்மைகளை எடுத்துக்காட்டி எவ்விதமான அறிக்கைகளையும் அனுப்பவில்லை.

உள்வாரியான அக்கறை வெளிவாரியான சேவை



சபை கணக்காய்வுக் குழு அறிக்கை 44
சபை பெயரிடல் குழு 46
சபை மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு அறிக்கை 47
சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு 48

சபை கணக்காய்வுக் குழு அறிக்கை

கணக்காய்வுக் குழுவின் குறிப்பு விதிமுறைகள் கணக்காய்வு குழு சாசனத்தினால் ஆளுகை செய்யப்படுவதுடன் சபையினால் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படுகின்றது. குழுவின் சாசனமானது குழுவின் செயற்பாடுகள் தொடர்பான புதிய அபிவிருத்திகளை உறுதிசெய்வதற்காக கடைசியாக 28 ஆகஸ்ட் 2023 இல் சபையினால் மீளாய்வு செய்து அங்கீகரிக்கப்பட்டது.

குழுவானது முகாமைத்துவத்திலிருந்து தகவல்களுக்கான முழு அணுக்கம், ஒத்துழைப்பு ஆகியவற்றை கொண்டிருப்பதுடன் அதன் கூட்டங்களில் சமூகமளிக்குமாறு யாரேனும் நிறைவேற்று அதிகாரியினை வரவேற்கும் விருப்புரிமையினையும் கொண்டுள்ளது.
“இலங்கையில் உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளுக்கான கூட்டாண்மை ஆளுகை” இல் 2007 இன் 12 ஆம் இலக்க வங்கிச் சட்ட பணிப்புரை மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட அதனிலான திருத்தங்கள், குழுவின் தொகுப்பு, பங்களிப்பு மற்றும் செயற்பாடுகளை மேலும் முறைமைப்படுத்துகின்றது.

பிரதான முன்னிறுத்தம்

கணக்காய்வுக் குழுவானது சபையின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு சபைக்கு துணைபுரிவதுடன், நிதி அறிக்கையிடல், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் உள்ளக /வெளிவாரி கணக்காய்வுகள் மீது மேற்பார்வையினையும் மேற்கொள்கின்றது.

சபையின் தொகுப்பு

சபை கணக்காய்வுக் குழுவானது (ச.க.கு.) மீளாய்வாண்டின்போது பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்கியிருந்தது.

	அங்கத்தவர்	ச.க.கு. இல் நிலைமை	நியமனத் திகதி	சமூகமளிப்பு
1	பேராசி. அமிந்த மெத்சிலா பெரேரா	தலைவர் (சுயாதீன பணிப்பாளர்)	26.06.2023	4
2	திரு. எச்.சி. டிலிப் லால் சில்வா	அங்கத்தவர் (நிலைவேற்றுத் தரமல்லா பணிப்பாளர்)	26.06.2023	4
3	திரு. எஸ். கே. கலப்பத்தி	அங்கத்தவர் (சுயாதீன பணிப்பாளர்)	26.06.2023	4

கணக்காய்வுக் குழுவின் குறைவெண் வரம்பு இரண்டு அங்கத்தவர்கள் அல்லது ஆகக் கூடிய அங்கத்தவர்கள், இதில் கூடியதோ. 31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான அங்கத்தவர்களின் சுயவிபரங்கள் பக்கம் 16 முதல் 18 வரை வழங்கப்பட்டுள்ளன.

கணக்காய்வுக் குழு சாசனத்தில் வழங்கப்பட்டு அதிகாரத்தின் பிரகாரம் சபையின் செயலாளர் சபை கணக்காப்வுக் குழுவின் செயலாளராக செயற்படுகின்றார்.

பொது முகாமையாளர் / பி.நி.அ., ஒரு வெளிவாரி கணக்காய்வாளராக அரசாங்க கணக்காய்வின் பிரதிநிதி, உதவிப் பொது முகாமையாளர் நிதி மற்றும் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் ஆகியோரே வரவேற்பின் மூலம கணக்காய்வுக் குழுவின் வழமையான பங்குபற்றுனர்கள் ஆவார்கள்.

2023 இல் இடம்பெற்ற கூட்டங்கள்

2023 ஆம் ஆண்டின்போது குழுவானது நான்கு சந்தர்ப்பங்களில் கூடியது. கூட்டங்களின் செயல் நடவடிக்கைகள் சபை கூட்டங்களில் சமர்ப்பிக்கப்பட்டு உறுதி செய்யப்படுவதுடன், இங்கு அனைத்து முக்கிய சிக்கல்கள், அக்கறைகள், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கலந்தாராயப்பட்டு அவற்றில் சபையின் அங்கீகாரம் பெறப்படுகின்றது.

2023 இல் முன்னிறுத்தம் செய்யப்பட்ட பிரிவுகள் மற்றும் நடவடிக்கைகள்

நிதியில் நிலைமை மற்றும் செயற்திறனின் அறிக்கையிடல்

அதன் மேற்பார்வை பொறுப்புக்களை நிறைவேற்றவதில் குழுவானது கணக்காய்வு செய்யப்படாத / கணக்காய்வு செய்யப்பட்ட காலாண்டு மற்றும் வருடாந்த நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்து கலந்தாராய்ந்தது. மேற்பார்வை மற்றும் முறைமைப்படுத்தல் அதிகாரசபைகளில் விதந்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகள் மற்றும் பொருத்தமான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக இவை தயாரிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்படுகின்றன.

நிதிக் கூற்றுக்களின் நியாயத்தன்மையினை மதிப்பிடுவதில், குழுவானது பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள், மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் அதனிலான தீர்மானங்களை கலந்துரையாடி மதிப்பிட்டது.

குழுவானது 2023 ஆம் ஆண்டிற்கான உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டின் (உ.மூ.போ.ம.) முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளை சந்திப்பதற்காக காணப்படும் உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறையின் போதுமை மற்றும் பயனுறுதித்தன்மையயினையும் மதிப்பீடு செய்தது. இது “மேற்பார்வை மீளாய்வு செயன்முறையில் முறைமைப்படுத்தல் வரன்முறை” இல் 2016 இன் 01 ஆம் இலக்க வங்கியியல் சட்ட பணிப்புரை இலக்கம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாகும்.

முறைமைப்படுத்தல் இணக்கப்பாடு

வங்கியானது அனைத்து கட்டாய வங்கியியல் மற்றும் ஏனைய முறைமப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்குவதை குழுவானது உறுதிப்படுத்துகின்றது. உள்வாரி கணக்காய்வுப் பிரிவானது மேலதிக கண்காணித்தல் வழிமுறையாக அனைத்து முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளை உள்ளடக்கிய சுயாதீன சோதனைச் சரிபார்ப்புகளை நடாத்தியது.

உள்ளகக் கட்டுப்பாடுகள்

அனைத்து முக்கியமான இடர்களை இனங்கண்டு முகாமைப்படுத்துவதற்கான உள்ளகக் கட்டுப்பாட்டு கொள்கைகள் மற்றும் செயன்முறைகளின் போதுமை மற்றும் பயனுறுதித்தன்மைகளின் மதிப்பீடுகள் நோக்கியதாக இடர் அடிப்படையிலான அணுகுமுறை வங்கியினால் கடைப்பிடிக்கப்பட்டதுடன் குழுவானது உள்ளகக் கணக்காய்வின் நோக்கெல்லையினை உள்ளடக்கத்தை மேம்படுத்துவதற்கும் விரிவாக்குவதற்கும் குறிப்பிடப்பட்ட செயன்முறை மற்றும் பரிந்துரைகளை மீளாய்வு செய்தது.

உள்ளகக் கட்டுப்பாடு கொள்கைகள் மற்றும் செயன்முறைகளின் பயனுறுதித்தன்மையினை பராமரிப்பதற்கு இனங்காணப்பட்ட இடர்கள் தொடர்பான சீரமைப்பு நடைமுறையில் வணிக அலகுகளிடமிருந்து தேவையான உறுதிமொழியினை குழுவானது வேண்டிப் பெற்றுள்ளது.
ஒரு வழமையான அடிப்படையில் மற்றும ஒரு விசேட விடயம் அவசியமானபோது, குழுவானது கட்டுப்பாட்டு பற்றாக்குறையின் அடிப்படைக் காரணி பகுப்பாய்வு செய்யப்பட்டு உரிய மேம்பாடுகளுக்காக அறிவுரைகள் மேற்கொள்ளப்பட்டன.

உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு தொடர்பான உள்ளகக் கணக்காய்வுச் சாசனம் மற்றும கையேடானது உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாட்டின் சுயாதீனத்தன்மை மற்றும் புறநிலையினை உறுதிப்படுத்துவதற்காக மீளாய்வு செய்யப்பட்டன.

வருடாந்த கணக்காய்வுத் திட்டமானது கணக்காய்வுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு வருடம் பூராவும அதன் அமுலாக்கத்தின் வினைத்திறனானது மீளாய்வு செய்யப்பட்டது.

இவ்வாண்டின்போது, வங்கியின் பல்வேறு தோற்றங்களில் செயலாற்றப்படும் கணக்காய்வினூடாக உள்ளகக் கட்டுப்பாட்டு செயன்முறைகள் மற்றும் அமைப்புகளை கண்காணிப்பதற்கு உள்ளகக் கணகாண்வுத் திணைக்களத்தினால் எடுக்கப்பட்ட முன்னெடுப்புகளின் முன்னேற்றத்தினை குழு மீளாய்வு செய்தது.

கிளை கடன் மற்றும் வைப்புத் தேக்கங்களும் கணக்காய்வுக் குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்டதுடன் செயற்திறனை மேம்படுத்தவதற்காக பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டன.

உட்குறை உரைத்தல் கொள்கையின் பிரகாரம் வாடிக்கையாயர்கள் மற்றும் ஊழியர்களினால் மேற்கொள்ளப்பட்ட முறையீடுகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகள் கணக்காய்வுக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டு வங்கியின் நடத்தை மற்றும் அலுவல்களில் வெளிப்படைத்தன்மையினை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டன. உட்குறை உரைக்கும் கொள்கையானது துறைசார் சிறந்த நடைமுறைகளில் புதிய அபிவிருத்திகளை இற்றைப்படுத்துவதற்காக மீளாய்வு செய்யப்பட்டது.

வெளிவாரி கணக்காய்வு

சட்டத்தின் பிரகாரம், கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களே வங்கியின் வெளிவாரி கணக்காய்வாளர் ஆவார். குழுவானது வருடாந்த கணக்காய்விற்காக வெளிவாரி கணக்காய்வாளரினால் வேண்டப்படும் அனைத்து தகவல்கள் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படுவதனை உறுதிசெய்தது. குழுவானது இறுதி கணக்காய்வு அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள வெளிவாரி கணக்காய்வு கரிசனைகளை மீளாய்வு செய்து, முகாமைத்துவக் கடிதம் மற்றும காலாகால கணக்காய்வு வினாக்களில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள கரிசனைகளை விளித்துரைப்பதற்காக முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட சீரமைத்தல் நடடிவடிக்கைகளின் போதுமையினை மீளாய்வு செய்தது.

பேராசிரியர். அமிந்த மெத்சிலா பெரேரா
தலைவர் - சபை கணக்காய்வுக் குழு

சபை பெயரிடல் குழு

குழுவின் நோக்கெல்லை

சபை பெயரிடல் குழுவானது பி.நி.அ. மற்றும முக்கிய முகாமைத்துவ ஆளணியினரை தெரிவுசெய்வதற்கு அல்லது நியமிப்பதற்காக ஒரு செயன்முறையினை அமுலாக்குவதில் ஈடுபடுவதுடன், தகைமைகள், அனுபவம் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினராக அல்லது பி.நி.அ. பதவிக்கான நியமனத்திற்கு அல்லது பதவியுயர்விற்காக கருதப்படுவதற்கான தகுதிக்கு தேவையான முக்கிய பண்புகள் போன்றவற்றிற்கான வரன்முறைகளை நிறுவுவதிலும் ஈடுபடுகின்றது. இதற்கும் மேலாக, குழுவானது வங்கிக்கு மேலதிக அல்லது புதிய நிபுணத்துவத்தின் தேவைப்பாடுகளை கருத்திலெடுத்து பரந்துரைக்கின்றது. இது விண்ணப்பதாரிகளை பணிக்கமர்த்துவதற்காகவும் பெயரிடுவதற்காகவும் சிறந்த செயன்முறைகளை உருவாக்குவதற்காக காலாகாலம் சேர்ந்து செயற்படுதலையும் உள்ளடக்குகின்றது.

குழுவின் தொகுப்பு

சபை பெயரிடல் குழுவானது (ச.பெ.கு.) நான்கு சுயாதீன நிறைவேற்றுத்தரம் அல்லாத பணிப்பாளர்களையும், அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் நியமிக்கப்பட்ட ஒரு மாற்றாள் அங்கத்தவரையும் உள்ளடக்குகின்றது..

ச.பெ.கு. 2023 ஆண்டின் இறுதியில் பின்வரும் சுயாதீன நிறைவேற்றுத்தரம் அல்லாத பணிப்பாளர்களை உள்ளடக்கியிருந்தது.

திரு. ஜே.எம். சூசைதாசன் - தலைவர்
திரு. எஸ்.கே.ஏ. கலப்பத்தி - அங்கத்தவர்
திரு. எச்.சி.டி.எல்.சில்வா - அங்கத்தவா
பேரா.டி.ஏ.எம்.பெரேரா - மாற்றாள் அங்கத்தவர்

குழுவின் கூட்டங்கள்

குழுவானது ஆகக்குறைந்தது வருடத்திற்கு ஒரு தடவையாவது கூடுதல் வேண்டும் என்பதுடன் அவசியமானபோது கூட்டங்கள் அறிவிக்கப்படலாம். குறைவெண் வரம்பானது இரண்டு அங்கத்தவர்கள் என்பதுடன், இருவரும் சுயாதீன நிறைவேற்றுத்தரம் அல்லாத பணிப்பாளர்களாக கூட்டும் பூராவும் சமூகமளித்திருத்தல் வேண்டும். குழுவின் தலைவரின் பணிப்பின்பேரில் பொது முகாமையாளர் /பி.நி.அ. கூட்டங்களுக்கு அழைக்கப்படுவார்.

குழுக் கூட்டங்களின் செயல் நடவடிக்கைகள் வழக்கமாக பணிப்பாளர்கள் சபைக்கு அவர்களது தகவல்களுக்காக அறிக்கையிடப்படுகின்றன. 2023 ஆம் ஆண்டில் ஐந்து குழுக் கூட்டங்கள் இடம்பெற்றன.

கூட்டங்களில் குழுவின் அங்கத்தவர்களது சமூகமளிப்பு

குழு அங்கத்தவரின் பெயர்	இடம்பெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை	சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை
திரு. ஜே.எம். சூசைதாசன்	06	06
திரு. எஸ்.கே.ஏ. கலப்பத்தி		06
திரு. எச்.சி.டி.எல்.சில்வா		06
பேரா.டி.ஏ.எம்.பெரேரா		-

செயலாளர்

சபையின் செயலாளரே சபை பெயரிடல் குழுவின் (ச.பெ.கு.) இன் செயலாளராக செயற்படுகின்றார்.



திரு. ஜே.எம். சூசைதாசன்
குழுவின் தலைவர்

சபை மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு அறிக்கை

2023 ஆண்டின்போதான தொகுப்பு மற்றும் குறைவெண் வரம்பு

சபை மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு (ச.ம.வ.ஊ.கு) மூன்று சுயாதீன நிறைவேற்றுததரம் அல்லாத பணிப்பாளர்களை, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்டுள்ள ஒரு மாற்றாள் அங்கத்தவர் உள்ளடங்கலான, உள்ளடக்குகின்றது. குழுவின் குறைவெண் வரம்பு இரண்டு அங்கத்தவர்களாகும்.

2023 ஆம் ஆண்டின்போதான குழுவின் அங்கத்தவர்கள்

திரு. ஜே.எம். சூசைதாசன் - தலைவர்
திரு. எஸ்.கே.ஏ. கலப்பத்தி - அங்கத்தவர்
திரு. பி.ஆர். மாதியஹேவ - அங்கத்தவர்
திரு. எச்.சி.டி.எல்.சில்வா - அங்கத்தவர்

செயலாளர்

சபையின் செயலாளரே சபை மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழுவின் செயலாளராக செயற்படுகின்றார்.

குழுவின் நோக்கெல்லை

குழுவானது, ம.வ. கொள்கைகள், மூலோபாயங்கள் மற்றும் திட்டங்களை விருத்தி செய்தல் மற்றும் அமுலாக்குவதில் வழிகாட்டல் மற்றும் அறிவுரை வழங்குவதுடன், ம.வ. தொடர்பான சிக்கல்களை தீர்த்தல் மற்றும் வங்கியின் பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி (பி.நி.அ.), மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் தொடர்பான ஊதியக் கொள்கையினையும் தீர்மானிக்கின்றது. குழுவானது பணிப்பாளர்களுக்கு, பி.நி.அ. மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கு குறிகோள்கள் மற்றும இலக்குகளை நிறுவுகின்றது. மேலும், குழுவானது நிறுவப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கு எதிராக காலாகாலம் பி.நி.அ. மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் செயற்திறனை மதிப்பிடுகின்றது. இதன் அடிப்படையிலேயே ஊதியம், நலன்கள் மற்றும் செயந்திறன் அடிப்படையிலான ஊக்கத்தொகையுடைன ஏனைய கொடுப்பனவுகளை மாற்றியமைக்கப்படுகின்றன.

குழுவின் கூட்டங்கள்

மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழுவானது ஆகக்குறைந்தது வருடத்திற்கு ஒரு முறையேனும் கூடுதல் வேண்டும் என்பதுடன் கூட்டங்கள் அவசியமானபோது கூட்டப்படலாம், 2023 இன் போது ஆறு கூட்டங்கள் இடம்பெற்றன.

கூட்டங்களில் குழு அங்கத்தவர்களின் சமூகமளிப்பு

பணிப்பாளரின் பெயர்	இடம்பெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை	சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை
திரு. ஜே.எம். சூசைதாசன்	05	05
திரு. எஸ்.கே.ஏ. கலப்பத்தி		05
திரு. பி.ஆர். மாதியஹேவ		05
திரு. எச்.சி.டி.எல்.சில்வா		-



திரு. ஜே.எம். சூசைதாசன்
குழுவின் தலைவர்

சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு

சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் தொகுப்பு - 2023
சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவானது நான்கு நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்களையும், வங்கியின் பொது முகாமையாளர் /பி.நி.அ., இடர் முகாமைத்துவப் பிரிவின் தலைமை மற்றும் குழுவிற்கான செயலாளர் ஆகியோரை உள்ளடக்குகின்றது. நான்கு ச.ஒ.இ.மு.கு. கூட்டங்கள் 2023 ஆம் ஆண்டிற்கு நடாத்தப்பட்டன.

குழுவின் தொகுப்பு பின்வருமாறு [1ஆம், 2ஆம். 3ஆம் மற்றும் 4ஆம் ச.ஒ.இ.மு.கு. கூட்டங்கள்]

திரு. எச்.சி.டி.எல். சில்வா	- நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர் -குழுவின் தலைவர்
திரு. எஸ். கலப்பத்தி	- நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்
திரு. பி.ஆர். மாதியஹேவ	- நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்
பேரா. டி.ஏ.எம். பெரேரா	- நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்
திரு.ஐ.டி அசுருமன்ன	- பொது முகாமையாளர் /பிரதம நிறைவேற்று அதிகாரி
திருமதி. ஆர்.வை. டயஸ்	- இடர் முகாமைத்துவப் பிரிவின் தலைமை
திருமதி. ஆர்.கே.ஏ.என். ரத்நாயக்க	- பிரதான முகாமையாளர் -இடர் முகாமைத்துவப் பிரிவு
திருமதி. டி. அலஹக்கோன்	- சபை செயலாளர்

ச.ஒ.இ.மு.கு. இன் சாசனம்

ச.ஒ.இ.மு.கு. ஆனது வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் நிறுவப்பட்டதுடன், இது **"இலங்கையில் உரிமமளிக்கப்பட்டுள்ள விசேட வங்கிகளுக்கான கூட்டாண்மை ஆளகை"** இல் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட 2007 இன் 12 ஆம் இலக்க பணிப்புரையின் பிரிவு 3 (6) (v) இற்கு இணங்க நிறுவப்பட்டுள்ளது.

ச.ஒ.இ.மு.கு. இன் சாசனமாகது 12.12.2023 இல் இடம்பெற்ற கூட்டத்தில் பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு காலாகாலம் மீளாய்வு செய்யப்படுகின்றது. அங்கீகரிக்கப்பட் சாசனமானது அதன் அதிகாரம், கட்டமைப்பு மற்றும் பொறுப்புக்களை குறிப்பிடுகின்றது.

சாசனத்தின் பிரகாரம் ச.ஒ.இ.மு.கு. இன் **முக்கிய பொறுப்புக்கள்** பின்வருமாறு.

1. வங்கியின் இடர் ஆர்வத்தை மீளாய்வு செய்தல்
2. இடர் வரையறைகளை நிறுவுவதில் வங்கியின் முக்கிய இடர் கொள்கைகளை மீளாய்வு செய்து அங்கீகரித்தல் மற்றும் குறிப்பிட்ட வரையறைகளை வங்கி கடைப்பிடிப்பதில் அறிக்கைகளை பெறுதல்
3. முகாமைத்துவத்திடமிருந்து பின்வருவனவற்றில் அறிக்கைகளை பெறுதல், முகாமைத்துவத்துடன் மீளாய்வு செய்தல், முகாமைத்துவத்திற்கு பின்னூட்டத்தினை வழங்குதல்: கடன், சந்தை, திரவத்தன்மை மற்றும் செயற்பாட்டு இடர் உள்ளடங்கலான வங்கி முகங்கொடுக்கும் இடர் வகைகள், ஒவ்வொரு வகையிலுமான வெளிப்பாடு, அந்த இடர் வகைகளினுள் கணிசமான செறிவுகள், வெளிப்பாடுகளை கண்காணிப்பதற்கு பயன்படுத்தப்படும் அளவீடுகள் மற்றும் அந்த இடர் வெளிப்பாடுகளின் ஏற்றுக்கொள்ளதக்க மற்றும் பொருத்தமான மட்டங்களின் முகாமைத்துவத்தின் கருத்து ஆகியனவாகும்
4. பின்வருவன உள்ளடங்கலாக வங்கியின் கடன், சந்தை, திரவத்தன்மை மற்றும செயற்பாட்டு இடர் முகாமைத்தவ வரம்புறுகைகள். இடர் வெளிப்பாடுகளை முகாமைப்படுத்துவதற்கு முகாமைததவம் பயன்படுத்தும் முக்கியமான கொள்கைகள், செயன்முறைகள் மற்றும் அமைப்புமுறைகள் என்பவற்றுடன் அழுத்த சோதனைக்கு இடர் அளவீட்டு முறைகள் மற்றும் அணுகுமுறைகள் என்பனவாகும்
5. கடன், சந்தை, திரவத்தன்மை, செயற்பாட்டு மற்றும் வங்கிக்கான மூலோபாய /நற்பெயர் இடர்கள் உள்ளடங்கலான ஆனால் இவற்றுக்கு மற்றும் வரையறை செய்யாத அனைத்து வகையான இடர்களை பொருத்தமான இடர் குறிகாட்டிகள் மற்றம் முகாமைத்தவத் தகவல்களுடன் மதிப்பிடுதல்
6. வங்கியின் கொள்கைகள் மற்றம முறைமைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை தேவைப்பாடுகளின் அடிப்படையில், குழுவினால் நிறுவப்பட்ட இடர் சகிப்பிற்கு அப்பால் எடுக்கப்படும் இடரினை தணிப்பதற்கான சீர்திருத்தல் நடவடிக்கைகள் மற்றும் நிறுவப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக இடர் தீர்மானங்கள் எடுக்கப்படுவதை உறுதிசெய்தல்
7. இடர் முகாமைத்துவச் செயற்பாடு, மற்றும் தெரிவு செய்யப்பட்ட இடர் அதிகாரிகளின் தகைமைகள் மற்றும் பின்னணியின் போதுமையினை மதிப்பிடுதல்
8. இடர் முகாமைத்துவச் செயற்பாட்டின் சுயாதீனத்தன்மை மற்றும் அதிகாரம்.
9. முக்கியமான உள்ளீடுகள் மற்றும் அனுமானங்கள் உள்ளடங்கலான, வங்கியின் இடர் மூலதன வரம்புறகை (கடன், சந்தை, திரவத்தன்மை மற்றும் செயற்பாட்டு இடர்கள்)
10. வெளிப்பாடுகளை முகாமைப்படுத்துவதற்கு முகாமைத்தும் பயன்டுத்துகின்ற முக்கியமான கொள்கைகள், செயன்முறைகள் மற்றும் அமைப்பு முறைகள் உள்ளடங்கலான வங்கியின் ஐந்தொகை, ஐந்தொகைக் கட்டமைப்பு, மூலதனம், நிதியளித்தல், வட்டி வீதம் மற்றும் திரவத்தன்மை முகாமைத்துவ வரம்புறகை
11. வங்கயின் திரவத்தன்மை, வைப்பு திரடடல் மற்றும நிதியளித்தல் நடடிவக்கைகள் தொடர்பான முகாமைத்துவத்தின் அறிக்கைகளை மீளாய்வு செய்தல்
12. வங்கியின் முறைமைப்படுத்தல் மூலதன மட்டம் மற்றும் மூலதனக் கட்டமைப்பு தொடர்பான முகாமைத்துவத்தின் அறிக்கைகளை மீளாய்வு செய்தல்
13. வங்கியின் மூலதனக் குறிக்கோள்கள் உள்ளடங்கலான மூலதன மதிப்பீட்டு வரம்புறுகையினை மீளாய்வு செய்தல்
14. இடர் முகாமைத்துவத்தின் தலைமை, இணக்கப்பாட்டு அதிகாரி, உள்ளகக் கணக்காய்வாளர், நிதியின் தலைமை, திறைசேரியாளர், முகாமைத்துவத்திலுள்ள ஏனையோர், சுயாதீன கணக்காய்வாளர்கள், முறைமைப்படுத்துபவர்கள் மற்றும் பொருத்தமானவாறு வெளிவாரி நிபுணர்கள் ஆகியோரிடமிருந்து இடர் முகாமைத்தவம் மற்றும் இடர் முகாமைத்துவச் செயற்பாடுகள் பற்றிய தகவல்களை பெற்றுக்கொள்ளுதல்
15. நிறைவேற்று ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு, மீட்டல் குழு, நிறைவேற்று கடன் குழு, மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழு போன்ற குறிப்பிட்ட இடர்கள் அல்லது இடர்களின் சில அம்சங்களை கையாளுகின்ற அனைத்து முகாமைத்துவக் குழுக்களின் குறிப்பு விதிமுறைகள் மீளாய்வு செய்தல்
16. மேலே குறிப்பிட்ட அந்தந்த குழுக்களினால் எடுக்கப்பட்ட நடைமுறைகளின் பயனுறுதித்தன்மையினை சோதிப்பற்காக சிரேஷ்ட முகாமைத்துவத்தினால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
17. ச.ஒ.இ.மு.கு. ஆல் நிறுவப்பட்டுள்ள பண்புசார் மற்றும் அளவுசார் வரைகூறுகளினுள் இடர்களை இனங்காண்பதற்கு, அளவிடுவதற்கு, தவிர்ப்பதற்கு, தணிப்பதற்கு, மாற்றல் செய்வதற்கு அல்லது முகாமைப்படுத்துவதற்கு அவர்களது பொறுப்பாணை மற்றும் போதுமான பொறிமுறையில் ஒரு நல்ல புரிந்துணர்வினை மேற்குறிப்பிட்ட குழுக்கள் கொண்டுள்ளதை உறுதிசெய்வதற்காக வருடாந்த செயல்திட்டம், தொடர்புடைய மூலோபாயங்கள், கொள்கைகள் மற்றும் வரம்புறுகைகளை மீளாய்வு செய்கின்றது
18. குறிப்பிட்ட இடர்களை நேரடியாக அல்லது மறைமுகமாக கையாளுகின்ற முகாமைத்துவ குழுக்களுடன் தொடர்ச்சியான கலந்துரையாடலை பராமரித்தல், குழுக்களின் செயற்பாடுகள் மற்றும் / அல்லது அவர்களது தீர்மானங்களின் அமுலாக்கத்தில் ஏதேனும் தடைகள், இடையூறுகள், ஊக்கங்கெடுத்தல் அல்லது கட்டுப்பாடுகள் உடனடியாக ச.ஒ.இ.மு.கு. இற்கு அறிவிக்கப்படக்கூடியதாயுள்ளது
19. குறிப்பிட்ட இடர்களின் மட்டத்தினை கண்காணிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள இடர் குறிகாட்டிகளை மீளாய்வு செய்தல், இது குறித்த இடர் முகாமைத்தவக் குறிக்கோள்களை சேவையாற்றக்கூடிய அத்தகைய குறிகாட்டிகளின் போதுமையினை நிர்ணயிக்கும் நோக்கிலாகும்
20. ஒவ்வொரு இடர் குறிகாட்டிக்கும் எதிராக மாதாந்தம் கணிப்பிடப்படும் மெய்யான விளைவுகளை மீளாய்வு செய்து குறிப்பிட்ட இடர்களின் விளைவுகளை தணிப்பதற்காக உடனடி சீராக்கல் நடவடிக்கைகளை எடுப்பதற்காகும். அத்தகைய இடர்கள் பணிப்பாளர்கள் சபையினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள விவேகமான குறுமட்டத்தினை விஞ்சியிருப்பின் ஆகும்
21. பல்வேறு இடர் வகைகளுக்கு எதிராக முகாமைத்துவத்தினால் நிறுவப்பட்ட வரைகூறுகள் மற்றும் வரன்முறைகளை மீளாய்வு செய்தல் மற்றும் அங்கீகரித்தல் மற்றும் அவை பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு மற்றும் பணிப்பளர்கள் சபையினால் குறிப்பிடப்பட்ட விரும்பப்படும் கொள்கை மட்டங்கள் ஆகியவற்றுக்கு அமைவாக உள்ளனவா என்று நிச்சயப்படுத்திக்கொள்ளல்
22. உள்ளகக் கட்டுப்பாடுகள் /பணிப்புரைகளுடன் இணக்கப்பாடு காண மற்றும் குறித்த இடர்களை இனங்காண்பதற்கு தவறிய அதிகாரிகளுக்கு எதிராக பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டவாறு உடனடியாக திருத்த நடவடிக்கைகள் மற்றும் ஒழுக்காற்று செயன்முறைகளை எடுத்தல்

23. வணிகச் செயற்பாட்டு பிரிவுகள் அனைத்திலும் சட்டங்கள், ஒழுங்குவிதிகள், முறைமைப்படுத்தல் வழிகாட்டிகள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளுடன் வங்கியின் இணக்கப்பாட்டினை மதிப்பிடுவதற்காக இணக்கப்பாட்டு செயற்பாட்டின பயனுறுதித்தன்மையினை மீளாய்வு செய்தல்
24. வணிக் தொடர்ச்சி மற்றும் பேரிடர் மீட்டல் திட்டத்தினை வருடாந்தம் மீளாய்வு செய்தல்
25. வங்கியின் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டு செயன்முறையினை மீளாய்வு செய்து அங்கீகரித்தல்
26. வங்கியின் பாரிய செலவினத் திட்டத்தினை தொடர்ந்து சபைக்கு அறிவிக்கப்படவேண்டிய மூலதனப் பங்களிப்புகளை மீளாய்வு செய்தல்
27. குறிப்பிடத்தக்க ஒரு அழுத்தமான நிகழ்வு ஏற்படுமாயின், வணிகத்தில் ஏற்படக்கூடிய சாத்தியமான சிக்கல் தொடர்பான தகவல்களை திரட்டுதல் மற்றும் முகாமைத்துவத்தினால் பின்பற்றப்படவேண்டிய மீட்டல் தெரிவுகளை மீளாய்வு செய்தல்
28. கணக்காய்வுக் குழுவுடனான ஆலொசனையுடன் ஆகக்குறைந்தது வருடத்திற்கு ஒரு முறையேனும் முகாமைத்துவத்துடன் மீளாய்வு மற்றும் கலந்தாராய்வு செய்தல்
29. சபையினால் வேண்டப்படுமாறு ச.ஒ.இ.மு.கு. சாசனம் தொடர்பான ஏனைய நடவடிக்கைகளை செயலாற்றுதல்

சாசனத்தின் பிரகாரம், ச.ஒ.இ.மு.கு. இன் ஏனைய பொறுப்புக்கள் பின்வருமாறு.

1. கணக்காய்வுக் குழு அதன் நியதிச்சட்ட, முறைமைப்படுத்தல் மற்றம் ஏனைய பொறுப்புக்களை மேற்கொள்வதற்கு அனுமதிக்கும் அவசியமானவாறு மற்றும் பொருத்தமானவாறு குழுவானது சபை கணக்காய்வுக் குழுவுடன் தொடர்பாடல் செய்து தகவல்களை பகிர்ந்துகொள்கின்றது
2. குழுவின் ஆதிக்கவரம்பினுள் காணப்படும் விடயங்கள் தொடர்பான முறைமைப்படுத்தல் பரிசோதனை அறிக்கைகளின் பிரதிகளையும் அவற்றிலான முகாமைத்துவத்தின் பதில்களையும் குழு பெற்றுக்கொள்கின்றது.

ச.ஒ.இ.மு.கு. கூட்டங்கள்

காலாண்டு அடிப்படையிலான ச.ஒ.இ.மு.கு. கூட்டங்கள் மற்றும் ச.ஒ.இ.மு.கு. அங்கத்தவர்களின் சமூகமளிப்பு பின்வருமாறு.

Q 1ஆம், 2ஆம், 3ஆம் மற்றும், 4ஆம் ச.ஒ.இ.மு.கு. கூட்டங்கள்

பணிப்பாளரின் பெயர்	"சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை /சமூகமளிக்கவேண்டிய கூட்டங்களின் எண்ணிக்கை"
திரு. எச்.சி.டி.எல். சில்வா (குழுவின் தலைவர்)	4/4
திரு. எஸ். கலப்பத்தி	4/4
திரு. பி.ஆர்.மாதிவஹேவா	4/4
பேரா. டி.ஏ.எம். பெரேரா (மாற்றாள் அங்கத்தவர்)	பொறுதருளப்பட்டது

அறிக்கையிடல்

ச.ஒ.இ.மு.கு. கூட்டங்களில் முன்மொழியப்பட்ட மற்றும் கலந்தாராயப்பட்ட செயன்முறைகள் சபையின் கருத்துக்கள், உடன்பாடுகள் மற்றும் குறித்த வழிகாட்டிகள் மற்றும அங்கிகாரங்களை வேண்டி ச.ஒ.இ.மு.கு. இன் பரிந்துரையுடன் சபைக்கு அறிக்கையிடப்படுகின்றது. மீளாய்வாண்டின்பொது ச.ஒ.இ.மு.கு. ஆல் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சபை மட்டத்தில் கலந்தாராயப்பட்டு சபையினால் அங்கீகரிக்கப்படுகின்றது. ச.ஒ.இ.மு.கு. இன் நிகழ்ச்சிக் குறிப்புகள் சபையினை அறியப்படுத்துவதற்காக சபைக்கு முன்னிலைப்படுத்தப்பட்டு அவசியமானபோது விரிவாக கலந்துரையாடப்படுகின்றன.

திரு. எச். சி. டி. எல். சில்வா

தலைவர் - சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு

உள்நோக்கி ஒற்றுமை வெளிப்புறமாக இணைந்து

இடர் முகாமைத்துவம் 51
மனித வள முகாமைத்துவம் 55
2023 எல்லைகளுக்கு அப்பால் - மீளாய்வில் கூட்டாண்மை மற்றும் கருவி வணிகநாமங்கள் 57

இடர் முகாமைத்துவம்

இலங்கையின் பொருளாதாரத்திற்கு 2023 ஆம் ஆண்டானது சவால்மிக்கதாகக் காணப்பட்டதுடன், நெடுங்காலமாக நிலவுகின்ற கட்டமைப்பு பலவீனங்கள் பல்வேறு அதிர்வுகளினால் உயர்வடைந்து நாட்டினை ஒரு பொருளாதார நெருக்கடிக்கு இட்டுச்சென்றது. பலவீனமான ஆளகை, கட்டுப்படுத்தப்பட்ட வர்த்தக நடப்பு, ஒரு பலவீனமான முதலீட்டுச் சூழல், தளர்வான நாணயக்கொள்கை நிகழ்வுகள் மற்றும் ஒரு நிர்வகிக்கப்பட்ட நாணயமாற்று விகிதம் என்பன பாரியபொருளாதார சமநிலையின்மைகளுக்கு பங்களிப்பு செய்தது. நிதிசார் ஒழுக்கமின்மை உயர் நிதிப் பற்றாக்குறைகளுக்கு, பாரிய மொத்த நிதியளித்தல் தேவைகள், இவற்றுடன் இடர்மிகுந்த வர்த்தகக் கடன்பெறுகைகள் உயர்ந்த கடன் பாதிப்பிற்கு இட்டுச்சென்றது. ஒட்டுமொத்த நிதிப் பற்றாக்குறையானது 2023 இன் முதலாம் அரைப்பகுதியில், வட்டிக் கொடுப்பனவுகளில் கூர்மையான அதிகரிப்பினால் இயக்கப்பட்டு, அதிகரித்தது. இது உயர்வான மொத்த வருவாய்கள் மற்றும் அதன் விளைவான பிரதான பற்றாக்குறை பெரும்பாலும் சுருக்கமடைதல் காணப்பட்டபோதிலும் ஆகும். புதிய வருவாய் வழிமுறைகள் உள்ளடங்கலான அவசியமான நிதியியல் மறுசீரமைப்புகள் சில ஒட்டுமொத்த முன்னேற்றத்தினை மேம்படுத்தியுள்ளதுடன் நேரடியான மற்றும் மறைமுகமான வரிகள், மற்றும் உயர்வடையும் வலுசக்தி விலைகள் ஏழைகள் மற்றும் பாதிப்படையக்கூடியோர் மீது அளவுக்கதிமான சுமையினை ஏற்படுத்தின.

இந்த சவால்மிக்க பொருளாதார சூழ்நிலைகளின் கீழ் வங்கியானத அதன் செயற்பாடுகளில் முன்னிறுத்தம் செய்வதனை தொடர்ந்ததுடன், வங்கிக்கு ஏதேனும் இடையூறுகளின் தாக்கத்தைக் குறைப்பதற்காக அத்தகைய சவால்கள் தணிக்கப்பட்ட முகாமைப்படுத்தப்படுவதனை உறுதிசெய்வதற்காக இடர் முகாமைத்துவ முன்னெடுப்புகளை பராமரித்தது.

இடர் முகாமைப்படுத்தலுக்கான வங்கியின் அணுகுமுறையானது, இடர்களை இனங்காண்பதற்கு, மதிப்பிடுவதற்கு, அளவிடுவதற்கு, தணிப்பதற்கு, கண்காணிப்பதற்கு மற்றும் அறிக்கையிடுவதற்காக ஒரு விரிவான ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ வரம்புறுகை அடித்தளமிட்டுள்ளது. வங்கியின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ வரம்புறுகையானது ஆளுகை கட்டமைப்புகள் மற்றும் வங்கியின் இடர் வெளிப்பாடுகளை இனங்காணுதல், அளவிடுதல், கண்காணித்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் செயன்முறைகளை தெளிவாக வரையறை செய்துள்ளது. வங்கியின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ வரம்புறுகையானது நான்கு ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட கூறுகளை உள்ளடக்கியுள்ளன:

- இடர் பாரபத்தியத்திற்கான ஒரு தெளிவான செயற்பாட்டு கட்டமைப்பினை இடர் ஆளுகை நிறுவியுள்ளது.
- சாதகமற்ற தாக்கங்களை விளித்துரைப்பதனையும் வாய்ப்புக்களில் பலனடைவதனையும் இயலுமையாக்குவதற்கு வணிக அலகுகள் மற்றும் திணைக்களங்களை வழிநடத்துவதற்கு அவசியமான இடர் கட்டுப்பாட்டு செயன்முறைகளை வெளிப்படுத்தவதற்கு இடர் கட்டுப்பாட்டு கட்டமைப்பு.
- வங்கியினால் முகங்கொடுக்கப்படும் அனைத்து முக்கியமான இடர்கள் இனங்காணப்படுதல், அளவிடப்படுத்தல், கண்காணிக்கப்படுதல் மற்றும் அறிக்கையிடப்படுதலை உறுதிசெய்வதற்காக இடர் சார்பிடல்.
- வங்கியின் அனைத்து மட்டத்திலும் பகிரப்பட்ட பொறுப்பினை இயலுமையாக்குதல் மற்றும் இடர் பொறுப்புக்கூறலினை ஊக்குவித்தலலுக்காக இடர் விழிப்புணர்வுக் கலாச்சாரம்.

இடர் முகாமைத்துவ வரம்புறுகையானது மூன்று வரிசை பாதுகாப்பு மாதிரியின் அடிப்படையிலாகும், இது வங்கியின் அனைத்து இடர் வெளிப்பாடுகளை முகாமைப்படுத்துவதற்கான ஒரு கட்டமைக்கப்பட்ட பொறிமுறையினை உறுதிசெய்வதற்காகும்.



இடர் ஆளுகை மற்றும வங்கியின் முகாமைத்துவக் கட்டமைப்பு



இடர் முகாமைத்துவம்

இடர் ஆர்வம்

வங்கியின் இடர் ஆர்வமானது அது அதன் மூலோபாய மற்றும் நிதியியல் குறிக்கோள்கள் நோக்கி செல்லும்போது அது எடுப்பதற்கு விரும்பும் இடர் மட்டத்தினை வரையறை செய்கின்றது. இதற்கும் மேலாக, இடர் ஆர்வம் உள்ளடக்கமான இடர் ஆர்வமானது, அத்தகைய வரையறைகள் விஞ்சப்படுதல் /தூண்டப்படுதல் நிகழுமாயின் எடுக்கப்படவேண்டிய குறிப்பிட்ட திருத்தச் செயற்பாட்டினை தூண்டின வரையறை செய்கின்றது.

வங்கியின் சிரேஷ்ட முகாமைத்துவமானது இந்த கொள்கையானது கீழ்வரிசையினருக்கு முறையாக அறிவிக்கப்படுவதனையும் நிறுவனத்தின் கலாச்சாரத்தில் புதைந்திருப்பதனையும் உறுதிசெய்யதல் வேண்டும். அளவிடக்கூடிய இடர்கள் தொடர்பான இர் சகிப்புத்தன்மைகள் வங்கியின் சார்பில் இடர்களை ஏற்றுக்கொள்பவர்களுக்கு வரையறையாக அல்லது உப வரையறையாக பொதுவாக அறிவிக்கப்படுகின்றது. பண்புசார் இடர் வழிமுறைகள் வழிகாட்டிகளாக அறிவிக்கப்பட்டு முகாமைத்துவ வணிக தீர்மானங்களிலிருந்து அனுமானிக்கப்படுகின்றது.

வங்கியின் இடர் ஆர்வமானது இடர் முகாமைத்துவச் செயற்பாட்டினால் கண்காணிக்கப்பட்டு பணிப்பாளர்கள் சபைக்கு, கூட்டாண்மை முகாமைத்துவத்திற்கு மற்றும் உரிய குழுக்களுக்கு வழக்கமாக அறிக்கையிடப்படுகின்றன. உள்வாரியாக மற்றும் வெளிவாரி சூழலில் காணப்படும் முக்கியமான மாற்றங்களுக்கு இயைபாக இந்த கொள்கைகளை வைத்திருப்பதற்கு, பணிப்பாளர்கள் சபையானது இந்த கொள்கைகளை காலாகாலம் மீளாய்வு செய்து அவசியமானதென்று கருதப்படும்போது பொருத்தமான மாற்றங்களை மேற்கொள்ளும்.

இடர் கலாச்சாரம்

வங்கியினுள் ஒரு செயலூக்கமான இடர் முகாமைப்படுத்தல் கலாச்சாரத்தினை உருவாக்குவதில் SMIB நம்பிக்கை கொண்டுள்ளது. ஊழியர்கள் தெளிவான புரிந்துணர்வுடன் இடர்களை பொறுப்பேற்க அல்லது முகாமைப்படுத்த ஒரு இடர் விழிப்புணர்வு கலாச்சாரத்தினை உருவாக்குவதற்கு வங்கி முயற்சிப்பதுடன், இது வழங்கப்பட்டுள்ள ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ வரம்புறுகையினுள் அடங்கும். வங்கியின் ஊழியர்களினால் செயலாற்றப்படும் விசேட பங்குகளுடன் தொடர்புடைய இடர்களில் ஒரு முழுமையான புரிந்துணர்வினை வழங்குதல் முதலாவது வரிசை பாதுகாப்பினை பலப்படுத்தும், இது செயன்முறை வினைத்திறன்கள் மற்றும் வங்கியின் ஒட்டுமொத்த ஸ்திரத்தன்மையினை இயலுமையாக்கும். இந்த நடைமுறைகள் நிறுவனத்தினுள் ஒரு இடர் விழிப்புணர்வு கலாச்சாரத்தினை புகுத்துவதற்கு துணைபுரியும்.

இடர் அறிக்கையிடல்

தெளிவாக வரையறை செய்யப்பட்ட இடர் அறிக்கையிடல் பொறிமுறைகள், முக்கிய இடர் வெளிப்பாடுகள் இனங்காணப்பட்டு உரிய நபருக்கும் நேரகாலத்தில் உரிய விதத்தில் இறுதியாக பணிப்பாளர்கள் சபைக்கும் ஒப்படைக்கப்படும். இடர் அறிக்கையிடலானது அனைத்து முக்கிய இடர் வெளிப்பாடுகளை உள்ளடக்கியுள்ளதுடன் நிறுவனம் பூராவும் அனைத்து உரிய ஊழியர்களுக்கும் தெளிவாக தெரிவிக்கப்படுகின்றது.

மூலதன முகாமைத்துவம்

வினைத்திறனான மூலதன முகாமைத்துவமானது வங்கியினை வகையற்ற நிலையிலிருந்து பாதுகாப்பதற்கு முக்கியமானதாவதுடன், வங்கியின் நிதி நிலைமை மற்றும நற்பெயரையும் பாதுகாக்கின்றது. உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டு செயன்முறை (ICAAP) பாசல் தேவைப்பாடுகளுடன் இணைக்கப்பாடு காண்பதுடன் வங்கியின் இடர் தோற்றுருவம் தொடர்பான ஒட்டுமொத்த மூலதனப் போதுமையினை மதிப்பிடும் செயன்முறைக்கு வழிகாட்டுகின்றது. ஒரு அரச வங்கியாக, தற்போது SMIB உரித்துவ சந்தையினுள் நுழைந்து மூலதனத்தை திரட்டுவதற்கு வரையறையான ஆற்றலைக் கொண்டிருப்பதுடன் மூலதனத்தை மேம்படுத்துவதில் உள்வாரியான இலாப உருவாக்கத்திலும் அரசாங்க உட்புகுத்தல்களிலும் பிரதானமாக தங்கியுள்ளது.

	ஆகக் குறைந்த தேவைப்பாடு	2023	2022	2021
சாதாரண உரித்துவம் அடுக்கு 1	7%	23.46%	21.91%	23.95%
அடுக்கு 1 விகிதம்	8.5%	23.46%	21.91%	23.95%
மொத்த மூலதன விகிதம்	12.5%	23.46%	23.80%	25.23%

இடர்களை முகாமைப்படுத்தல்

கடன் இடர்

கடன் இடர் என்பது ஒரு வாடிக்கையாளரிடமிருந்து அல்லது ஒரு எதிர்தரத்தவரிடமிருந்து அக்கடனை திருப்பிச் செலுத்தவேண்டியபோது வங்கிக்கு அவர்களது ஒப்பந்தக் கடப்பாடுகளை சந்திப்பதற்கு தவறும்போத எழுகின்ற சாத்தியமான நட்டத்தைக் குறிப்பிடுகின்றது. நாம் கடன் இடரினை ஒரு தொடர்ச்சியான அடிப்படையில் முகாமைப்படுத்துவதுடன், கடன் கொள்கை, மற்றும் கடன் கையேட்டு செயன்முறைகள், அதிகார ஒப்படைப்பின் பிரிப்பு, இடர் தரப்படுத்தல்கள், பிணைச்சொத்து முகாமைத்துவம் மற்றும் கடன் கண்காணித்தல் உள்ளடங்கலாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வலுவான கடன் இடர் முகாமைத்துவ வரம்புறுகையின் கீழ் கடன் இடர் முகாமைத்துவமானது நடாத்தப்படுகின்றது. வருமான மூலத்தின் நம்பகத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக ஒரு வருமான மூலச் சரிபார்ப்பு மற்றும் கடன் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக பணம் பிரித்தளிப்பதற்கு முன்னர் தனியான அலகு உள்ளடங்கலாக வருமான பரிசீலனைகளில் ஒரு விசேட அலகு உள்ளடங்கலாக வாடிக்கையாளர் பரிசோதனையில் வல்லமையான செயன்முறை பின்பற்றப்படுகின்றது. ஒவ்வொரு கடன் கருவி வகையிலும் அவற்றின் இடரின் தன்மையின் அடிப்படையில் உள்ளக கடன் தரப்படுத்தல் மாதிரிகள் விருத்திசெய்யப்பட்டுள்ளதுடன், இது கடன் வசதிகளை வழங்குவதற்கு முன்னர் அல்லது கடன் வரம்பினை அதிகரிப்பதற்கு முன்னர் நடாத்தப்படுவதுடன், இது தவறுதல் மற்றும நட்டங்களுக்கான சாத்தியத்தினை எதிர்வுகூறுவதற்கு துணைபுரிகின்றது. நிர்ணயிக்கப்பட்ட கடன் ஆர்வங்கள் மற்றும் பரிகாரம் மற்றும் மீட்டல் செயற்பாடுகளுக்கு அமைவாக, துறை, கருவி மற்றும் இடர் தரப்படுத்தல் வகுப்புவாரியாக வெளிப்பாட்டு கண்காணித்தல், சகிப்புத்தன்மை வரையறைகளுடனான முக்கிய இடர் குறிகாட்டிகள் மற்றும் ஏனைய முக்கிய விகிதாசாரங்கள் உள்ளடங்கலான தேக்க பகுப்பாய்வானது காகாலம் மதிப்பிடப்பட்டு ச.ஒ.இ.மு.கு. இற்கு அறிக்கையிடப்படுகின்றது. இவை உருவாகின்ற சிறந்த நடைமுறைகள் மற்றும் வெளித்தோன்றுகின்ற இடர்கள் மற்றும் வாய்ப்புக்களின் அடிப்படையில் காலாகாலம் மீளாய்வு செய்யப்பட்டு இற்றைப்படுத்தப்படுகின்றது.

கடன் தேக்கமானது தனிப்பட்ட கடன் தேக்கத்தினால் ஆதிக்கம் செலுத்தப்படும்வேளை 48% ஆன கடன் தேக்கமானது அடமானம் மற்றும காசுப் பின்னணியிலான ஊ.சே.நி. கடன்கள் ஊடாக பிணைச்சொத்தளிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். வங்கியனாது பல்வேறு துறைகள் மற்றும் தொழில்துறைகளுக்கு பன்முகப்படுத்தும் நோக்கத்துடன் சி.ந.நி. / வணிகக் கடன்களில் அதன் முன்னிறுத்தத்தினை அதிகரிப்பதற்று பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

கருவிவாரியான தேக்கச் செறிவு



இடர் நடைமுறைகள் பொருத்தமானவை, இற்றைப்படுத்தப்பட்டவை, மற்றும் மாற்றமடையும் வணிகத் தேவைப்பாடுகளை விளித்துரைக்கின்றது என்பவற்ற உறுதிப்படுத்துவதற்காக உருவாகின்ற இயக்கவியலுக்கு பதிலளிப்பதில் வங்கியானது அதன் கடன் கொள்கைகள் மற்றம் செயன்முறைகளை தொடர்ந்தும் மீளாய்வு செய்து இற்றைப்படுத்துகின்றது. இவ்வாண்டின்போது,

வலுக்குன்றல் கொள்கை மற்றும் கடன் கையேடானது மீளாய்வு செய்யப்பட்டு, வங்கியின் கடன் இடர் முகாமைப்படுத்தலை பலப்படுத்தும் நோக்கில் அவதானிப்பு பட்டியல் செயன்முறையானது நெறிப்படுத்தப்பட்டது. வங்கியானது மீட்டல் நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்கும், கடன் தேக்கத்தின் நெருக்கமான பின்தொடர்வு, செயற்திறனற்ற கடன் பகுதி அதிகரிப்பதை கட்டுப்படுத்துதல் ஆகியவற்றுக்கான நடவடிக்கைகளை எடுத்தது.

செ.க. விகிதம் மற்றும் வலுக்குன்றல்



- வலுக்குன்றல் ஏற்பாடு
- வலுக்குன்றல் (கட்டம்3) கட்டம் 3 கடனுக்கான விகிதமாக %
- மொத்த செ.க., ஊ.சே.நி. நீங்கலாக

சந்தை இடர்

சந்தை இடர் என்பது சந்தை வீதங்கள் அல்லது விலைகளினால் அசைவுகளின் காரணமாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி அல்லது அவற்றிலிருந்து பெறப்படுகின்றன வருமானமானது பாதகமாக மாற்றமடையும் இடர் ஆகும்.

திரவத்தன்மை இடர் என்பது நடைமுறை அல்லது எதிர்கால தேவைப்பாடுகளை மற்றும் எதிர்பார்ப்புக்களை சந்திப்பதற்கு போதுமையற்ற காசுப் பாய்ச்சல்களைக் கொண்டிருக்கும் இடராகும். SMIB இன் சொ.பொ.கு. திரவத்தன்மை இடர்களை முகாமைப்படுத்துவதற்கான உச்சப் பொறுப்பினைக் கொண்டிருப்பதுடன், வங்கியின் திரவத்தன்மை நிலைமையினை இடைவிடாது கண்காணிக்கின்றது. இ.மு.பி. ஆனது அவசியமான திருத்தல் செயற்பாடுகளை இனங்காண்பதற்காக திரவத்தன்மை இடர் மற்றும் வட்டிவீத இடரினை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்வதுடன் நி.ஒ.இ.மு.கு. மற்றும் சொ.பொ.கு. மற்றும் ச.ஒ.இ.மு.கு. இற்கு அறிக்கையிடுகின்றது. நிதிப் பிரிவுடன் இணைந்துள்ள திறைசேரி அலகிற்கு திரவத்தன்மை இடரினை முகாமைப்படுத்தல் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இடர் முகாமைத்துவத் திணைக்களமானது குறிப்பிட்ட வரையறைகள் / முறைமைப்படுத்தல் விகிதாசாரங்கள் போன்றவற்றை கடைப்பிடிப்பதை கண்காணிப்பதன் மூலம் மற்றும் ஏனைய தொடர்புடைய பகுப்பாய்வுகளை செயலாற்றுவதன் மூலம் உறுதிப்படுத்துகின்றது.

சொத்துக் கலவை



- காசு
- முதலீடுகள்
- கடன்களும் முற்பணங்கள்
- ஆதனம், பொறியும் உபகரணமும்
- ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள்
- ஏனையவை

பொறுப்புக் கலவை



- வைப்புகள்
- கடன் பெறுகைகள்
- ஏனையவை

வங்கியின் வைப்புத் தேக்கத்தின் தன்மையானது குறகிய மற்றும் மத்திய காலப் போக்கினை கொண்டுள்ளவேளை வங்கியின் பிரதான வணிகமான வீடமைப்பு நிதியளித்தல் பொதுவாக நீண்ட கால கடன்வழங்கலை உள்ளடக்குகின்றது. மேலாக, வங்கியானது முதன்மையாக நிலையான வட்டிவீத கடன்வழங்கல் சூழலில் செயற்படும்வேளை அதன் பொறுப்புக்களில் பெரும்பாலானவை அடிக்கடி மீள் விலையிடலுக்கு உட்படுகின்றன. எனவே, நாட்டின் பொருளாதார நிலைமையின் காரணமாக ஆண்டின்போதான அதிகரித்த வட்டிச் செலவினமானது கணிசமானளவு விடுமிகையினை பாதித்துள்ளதுடன் வங்கியானது இந்த பொருத்தமின்மையினை விளித்துரைப்பதற்கான மூலோபாயங்களை கருதுகின்றது.

வங்கியானது, எதிர்மறையான வட்டி வீதங்கள் மற்றும் சமாந்தரமல்லாத அசைவுகள் உள்ளடங்கலான ஒரு தொடரான வட்டிவீத காட்சிநிலைகள் மீது ஒரு ஏற்றுக்கொள்ளத்தக்க பரப்பெல்லையினுள் சந்தை இடர் காணப்படுவதனை உறுதிசெய்வதற்காக ஒரு தொடரான உள்ளக அழுத்த பரிசோதனைகளை செயலாற்றுகின்றது.

சந்தை இடர்



- நியதிச் சட்ட திரவச் சொத்து விகிதம்
- திரவத்தன்மை காப்பீட்டு விகிதம்
- தேறிய ஸ்திரமான நிதியளித்தல் விகிதம்
- மூலதனப் போதுமை விகிதம்

திரவத்தன்மை சிக்கல்களைக் கையாளுவதற்காக வங்கியானது ஒரு அவசரநிலை நிதியளித்தல் திட்டத்தினை பராமரிப்பதுடன், திறைசேரித் திணைக்களமானது மத்திய வங்கியினால் குறிப்பிடப்பட்ட மட்டங்களிலும் பார்க்க மேலாக திரவச் சொத்து விகிதத்தை பராமரித்து உறுதிப்படுத்துவதற்கு பொறுப்பாயுள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக வங்கியானது பல புதிய சொத்து மற்றும் பொறுப்பு கருவிகளை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன், இவ்வாண்டின்போது கால அளவு பொருத்தமின்மைகளை குறைப்பதற்கும் மற்றும் வாடிக்கையாளர் தேவைகள் மற்றும் சந்தை நிலைமைகளுடன் ஒத்ததாக காணப்படுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதிகரித்த கிளை வலையமைப்பினூடாக சிற்றளவு வைப்புகளுக்கான அணுக்கம் அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே, கூட்டாண்மை வைப்புகளில் சார்ந்திருத்தல் குறைவடைந்துள்ளது..

மேலாக, வங்கிக்கான ஒரு மைய வங்கியியல் தீர்வினைப் பெற்றுக்கொள்ளும் வங்கியின் முயற்சிகள் வெற்றியளித்துள்ளதுடன், இதன் அமுலாக்கமானது 2024 அம் ஆண்டில் இடம்பெறும் என்பதுடன் இந்த மாற்றமானது வங்கியின் வாடிக்கையாளர் தளத்திற்கு வழங்கக்கூடிய மேலதிக சேவைகளை திறப்பதன் காரணமாக வாடிக்கையாளருக்கான சௌகரிய மட்டமானது அதிகரிக்கலாம்.

செயற்பாட்டு இடர்

செயற்பாட்டு இடர் என்பது, போதுமையற்ற உள்ளக செயன்முறைகள், மக்கள் மற்றும் அமைப்பு முறைகள் அல்லது வெளிவாரி நிகழ்வுகளினால் விளைவிக்கப்படும் நட்ட இடரானது என்று பொருள்படும். செயற்பாட்டு இடர்கள், சட்ட இடரினை உள்ளடக்குவதுடன் மூலோபாய மற்றும் நற்பெயர் இடரினை தவிர்க்கின்றது.

ஒரு விரிவான செயற்பாட்டு இடர் முகாமைத்துவ வரம்புறுகையா னது செயற்பாட்டு இடர்களின் வினைத்திறனான இனங்காணல் மற்றும் முகாமைப்படுத்தலில் வழிகாட்டியினை வழங்குகின்றது. 'முதலாம் வரிசை பாதுகாப்பு" என இனங்காணப்பட்ட கிளைகள் மற்றும் பிரிவுகள் உருவாக்கலின்போதான இடர்களை இனங்காண்பதற்கு பொறுப்பாளியாகும். இரண்டாம் வரிசை பாதுகாப்பானது இ.மு.தி. இனை உள்ளடக்குவதுடன், செயற்பாட்டு இடர்

இடர் முகாமைத்துவம்

வரம்புறுகையினை அமுல்படுத்துவதற்கு பொறுப்பாயிருப்பதுடன் மற்றும் இடர் ஆர்வத்தில் வரையறை செய்யப்பட்ட வரன்முறைகளுக்கு எதிராக இடர் செயற்திறனை கண்காணிக்கின்றது. உறுதிமொழியானது கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டு அலகுகளினால், செயற்பாட்டு இடர் முகாமைப்படுத்தல் செயன்முறைகளின் போதுமை மற்றும் வினைத்திறனில் வழங்கப்படுகின்றது.

இடர் இனங்காணல் மற்றும் இடர் மற்றும் கட்டுப்பாட்டு சுய மதிப்பீடுகள் (இ.க.சு.ம.) அளவீடானது அனைத்து வணிக அலகுகளுக்கும் இ.மு.தி. இனால் நிர்வகிப்பதுடன் இவை செயற்பாட்டு இடர்களை இனங்காண்பதில் பயனுறுதியான சாதனமாக சேவையாற்றுகின்றன. மேலாக, சம்பவ அறிக்கையிடலில் வங்கி நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதுடன், இது செயற்பாட்டு இடர்களின் காலமுறை இனங்காணலை இயலுமையாக்குகின்றது. வங்கியானது, எதிர்பாராத பேரிடரிலிருந்து வினைத்திறனாக மீண்டெழுவதற்கு அதன் வணிகத் தொடர்ச்சி திட்டத்தினை உடனடியாக ஆகக்குறைந்த நட்டத்துடன் நடாத்துவதனை உறுதிசெய்கின்றது.

வங்கியின் குறிக்கோளானது, வங்கியின் இடர் ஆர்வத்துடன் ஒத்ததாக ஒரு சிக்கனமான விதத்தில் செயற்பாட்டு இடரினை முகாமைப்படுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் தணித்தல் ஆகும். வங்கியானது அதன் செயற்பாடுகளின் உணர்திறனான பிரிவுகளுக்கான செயற்பாட்டு இடர் முகாமைப்படுத்தல் அணுகுமுறைகளிலான முனைப்பில் ஒரு உயர்ந்த மட்டத்தினை உறுதிசெய்கின்றது.

அழுத்தப் பரிசோதனை

அழுத்தச் சோதனைகள் என்பன முன்னோக்கிய செயலாக்கம் என்பதுடன் இது வங்கியின் மீளெழுச்சியில் கடுமையான ஆனால் நம்பக்கூடிய பாதகமான காட்சி நிலைகளை மதிப்பிடுவதனை குறிக்கோளாகக் கொண்டதாகும். வங்கியின் அழுத்தப் பரிசோதனைக் கொள்கையானது, முறைமைப்படுத்தல் வழிகாட்டிகள் மற்றும் துறைசார் சிறந்த நடைமுறைகளுக்கு அமைவாக உருவாக்கப்பட்டுள்ளன. அழுத்தப் பரிசோதனையானது காலமுறையில் நடாத்தப்படுவதுடன், இது வங்கியானது எதிர்பாரா நட்டங்கள் மற்றும ஒப்பந்தக் கடப்பாடுகளை சந்திப்பதற்கு போதுமான மூலதன மற்றம் திரவத்தன்மை தாங்கல்கள் கொண்டிருப்பதனை உறுதிசெய்வதற்கு மற்றும் விளைவுகள் சபைக்கு அறிக்கையிடப்படுகின்றன. செயற்பாட்டு சூழலிலான மாற்றங்களை கருத்திற்கொண்டு, அனுமானங்கள் தீவிரமாக மீளாய்வு செய்யப்பட்டு தேவைக்கேற்ப மாற்றங்கள் கொள்கை மற்றும் வரம்புறுகையில் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

அழுத்தப் பரிசோதனை செயன்முறையின் விளைவானது கவனமாக கண்காணித்து பரிகாரச் செயற்பா-டுகள் எடுக்கப்படுவதுடன் இது ஏனைய இடர் முகாமைப்படுத்தல் அணுகுமுறைகளுடன் இணைக்கும் கருவியாக வங்கியினால் பயன்டுத்தப்படுகின்றது.

31.12.2023 இல் மேற்கொள்ளப்பட்ட அழுத்த பரிசோதனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

கடன் இடர்	செ.க. வகைகளிலான நகர்வுகள் /சொத்து தரத்திலான சீர்குன்றல் மற்றும் பொருளாதாரக் காரணிகளிலான பாதகமான அசைவுகள், தவறுவதற்கான சாத்தி போன்றவற்றின் காரணமாக வலுக்குன்றலில் அதிகரிப்பு. பிணைச்சொத்தின் பெறுமதியிலான வீழ்ச்சி
கடன் செறிவு இடர்	கடன் வழங்கல் எதிர்தரத்தவர்கள் மற்றம் துறைகள் பூராவும் HHI பெறுமதிகளிலான அதிகரிப்பு
வட்டி வீத இடர்	வட்டி வீதங்களில் பாதகமான அசைவுகள்
திரவத்தன்மை இடர்	வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆகிய இரண்டிலும் பாதகமான அசைவுகளுடனான திரவத்தன்மை அழுத்த காட்சி நிலைகள் SLAR, LCR மற்றும் மூலதனத்திலான விளைவுகள்

மனித வள முகாமைத்துவம்

நிறுவனத்தின் இலாபத்திற்கும் பெறுமதிக்கும் ஊழியர்களே பிரதான பங்களிப்பவர்களாவார்கள். ஒரு நிறுவனத்தின் ஐந்தொகையில் அல்லது கணக்குப் புத்தகங்களில் “சொத்து” என்பதன் கீழ் ஊழியர்கள் தென்படுவார்கள், எவ்வாறாயினும், இவர்கள் ஏதேனும் பணரீதியான பெறுமதியினை வழங்க இயலாத மிகவும் பெறுமதிமிக்க சொத்துக்களாவார்கள்.

எமது ஊழியர்கள் எமது தொலைநோக்கினை புலப்படக்கூடிய விளைவுகளாக மாற்றம் செய்து எமது வாடிக்கையாளர்களுக்கு பெறுமதி சேர்க்கின்றார்கள். எனவே, நாம் அவர்களுக்கு ஒரு உள்ளடக்கமான மற்றும் எழுச்சியூட்டும் பணியிடத்தினை வழங்குவதனை உறுதிப்படுத்துவதுடன், எமது முதலீடுகள் எமது ஊழியர்களின் அறிவு, திறன்கள் மேம்படுத்துதல் மற்றும் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் ஊழியர்கள் ஈடுபாட்டு நடவடிக்கைகள் ஆகியவற்றில் முன்னிறுத்தம் செய்ததுடன் இது மக்கள் விருத்தியடைந்து பிரகாசிப்பதற்கான ஒரு பணியிடத்தினை உருவாக்குவதிலும் ஆகும். SMIB இலுள்ள நாம் கம்பனியின் வளர்ச்சியினை இயக்கும் சிறந்த திறன்களை கவர்வதில், வளர்ப்பதில் மற்றும் தக்கவைப்பதில் தொடர்ச்சியான முன்னிறுத்தம் செய்கின்றது.

ஊழியர் பலம்

ஆண்டிற்கான மொத்த ஊழியர்கள் 356 என்பதுடன், இது ஒப்பீட்டளவில் சிறியதாகும். எவ்வாறாயினும், இவர்கள் வங்கியின் செயற்திறனுக்கு பெருமளவில் பங்களிப்பு செய்துள்ளார்கள். இவ்வாண்டின்போது 37 அங்கத்தவர்கள் வங்கியில் பதவி விலகியதுடன், இவர்களுள் 14 பேர் வங்கியிலிருந்து இளைப்பாறியதுடன் 23 அங்கத்தவர்கள் பதவி விலகல் மற்றும் ஏனைய காரணங்களுக்காக விலகினார்கள். நாம் இவ்வாண்டின்போது 8 புதிய ஊழியர்களை பணிக்கமர்த்தினோம். வெற்றிடங்களை நிரப்புதல் வங்கியின் பணிக்கமர்த்தல் கொள்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டது.

ஊழியர் வேறுபாடு

முகாமைத்துவ மட்டம்	வேறுபாடு		
	இளைப்பாறியோர்	விலகியோர்/ ஏனையவை	வெளிவாரியாக பணிக்கமர்த்தல்
கூட்டாண்மை முகாமைத்துவம்		3	2
சிரேஷ்ட முகாமைத்துவம்	1		1
நிறைவேற்றுனர்		7	3
நிறைவேற்றனரல்லாதோர்	13	10	2
ஒப்பந்த அடிப்படையில்.'.வுடீயு		3	0
மொத்தம்	14	23	8

அடுக்குவாரியாக ஊழியர் பலம்

முகாமைத்துவ மட்டம்	31.12.2023 இல் உள்ளவாறான ஊழியர்களின் எண்ணிக்கை
கூட்டாண்மை முகாமைத்துவம்	11
சிரேஷ்ட முகாமைத்துவம்	5
நிறைவேற்றுனர்	109
நிறைவேற்றனரல்லாதோர்	205
ஒப்பந்த அடிப்படையில்/TBA	26
மொத்தம்	356

பாலினத் தோற்றுருவம்

ஒரு சமத்துவமான தொழில்வாய்ப்பு வழங்குனராக, SMIB ஒரு சமனான விதத்தில் ஆண்கள் மற்றும் பெண்களை பணிக்கமர்த்தியுள்ளது. SMIB இன் பாலினத் தோற்றுருவமானது 2023 ஆம் ஆண்டில் 49% ஆண்களாகவும் 51% பெண்களாகவும் காணப்பட்டது.

ஊழியர் வயது தோற்றுருவம்

வங்கியானது மிகவும் அனுபவமுடைய மற்றும் சிரேஷ்ட ஊழியர்களை பயன்படுத்தியுள்ளது. வங்கியின் ஊழியர்களில் 49% ஆனோர் 40 வயதுக்கு மேற்பட்டோர் ஆவார்கள்.

வயதுப் பிரிவு	31.12.2023 இல் உள்ளவாறான ஊழியர்களின் எண்ணிக்கை
50 அல்லது மேல்	69
40 - 49	104
30 - 39	136
29 அல்லது கீழ்	47
மொத்தம்	356

திறன் முகாமைத்துவம்

எமது திறன் தேக்கத்தினை முகாமைப்படுத்தல் அதிகபட்ச முன்னுரிமையாகும், ஏனெனில் எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் சிறந்தவற்றை விநியோகிப்பதனை இயலுமையாக்குகின்றது. சிறந்த வளங்கள் கையகப்படுத்தப்பட்டு வங்கியில் தக்கவைக்கப்படுவதனை நாம் உறுதிசெய்யும்வேளை, எமது இயக்காற்றலான அணியில் எதிர்கால தலைவர்களாக வருவதற்கான அவர்களது சாத்தியத்தினை விருத்திசெய்வதற்காக நாம் முதலீடு செய்வதுடன் இது வங்கி அதன் முழுச் சாத்தியத்தினை எய்தப்பெறுவதனை இயலுமையாக்கும்.

திறன் கவருதல் மற்றும் கையகப்படுத்தல்

வங்கியின் ஆட்சேர்ப்பு செயன்முறையினூடாக புதிய திறன்களின் கையகப்படுத்தல் விளித்துரைக்கப்படுகின்றது. இது எமது வணிகத் தேவைகளுக்கு மிகவும் பொருத்தமான வேட்பாளரை தெரிவுசெய்வதற்கு வடிவமைக்கப்பட்டதாகும். அவசியமான திறமைகள், அறிவு, ஆற்றல்கள் மற்றும் எமது கலாச்சாரத்தினை வளர்க்கும் பொருந்துகின்ற திறன்களுக்கு முன்னுரிமையளிக்கப்படுகின்றன. வெற்றிடங்கள் ஏற்படும்போது உள்வாரி திறன்களுக்கு உடனடி கவனிப்பு வழங்கப்படுவதுடன், உள்ளக திறன்கள் கிடைக்கப்பெறாதபோது வெளிவாரி ஊழியர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுகின்றது. .

பயிற்சியும் அபிவிருத்தியும்

பயிற்சி மற்றும் அபிவிருத்தியினூடாக ஊழியர்களின் அறிவு, திறமைகள், திறன்கள், மனப்போக்குகள் மேம்படுத்தப்படுவதுடன், SMIB வளர்ச்சியினை அடைவதற்கு செயற்திறனானது ஒரு முக்கிய கருவியாகும். எமது ஊழியர்களுக்கு அவர்களது திறமைகள் மற்றும் அறிவினை மேம்படுத்துவதற்காக பயிற்சி மற்றும் அபிவிருத்தி வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றவேளை எமது வணிகநாமமானது வலுப்படுத்தப்படுகின்றது. வங்கியானது அனைத்து மட்டங்களிலும் வெவ்வேறு செயற்பாடுகளில் உள்ள ஊழியர்களை பயிற்றுவிப்பதற்கும் விருத்திசெய்வதற்கும் இதன்மூலம் அவர்களது கடமைகளை சிறப்பாக செயலாற்றுவதற்கும் எதிர்கால பொறுப்புக்களுக்காக அவர்களை தயார்படுத்தவும் முயற்சிக்கின்றது.

2023 இன்போது நாம் உள்வாரி மற்றும் வெளிவாரி பயிற்சிகளை வழங்கக்கூடியதாயிருந்ததுடன்,

மனித வள முகாமைத்துவம்

மீளாய்வாண்டானது எமது ஊழியர்கள் 2 உள்வாரி பயிற்சித் திட்டங்கள் மற்றும் 31 வெளிவாரி பயிற்சித் திட்டங்களில் பங்குபற்றியதைக் கண்டது.

கீழ் காணும் அட்டவணையானது 2023 ஆம் ஆண்டின்போது வெவ்வேறு பிரிவுகளில் வழங்கப்பட்ட பயிற்சியில் பங்குபற்றிய ஊழியர்களின் விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

முக்கிய பிரிவு	பங்குபற்றுனர்களின் எண்ணிக்கை
அறிவு மற்றும் திறன் விருத்திப் பயிற்சி	51
மனப்பான்மை விருத்தி பயிற்சி /ஊக்கமளித்தல் பயிற்சி	90
கருத்தரங்குகள், செயலமர்வுகள், அங்கத்துவக் கட்டணங்கள், புதிர் போட்டிகள்	42

ஊழியர்கள் சேவைக்காலம்

சேவைப் பிரிவு (வருடங்கள்)	31.12.2023 இல் உள்ளவாறான ஊழியர்களின் எண்ணிக்கை
0-4	58
5-9	116
10-14	65
15-19	47
20 இற்கு மேல்	70
மொத்தம்	356

84% ஆன ஊழியர்கள் வங்கியில் 5 வருடங்களுக்கும் அதிகமான காலத்தில் சேவையாற்றுவதுடன், வங்கியின் அபிவிருத்திக்கு அவர்கள் பங்களிப்பு செய்துள்ளார்கள். ஊழியர்களுக்கு நிதியியல் மற்றும் நிதியியல் அல்லாத நலன்கள் அதிகரித்த தொழில் திருப்திக்கும் பங்களித்துள்ளன.
நாம் இன்று காணப்படுகின்ற பாதையானது இலகுவானதல்ல. எவ்வாறாயினும், வங்கியானது அதன் ஊழியர்களது அயராத மற்றும் அர்ப்பணிப்பான முயற்சிகளினூடாக அனைத்தையும் அடைந்துள்ளது.

எதிர்கால விடயங்கள்

எதிர்வரும் வருடத்தில் எமது மனித வள சிறந்த நடைமுறைகளை மேம்படுத்துவதன் மூலம் எமது தொழிற்சேனையினை நாம் தொடர்ந்தும் பலப்படுத்துகின்றோம். பயிற்சி மற்றும் அபிவிருத்தி தேவைகளிலான முழுமையான பகுப்பாய்வானது வரிசையில் காணப்படுவதுடன், இந்த புதிய பகுப்பாய்வினூடாக, நாம் ஊழியர்களின் தொழில்நுட்ப மற்றும் மென் திறன் தோற்றங்களை உள்ளடக்கிய மிகவும் விரிவான மற்றும் அனைத்தும் உள்ளடங்கலான பயிற்சி திட்டத்தினை உருவாக்க விரும்புகின்றோம்.

முன்னோக்கிய ஆண்டானது பணித்தொடர்வு திட்டமிடல் செயன்முறையினை மேம்படுத்தும் மற்றும் பலப்படுத்துவதில் முன்னிறுத்தம் செய்யப்படுவதுடன், விருப்பமான மட்டத்தினை அடைவதற்கு அவர்களது திறமைகள் மற்றும் அறிவினை விருத்திசெய்வதில் முக்கிய தனிநபர்களுக்கு இந்த முன்னிறுத்தம் வழங்கப்படும். நாம் ஒரு சிறந்த பணியிடத்தினை உருவாக்குவதற்கும் மிகவும் திருப்திகரமான ஊழியர்களை உருவாக்குவதற்கும் கடும் முயற்சி செய்வோம்.

2023 எல்லைகளுக்கு அப்பால் - மீளாய்வில் கூட்டாண்மை மற்றும் கருவி வணிகநாமங்கள்

2023 இல் வாடிக்கையாளர்களும் பங்காளிகளும் அதிகளவில் டிஜிட்டல் மேடைகளை தழுவியுள்ளார்கள். அணுக்கத்திற்கான, கருவிகள் மற்றும் சேவைகளிலான நடைமுறை தகவல்கள் மிகவும் முக்கியமானதாக வந்ததுடன், குறிப்பாக பொருளாதார தடைகளின் காரணமாக வாடிக்கையாளர்கள் முகங்கொடுத்த சவால்கள் மற்றும் வரையறைகளினாகும்.

கருவிகள் மற்றும் சேவைகளின் இற்றைப்படுத்தல்கள் டிஜிட்டல் வழிமுறைகளினூடாக விரைவாக பகிரப்பட்டு வாடிக்கையாளர்களுக்கு எளிதான அணுக்கத்தினை உறுதிப்படுத்துகின்றது. வங்கி இணையத்தளம், சமூக ஊடகம், SMS அறிவித்தல்கள், நேரடி அஞ்சல்கள் மற்றம டிஜிட்டல் பொது தொடர்பாடல் போன்ற வழிமுறைகளூடாக வணிக நாமத்தினை மேம்படுத்துவதில் முன்னிறுத்தம் இருந்தது.

வங்கியின் சமூக ஊடக மேடைகள், கருவிகள் பற்றிய தகவல்கள், வங்கியின் முன்னெடுப்புகள் தொடர்பான செய்திகளுடன் இழுதகளை உருவாக்குதல் ஆகியவற்றில் பொதுமக்களுடனும் வாடிக்கையாளர்களுடனும் தொடர்ச்சியாக இணைப்பினை பராமரித்த முக்கிய தொடர்பாடல் மேடைகளாகும். டிஜிட்டல் நோக்கிய நகர்வுகளுடன், வங்கியானது எட்டுவதற்காகவும் ஈடுபடுவதற்காகவும் டிஜிட்டல் தொடர்பாடலிலான முதலீடுகளை மேம்படுத்துவதற்கு உடனடியான நடவடிக்கையினை எடுத்தது. இவ்வாண்டின்போதான தொடர்ச்சியான முன்னெடுப்புகள், மனப்பதிவுகள், எட்டுதல் மற்றும் வங்கியின் சமூக ஊடக மேடைகள் பூராவுமான ஈடுபாடுகள் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க வளர்ச்சிகளை விளைவித்தது. மேலும், இவ்வாண்டின்போது கடன் மற்றும் கிளைகளுக்கு துணைபுரிவதற்கு இழுதகளை உருவாக்குவதற்காக சமூக ஊடக மேடைகளிலான உள்ளடக்கமானது தனிப்பயனாக்கப்பட்டது. குறிப்பிட்ட அவையினர் மற்றும் பூகோளங்களுக்கு விசேடமாக நிலையான வைப்புகள் மற்றும் ஊ.சே.நி. கடன் கருவிகளில் பல விழிப்புணர்வு பிரச்சாரங்கள் சமூக ஊடக மேடைகளில் மேற்கொள்ளப்பட்டன.

சவாலான பொருளாதார நிலைமைகளின் காரணமாக, SMIB கடன்களுக்கும் வைப்புகளுக்கும் விரைவாக வட்டி வீதங்களை அதிகரித்தது. வங்கியானது டிஜிட்டல் வழிமுறைகளினூடாக வட்டி வீத தகவல்களை பகிர்வதில் கவனம் செலுத்தியது. மேலாக, வாடிக்கையாளர் அவர்களது கடன் தவணைகள் தொடர்பான ஏதேனும் சிக்கல்கள் அல்லது மனக்குறைகளை இந்த வழிமுறைகளைப் பயன்படுத்திய தொடர்பாடலுக்கு ஊக்கமளிக்கப்பட்டார்கள்.

வருடம் பூராவும், வங்கியானது அதன் ஊ.சே.நி. கடன் தேக்கத்தினை விரிவாக்குதல், கோட்டிற்கு மேலான (ATL) மற்றும் கோட்டிற்கு கீழான (BTL) வழிமுறைகளினூடாக பன்முகமான பிரச்சாரங்களை அமுலாக்குதலில் கவனம் செலுத்தியது. மேலாக, வங்கியானது நி.வை. வட்டி வீதங்கள் பற்றி விழிப்புணர்வினை எழுப்பியதுடன், பல்வேறு ஊடக மற்றும் பிரச்சார நடவடிக்கைகளூடான SMIB உடன் முதலீடு செய்யுமாறு வாடிக்கையாளர்கள் ஊக்குவிக்கப்பட்டார்கள். வங்கியின் கருவிகள் மற்றும் சேவைகள் பற்றிய விழிப்புணர்வினை எழுப்புவதற்காக பல நகரங்கள் பூராவும் கிளை மற்றும் தெருப் பிரச்சாரங்களை வெற்றிகரமாக ஒழுங்குசெய்தது. இது வாடிக்கையாளர்களை கவர்ந்ததுடன் கிளை வருகையினையும் தூண்டியது. இந்த முன்னெடுப்பானது வங்கியின் ஊ.சே.நி. கடன் தேக்கம் மற்றும வங்கியின் நிலையான வைப்புத் தளத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு இட்டுச்சென்றது.

SMIB மாவட்ட செயலகத்துடன் ஒருங்கிணைந்து குரணாகலை மாவட்டத்தில் சி.ந.நி. ளை இலக்குவைத்து ஒரு வெற்றிகரமான செயலமர்வினை ஒழுங்குசெய்தது. இந்த நிகழ்வானது சி.ந.நி. ஆல் முகங்கொடுக்கப்படும் சிக்கல்களுக்கு தீர்வுகளை வழங்கியதுடன் அவர்களது வணிகத்தை விருத்திசெய்வதற்கு ஊக்குவித்தது. மேலாக, SMIB பல்வேறு நடிக்கைகளினூடாக சி.ந.நி. ளை மேம்படுத்தியது.

கூட்டாண்மை, சி.ந.நி., மற்றும் தனிப்பட்ட வங்கியியல் துறைகளுக்கு நிதியியல் தீர்வுகளை வழங்கும் அதன் வணிகநாம பிரசன்னத்தினை வங்கி தொடர்ந்தும் பலப்படுத்தியதுடன், இதற்கு அச்சு மற்றும் டிஜிட்டல் ஊடகங்களில் அதன் குறியினை மேம்படுத்துவதிலான ஒரு பொது உறவுகள் மூலோபாயத்திலான முன்னிறுத்தத்தினால் துணையளிக்கப்பட்டது.

கூட்டாண்மை சமூக பொறுப்பு (கூ.ச.பொ.)

SMIB சமூக குழுக்களுடன் தொடர்ச்சியாக ஈடுபட்டதுடன், இது நீண்டகால் மற்றும் நிலைபேறுடைய விளைவுகளை பராமரித்தல் மற்றும் ஆரோக்கியமான உறவுகளை வளர்த்தல் நோக்கைக் கொண்டிருந்ததுடன் அது செயலாற்றும் சமூகத்திற்கு சாதகமான பங்களிப்பையும் செய்கின்றது.

நாடு பூராவும் பரந்துள்ள வங்கியின் கிளை வலையமைப்புகள் அவற்றின் அந்தந்த சமூகங்களுடன் ஈடுபாட்டினைக் கொண்டிருப்பதுடன், அந்த இடங்களில் சமூக மற்றும் வர்த்தக தொடர்புடைய நடவடிக்கைகளில் ஒரு துடிப்பான பங்காளியாகவும், இயற்கை அனர்த்தங்கள், காலநிலை நிகழ்வுகளினால் ஏற்படும் நெருக்கடிகளின்போது அனுதாபத்துடன் பதிலளிப்பதாகவும் காணப்பட்டது. பரவலான சமூகத்துடன் ஈடுபடுவதில், வங்கியானது நாட்டின் குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் கல்வி மற்றும் நல்வாழ்வில் ஒரு முன்னிறுத்தமான கூ.ச.பொ. மூலோபாயத்தினை அமுல்படுத்துகின்றது.

வங்கியானது சமூகப் பொறுப்பு மற்றும் நிலைபேறுடைமைக்கான அதன் கடப்பாட்டின் ஒரு பகுதியாக வங்கியின் கொள்கைளுக்கேற்ப சமூக மற்றும் சூழல் திட்டங்களுக்கு தொடர்ச்சியாக துணையளிக்கும். கூ.ச.பொ. முன்னெடுப்பின் ஒரு பகுதியாக, SMIB இலங்கை கவசப்படை முகாம் - ரொக் ஹவுஸ் உடன் ஒருங்கிணைந்தது. வங்கியானது யுத்தத்தின்போது உயிர்களை தியாகம் செய்த இராணுவ வீரர்களின் பிள்ளைகளுக்கு புத்தகங்கள் மற்றும் உதவித்தொகைகளை வழங்கியது. மேலாக, SMIB குறைவான தரத்திலுள்ள இராணுவ வீரர்களின் குடும்பங்களிலுள்ள மாணவர்களுக்கு பாடசாலை புத்தகங்கள் மற்றும் தொடர்புடைய உருப்படிகளை வழங்கி அவர்களது கல்வி மற்றும் நல்வாழ்விற்கு பங்களிப்பு செய்தது.

மேலும், SMIB இலங்கை இராணுவ அதிகாரிகளின் மாணவர்களது கல்வி அபிலாஷைகளுக்கு துணைபுரிவதற்காக இலங்கை இராணுவ நலன்புரி சங்கத்துடன் ஒன்றிணைந்தது. வங்கியானது பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான மாணவர்களுக்கு உதவித்தொகைகளை வழங்கியதுடன், இது உயர் கல்வி கற்கையின்போது நிதியியல் சுமைகளை அகற்றும் நோக்கத்தைக் கொண்டதாகும். இந்த ஒருங்கிணைப்பானது இலங்கை இராணுவ சமூகத்தினுள் தகுதியான மாணவர்களது கல்விசார் நாட்டங்களுக்கு துணைபுரிந்து வலுவளிக்கும் SMIB இன் கடப்பாட்டினை பிரதிபலிக்கின்றது.

உள்நோக்கி மூலோபாயம் வெளிப்புறமாக நடவடிக்கை

பணிப்பாளர்களின் கூற்று	60
நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களது கூற்று	63
வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை	65
நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு	67
கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை	69
நிதி நிலைமைக் கூற்று	74
வருமானக் கூற்று	75
விரிவான வருமானக் கூற்று	75
உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று	76
காசுப் பாய்ச்சல் கூற்று	77
கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளும்	78
பத்து வருட புள்ளிவிபரச் சுருக்கம்	126

பணிப்பாளர்களின் கூற்று

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியானது 1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்தினால் ஒருங்கிணைக்கப்பட்டதுடன் 1988 இன் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் மற்றும் அதனிலான திருத்தங்களின் பிரகாரம் உரிமமளிக்கப்பட் விசேட வங்கி தரம் வழங்கப்பட்டது.

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பணிப்பாளர்கள் சபையானது, 1988 இன் வங்கியியல் சட்டம் மற்றும் அதனிலான திருத்தங்கள் மற்றும் 1975 இன் 13 ஆம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டம் மற்றும் அதனிலான திருத்தங்களின் தேவைப்பாடுகளுக்கு அமைய, 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களையும், அந்த நிதிக் கூற்றுக்களிலான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கையினையும் அத்துடன் வங்கியின் அலுவல்களிலான அவர்களின் அறிக்கையினையும் முன்னிலைப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகின்றது.

வங்கியின் பிரதான நடவடிக்கைகள்

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பிரதான நடவடிக்கைகள், வீடமைப்ப, விவசாயம் மற்றும கைத்தொழில் அபிவிருத்தி நிதியளித்தல் மற்றும் வைப்புகளை திரட்டுதலாகும். இவ்வாண்டின்போது பிரதான நடவடிக்கைகளின் தன்மையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏதும் காணப்படவில்லை. வங்கியானது நாட்டின் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீறுகின்ற எவ்விதமான நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. 1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்தின், திருத்தியமைக்கப்பட்டவாறு, ஏற்பாடுகளின் கீழ் பணிப்பாளர்கள் சபையானது தலைவர் உள்ளடங்கலான ஏழு நிலைவேற்றுனரல்லாத சுயாதீன பணிப்பாளர்களை உள்ளடக்குவதுடன் இவர்கள் 1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்தின், திருத்தியமைக்கப்பட்டவாறு பிரிவு 7 இற்கமைய அமைச்சரினால் நியமிக்கப்படுகின்றார்கள். வங்கியில் எந்தவொரு நிறைவேற்றுப் பணிப்பாளரும் இல்லை. இவ்வாறு நியமிக்கப்படும் பணிப்பாளர்களினுள் மூன்று பேர்; அ) விவசாயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சின்É M) tPlikg;Gf;F nghWg;ghd mikr;rhpd; mikr;rpd; இ) கால்நடை அபிவிருத்திக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் பிரதிநிதிகள் ஆவார்கள். ஒரு பணிப்பாளர் திறைசேரியின் பிரதிநிதியாக நியமிக்கப்படுகின்றார்.

சபையின் எந்தவொரு கூட்டத்திலும் ஒன்பதில் மூன்று அங்கத்தவர்கள் ஒரு குறைவெண் வரம்பாக அமைகின்றது. பணிப்பாளர்கள் சபையின் கூட்டங்கள் ஆகக்குறைந்தது மாதத்திற்கு ஒரு முறையேனும் இடம்பெறல் வேண்டும் அல்லது அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டம் மற்றும் வங்கியியல் சட்டத்தின் பிரகாரம் தலைவர் அவசிமென்று கருதும் வேளைகளில் அடிக்கடி இடம்பெறலாம். 2023 இல் பதினாறு கூட்டங்கள் இடம்பெற்றதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

சபை கூட்டங்களில் பணிப்பாளர்களின் சமூகமளிப்பு:

	பணிப்பாளரின் பெயர்	சமூகமளிப்பதற்கு தகுதியான கூட்டங்களின் எண்ணிக்கை	சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை
1	திரு. ஜே.எம். சூசைதாசன் - தலைவர்	11	11
2	திரு. எஸ். கே. ஏ. கலப்பத்தி		10
3	திரு. பி.ஆர். மாதியஹேவ		11
4	திரு. எச்.சி.டி.எல்.சில்வா		11
5	பேராசிரியர் டி.ஏ.எம்.பெரேரா		11

ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களது அக்கறைகள்

தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் கொள்கையின் குறிக்கோளானது, வங்கிக்கும் அதன் தொடர்புடைய தரப்பினருக்கும் இடையேயான கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படைத்தன்மை மற்றும் முழங்கையளவு தூர விலையிடல் கொள்கைகளின் அடிப்படையில் காணப்படுவதை உறுதிசெய்வதாகும்.

இக்கொள்கையானது தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கலின் பொருண்மையானது எந்த அடிப்படையில் தீர்மானிக்கப்படும் மற்றும் வங்கியினால் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களை கையாள வேண்டிய விதத்தையும் உருவரையிடுகின்றது. வங்கியானது வங்கியியல் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுடன் ஒத்ததான தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் கொள்கையினை வங்கி பின்பற்றியது.

ஒரு பணிப்பாளர் அல்லது அவரது துணையார் அல்லது தங்கியுள்ள பிள்ளை அல்லது பிள்ளைகள், சபையினால் கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்ட் அல்லது கொடுக்கல் வாங்கல்க செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ள ஏதேனும் வணிகத்தில் நேரடியாக அல்லது மறைமுகமான அக்கறையினைக் கொண்டிருந்தால், அத்தகை வணிகம் கலந்துரையாடப்படும் சபையின் கூட்டத்தில் அத்தகைய அக்கறையின் தன்மையினை வெளிப்படுத்தல் வேண்டும்.

பணிப்பாளர்கள் அவர்களது ஏனைய பணிப்பாளர் பதவிகளையும் தொடர்புகளையும் சபையின் கூட்டங்களில் வெளிப்படுத்தல் வேண்டும் மற்றும் அவர்கள் அக்கறையுள்ள விடயங்களிலான வாக்கெடுப்பிலிருந்து தவிர்ப்பதை அவர்கள் உறுதிசெய்தல் வேண்டும். வங்கியின் பணிப்பாளர்கள் சபை தொடர்பில், 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டில் எந்தவொரு பணிப்பாளாரும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏதேனும் ஒப்பந்தத்தில் அல்லது முன்மொழியப்பட்ட ஒப்பந்தத்தில் அக்கறையினைக் கொண்டிருக்கவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது.

செயற்பாடுகளின் மீளாய்வும் எதிர்கால அபிவிருத்திகளும்

2023 ஆம் நிதியாண்டின்போதான வங்கியின் நிதியியல் மற்றும் செயற்பாட்டு செயற்திறன் மற்றும் வங்கியின் எதிர்கால அபிவிருத்திகளிலான கண்ணோட்டம் மற்றும் அச்செயற்பாடுகளின் விளைவுகள் இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 03 முதல் 15 வரை காணப்படும் தலைவரது அறிக்கை, பொது முகாமையாளர் / பி.நி.அ. இன் அறிக்கை மற்றும் நிதியியல் மீளாய்வில் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கைகள் இந்த ஆண்டறிக்கையின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

பொது முகாமையாளர் /பிரதம நிறைவேற்று அதிகாரி (பி.நி.அ.)

பொது முகாமையாளர் /பிரதம நிறைவேற்று அதிகாரி (பி.நி.அ.), பணிப்பாளர்கள் சபையினால் நியமிக்கப்பட்ட வங்கியின் உயர் தரத்திலான நபராவார். இவரது பிரதான பொறுப்புக்கள் வங்கியின் முகாமைத்துவ மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை உள்ளடக்குகின்றன. இவர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மூலோபாய குறிக்கோள்கள், கூட்டாண்மை விழுமியங்கள் மற்றும் ஒட்டுமொத்த இடர் கொள்கைகளுக்கு அமைவாக வங்கியின் வணிகத்தின் நாளாந்த முகாமைப்படுத்தலை மேற்கொள்வதுடன் வங்கியின் நிலைபேறான அபிவிருத்தியினை அடைவதற்கு இடர் முகாமைத்துவ செயன்முறைகளையும் மேற்கொள்கின்றார்.

தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் விழுமியங்கள்

தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் விழுமியங்களிலான கூற்று வங்கி எங்கே செல்கின்றது மற்றும் அது எதனை அடைவதற்கு முயற்சிக்கின்றது என்பதில் அனைவரையும் முன்னிறுத்தமாக வைத்திருக்கும். மேலும், இவை வங்கியின் மையமாக விழுமியங்களை வரையறை செய்வதுடன் எவ்வாறு மக்கள் நடந்துகொள்ளவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்பதையும் வரையறை செய்கின்றது. வங்கியின் வணிக நடவடிக்கைகள் அதன் தொலைநோக்கினை அடைவதற்காக உயர்ந்த மட்டத்திலான நெறிமுறை நியமங்களில் நடாத்தப்படுகின்றன. வங்கியின் தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் விழுமியங்கள் இந்த ஆண்டறிக்கையின் பக்கம் 02 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

கூட்டாண்மை ஆளுகை

பணிப்பாளர்கள் சபையானது ஒரு வினைத்திறனான கூட்டாண்மை ஆளகை கட்டமைப்பு மற்றும் செயன்முறையின் பராமரிப்பதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளது. பணிப்பாளர் சபையானது நிலைபேறுடைய பொறுப்புள்ள வளர்ச்சிக்கான கட்டளையாக வினைத்திறனான ஆளகையினை கருதுகின்றது. வங்கியின் நிதியியல், செயற்பாட்டு மற்றும் இணக்கப்பாட்டு செயற்பாடுகள் கூட்டாண்மை ஆளுகை

நடைமுறைகளினுள் வழிநடத்தப்பட்டு வினைத்திறனாக கட்டுப்படுத்தப்படுகின்றது. கூட்டாண்மை ஆளகை அறிக்கையானது இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 22 முதல் 42 வரை வழங்கப்பட்டுள்ளன.

சபை உப குழுக்கள்

வங்கியின் அலுவல்களின் மீது கட்டுப்பாட்டினை உறுதிசெய்வதற்காக சபையானது வங்கியியல் சட்டத்தின் பணிப்புரைகளுடன் இணங்கியொழுகி நான்கு உப குழுக்களை உருவாக்கியுள்ளது.

சபை கணக்காய்வுக் குழு

சபை கணக்காய்வுக் குழுவானது (ச.க.கு.) வங்கியின் நிதிக் கூற்றுக்கள், அதன் ஆண்டறிக்கை, கணக்குகள் மற்றும் வெளிப்படுத்தலுக்காக தயாரிக்கப்பட்ட காலாண்டு அறிக்கை, சட்ட மற்றும் ஒழுங்குவிதி தேவைப்பாடுகளுடன் வங்கியின் இணக்கப்பாடு ஆகியவற்றின் நம்பகத்தன்மையினை கண்காணிப்பதற்காக வங்கியின் நிதியியல் தகவல்களை மீளாய்வு செய்வதுடன், வங்கியின் வெளிவாரி கணக்காய்வு செயற்பாடுகளின் வருடாந்தச் செயல்திட்டம், மற்றும் வங்கியின் உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகள் மற்றும் நிதி அறிக்கையிடல் மீதான கட்டுப்பாடுகள், தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பு மற்றும் செயற்பாட்டு விடயங்கள் குழுவின் ஆதிக்க வரம்பின் கீழ் வருகின்றன.

சபை கணக்காய்வுக் குழுவானது (ச.க.கு.) நான்கு சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்களையும் அதில் ஒருவர் ஒரு மாற்றீட்டு அங்கத்தவரும் ஆவார். குழுவின் தலைவர் கணக்கீட்டில் தகைமைகளைக் கொண்டுள்ள ஒரு சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர் ஆவார். ச.க.கு. இன் அங்கத்தவர்கள், ச.க.கு. இல் சேவையாற்றுவதற்கு அவசியமான தகைமைகள், திறன்கள் மற்றும் அனுபவத்தைக் கொண்டுள்ள சபை அங்கத்தவர்களுள் நியமிக்கப்படுகின்றார்கள்.

சபையின் செயலாளர் சபை கணக்காய்வுக் குழுவின் செயலாளராக செயலாற்றுகின்றார்.

பொது முகாமையாளர், உ.பொ.மு. நிதி, உ.பொ.மு. (ம.வ. மற்றும் சட்டம்) மற்றும் பிரதான முகாமையாளர் (கிளைச் செயற்பாடுகள்) ஆகியோர் வரவேற்பின் பேரில் கூட்டத்தில் சமூகமளிப்பதுடன் அரசாங்க கணக்காய்வின் மேலதிகாரி அனைத்து கூட்டங்களிலும் ஒரு அவதானிப்பாளராக சமூகமளிக்கின்றார்.

2023 ஆம் ஆண்டில் ஆறு சபை கணக்காய்வுக் குழு கூட்டங்கள் இடம்பெற்றன. ச.க.கு. இன் அறிக்கையானது இந்த ஆண்டறிக்கையின பக்கங்கள் 44 முதல் 45 வரை வழங்கப்பட்டுள்ளன.

சபை மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழு

வங்கியின் சபை மனித வளங்கள் மற்றும் ஊதியக் குழுவானது (ச.ம.வ.ஊ.கு.), மனித வளங்கள் கொள்கைகள், வங்கியின் சார்பில் மூலோபாயங்கள் மற்றும் திட்டங்களை விருத்திசெய்வதிலும் அமுலாக்குவதிலும் வழிகாட்டி அறிவுரை வழங்குவதுடன், அனைத்து ஊதியக் கொள்கை, முன்னெடுப்புகள், மற்றும் வங்கியின் பொது முகாமையாளர் /பி.நி.அ. மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் தொடர்பான சம்பளக் கட்டமைப்புகள் மற்றும் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் அனைத்தையும் மீளாய்வு செய்வதுடன் அனைத்து மனித வளங்கள் சிக்கல்களில் ஏனைய சபை உப குழுக்களுடன் ஒரு கலந்தாய்வுப் பங்கினை பராமரிப்பதுடன், இவையே ச.ம.வ.ஊ.கு. இடம் ஒப்படைக்கப்பட்ட பிரதான பொறுப்புக்களாகும்.

ச.ம.வ.ஊ.கு. நான்கு சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்களையும் அதில் ஒருவர் ஒரு மாற்றீட்டு அங்கத்தவரையும் உள்ளடக்கியுள்ளதுடன் சபையின் செயலாளர் ச.ம.வ.ஊ.கு. இன் செயலாளராக செயலாற்றுகின்றார். பொது முகாமையாளர் /பி.நி.அ. அனைத்து கூட்டங்களிலும் சமூகளிப்பதுடன் பொது முகாமையாளர் /பி.நி.அ. தொடர்பான விடயங்கள் கலந்தாராயப்படும்போது சமூகமளிக்கமாட்டார்.

குழுவானது ஆகக்குறைந்தது வருடத்திற்கு ஒரு முறையேனும் கூட வேண்டிய தேவை காணப்படுவதுடன், 2023 ஆம் ஆண்டில் குழு ஒரு தடவை கூடியது. ச.ம.வ.ஊ.கு. இன் அறிக்கையானது இந்த ஆண்டறிக்கையின் பக்கம் 47 இல் வழங்கப்பட்டுள்ளது.

சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (ச.ஒ.இ.மு.கு.)

வங்கியின் சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவானது (ச.ஒ.இ.மு.கு.) அனைத்து இடர்களையும், அதாவது, கடன், சந்தை, திரவத்தன்மை, செயற்பாட்டு மற்றும் வங்கிக்கு மூலோபாயமானவை ஆகியவற்றை பொருத்தமான இடர் குறிகாட்டிகள் மற்றும் முகாமைத்துவத் தகவல்களூடாக மதிப்பிடுவதுடன் வங்கி தொடர்பான இடர் மற்றும் இணக்கப்பாட்டிலான கொள்கைகள், அறிக்கைகள் மற்றும் முன்மொழிவுகளை மீளாய்வு செய்கின்றது. ச.ஒ.இ.மு.கு. கடன் குழு போன்ற அனைத்து முகாமைத்துவ மட்ட குழுக்களின் போதுமை மற்றும் பயனுறுதித்தன்மையினை மீளாய்வு செய்கின்றது. இது குறிப்பிட்ட இடர்களை விளித்துரைப்பதற்கும் அந்த இடர்களை குழுவினால் குறித்துரைக்கப்பட்ட அளவுசார் மற்றும் பண்புசார் இடர் மட்டங்களினுள் முகாமைப்படுத்துவதற்கும் ஆகும்.

ச.ஒ.இ.மு.கு. சட்டங்கள், ஒழுங்குவிதிகள், முறைமைப்படுத்தல் வழிகாட்டிகள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் அனைத்து பிரிவுகளிலுமான வணிகச் செயற்பாடுகளிலான அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளை மதிப்பீடு செய்வதற்காக ஒரு சுயாதீன இணக்கப்பாட்டு செயற்பாட்டினை நிறுவியுள்ளதுடன், வங்கியின் கொள்கைகள், மற்றும் முறைமைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை தேவைப்பாடுகளின் அடிப்படையில் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட விவேகமான மட்டங்களுக்கு அப்பால் அத்தகை இடர்கள் காணப்படுமாயின், அக்குறிப்பிட்ட இடர்களை தணிப்பதற்காக உடனடியான திருத்த நடவடிக்கைகளை எடுத்தலையும் உள்ளடக்கும்.

ச.ஒ.இ.மு.கு. ஆனது நான்கு நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்களையும் அவர்களுள் ஒருவர் ஒரு மாற்றாள் அங்கத்தவர், பொது முகாமையாளர் / பி.நி.அ. மற்றுமெ இடர் முகாமைத்துவத்தின் தலைமை ஆகியோரை உள்ளடக்குவதுடன், இது பரவலான இடர் வகைகளை கவனித்துக்கொள்கின்றன. சபையின் செயலாளர், சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் (ச.ஒ.இ.மு.கு.) செயலாளராக செயலாற்றுகின்றார்.

நான்கு சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவின் (ச.ஒ.இ.மு.கு.) கூட்டங்கள் 2023 ஆம் ஆண்டில் இடம்பெற்றன. ச.ஒ.இ.மு.கு. இன் அறிக்கையானது இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 48 முதல் 49 வரை வழங்கப்பட்டுள்ளன.

சபை பெயரிடல் குழு (ச.பெ.கு.)

வங்கியின் சபை பெயரிடல் குழுவானது (ச.பொ.கு.), பொது முகாமையாளர் / பி.நி.அ. மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரை தெரிவுசெய்யும் /நியமிக்கும் ஒரு செயன்முறையினை அமுல்படுத்துவதற்கு பொறுப்பாளியாவார்கள். பொது முகாமையாளர் / பி.நி.அ. மற்றும் முக்கிய முகாமைத்துவ பதவிகளுக்கான நியமனம் அல்லது பதவியுயர்வுக்காக கருத்திலெடுக்கப்படவேண்டிய தகுதிக்கு தேவையான தகைமைகள், அனுபவம் மற்றும் முக்கிய பண்புகள் போன்ற வரன்முறைகளை நிறுவியுள்ளது. ச.பெ.கு. ஆனது அத்ன நடவடிக்கைகள் மற்றம் தீர்மானங்கள் தொடர்பனவற்றை சபைக்கு அறிக்கையிடுகின்றது.

ச.பெ.கு. ஆனது நான்கு நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்களையும் அவர்களுள் ஒருவர் ஒரு மாற்றாள் அங்கத்தவரையும் உள்ளடக்கும். பொது முகாமையாளர் / பி.நி.அ., உ.பொ.மு. (ம.வ. மற்றும் சட்டம்) ஆகியோர் குழுவின் தலைவரின் பணிப்புரையின் பேரில் கூட்டங்களில் சமூகமளிப்பார்கள். சபையின் செயலாளர் சபை பெயரிடல் குழுவின் (ச.பெ.கு.) செயலாளராக செயற்படுகின்றார்.

ச.பெ.கு. ஆனது வருடத்திற்கு ஒரு முறையேனும் கூடுதல் வேண்டும் மற்றும் அவசியத்தின் அடிப்படையில் மேலதிக கூட்டங்கள் நிச்சயிக்கப்படலாம். 2023 ஆம் ஆண்டின்போது ஆறு கூட்டங்கள் இடம்பெற்றன. ச.பெ.கு. இன் அறிக்கையானது இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 44 முதல் 45 வரை வழங்கப்பட்டுள்ளன.

மூலதனப் போதுமை விகிதம் (மூ.போ.வி.)

மூலதனப் போதுமை விகிதம் (மூ.போ. வி.) என்பது வங்கியின் கிடைக்கக்கூடிய மூலதனமானது வங்கியின் இடர் நிறையிடப்பட்ட கடன் வெளிப்பாடுகளின் ஒரு சதவீதமாக தெரிவிக்கும் ஒரு அளவீடாகும். வங்கி எப்போதும் ஆகக்குறைந்த மூலதனப் போதுமை தேவைப்பாட்டினை பராமரித்துள்ளது.

மூலதனப் போதுமை விகிதம் ஆனது வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குழுவினால் (சொ.பொ.கு.) வழக்கமாக முறையாக கண்காணிக்கப்படுகின்றது.

இடர் முகாமைத்துவம்

பணிப்பாளர்கள் சபையானது இடர்களை முகாமைப்படுத்துவதற்கான ஒட்டுமொத்த பொறுப்பினை ஏற்கின்றது. இடர்களை தணிப்பதற்காக வங்கியினால் எடுக்கப்பட்ட குறிப்பிட்ட நடவடிக்கைகள் இந்த ஆண்டறிக்கையின் பக்கம் 96 இல் விபரிக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர்களின் கூற்று

உள்ளகக் கட்டுப்பாடு

உள்ளகக் கட்டுப்பாடு என்பது, கணக்கீடு மற்றும் கணக்காய்வில் வரையறை செய்துள்ளவாறு, செயற்பாட்டு பயனுறுதித்தன்மை மற்றும் வினைத்திறன், மற்றும் நம்பகமான நிதியியல் அறிக்கையிடல் மற்றும் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கைகளுடனான இணக்கப்பாடு ஆகியவற்றிலான வங்கியின் குறிக்கோள்களை உறுதிப்படுத்துவதற்கான ஒரு செயன்முறையாகும்.

பணிப்பாளர்கள் சபையானது, கூட்டாண்மை முகாமைத்துவத்தின் நாளாந்த வணிக முகாமைப்படுத்தலுக்கான ஒரு வழிகாட்டியான ஒரு பயனுறுதியான மற்றும் விரிவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையினை அமுலாக்கியுள்ளது.

உள்ளகக் கட்டுப்பாடுகளிலான பணிப்பாளர்களின் அறிக்கையானது இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 63 முதல் 64 வரை காணப்படுகின்றது.

இலாபம் மற்றும் ஒதுக்கீடுகள்

2023 ஆம் ஆண்டிற்கான வங்கியின் மொத்த வருமானம் ரூபா 9,322 மில்லியன் ஆகும். வங்கி தொடர்பான இலாபத்தின் விபரங்கள் பின்வரும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன.:

விபரங்கள்	ரூ. (மில்.)
ஒதுக்கங்கள்	5,020
மூலதனச் செலவினம்	115
அசையா ஆதனங்களின் சந்தை /நியாயப் பெறுமதி	-
பங்களிப்பு செய்த மூலதனம்	889
கணிசமான பங்குரித்துவம் மற்றும் பங்கு தகவல்கள்	-
அரசின் நியதிச்சட்ட கொடுப்பனவுகளுக்கான பங்களிப்புகள்	124
வரிவிதிப்பு	பொருத்தமற்றது
ஐந்தொகை திகதியின் பின்னர் இடம்பெறும் நிகழ்வுகள்	பொருத்தமற்றது
ஐந்தொகையின் பின்னரான நிகழ்வுகள்	பொருத்தமற்றது
நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி	பொருத்தமற்றது

பொருத்தமான சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதகளுடனான இணக்கப்பாடு

வங்கியானது எந்நேரத்திலும் 1975 இன் 13 ஆம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்துடனும், திருத்தியமைக்கப்பட்டது, ஏனைய அனைத்து பொருத்தமான சட்டங்கள், விதிகள் மற்றம் ஒழுங்குவிதிகளுடன் அது இணக்கப்பாடு கண்டுள்ளதனை உறுதிசெய்கின்றது. இவை இலங்கையின் சட்டங்களின் பிரகாரம் சட்டமயமாக்கப்பட்டுள்ளன.

அனைத்து பங்காளிகளுக்கும் சமத்துவமான கவனிப்பு

வங்கியானது ஒவ்வொரு தொகுதியான பங்குதாரர்களுக்கும் முக்கியத்துவத்தினை இணைப்பதுடன் சமத்துவத்தினை மதிக்கின்றது. அதன் சேவைகளில் நியாயமான விலையிடல்; சேவைகளின் தரம்; நேர்மை ஆகியவற்றின் செயற்திறனை மேம்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளது.

வாடிக்கையாளர்களும் கடன் பெறுநர்களும்

வங்கியின் பிரதான குறிக்கோள்களுள் ஒன்றாக ஒரு மலிவான கிரயத்தில் வீடமைப்புக் கடன்களை நாட்டிற்கு வழங்குவதாகும். வங்கியானது இது தொடர்பில் வழக்கமான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு விசேட முயற்சியினை எடுக்கின்றது. வங்கியானது சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கும் கைத்தொழிலாளர்களுக்கும் உதவி புரிவதற்காக பல்வேறு கடன்களை அறிமுகப்படுத்தியுள்ளதுடன், வேலை வாய்ப்பின்மையினை ஒழிக்குமன் அரசாங்கத்தின் விருப்பினை போஷிப்பதற்கு துணைபுரியும்.

வைப்பீட்டாளர்களும் வழங்குநர்களும்

வங்கியின் பிரதான நிதியளிப்பவர்களாக வைப்பீட்டாளர்கள் காணப்படுகின்றார்கள். வைப்புக்கான வட்டி வீதங்கள் பிரசுரிக்கப்படுவதுடன் அவை போட்டித்தன்மை வாய்ந்தவை. மூலதனம் மற்றும் வட்டி என்பன உரிய திகதிகளில் செலுத்தப்படுகின்றன. வங்கியானது பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக விலைக்கோரல்களை கோருவதுடன் உடனடி கொடுப்பனவினை உறுதிப்படுத்துகின்றது.

கணக்காய்வாளரின் அறிக்கை

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களே அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் கணக்காய்வாளராவார். 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் கணக்குகள் கணக்காய்வு செய்யப்பட்டதுடன், இது இலங்கை ஜனநாயக, சோசலிஷ குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154 (1) இன் ஏற்பாடுகளுடன் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 13 (1) உடன் இணைந்து கணக்காய்வாயர் தலைமை அதிபதி அவர்களின் வழிகாட்டலின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது.

31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த வங்கியின் நிதிக் கூற்றுக்களிலான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கையானது இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 63 முதல் 73 வரை வழங்கப்பட்டுள்ளன.

ஒப்பளிப்புகள்

பணிப்பாளர்கள் வங்கியின் பெறுமதி மிக்க வாடிக்கையாளர்களுக்கு அவர்களது உறுதுணை மற்றும் வங்கியில் வைத்துள்ள நம்பிக்கைக்கு அவர்களது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதுடன் எதிர்காலத்திலும் அவர்களது பரஸ்பரமான உறுதுணையான உறவு தொடரும் என எதிர்பார்க்கின்றது. உங்களது வங்கியின் வெற்றிக்காக ஊழியர்களினால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்புகளை நன்றியுடன் ஏற்றுக்கொள்கின்றது. பணிப்பாளர்கள், முறைமைப்படுத்தல் மற்றும் இலங்கையிலுள்ள அரசாங்க அதிகாரசபைகளிடமிருந்து பெறப்பட்ட ஒத்துழைப்பக்கும் உறுதுணைக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றார்கள்.

சபையின் கட்டளையின் பிரகாரம்,

டிலானி அலகக்கோன்
சபையின் செயலாளர்

நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களது கூற்று

பொறுப்பு

2007 இன் 12 ஆம் இலக்க வங்கியியல் சநட்ட பணிப்புரைகளின் பிரிவு 3(8) (ii) (b) இற்கு ஏற்றாற்போல் பணிப்பாளர்கள் சபையானது நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளில் இந்த அறிக்கையினை முன்னிலைப்படுத்துகின்றது.

பணிப்பாளர்கள் சபையானது ("சபை") வங்கிக்கான திடமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைக்கான செயன்முறையானது காணப்படுவதை உறுதிசெய்வதற்கும் அதன் போதுமை மற்றும் பயனுறுதித்தன்மையினை மீளாய்வு செய்வதற்கும் பொறுப்பாயுள்ளது. அத்தகைய போதுமை மற்றும் பயனுறுதித்தன்மையினை கருத்திலெடுக்கும்போது சபையானது வங்கியியல் வணிகமானது ஒரு முகாமைப்படுத்தப்பட்ட அடிப்படையில் இடருக்கு சமனாக வெகுமதிகள் தேவைப்படுவதனை புரிந்துள்ளதுடன், இதன் காரணமாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள் வங்கியின் இடர் ஆர்வங்களை உள்ளடக்கிய வரையறைகள் மற்றம் குறிகாட்டிகளிலிருந்து ஏதேனும் விலகல்களை எடுத்துக்காட்டும் நோக்கில் பிரதானமா வடிவமைக்கப்பட்டதாகும். இதனைக் கருத்திலெடுத்து. கட்டுப்பாடுகளின் போதுமை மற்றும் பயனுறுதித்தன்மையின் கருதி, சபையானது சொத்துக்கள் முறையாக பாதுகாக்கப்படுகின்றது, முறையான கணக்குப் புத்தகங்கள் பராமரிக்கப்படுகின்றது, மற்றும் வங்கியின் நிதியியல் அறிக்கையிடலின் நம்பகத்தன்மை என்பவற்றில் ஒரு நியாயமான உறுதிமொழியினை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், இம்முறையானது நிதியியல் தகவல்கள் மற்றும் பதிவுகளின் பொருண்மையான பிறழ்கூற்றுக்களுக்கு எதிராக அல்லது முறைகேடுகள் மற்றும் மோசடிகள் நீக்கப்பட்டுள்ளன என உள்ளார்ந்த வரையறைகளிக் காரணமாக முழுமையான உறுதிமொழியினை வழங்காது.

வங்கியினால் முகங்கொடுக்கப்படும் முக்கியமான இடர்களை இனங்காண்பதற்கும், மதிப்பிடுவதற்கும், மற்றும் முகாமைப்படுத்துவதற்கும் ஒரு தொடர்ந்த செயன்முறையினை சபை நிறுவியுள்ளதுடன், இந்த செயன்முறையானது வணிகச் சூழல் அல்லது முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மற்றம் ஏனைய வழிகாட்டிகளிலான மாற்றங்கள் ஏற்படும்போது உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளை மேம்படுத்துவதனையும் உள்ளடக்கும். இச்செயன்முறையானது வழக்கமாக சபையினால் மீளாய்வு செய்யப்பட்டு இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகளிலான பணிப்பாளர்களின் கூற்றில் வங்கியின் பணிப்பாளர்களுக்கான வழிகாட்டியுடன் இணங்கி உறுதிப்படுத்தப்படுகின்றது. அந்த வழிகாட்டியில் வழங்கப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் மதிப்பீட்டிற்கான கொள்கைகளை கருத்திலெடுத்து உள்ளகக் கட்டுப்பாட்டு முறையினை சபை மதிப்பிட்டுள்ளது.

நிதியியல் அறிக்கையிடல் மற்றும் வெளிவாரி நோக்கங்களுக்காக தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் நம்பகத்தன்மை தொடர்பான நியாயமான உறுதிமொழியினை வழங்குவதற்காக நடப்பிலுள்ள உள்ளகக் கட்டுப்பாடுகள் திடமானவை மற்றும் போதுமானவை என சபை கருதுகின்றது. அத்துடன் இவை உரிய கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளின் பிரகாரமும் தயாரிக்கப்பட்டுள்ளன.

வங்கியினால் முகங்கொடுக்கும் இடர்களை இனங்காணுதல் மற்றும் மதிப்பிடுதல் மூலம் இடர் மற்றும் கட்டுப்பாடுகளிலான சபையின் கொள்கைகள் மற்றும் செயன்முறைனளை அமுல்படுத்துவதில், மற்றும் இந்த இடர்களை தணிப்பதற்கும் மற்றும் கட்டுப்படுத்துவதற்கும் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளை வடிவமைத்து, செயற்படுத்துதல் மற்றும் கண்காணிப்பதிலும் முகாமைத்துவமானது சபைக்கு துணைபுரிகின்றது.

நிதியில் அறிக்கையிடலில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் வடிவமைப்பு மற்றும் பயனுறுதித்தன்மையினை பிரயோகித்தல் மற்றும் மீளாய்வு செய்வதில் கடைப்பிடிக்கப்படும் செயன்முறைகளின் முக்கிய பண்புகள்

சபையானது உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் வடிவமைப்பு மற்றும் பயனுறுதித்தன்மையினை காலமுறையாக மீளாய்வுசெய்வதற்கு ஒரு முறையினை சபை நிறுவியுள்ளது. ஏனையவற்றுக்கிடையில், முக்கியமான செயன்முறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:

- வங்கியினுள் உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் போதுமை மற்றம் நேர்மையினை உறுதிசெய்வதற்காக சபையானது பல்வேறு உப குழுக்களை நிறுவியுள்ளதுடன், சபையின் அதிகாரமானது பல்வேறு மட்டங்களிலான கூட்டாண்மை முகாமைத்துவம், சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் வங்கியின் முகாமையாளர்களுக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளதுடன் இது கூட்டாண்மை குறிக்கோள்கள், மூலோபாயங்கள் மற்றும் வருடாந்த பாதீடு ஆகியவற்றை அடைவதற்கு சபைக்கு துணைபுரிவதற்காகவும், வஙிகியினால் முகங்கொடுக்கப்படும் இடர்களை மதிப்பீடு மற்றும் முகாமைப்படுத்துவதற்கான கொள்கைகள் மற்றும் செயன்முறைகளின் அமுலாக்கத்திற்கும் ஆகும்.

- சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவானது சுயாதீன நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்களை உள்ளடக்குகின்றது. இக்குழுவானது வங்கியின் இடர் தோற்றுருவத்தினை மீளாய்வு செய்வதற்கும், வங்கியினால் முகங்கொடுக்கப்படும் பிரதான இடர்களை இனங்காண்பதற்கும் மற்றும் வங்கியின் இடர் ஆர்வம் மற்றும் இடர் தோற்றுருவத்தின் அடிப்படையில் கொள்கைகளையும் தயாரிப்பதற்கும் பொறுப்பாளியாயுள்ளது.

- **வங்கியின உள்ளக் கணக்காய்வுப் பிரிவானது, நிலைநாட்டப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு கொள்கைகள் மற்றும் செயன்முறைகளுடன் வங்கியின் நிதியியல், நிர்வாக மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் உடன்படுகின்றனவா என உறுதிப்படுத்துவதற்காக இடர் அடிப்படையிலான கணக்காய்வு அணுகுமுறையின் அடிப்படையில் பரிசோதனைகளை செயற்படுத்துகின்றது. அனைத்து செயற்பாட்டு அலகுகளிலும் மற்றும் கிளைகளிலும் கணக்காய்வானது செயற்பாட்டு அலகுகளுடன் இணைந்துள்ள மற்றும் வங்கியின் கருவிகளுடன் இணைந்துள்ள இடர் மட்டங்களின் அடிப்படையில் அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்றது. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் புறநிலையான மற்றும் சுயாதீன மதிப்பீட்டிற்கும், முறைகேடுகள், பிறழ்கூற்றுக்கள், மோசடிகள், வங்கியின் நிர்வாக மற்றும் செயற்பாட்டு அலுவல்களில் கணக்காய்வு அவதானிப்புகள் தொடர்பாக சபை கணக்காய்வு குழுவுக்கு வழமையான அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கும் பொறுப்பாயிருக்கின்றது.**

- பொதுவாக, சபை கணக்காய்வுக் குழுவானது நடப்பிலுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் ஒட்டுமொத்த பயனுறுதித்தன்மையினை மீளாய்வு செய்வதுடன், உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்களில் குறிப்பிட்ட அவதானிப்புகள் தொடர்பாக பணிப்பாளர்கள் சபைக்கு வழமையாக அறிக்கையிடுகின்றது. இது தொடர்பில், குழுவினால் பயன்படுத்தப்படும் பொறிமுறையானது, கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை, உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள், முறைமைப்படுத்தல் அறிக்கைகள் வருடாந்த /மாதாந்த நிதிக் கூற்றுக்கள் மற்றம் முன்னேற்ற அறிக்கைகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

- LKAS மற்றும் SLFRS உள்ளடங்கலான புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களை வங்கியானது 2012 இல் கடைப்பிடித்தது. அத்தகைய இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அமுலாக்கத்திலிருந்து, அங்கீகாரம், அளவீடு, வகைப்படுத்தல் மற்றும் மேற்கொள்ளப்படும் வெளிப்படுத்தல்கள் என்பவற்றிலான புதிய தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாடு காண்பதற்காக தொடர்ச்சியான கண்காணித்தல் மற்றும் செயன்முறைகளின் முன்னேற்றகரமான மேம்படுத்தல்கள் காணப்படுகின்றன.

- வங்கியானது இலங்கை கணக்கீட்டு நியமமான SLFRS 9 – "நிதியியல் கருவிகளில்" இனை 1 ஜனவரி 2018 இலிருந்து கடைப்பிடித்தது. SLFRS 9 இன் தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்காக வங்கியானது ஒரு பரந்த வரம்புடைய எதிர்வுகூறப்பட்ட பொருளாதார காட்சிநிலைகளை பயன்படுத்தி ஒரு எதிர்பார்த்த கடன் நட்ட (எ.க.ந.) கமாதிரியினை விருத்திசெய்தது. இவ்வாண்டின்போது, வலுக்குன்றல் கொள்கையின் மாதிரி ஏற்புடையாக்கலானது ஒரு சர்வதேச பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்திடமிருந்து பெறப்பட்டதுடன்

நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களது கூற்று

சபையினால் இது மீளாய்வு செய்யப்பட்டது. SLFRS 9 இன் கீழான கடன் வசதிகளின் வகைப்படுத்தல், அங்கீகாரம் மற்றும் அளவீடு தொடர்பாக இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுடன் இணங்குவதற்கு வங்கியானது போதுமையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

- **சபையானது, வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் செயன்முறைகள், வருடாந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்டு அறிக்கையிடல் தேவைப்பாடுகளிலான வழிகாட்டிகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளதனை உறுதிப்படுத்துகின்றனவா என மீளாய்வு செய்கின்றது.**

- **முகாமைத்துவ மட்டத்திலான குழுக்கள், நாளாந்த வணிக நடவடிக்கைகளில் வங்கியின் மையமான பிரிவுகளின் வினைத்திறனான முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வையினை உறுதிசெய்வதற்காக பொருத்தமான வலுவளிப்புடன் செயற்படுகின்றன.**

- **நிதியியல் அறிக்கையிடல் மீதான வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு மற்றும் பயனுறுதித்தன்மை என்பவற்றின் கட்டமைக்கப்பட்ட ஒரு வருடாந்த மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது. சபையானது வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் ஆவணப்படுத்தலை ஏற்கனவே அங்கீகரித்துள்ளதுடன், இது உள்ளகக் கட்டுப்பாடுகளின் பயனுறுதித்தன்மையின் மீளாய்விற்கு வசதியளிக்கும்.**

- **தகவல் அமைப்புமுறை ஆளுகையினை பலப்படுத்துவதற்காக சர்வதேச பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட தகவல் அமைப்புமுறை பாதுகாப்பு கட்டுப்பாட்டு கொள்கைகள் மற்றும் செயன்முறைகளை மீளாய்வு செய்வதற்காக வினைத்திறனான நடவடிக்கைகளை சபை எடுத்துள்ளது.**

- வணிகத் துறையின் தொழில்நுட்ப மற்றும் தகவல் அமைப்புமுறை சூழலிலான மாற்றங்களை சபை அங்கீகரித்துள்ளதுடன், வாடிக்கையாளர் சேவையினை மேம்படுத்துவதற்கு துறையின் சிறந்த நடைமுறைகளுடன் நிலையொத்திருத்தல் மிகவும் முக்கியமானதாகும். இந்த விடயத்தினை விளித்துரைப்பதற்காக, சபையானது ஒரு புதிய மையமாக வங்கியியல் அமைப்புமுறையில் முதலீடு செய்வதற்காக ஒரு வினைத்திறனான முன்னெடுப்பினை எடுத்துள்ளது. இது வணிகச் செயற்பாடுகளிலான ஆக்கத்திறனை அதிகரிக்கும் மற்றும் நிறுவனத்தின் வளர்ச்சிக் கண்ணோட்டத்தில் சிறந்த விளைவினை அடைவதற்கு வாடிக்கையாளர் அனுபவத்தினை பயன்படுத்தவும் முனைகின்றது.

- முன்னைய ஆண்டில் உள்ளகக் கட்டுப்பாட்டு குறைபாடுகளில் வெளிவாரி கணக்காய்வாளர் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்களும் கருத்திலெடுக்கப்பட்டு அவசியமானவிடத்து அவற்றை விளித்துரைப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உறுதிப்பாடு

மேற்குறிப்பிட்ட செயன்முறைகளின் அடிப்படையில், சபையானது வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் முறையானது நிதியியல் அறிக்கையிடலின் நம்பகத்தன்மை தொடர்பாக ஒரு நியாயமான உறுதிமொழியினை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது மற்றும் வெளிவாரி நோக்கங்களுக்காக தயாரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு அமைவாக உள்ளன என்று உறுதிப்படுத்துகின்றது.

சபையின் கட்டளையின் பிரகாரம்

பேராசிரியர். டி. ஏ. எம். பெரேரா
தலைவர் - சபை கணக்காய்வுக் குழு /சுயாதீன பணிப்பாளர்

திரு. எச்.சி.டி.எல். சில்வா
அங்கத்தவர் - சபை கணக்காய்வுக் குழு / நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்

திரு. எஸ்.கே.ஏ. கலப்பத்தி
அங்கத்தவர் - சபை கணக்காய்வுக் குழு / சுயாதீன பணிப்பாளர்

வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. BAN/F/SMIB/IC/2023/08
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 16 May 2024

தலைவர்,
அரச ஈட்டு முதலீட்டு வங்கி

அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டில் பணிப்பாளர்களது கூற்றில் பணிப்பாளர் சபைக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் சுயாதீன உறுதிமொழி அறிக்கை

அறிமுகம்

இந்த அறிக்கையானது, 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களது கூற்றில் ("கூற்று") உறுதிமொழியினை வழங்குவதற்காகும்.

முகாமைத்துவத்தின் பொறுப்பு

2007 இன் 12 ஆம் இலக்க வங்கியியல் சட்ட பணிப்புரையின் பிரிவு 3 (8) (ஹை) (டி) இற்கு இணங்க இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட "உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களது கூற்றில் வங்கிகளின் பணிப்பாளர்களுக்கான வழிகாட்டி" இன் பிரகாரம் கூற்றின் தயாரிப்பிற்கும் முன்னிலைப்படுத்தலுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாளியாகும்.

SLSAE 3050 (திருத்தியமைக்கப்பட்டது) உடனான எனது பொறுப்பு மற்றும் இணக்கப்பாடு

கூற்றானது, அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு மற்றும் பயனுறுதித்தன்மையினை மீளாய்வு செய்வதில் பணிப்பாளர்கள் கடைப்பிடித்துள்ள செயன்முறைகளை பொருத்தமாக பிரதிபலிக்கின்றதா மற்றும் பணிப்பாளர்களினால் அல்லது அவர்களுக்காக தயாரிக்கப்பட்ட ஆவணப்படுத்தலினால் துணையளிக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பிடுவது எனது பொறுப்பாகும்.

நான் எனது பணியினை, உறுதிமொழி ஈடுபாடுகளில் இலங்கை நியமம் (ஸ்லுஸுயுஐ) 3050 (திருத்தியமைக்கப்பட்டது), இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகளில் பணிப்பாளர்களின் கூற்றில் வங்கிகளுக்கான உறுதிமொழி அறிக்கை என்பவற்றின் பிரகாரம் நடாத்தினேன்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துாவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.
No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34
+94 11 2 88 72 23
ag@auditorgeneral.gov.lk
www.naosl.gov.lk

வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

இந்த நியமமானது, முகாமைத்துவமானது, அனைத்து பொருண்மையான விடயங்களிலும், உள்ளகக் கட்டுப்பாட்டிலான கூற்றினைத் தயாரித்துள்ளதா என்பது பற்றி வரையறையான உறுதிமொழியினை பெறுவதற்கு நான் திட்டமிட்டு செயன்முறைகளை செயலாற்ற வேண்டும் என்று வேண்டுகின்றது.

இந்த ஈடுபாட்டின் நோக்கத்திற்காக, ஏதேனும் அறிக்கைகளை இற்றைப்படுத்துவதற்கோ அல்லது மீள் வழங்குவதற்கோ நான் பொறுப்பாளியல்ல மற்றும் இந்த ஈடுபாட்டின்போது நிதியியல் தகவல்களில் ஒரு கணக்காய்வினையோ அல்லது மீளாய்வினையோ நான் செயலாற்றியிருக்கவில்லை.

செயலாற்றப்பட்ட பணியின் பொறுப்பு

கூற்றானது, வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை மீளாய்வு செய்வதில் பணிப்பாளர்கள் கடைப்பிடித்துள்ள செயன்முறைகளை பொருத்தமாக பிரதிபலிக்கின்றதா மற்றும் பணிப்பாளர்களினால் அல்லது அவர்களுக்காக தயாரிக்கப்பட்ட ஆவணப்படுத்தலினால் துணையளிக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பிடுவதற்காக நான் எனது ஈடுபாட்டினை நடாத்தினேன்.

பணிப்பாளர்கள் சபையினால் கடைப்பிடிக்கப்பட்ட செயன்முறைக்கு வங்கியின் ஆளணியினர் மற்றும் ஒரு மாதிரி அடிப்படையில் ஆவணப்படுத்தலின் உளதாம் தன்மையானது துணையளித்துள்ளதா என்பதிலான விசாரணையினை மேற்கொள்வதற்கு செயலாற்றப்பட்ட செயன்முறைகள் பிரதானமாக வரையறை செய்யப்பட்டிருந்தது.

SLSAE 3050 (திருத்தியமைக்கப்பட்டது), கூற்றானது அனைத்து இடர்கள் மற்றும் கட்டுப்பாடுகளை உள்ளடக்குகின்றதா எனக் கருதுவதனையோ அல்லது வங்கியின் இடர் மற்றும் கட்டுப்பாட்டு செயன்முறைகளின் பயனுறுதித்தன்மையில் ஒரு அபிப்பிராயத்தினை வழங்குவதனையோ என்னிடம் வேண்டவில்லை. SLSAE 3050 (திருத்தியமைக்கப்பட்டது), ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் முக்கியமான சிக்கல்கள்களை பொருண்மையான உள்ளகக் கட்டுப்பாட்டு அம்சங்களுடன் கையாள்வதற்காக விபரிக்கப்பட்டுள்ள செயன்முறைகள் மெய்யாகவே சிக்கல்களை நிவர்த்திசெய்துள்ளதா எனக் கருதுமாறு என்னை வேண்டுவதில்லை.

தெரிவுசெய்யப்பட்ட செயன்முறைகள், வங்கியின் தன்மை, நிகழ்வு அல்லது கொடுக்கல் வாங்கல் தொடர்பாக தயாரிக்கப்பட்டுள்ள கூற்றில் எனது புரிந்துணர்வினைக் கருத்திற்கொண்டு எனது நியாயப்பாட்டில் தங்கியுள்ளது.

எனது தீர்மானத்திற்கான ஒரு அடிப்படையினை வழங்குவதற்கு போதுமையான மற்றும் பொருத்தமான சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

தீர்மானம்

செயலாற்றப்பட்ட செயன்முறைகளின் அடிப்படையில், வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டின் வடிவமைப்பு மற்றும் பயனுறுதித்தன்மையின் மீளாய்வில் பணிப்பாளர்கள் சபை கடைப்பிடித்த செயன்முறையில் எனது புரிந்துணர்வுடன், ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கூற்றானது முரண்பட்டுள்ளது என நான் நம்புவதற்கான காரணம் எதுவும் எனது கவனத்திற்கு வரவில்லை.

டபிள்யு. பி. சி. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

முகாமைத்துவத்தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ள நிதியியல் அறிக்கையிடல் செயன்முறையினை மேற்பார்வை செய்யும் பொறுப்பில், பணிப்பாளர்கள் சபையானது இந்நிதியியல் அறிக்கையிடல் தொடர்பாக சட்டரீதியான தேவைப்பாடுகள் அவற்றை தயாரிக்கும்போது பின்பற்றப்பட்டுள்ளன என்று உறுதிப்படுத்துவதற்கான இறுதிப் பொறுப்பினைக் கொண்டுள்ளது. இதன் பிரகாரம். அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பணிப்பாளர்கள் சபையின் பொறுப்பானது இந்த கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வங்கியின் பணிப்பாளர்கள் சபையானது, வங்கியின் நிதிக் கூற்றுக்கள் 31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான அலுவல்களின் நிலைமையில் மற்றும் அத்திகதியில் நிறைவடைந்த நிதியாண்டிற்கான வங்கியின் நிதியில் செயற்திறனில் ஒரு மெய்யான மற்றும் நியாயமான கருத்தினை பிரதபலிப்பதாக உறுதிசெய்கின்றது. இந்த ஆண்டறிக்கையில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் நம்பகத்தன்மை மற்றம் புறநிலைக்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்கின்றது.

நிதிக் கூற்றுக்கள்

நிறுவனத்தை புரிந்துகொள்ள, கண்காணிப்பதற்கு மற்றும் வழிநடத்துவதற்கு போதிய நிதியியல் அறிவினைக் கொண்டுள்ள, வங்கியின் பணிப்பாளர்கள் சபையானது, பின்வரும் சட்டங்களின் பிரகாரம் வங்கியின் அலுவல்கள் மற்றும் வணிகத்தினை கட்டுப்படுத்தி நிர்வகிக்கும் தேவையினைக் கொண்டுள்ளது. 1975 இன் 13 ஆம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டம் மற்றும் அதனிலான திருத்தங்களுடன், 1971 இன் 38ஆம் இலக்க நிதிச் சட்டம், 1988 இன் 30 ஆம் இலக்க வங்கியில் சட்டம் மற்றும் அதனிலான திருத்தங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கும் ஆகும்.

இந்த ஆண்டறிக்கையில் தயாரிக்கப்பட்டு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் உள்ளார்ந்த கணக்கீட்டு புத்தகங்களுடன் மற்றும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு கொள்கைகள், இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் ஆகியவற்றுடன் இயைபாக உள்ளதுடன், உரிய நியதிச்சட்ட தேவைப்பாடுகளுக்க இணங்க ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் வங்கியின் நிதி நிலைமையில் மெய்யான மற்றும் நியாயமான கருத்தினை வழங்குகின்றது.

இந்த ஆண்டறிக்கையில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் நம்பகத்தன்மைக்கும் புறநிலைக்கும் பணிப்பாளர்கள் சபையானது பொறுப்பினை ஏற்கின்றது. இந்த நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில் பணிப்பாளர்கள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகின்றார்கள்:

1. நடப்பிலுள்ள நிதியியல் அறிக்கையிடல் வரம்புறுகையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் தெரிவுசெய்யப்பட்டும், கடைப்பிடிக்கப்பட்டும் மற்றும் பிரயோகிக்கப்பட்டுன் உள்ளதுடன் இவை கொள்கை மாறா விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், பொருண்மையான விலகல்கள் ஏதேனும் இருப்பின், அவை வெளிப்படுத்தப்பட்ட விளக்கமளிக்கப்பட்டுள்ளன;

2. இயைபுடையது எனக் கருதப்படும் அனைத்து பொருத்தமான கணக்கீட்டு நியமங்களும் பின்பற்றப்பட்டுள்ளன;

3. நியாயமானவை மற்றும் விவேகமானவை எனக்கருதப்படும் நியாயப்பாடுகளும் மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன;

வங்கியானது அதன் கணக்காய்வு செய்யப்பட்ட காலாண்டு நிதிக் கூற்றுக்களை, முக்கிய செயற்திறன் குறிகாட்டிகள் உள்ளடங்கலாக, மூன்று மொழிகளிலும், ஒவ்வொரு கால இறுதியிலிருந்து இரண்டு மாதங்களினுள் செய்தித்தாள்களிலும் வங்கியின் இணையத்தளத்திலும் பிரசுரித்துள்ளது.

பணிப்பாளர்கள் சபையானது இடைக்கால நிதிக் கூற்றுக்களை அவை வெளியிடப்படுவதற்கு முன்னர், சபை கணக்காய்வு குழுவின் மீளாய்வு மற்றும் பரிந்துரையினைத் தொடர்ந்து அங்கீகரிக்கின்றது. சபை கணக்காய்வுக் குழுவின் அறிக்கையானது இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 44 முதல் 45 வரை காணப்படுகின்றன. பணிப்பாளர்கள் சபையானது உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கிகளுக்கு இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட விதந்துரைக்கப்பட்ட வடிவத்துடன் நிதிக் கூற்றுக்கள் இணக்கப்பாடு காண்பதை உறுதிப்படுத்துகின்றது.

நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி

SMIB இன் பணிப்பாளர்கள் சபையானது எதிர்வரும் எதிர்காலங்களில் செயற்பாட்டினை தொடர்வதற்காக போதுமையான வளங்களை வங்கி கொண்டுள்ளது எனவும், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் நிலைநாட்டப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (LKAS மற்றும் SLFRS) இந்த நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையின் பிரயோகத்தினை நியாயப்படுத்துகின்றது. இந்நிதிக் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு கொள்கைளுடன் இணங்கியிருப்பதுடன் சபையானது இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுடன் இணங்குவதற்கு அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவம்

SMIB இன் பணிப்பாளர்கள் சபையானது வங்கியின் சொத்துக்களை பாதுகாப்பதற்காக நியாயமான நடவடிக்கைகள் மற்றும கவனிப்பினை எடுப்பதற்கு பொறுப்பாளியாவார்கள். அத்துடன் மோசடிகள் மற்றும் ஏனைய முறைகேடுகளை கண்டுபிடிப்பதற்கும், உள்ளக நிதியியல் கட்டுப்பாடுகளில் ஒரு வினைத்திறனான மற்றம் விரிவான முறையினை நியமித்துள்ளதுடன், உள்ளகக் கணக்காய்வு மற்றும இடர் முகாமைத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு வினைத்திறனான கண்காணிப்பு முறையில் அதன் பயனுறுதித்தன்மை மற்றும் வங்கியின் சொத்துக்களை பாதுகாப்பதற்கான ஒரு திடமான கட்டுப்பாட்டு சூழலை பராமரிப்பதில் கணிசமான முக்கியத்துவம் இடப்படுவதுடன் மோசடி மற்றும் தவறான நிர்வாகத்தை தவிர்ப்பதற்கும் ஆகும்.

உள்ளகக் கட்டுப்பாட்டின நோக்கம் பணிப்பாளர்கள் சபையினால் நிறுவப்பட்டுள்ள இலக்குகளை அடையும் ஒரு வினைத்திறனான நிறுவனத்தினை அடைவதாகும். அதாவது, ஒரு நியாயமான அளவிற்கு வங்கியின் வணிகமானது பொருத்தமாகவும் வினைத்திறனாகவும் நடாத்தப்படுவதனை உறுதிசெய்தல், சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணக்கப்பாடு காணுதல் மற்றும் நிதியியல் அறிக்கையிடலின் நம்பகத்தன்மை தொடர்பாக நியாயமான உறுதிமொழியினை வழங்குவதும் ஆகும்.

கணக்காய்வுக் குழுவின் வழிகாட்டலின் கீழ் உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களமானது உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளின் பயனுறுதித்தன்மையினை கண்காணித்து அவசியமாயின் திருத்தங்களை பரிந்துரைக்கின்றது. பணிப்பாளர்கள் அவர்களது வழக்கமான கூட்டங்களிலும் சபை கணக்காய்வு குழுவினூடாகவும் நிதிக் கூற்றுக்கள் அவர்களினால் நேரடியாக மீளாய்வு செய்யப்பட்டுள்ளதை உறுதிசெய்கின்றார்கள்.

வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறையிலான பணிப்பாளர்களின் அறிக்கையானது இந்த ஆண்டறிக்கையின் பக்கங்கள் 63 முதல் 64 வரை வழங்கப்பட்டுள்ளன.

இணக்கப்பாட்டு அறிக்கை

பணிப்பாளர்கள் அவர்களது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய சிறந்த வகையில், வங்கியினால் செலுத்தவேண்டிய அனைத்து வரிகளும் வங்கியின் ஊழியர்கள் தொடர்பாக மற்றும் அவர்கள் சார்பில் செலுத்தவேண்டிய் அனைத்து பங்களிப்புகளும் வரிகளும் மற்றும் அரசாங்கத்திற்கு மற்றும் ஏனைய பொருத்தமான முறைமைப்படுத்தல் மற்றும நியதிச்சட்ட அதிகாரசபைகளுக்கு வங்கியினால் செலுத்தவேண்டிய ஏனைய அனைத்து தெரிந்துகொண்ட நியதிச்சட்ட நிலுவைகளும் நிதி நிலைமைக் கூற்றுத் திகதியில் செலுத்தப்பட்டுள்ளன மற்றும் பொருத்தமானவிடத்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கணக்காய்வு அறிக்கை

வங்கியின் கணக்காய்வாளராக கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்கள் காணப்படுவதுடன் அவர் வங்கியின் நிதிக் கூற்றுக்களில் இறுதி அபிப்பிராயத்தினை வழங்குகின்றார்.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களுக்கு வங்கியின் அனைத்து பதிவுகளும், பணிப்பாளர்கள் சபையினால் நிதிக் கூற்றுக்கள் உள்ளங்கலாக கிடைக்கப்பெற்றுள்ளததுடன், அவர்கள் பொருத்தமானதென கருதும் பரிசீலனைகளை மேற்கொள்வதற்கு ஒவ்வொரு வாய்ப்பும் வழங்கப்பட்டதுடன், இவையனைத்தையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் திணைக்களம் பரிசோதித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதியியல் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் இந்த ஆண்டறிக்கையின் பக்கம் 69 இல் காணப்படும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களது முக்கிய அக்கறைகள்

SMIB இன் பணிப்பாளர்கள் தொடர்பாக வருட இறுதியின் போது அல்லது வருடத்தின்போது எந்நேரத்திலும் உளதான, நேரடியாகவோ அல்லது மறைமுகமாவோ, வங்கி ஒரு தரத்தவராகவுள்ள முக்கிய ஒப்பந்தத்தில் ஒரு பணிப்பாளரோ அல்லது வங்கியின் முன்னாள் பணிப்பாளரோ ஒரு பொருண்மையான அக்கறையினைக் கொண்டிருத்தலாகாது என்பது உறுதிப்படுத்தப்படல் வேண்டும். வருட இறுதியின் போது அல்லது வருடத்தின்போது எந்நேரத்திலும் உளதான, நேரடியாகவோ அல்லது மறைமுகமாவோ, வங்கி ஒரு தரத்தவராகவுள்ள முக்கிய ஒப்பந்தத்தில் ஒரு பணிப்பாளரோ அல்லது வங்கியின் முன்னாள் பணிப்பாளரோ ஒரு பொருண்மையான அக்கறையினைக் கொண்டிருக்கவில்லை.

சட்டரீதியான கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள் அவர்களது அறிவுக்கும் நம்பிக்கைக்கும எட்டிய வகையில், நிதி நிலைமைக் கூற்று திகதியில் வங்கியினால் செலுத்தப்படவேண்டிய அனைத்து பொருத்தமான முறைமைப்படுத்தல் மற்றும சட்டரீதியான அதிகாரசபைகள் தொடர்பான அனைத்து சட்டரீதியான கொடுப்பனவுகளையும் செலுத்தியுள்ளது அல்லது பொருத்தமானவிடத்து ஏற்பாடு செய்துள்ளது. பணிப்பாளர்கள் இந்த கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள அவர்களது பொறுப்புக்களை நிறைவேற்றியுள்ளார்கள் என்ற கருத்தினைக் கொண்டுள்ளார்கள்.

சபையின் கட்டளையின் பிரகாரம்,

டிலானி அலகக்கோன்
சபையின் செயலாளர்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. BAN/F/SMIB/FS/2023/12	ඔබේ අංකය / உமது இல. / Your No.	දිනය / திகதி / Date 16 May 2024

தலைவர்

அரச ஈட்டு முதலீட்டு வங்கி

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 இன் பிரகாரம் 31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டம் மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் (“வங்கி”) 2023 டிசம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று மற்றும் உரித்துவத்திலான மாற்றங்களிலான கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளின் தகவல்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களையும் உள்ளடக்கியதான 2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதியியல் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

வங்கியின் 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இதனுடன் இணைந்த நிதிக் கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව | இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. | No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொண்டேன் (ளுடுயுரளுள). இந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

1.3 வங்கியின் 2023 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

ஏனைய தகவல்கள், வங்கியின் 2023 ஆண்டறிக்கையிலுள்ள தகவல்களை உள்ளடக்குகின்றன ஆனால் அவை நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதனிலான எனது கணக்காய்வாளரின் அறிக்கையினை உள்ளடக்கவில்லை ஏனெனில் இந்த கணக்காய்வாளரின் அறிக்கை திகதிக்கு பின்னர் அவை எனக்கு கிடைக்கப்பெறும் என்று எதிர்பார்ப்பதனலாகும். ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாளியாயுள்ளது.

நிதிக் கூற்றுக்களிலான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்காததுடன் அதில் நான் எந்த விதமான உறுதிமொழி தீர்மானத்தையும் வெளிப்படுத்தவில்லை.

நிதிக் கூற்றுக்களின் எனது கணக்காய்வு தொடர்பில் எனது பொறுப்பானது, மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை, அவை கிடைக்கப்பெறும்போது, வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்வதில் ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் பொருண்மையாக வேறுபட்டுள்ளதா அல்லது கணக்காய்வில் நான் பெற்றுக்கொண்ட அறிவு அல்லது இல்லாவிடின் பொருண்மையான பிறழ்கூற்றாகத் தோன்றுகின்றதா என்பதை கருத்திலெடுப்பதாகும்.

நான் வங்கியின் 2023 ஆண்டறிக்கையினை வாசிக்கும்போது, அவற்றில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் காணப்படுகின்றன என நான் தீர்மானத்திற்கு வந்தால், ஆளுகைக்கு பொறுப்பாயுள்ளோருக்கு திருத்தியமைப்பதற்காக அவ்விடயத்தினை நான் அறியப்படுத்தல் வேண்டும். மேலும் பொருண்மையான திருத்தப்படாத பிறழ்கூற்றுக்கள் காணப்படுமாயின், அரசியலமைப்பின் உறுப்புரை 151 (6) இல் காணப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கையில் அவை உள்ளடக்கப்பட்டு உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படும்.

1.4 நிதிக் கூற்றுக்களின் ஆளுமைக்கு பொறுப்பாயுள்ளோரின் மற்றும் முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்ற நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளதுடன், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதனை இயலுமையாக்குவதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆளுமையினை பொறுப்பேற்றோர் வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாளியாவர்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) பிரிவின் பிரகாரம், வங்கியின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதனை இயலுமையாக்குவதற்காக, அதன் அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி ஒழுங்கான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்குமாறு வங்கி வேண்டப்படுகின்றது.

1.5 நிதிக் கூற்றுக்களது கணக்காய்விற்கான கணக்காய்வாளாரது பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்கள் முழுமையாக ஏதேனும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏதேனும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதா என்பது பற்றி சாதாரண உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஒரு கணக்காய்வாளரது அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். சாதாரண உறுதிமொழி என்பது ஒரு உயர் மட்டத்திலான உறுதிமொழி என்பதுடன், ஆனால் இது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்காய்வானது எந்நேரமும் ஒரு பொருண்மையான பிறழ் கூற்றினை, அவ்வாறு ஒன்று காணப்படுமாயின், இனங்காணும் என்ற உத்தரவாதமல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து எழலாம் என்பதுடன், அவை தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்று சாதாரணமான எதிர்பார்ப்பு காணப்படுமாயின் அவை பொருண்மையானதாக கருதப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் ஒரு பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை தீர்ப்பினை உபயோகித்தும் தொழில்முறை ஐயவாதத்தினையும் பராமரித்தேன், அத்துடன் நான்:

- நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களது இடர்களை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் அந்த இடர்களுக்கு மறுமொழியளிக்கும் கணக்காய்வு செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்தல் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குதற்கான அடிப்படைக்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். ஒரு தவறின் விளைவாக எழக்கூடிய இடரிலும் பார்க்க மோசடியின் விளைவாக ஒரு பொருண்மையான பிறழ் கூற்றினை இனங்காணாத இடரானது உயர்வானதாகும். ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே விடுபடல், பிறழ் கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மேலாணை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.

- வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மையில் ஒரு அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்கன்றி, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளில் ஒரு புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ளல்.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைளின் பொருந்துதன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட இது தொடர்பான வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்தல்.

- முகாமைத்துவத்தின் நிறுவன தொடர்நிலை அடிப்படையிலான கணக்கீட்டுப் பயன்பாட்டின் பொருந்துதன்மை மற்றும் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதற்கான வங்கியின் ஆற்றலில் கருதத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பவற்றின் அடிப்படையில் நிறைவுசெய்தல். ஒரு பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவுசெய்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் நான் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதின்றிக் காணப்பட்டால் எனது அபிப்பிராயத்தினை திருத்தவேண்டியுள்ளது. எனது கணக்காய்வாளரது அறிக்கை திகதியிடப்பட்ட நாள் வரைக்குமான பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் எனது நிறைவுறுதல்கள் காணப்படும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் வங்கி நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதனை நிறுத்த காரணமாயிருக்கலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்களாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்னிலைப்படுத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன், நிதிக் கூற்றுக்கள், அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது நியாயமான முன்னிலைப்படுத்தலை அடையும் விதத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்கின்றது.

- ஆளுமை தொடர்பான பொறுப்பாளிகளுடன் ஏனைய விடயங்களுக்கிடையில், எனது கணக்காய்வின்போது உள்ளகக் கட்டுப்பாடுகளில் நான் கண்டுபிடித்த ஏதேனும் கருதத்தக்க குறைகள் உள்ளடங்கலாக கருதத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்து தொடர்புகொண்டேன்.

2. ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் பின்வரும் தேவைப்பாடுகளுக்காக குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன்

2.1.1 கணக்காய்விற்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுள்ளேன் மற்றும் எனது பரிசீலனையிலிருந்து, 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 (ஏ) இன் தேவைக்கேற்ப வங்கியானது முறையான கணக்கீட்டு பதிவுகளை வைத்துள்ளதான தோற்றத்தை வழங்குகின்றது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iii) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (ஊ) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றன.

2.2 பொருண்மையான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள செயலாற்றப்பட்ட செயன்முறைகள் மற்றும் பெற்றுக்கொண்ட சான்றுகளின் அடிப்படையில் எனது கவனத்திற்கு பின்வருவன எதுவும் வரவில்லை;

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (டி) பிரிவின் தேவைக்கேற்ப வழக்கமான வணிக நிகழ்வுகளுக்கு அப்பால் வங்கியினது ஆளுமை அங்கத்தின் யாரேனும் அங்கத்தவர் வங்கியினால் செய்து கொள்ளப்பட்ட எவ்வித ஒப்பந்தத்திலும் ஏதேனும் நேரடியான அல்லது மறைமுகமான நலன்களை கொண்டிருந்தார் என குறிப்பிடுவதற்கு.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எவ்) பிரிவின் தேவைக்கேற்ப ஏதேனும் பிரயோகிக்கத்தக்க எழுத்துமூலச் சட்டம், வங்கியினது ஆளுமை அங்கத்தினால் வழங்கப்பட்ட பொதுவான மற்றும் விசேட பணிப்புரைகளுக்கு வங்கி இணக்கப்பாடு காணவில்லை என குறிப்பிடுவதற்கு;

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஜி) பிரிவின் தேவைக்கேற்ப வங்கியானது அதன் அதிகாரங்கள், செயலாற்றுகைகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றவில்லை என குறிப்பிடுவதற்கு;

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எச்) பிரிவின் தேவைக்கேற்ப கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் மற்றும் பிரயோகிக்கத்தக்க சட்டங்களுக்கு ஏற்றாற்போல் வங்கியின் வளங்கள் சிக்கனமாக, திறன்பட மற்றும் பயனுறுதிமிக்க விதத்தில் பெறப்படவில்லை மற்றும் பயன்படுத்தப்படவில்லை என குறிப்பிடுவதற்கு.

டபிள்யு. பி. சி. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

நிதி நிலைமைக் கூற்று

டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது	குறிப்பு	2023 ரூ.	2022 ரூ.
சொத்துக்கள்			
காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள்	13	122,600,853	126,480,437
வங்கிகளுடனான வைப்பீடுகள்	14	2,923,132,097	13,002,272,044
நிதியியல் சொத்துக்கள் - இ.ந.நி.பெ.	15	3,552,533,227	-
நிதியியல் சொத்துக்கள் - AC			
- கடன்களும் முற்பணங்களும்	16.1	38,603,322,207	39,267,237,754
- கடன் மற்றும் ஏனைய கருவிகள்	17	12,162,743,730	2,574,993,439
நிதியியல் சொத்துக்கள் - ஏ.வி.வ.நி.பெ.	18	5,379,078	5,379,078
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	19	171,651,164	78,212,808
பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள்	33.1	156,519,188	201,736,713
ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள்	20	745,677,898	632,156,451
ஏனைய சொத்துக்கள்	21	622,951,236	1,076,476,258
மொத்தச் சொத்துக்கள்		59,066,510,678	56,964,944,983
பொறுப்புக்கள்			
வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை	22	2,732,792	23,380,935
பெறுமதி குறைப்புக் கிரயத்தில் நிதிப் பொறுப்புக்கள்			
- வைப்பீட்டாளர்களுக்கு செலுத்தவேண்டியவை	23	52,138,134,453	49,139,971,357
- கடன் பிணையங்களின் உரித்துடைமையாளர்களுக்கு செலுத்தவேண்டியவை		-	-
- ஏனைய கடன் வழங்குனர்களுக்கு செலுத்தவேண்டியவை	23	178,986,770	278,050,561
ஊழியர் நலன் பொறுப்பு	24	597,674,223	521,826,703
வருமான வரிப் பொறுப்பு	25	-	134,000,281
ஏனைய பொறுப்புக்கள்	25	694,813,406	393,230,439
மொத்த பொறுப்புக்கள்		53,612,341,643	50,490,460,277
உரித்துவம்			
கூறப்பட்ட மூலதனம் / ஒதுக்கப்பட்ட மூலதனம்	26	889,812,899	889,812,899
சட்டரீதியான ஒதுக்க நிதியம்	27	306,650,839	306,650,838
நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகள்	28	3,179,896,294	4,200,211,965
ஏனைய ஒதுக்கங்கள்	29	1,077,809,004	1,077,809,004
மொத்த உரித்துவம்		5,454,169,036	6,474,484,706
மொத்த உரித்துவமும் பொறுப்புக்களும்		59,066,510,678	56,964,944,983

சான்றளிப்பு:
இந்த நிதிக் கூற்றுக்கள் 31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் அலுவல்களில் மற்றும் அத்திகதியில் நிறைவடைந்த ஆண்டிற்கான அதன் இலாபத்தில் மெய்யான மற்றும் நியாயமான கருத்தினையும் வழங்குகின்றன.

திரு. கே. எல். என். ஏ. பெரேரா
பிரதிப் பொது முகாமையாளர் - நிதி மற்றும் திட்டமிடல்

பணிப்பாளர்கள் சபையானது இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் முன்னிலைப்படுத்தலுக்கும் பொறுப்பாளியாயுள்ளார்கள்.
சபைக்காக மற்றும் சபையின் சார்பில் அங்கீகரிக்கப்பட்டு கையொப்பிமிடப்பட்டுள்ளது,

திரு. ஜே. எம். சூசைதாசன்
தலைவர்பணிப்பாளர்

பேராசிரியர் ஏ. எம். பெரேரா
பணிப்பாளர்

திரு. ஐ. டி. அசுரமன்ன
பொது முகாமையாளர் / பி.நி.அ.

29.04.2024

வருமானக் கூற்று

டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது	குறிப்பு	2023 ரூ.	2022 ரூ.
வட்டி வருமானம்	4	9,324,132,408	7,401,968,299
வட்டிச் செலவினம்	4	(8,732,594,619)	(5,462,981,408)
தேறிய வட்டி வருமானம்	4	591,537,789	1,938,986,892
கட்டண மற்றும் தரகு வருமானம்	5	96,293,245	91,724,320
கட்டண மற்றும் தரகுச் செலவினம்		-	-
தேறிய கட்டண மற்றும் தரகு வருமானம்	5	96,293,245	91,724,320
நி.சொ. இலிருந்து இ.ந.நி.பெ. இல் தேறிய நியாயப் பெறுமதி இலாபங்கள் / (நட்டங்கள்)	6	157,533,227	(2,134,408)
தேறிய ஏனைய செயற்பாட்டு வருமானம்	7	21,943,478	25,569,713
மொத்த செயற்பாட்டு வருமானம்		867,307,739	2,054,146,517
வலுக்குன்றல் கட்டணங்கள்	8	(561,392,330)	(365,747,028)
தேறிய செயற்பாட்டு வருமானம்		305,915,409	1,688,399,489
ஆளணிச் செலவுகள்	9	(1,015,292,893)	(1,089,955,263)
பெறுமானத்தேய்வு மற்றும் பெறுமதி குறைப்புச் செலவினங்கள்	10, 33.2	(99,608,144)	(96,575,584)
ஏனைய செலவினங்கள்	10	(355,869,747)	(353,428,278)
VAT, NBT & DRL இற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் / (நட்டம்)		(1,164,855,374)	148,440,364
நிதிச் சேவைகளிலான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT)	34	(5,125,869)	(231,066,646)
சமூகப் பாதுகாப்புக் கட்டணம் (SSCL)		5,200,577	(6,378,836)
வரிக்கு முந்திய இலாபம் / (நட்டம்)		(1,164,780,667)	(89,005,118)
வருமான வரிச் செலவினங்கள்	11	161,649,247	290,803,108
ஆண்டிற்கான இலாபம் / (நட்டம்)		(1,003,131,419)	201,797,990

விரிவான வருமானக் கூற்று

	2023 ரூ.	2022 ரூ.
ஆண்டிற்கான இலாபம் / (நட்டம்)	(1,003,131,419)	201,797,990
வருமானக் கூற்றிற்கு மீள்வகைப்படுத்தப்படும் உருப்படிகள்		
நிதிச் சொத்துக்களின் மீள்அளவீட்டிலான இலாபங்கள் மற்றும் நட்டங்கள்	-	-
வருமானக் கூற்றிற்கு மீள்வகைப்படுத்தப்படுத்தப்படாத உருப்படிகள்		
தொழிலுக்கு பின்னரான நலன் கடப்பாடுகளின் மீள் அளவீடு	(24,548,931)	(45,905,377)
நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடுகளிலான காப்பீட்டுக் கணிப்பு இலாபங்கள் மற்றும் நட்டங்களிலான ஒத்திவைக்கப்பட்ட வரி விளைவு	7,364,679	13,771,613
ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம்	(1,020,315,671)	169,664,226

உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று

டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது	ஒதுக்கப்பட்ட மூலதனம்	சட்டரீதியான ஒதுக்கம்	மூலதன ஒதுக்கம்	பொது ஒதுக்கம்	உரித்து இழப்பீட்டு நிதியம்	நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகள்	மொத்தம்
31.12.2021 இல் உள்ளவாறான மீதி	889,812,899	296,560,939	393,498,004	683,280,000	1,031,000	4,019,389,735	6,283,572,576
முன்னைய காலத்திற்கான செம்மையாக்கல்கள்						21,247,904	21,247,904
ஆண்டிற்கான தேறிய இலாபம்						201,797,990	201,797,990
ஏனைய விரிவான வருமானம்						(32,133,764)	(32,133,764)
ஆண்டின் போதான மாற்றல்		10,089,899				(10,089,899)	-
திரண்ட நிதியத்திற்கான மாற்றல்						-	-
31.12.2022 இல் உள்ளவாறான மீதி	889,812,899	306,650,838	393,498,004	683,280,000	1,031,000	4,200,211,965	6,474,484,706
முன்னைய காலத்திற்கான செம்மையாக்கல்கள							-
ஆண்டிற்கான தேறிய இலாபம்						(1,003,131,419)	(1,003,131,419)
ஏனைய விரிவான வருமானம்						(17,184,252)	(17,184,252)
ஆண்டின் போதான மாற்றல்		-				-	-
திரண்ட நிதியத்திற்கான மாற்றல்						-	-
31.12.2023 இல் உள்ளவாறான மீதி	889,812,899	306,650,838	393,498,004	683,280,000	1,031,000	3,179,896,294	5,454,169,035

காசுப் பாய்ச்சல் கூற்று

டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது	01/01/2023 முதல் 31/12/2023 வரைக்கும் ரூ.	01/01/2022 முதல் 31/12/2022 வரைக்கும் ரூ.
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்		
பெறப்பட்ட வட்டி	8,921,615,611	6,532,818,744
வட்டிக் கொடுப்பனவுகள்	(9,337,465,140)	(3,983,524,366)
தேறிய தரகுப் பெறுகைகள்	96,293,245	110,156,617
ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள்	(846,574,251)	(1,139,105,522)
நிதிச் சேவைகளிலான VAT, DLR மற்றும் NBT ,ESC	(5,125,869)	(224,608,218)
ஏனைய செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான பெறுகைகள்	5,250,254	3,852,616
ஏனைய செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான கொடுப்பனவுகள்	(302,959,071)	(393,178,818)
செயற்பாட்டு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களிலான மாற்றங்களின் முன்னர் செயற்பாட்டு இலாபம்	(1,468,965,222)	906,411,053
செயற்பாட்டு சொத்துக்களிலான (அதிகரிப்பு)/ குறைப்பு		
பெறுமதி குறைப்புக் கிரயத்தில் நிதிச் சொத்துக்கள் - கடன்களும் முற்பணங்களும்	448,871,346	(1,413,593,730)
ஏனைய சொத்துக்கள்	473,203,052	(259,037,405)
	922,074,398	(1,672,631,135)
செயற்பாட்டு பொறுப்புக்களிலான அதிகரிப்பு / (குறைப்பு)		
பெறுமதி குறைப்புக் கிரயத்தில் நிதிப் பொறுப்புக்கள் - வைப்பாளர்களுக்கு செலுத்தவேண்டியவை	3,607,292,902	1,996,748,599
பெறுமதி குறைப்புக் கிரயத்தில் நிதிப் பொறுப்புக்கள் - ஏனைய கடன் வழங்குனர்களுக்கு செலுத்தவேண்டியவை	(96,420,481)	(90,186,677)
ஏனைய பொறுப்புக்கள்	228,785,113	(56,713,935)
	3,739,657,534	1,849,847,988
வருமான வரிக்கு முன்னர் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசு	3,192,766,710	1,083,627,905
செலுத்தப்பட்ட பணிக்கொடை	(62,358,388)	
செலுத்தப்பட்ட வருமான வரிகள்	(78,507,801)	(85,810,622)
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு	3,051,900,521	997,817,283
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்		
பெறப்பட்ட பங்கிலாபம்	18,765,120	21,324,000
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனையிலிருந்தான வருவாய்	885,920	554,282
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு	(151,172,660)	(40,389,658)
நிதிக் கருவிகளின் விற்பனை மற்றும் முதிர்விலிருந்தான தேறிய வருவாய்கள்	(2,903,610,343)	(1,004,675,159)
முதலீட்டு நடவடிக்கைளில் (பயன்படுத்தப்பட்ட)/ இருந்தான தேறிய காசு	(3,035,131,963)	(1,023,186,536)
நிதியளித்தல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்		
தாழ்நிலைக் கடனின் மீள்செலுத்துகை	-	-
திரண்ட நிதியத்திற்கான கொடுப்பனவுகள்	-	-
நிதியளித்தல் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு	-	-
காசு மற்றும் காசுக்குச் சமனானவைகளிலான தேறிய அதிகரிப்பு / (குறைப்பு)	16,768,559	(25,369,253)
காலத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசும் காசுக்கு சமனானவைகளும்	103,099,502	128,468,755
காலத்தின் இறுதியில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்	119,868,061	103,099,502
காசும் காசுக்குச் சமனானவைகளின் கணக்கிணக்கம்		
காசும் குறுங்கால நிதியங்களும்	122,600,853	126,480,437
வங்கிகளிடமிருந்தான கடன் பெறுகைகள் (மே.ப.)	(2,732,792)	(23,380,935)
காலத்தின் இறுதியில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்	119,868,062	103,099,502

கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளும்

1. கூட்டாண்மைத் தகவல்கள்

1.1. பொதுவானவை

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியானது 1931 இன் 16ஆம் இலக்க கட்டளையின் மூலம் 6 டிசம்பர் 1931 இல் இலங்கை அரச ஈட்டு வங்கியாக ஒருங்கிணைக்கப்பட்டது. அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியானது 1975 இன் 13 ஆம் இலக்க அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின் மூலம் இலங்கை அரச ஈட்டு வங்கியினையும் 1943 இல் நிறுவப்பட்ட விவசாய கைத்தொழில் கடன் கூட்டுத்தாபனத்துடன் ஒன்றிணைக்கப்பட்டு உருவாகியது.
வங்கியானது அதன் செயற்பாடுகளை 1 ஜனவரி 1979 இல் ஆரம்பித்தது. வங்கியானது ஒரு உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியாக அங்கீகரிக்கப்பட்டதுடன் 1988 இன் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் பிரகாரம் 27 ஏப்ரல் 1998 இல் உரிமம் வழங்கப்பட்டது.

1.2. பிரதான நடவடிக்கைகளும் செயற்பாடுகளின் தன்மையும்

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியானது முக்கியமாக வீடமைப்புக் கடன் வழங்கலில் ஈடுபட்டதுடன் சமீபத்தில், எழுகின்ற போட்டித்தன்மைக்கு முகங்கொடுப்பதற்காக ஏனைய கடன் வதிகளான வாகனக் கடன்கள் மற்றும் தனிப்பட்ட கடன்களுக்கு பன்முகப்படுத்தியது.

1.3. பணிப்பாளர்களின் பொறுப்புக் கூற்று

1988 ஆன் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள், 1975 இன் 13 ஆம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டம் மற்றும இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLFRS மற்றும் LKAS) ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் பணிப்பாளர்கள் சபையானது இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் முன்னிலைப்படுத்தலுக்கும பொறுப்பாளியாயுள்ளது.

1.4. அங்கீகரிக்கப்பட்ட திகதி

31 டிசம்பர் 2022 இல் நிறைவடைந்த வருடத்திற்கான இந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை, கூட்டத்தில் வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் பிரகாரம், வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.
31 டிசம்பர் 2023 இல் உள்ள ஊழியர்களின் பலமானது 354 ஆக காணப்பட்டது (31 டிசம்பர் 2022 இல் 387)

2. கணக்கீட்டுக் கொள்கைகள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள், வேறுவகையில் குறிப்பிட்டாலன்றி, நிதிக் கூற்றுக்களை முன்னிலைப்படுத்தும்போது அனைத்து காலப்பகுதிகளுக்கும் தொடர்ந்து பிரயோகிக்கப்பட்டுள்ளன.

2.1 தயாரிப்பின் அடிப்படை

2.1.1 இணக்கப்பாட்டுக் கூற்றுக்கள்

31 டிசம்பர் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் விதிக்கப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (SLFRS and LKAS) பிரகாரம் தயாரிக்கப்பட்டு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன், 1988 இன 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டம் மற்றும் அதனினால் திருத்தங்களின் மூலம் வேண்டப்படும் தகவல்களுடன் இணங்கியுள்ளன.
இந்த நிதிக் கூற்றுக்கள், காசுப் பாய்ச்சலில் உள்ள தகவல்கள் தவிர்ந்த அட்டுறு அடிப்படை கணக்கீட்டினை பின்பற்றி தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு பயன்படுத்தப்பட்ட வடிவமைப்பு மற்றும் அதனிலான வெளிப்படுத்தல்கள், உரிமமளிக்கப்பட்ட வங்கிகளுக்கான வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு, முன்னிலைப்படுத்தல் மற்றும் பிரசுரத்திற்கு விதந்துரைக்கப்பட்ட வடிவமைப்பகளுடன் இணங்கியுள்ளன.

2.1.2 நிதிக் கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல்

வங்கியானது அதன் நிதி நிலைமைக் கூற்றினை பெரும்பாலும் திரவத்தன்மை வரிசையில் முன்னிலைப்படுத்துகின்றது. பின்வருவன காணப்பட்டால் மாத்திரமே நிதிச் சொத்துக்கள் நிதிப் பொறுப்புக்களும் ஈடுகட்டப்பட்ட தேறிய தொகையானது நிதி நிலைமைக் கூற்றில் அறிக்கையிடப்படுகின்றது. அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை ஈடுகட்டுவதற்கான ஒரு சட்டரீதியாக அமுலப்படுத்தக்கூடிய உரிமை மற்றும் ஒரு தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கான ஓர நோக்கம் இருப்பின் அல்லது சொத்துக்களை எய்தப்பெற்று அதேசமயம் பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்வதாயின் மாத்திரமே. வருமானம் மற்றும் செலவினங்கள் வருமானக் கூற்றில் ஈடுகட்டப்படவில்லை இது ஏதேனும் கணக்கீட்டு நியமம் அல்லது பொருள்விளக்கம் தேவைப்பட்டால் அல்லது அனுமதிக்கப்பட்டால் மற்றும் வங்கியின் கணக்கீட்டுக் கொள்கைகளில் விசேடமாக வெளிப்படுத்தப்பட்டாலன்றி ஈடுகட்ட இயலாது.

ஒவ்வொரு பொருண்மையான வகுப்பினை ஒத்த உருப்படிகளும் தனித்தனியாக நிதிக் கூற்றுக்களில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. ஒத்திருக்காத தன்மையுடைய உருப்படிகள் அல்லது செயற்பாடுகள், இலங்கை கணக்கீட்டு நியமம் - LKAS 1 ‘ நிதிக் கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல்’ இனால் பொருண்மையற்றவையாக அனுமதிப்பட்டாலொழிய அவை தனித்தனியாக முன்னிலைப்படுத்தப்படுகின்றன.

2.1.3 குறிப்பிடத்தக்க கணக்கீட்டு நியாயப்பாடுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள்

வங்கியின் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிக்கும் செயன்மறையில் முகாமைத்துவமானது நிதிக் கூற்றுக்களில் அங்கீகரித்த தொகைகளை தீர்மானிப்பதில் நியாயப்பாடு மற்றும் மதிப்பீடுகளை பயன்படுத்தியுள்ளது. நிச்சமற்றதன்மை உள்ளடங்கிய முக்கிய கணிசமான கணக்கீட்டு நியாயப்பாடுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் கீழே கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் அத்தகைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் அந்தந்த கொண்டுசெல்லும் தொகைகள் உரிய குறிப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

2.1.3.1 நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வகைப்படுத்தல்

SLFRS 9 இன் பிரகாரம், வங்கியின் முக்கியமாக கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிச் சொத்துக்கள் பல்வேறு வகைகளாக வகைப்படுத்தப்பட்டு அளவிடுவதற்கான நோக்கெல்லையினை வழங்குகின்றது. அவை பின்வரும் அளவுகோள்களின் அடிப்படையில் பெறுமதி குறைப்புக் கிரயத்தில், ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் (FVOCI) மற்றும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் (FVPL) அளவிடப்படுகின்றன. நிதிச் சொத்துக்களை முகாமைப்படுத்துவதற்கு நிறுவனத்தின் வணிக மாதிரியானது இவ்வாறானதாகும்.

2.1.3.2 நிதிக் கருவிகளின் நியாயப் பெறுமதி

நிதி நிலைமைக் கூற்றில் பதியப்பட்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களின் நியாயப் பெறுமதியானது துடிப்பான சந்தைகளிலிருந்து பெறமுடியாவிட்டால், அவை கணிதவியல் மாதிரிகளை பயன்படுத்துவதனை உள்ளடக்கிய பெறுமதி நுட்பங்கள் பயன்படுத்துகின்றன. இந்த மாதிரியகளின் உள்ளீடுகள் சாத்தியமானளவுக்கு அவதானிக்கக்கூடிய சந்தை தரவுகளிலிருந்து பெறப்படுகின்றன.

2.1.3.3 நிதிச் சொத்துக்களின் வலுக்குன்றல் நட்டங்கள்

அனைத்த வகையான நிதிச் சொத்துக்கள் பூரவிலுமான SLFRS 9 மற்றும் LKAS 39 அதிக இரண்டின் கீழான வலுக்குன்றல் நட்டங்களின் அளவீட்டிற்கு நியாயப்பாட்டின் தேவை காணப்படுவதுடன், குறிப்பாக, வலுக்குன்றல் நட்டங்களை தீர்மானிக்கும்போது எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் நேரம் மற்றும் பிணைச்சொத்து பெறுமதிகளின் மதிப்பீட்டுத் தொகை என்பன தேவைப்படுகின்றது. இதன் பிரகாரம், வங்கியானது ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் தனித்தனியாக முக்கியமான கடன்கள் மற்றும் முற்பணங்களை மீளாய்வு செய்கின்றது. இது வலுக்குன்றல் நட்டம் வருமானக் கூற்றில் ஏற்பாடு செய்யப்படவேண்டுமா என்பதற்காகும். குறிப்பாக வலுக்குன்றல் நட்டத்தினை தீர்மானிக்கும்போது எதிர்கால காசுப்பாய்ச்சலின் தொகை மற்றும் நேரம் என்பன முகாமைத்துவத்தின் நியாயப்பாட்டிற்கு தேவைப்படுகின்றன. இந்த மதிப்பீடுகள் பல்வேறு காரணிகள் பற்றிய அனுமானங்களின் அடிப்படையிலாகும், எனவே மெய்யான விளைவுகள் மாறுபடலாம், இதன்

விளைவாக மேற்கொள்ளப்பட்ட வலுக்குன்றல் தள்ளுபடியில் எதிர்காலத்தில் மாற்றங்களை ஏற்படுத்தலாம். தனித்தனியான வலுக்குன்றல் ஏற்பாடானது வலுக்குன்றலுக்கு தனித்தனியாக மதிப்பிடப்படும் நிதிச் சொத்துக்களுக்கு பிரயோகிக்கப்படுவதுடன் இது பெறுவதற்கு எதிர்பார்க்கும் எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் நிகழ்காலப் பெறுமதியில் முகாமைத்துவத்தின் சிறந்த மதிப்பீட்டின் அடிப்படையிலாகும். இந்த காசுப்பாய்ச்சல்களை மதிப்பீடு செய்வதில் முகாமைத்துவமானது கடன்பெறுனர்களின் நிதி நிலைமை பற்றியும் ஏதேனும் உள்ளார்ந்த பிணைச்சொத்தின் தேசிய எய்தப்பெறத்தக்க பெறுமதியின் நியாயப்பாட்டினையும் மேற்கொள்கின்றது. ஒவ்வொரு வலுக்குன்றிய சொத்தும் அதன் தகுதியில் மதிப்பிடப்படுகின்றது மற்றும் செயலாற்றப்படும் மூலோபாயம் மற்றும் மதிப்பிடப்பட்ட காசுப் பாய்ச்சல் மீட்கக்கூடியவையாக கருதப்படுகின்றன. ஒரு கூட்டு வலுக்குன்றல் ஏற்பாடானது தனித்தனியாக முக்கியமற்றதாக கருதப்படும் ஒரேமாதிரியான கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கு நிறுவப்பட்டுள்ளதுடன், தனித்தனியாக முக்கியமான சொத்துத் தொகுப்பு ஆனால் தனித்தனியான வலுக்குன்றலடைந்திருக்காதவையாக காணப்படுகின்றன.

SLFRS 9, இன் பிரகாரம் எதிர்பார்க்கப்படும் கடன் நட்டக் (எ.க.ந.) கணிப்பீடுகள் பல்வேறு மாற்றமடையும் உள்ளீடுகள் மற்றும் அவற்றின் ஒன்றையொன்று சார்ந்திருப்பவைகளது தெரிவு தொடர்பாக பல்வேறு எண்ணிக்கையிலான அனுமானங்களுடனான சிக்கலான மாதிரிகளுக்கான உள்ளீடுகளாகும். எ.க.ந. மாதிரிகளின் கூறுகள் கணக்கீட்டு நியாயப்பாடுகளாக கருதப்படுவதுடன் மதிப்பீடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன

- கடன் இடரில் ஒரு கணிசமான அதிகரிப்பு காணப்பட்டுள்ளதா என பண்பியலாக மதிப்பிடுவதற்கான வரன்முறை மற்றும் அவ்வாறு காணப்படுமாயின், நிதிச் சொத்துக்களுக்கான தள்ளுபடிகள் வாழ் நாள் எதிர்பார்க்கப்படும் கடன் நட்ட அடிப்படையிலாகும்.
- எ.க.ந. ஆனது ஒரு கூட்டு அடிப்படையில் மதிப்பிடப்படும்போது நிதிச் சொத்துக்களின் பகுதிபிரித்தல்
- எ.க.ந. மாதிரிகளின் அபிவிருத்தியானது, பல்வேறு புள்ளிவிபரவியல் சூத்திரங்கள் மற்றும் உள்ளீடுகளின் தெரிவு உள்ளடங்கலானவை.
- மொ.உ.உ. வளர்ச்சி, பணவீக்கம் போன்ற பாரிய பொருளாதார உள்ளீடுகளுக்கு இடையேயான இணைப்புகளின் தீர்மானித்தல்
- வட்டி வீதங்கள், பரிமாற்றல் வீதங்கள் மற்றும் வேலைவாய்ப்பின்மை மற்றும் தவறுவதற்கான சாத்தியத்திலான (த.சா.)
- தவறுதலிலான வெளிப்பாடு (த.வெ.) மற்றும் தவறுதல் வழங்கப்பட்ட நட்டம் (த.வ.ந.)
- எ.க.ந. மாதிரிகளினுள் பொருளாதார உள்ளீடுகளை இயக்குவதற்காக முன்னோக்கிய பாரிய பொருளாதார காட்சி நிலைகளின் தெரிவு மற்றும் அவற்றின் சாத்தியப்பட்டு நிறையிடல்கள்.

2.1.4 முழுதாக்குதல்

நிதியியல் கூற்றில் காணப்படும் தொகைகள் கிட்டிய ரூபாய்க்கு முழுதாக்கப்பட்டுத் தரப்பட்டுள்ளன. எனினும் டூமுயுளு-1 நிதியியல் கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல் நியமத்தில் குறிப்பிடப்படுள்ள முனஒரு சில தரவுகள் வேறுவிதமாக குறிப்பிட்டாலன்றி விலக்களிக்கப்பட்டுள்ளன

2.1.5 அளவீட்டின் அடிப்படை

நிதி நிலைமைக் கூற்றில் நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட பின்வரும் பொருண்மையான உருப்படிகள் தவிர, நிதிக் கூற்றுக்கள வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

i. ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியியல் அளவிடப்படும் நிதிச் சொத்துக்கள்

ii. இலாபம் அல்லது நட்டத்தினூடாக அங்கீகரிக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

iii. இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியியல் பெயரிடப்பட்ட நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும்

iv. ஊழியர் நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாடுகளுக்கான பொறுப்பானது, நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் நிகழ்காலப் பெறுமதியிலிருந்து திட்டத்தின் சொத்துக்களின் நியாயப் பெறுமதி கழிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படுகின்றது.

2.1.6 நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி

வங்கியின் முகாமைத்துவமானது ஒரு நிறுவனச் செயல்நிலை தொடாச்சியாக தொடர்வதற்கான அதன் ஆற்றலில் மதிப்பீட்டின் மேற்கொண்டுள்ளதுடன், எதிர்பார்க்கக்கூடிய எதிர்காலத்திற்கு வணிகத்தினை தொடர்வதற்கான வளங்களை அது கொண்டுள்ளது என திருப்திபடுகின்றது. மேலும், நிறுவனச் செயல்நிலையினை தொடர்வதில் வங்கியின் ஆற்றலில் கணிசமான ஐயப்பாட்டினை ஏற்படுத்தக்கூடிய ஏதேனும் பொருண்மையான உறுதியின்மைகள் குறித்து முகாமைத்துவம் அறிந்திருக்கவில்லை. எனவே, நிதிக் கூற்றுக்கள் தொடர்ந்தும் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன.
இந்த மதிப்பீட்டினை மேற்கொள்வதில், முகாமைத்துவமானது வங்கியின் வணிகச் செயற்பாடுகளுக்கு கோவிட்-19 தொற்றின் சாத்தியமான வீழ்ச்சிகளை கருத்திலெடுத்துள்ளது. இதன் பிரகாரம், முகாமைத்துவமானது நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி பொருத்தமானது என திருப்தியடைந்துள்ளது.

2.1.7 பொருண்மை மற்றும் திரள்வு

ஒவ்வொரு பொருண்மையான வகுப்பு ஒத்த உருப்படிகளும நிதிக் கூற்றில் வேறு வேறாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. ஒத்திருக்காத தன்மையுடைய உருப்படிகள் அல்லது செயற்பாடுகள் அவை இலங்கை கணக்கீட்டு நியமமம் - LKAS 01 “நிதிக் கூற்றுக்களின் முன்னிறுத்தம்” இனால் அனுமதிக்கப்பட்டவாறு பொருண்மையற்றவையாக காணப்பட்டாலொழிய, வேறு வேறாக முன்னிலைப்படுத்தப்படுகின்றன.

2.1.8 ஒப்பிடப்படும் தகவல்கள்

அளவுசார், எடுத்துரைப்பு மற்றும் விளக்கமான தகவல்கள் உள்ளடங்கலான ஒப்பீட்டுத் தகவல்கள் முன்னைய காலத்தின் நிதிக் கூற்றுக்கள தொடர்பாக வெளிப்படுத்தப்படுவதுடன், இது நடைமுறையாண்டின் நிதிக் கூற்றுக்களின் புரிந்துணர்வினை மேம்படுத்தவும் மற்றும் காலங்களுக்கிடையேயான ஒப்பிடப்படும் தன்மையினை மேம்படுத்துவதற்கும் ஆகும். ஒப்பிடப்படும் தகவல்கள் சிறப்பான முன்னிலைப்படுத்தலுக்க் மற்றும் நடைமுறையாண்டின் முன்னிலைப்படுத்தலுடன் ஒத்திருப்பதற்காக அவசியமாயின மீள்வகைப்படுத்தப்படுகின்றன.

2.2 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் - நிதிக் கருவிகளுக்கான வருமானம் மற்றும் செலவினத்தின் அங்கீகாரம்

2.2.1 வட்டி வருமானமும் செலவினங்களும்

வருவாயானது நம்பகமாக அளவிடப்படக்கூடிய மற்றும் வங்கிக்கு பொருளாதார நலன்கள் பாய்ச்சப்படும் சாத்தியம் காணப்படும் அளவிற்கு வருவாயானது அங்கீகரிக்கப்படுகின்றது. “வருமானம் மற்றும் செலவினங்களின்” விபரங்கள் குறிப்புகள் 3 மற்றும் 4 இல் வழங்கப்பட்டுள்ளன.

விளைவுறு வட்டி வீத முறை
பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவிடப்படும் அனைத்து நிதிக் கருவிகளுக்கு மற்றும் இ.ந.நி. பெ. இல் பெயரிடப்பட்ட நிதிக் கருவிகளுக்கு வட்டி வருமானமானது விளைவுறு வட்டி வீத முறையினை (வி.வ.வீ.) பயன்படுத்தி பதிவு செய்யப்படுகின்றன. SLFRS 9 இன கீழ் ஏ.வி.வ.நி. பெ. இல் அளவிடப்படும் வட்டியைக் கொண்ட நிதிச் சொத்துக்களிலான வட்டி வருமானம், அதேபோன்று LKAS 39 இன் கீழ் விற்பனைக்கு கிடைக்கத்தக்கவை அல்லது முதிர்வுவரை வைத்திருக்கப்படுபவையாக வகைப்படுத்தப்பட்ட வட்டியைக் கொண்ட நீக் சொத்துக்களும் வி.வ.வீ. முறையினை பயன்படுத்தி பதிவுசெய்யப்படுகின்றன. வி.வ.வீ. என்பது நிதிக் கருவிகளின் எதிர்பார்க்கப்படும் வாழ்நாளுடான மதிப்பிடப்பட்ட எதிர்கால் காசுப் பெறுகைகளுக்கு துல்லியமாக கழிவிறக்கம் செய்யும் வீதமாகும் அல்லது பொருத்தமானபோது நிதிச் சொத்தின் தேறிய கொண்டுசெல்லல் தொகைக்கு, ஒரு குறுகிய காலத்திற்கு செய்வதாகும்.

வி.வ.வீ. (மற்றும் எனவே, சொத்தின் பெறுமதி குறைக்கப்பட்ட கிரயமாகும்) ஒரு

கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளும்

கையகப்படுத்தலின்போதான ஏதேனும் கழிவு அல்லது வட்டம், வி.வ.வீ. இன் ஒருங்கிணைந்த பாகமான கட்டணங்கள் மற்றும் கிரயங்கள் கருத்திலெடுக்கப்பட்டு கணிப்பிடப்படுகின்றது. கடனிக் எதிர்பார்க்கும் வாழ்நாள் மீது ஒரு நிலையான விளைவு வீதத்தின் சிறந்த மதிப்பீட்டினை பிரதிநிதித்துவம் செய்யும் விளைவு வீதத்தினை பயன்படுத்தி வட்டி வருமானத்தினை வங்கி அங்கீகரிக்கின்றது. எனவே, அது பல்வேறு கட்டங்களில் அறவிடப்பட்ட சாத்தியமான வித்தியாசமான வட்டி வீதங்களின் விளைவினை அங்கீகரிக்கின்றது மற்றும் கருவியின் வாழ்நாள் சுழற்சியின் ஏனைய பண்புகளையும் (முற்கொடுப்பனவுகள், தண்ட வட்டி மற்றும் கட்டணங்கள் உள்ளடங்கலாக) உள்ளடக்குகின்றது.

கடன் இடர் தவிர்த்த காரணங்களுக்காக நிதிச் சொத்தின் காசுப்பாய்ச்சல்கள் தொடர்பான எதிர்பார்ப்புகள் திருத்தியமைக்கப்படுமாயின், அந்த செம்மையாக்கல்கள் நிதி நிலைமைக் கூற்றில் சொத்தின் கொண்டுசெல்லல் தொகைக்கான சாத்தியமான அல்லது எதிர்மறையான செம்மையாக்கலாக, வட்டி வருமானத்தில் ஒரு அதிகரிப்புடன் அல்லது குறைத்தலுடன் பதிவு செய்யப்படுகின்றது. செம்மையாக்கலானது அதன் பின்னர், வருமானக் கூற்றில் வட்டி அல்லது ஒத்த வருமானத்தினூடாக பெறுமதி குறைப்பு செய்யப்படுகின்றன. .

2.2.2 பங்கிலாப வருமானம்

பங்கிலாப வருமானமானது கொடுப்பனவினை பெறுவதற்கான வங்கியின் உரிமையானது நிறுவப்படும்போது அங்கீகரிக்கப்படுகின்றது குறிப்பு இலக்கம் 7.

2.2.3 தேறிய வர்த்தக வருமானம்

வர்த்தக நடவடிக்கைகளிலிருந்து எழுகின்ற விளைவுகள், இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்ட உரித்துவங்கள் மற்றும் நிலையான வருமானப் பிணையங்களின் முதலீட்டிலிருந்து வருகின்ற எய்தப்பெற்ற இலாபங்கள் அல்லது நட்டங்களை உள்ளடக்குவதுடன், அத்தகைய கருவிகளில் நியாயப் பெறுமதியிலான மாற்றங்களின் காரணமாக எழுகின்ற எய்தப்பெறாத இலாபங்கள் மற்றும நட்டங்களும் ஆகும்.

2.2.4 ஏனைய வருமானம்

ஏனைய வருமானமானது ஒரு அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது. குறிப்பு இலக்கம் 7.

2.2.5 ஏனைய செலவினங்கள்

ஏனைய அனைத்து செலவினங்களும் எந்தக் காலம் தொடர்பாக ஆட்படுவதைப் பொறுத்து நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்படுகின்றன. வணிகத்தின் செயற்பாட்டில் மற்றும் பயனுள்ள விதத்தில் மூலதனச் சொத்துக்களைப் பராமரிப்பதில் ஆட்படும் செலவினமானது வருடததிற்கான வங்கியின் இலாபத்திற்கு வருவதில் வருவாய்க்கு செலவு வைக்கப்படுகின்றன. ஏனைய செலவினங்கள் பற்றிய விபரங்கள் குறிப்ப இலக்கம் 10 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

2.2.6 SLFRS 15 – வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து வருவாய்

SLFRS 15 எவ்வளவு மற்றும் எப்போது வருவாய் அங்கீகரிக்கப்படல் வேண்டும் என தீர்மானிப்பதற்கு ஒரு விரிவான வரன்முறையினை நிறுவுகின்றது. புதிய பண்புசார் மற்றும் அளவுசார் வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள், வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து எழுகின்ற வருவாய் மற்றும் காசுப் பாய்ச்சல்களின் தன்மை, தொகை, நேரம் மற்றும் உறுதியின்மை ஆகியவற்றை நிதிக் கூற்றுக்களின் பயனாளர்கள் புரிந்துகொள்வதனை இயலுமையாக்கும் நோக்கத்தைக் கொண்டவையாகும். நிறுவனங்கள் எப்போது மற்றும் எந்த தொகையினை வருவாயான அங்கீகரிப்பது என்று தீர்மானிப்பதற்கு ஐந்து கட்ட மாதிரியினை பிரயோகிக்கின்றன. இம்மாதியானது நிறுவனம் உரிமையுடையதாக எதிர்பார்க்கும் தொகையில் வாடிக்கையாளருக்கு பொருட்கள் மற்றும் சேவைகளின் கட்டுப்பாட்டினை ஒரு நிறுவனம் மாற்றல் செய்யும்போது வருவாய் அங்கீகரிக்கப்படுவதாக குறிப்பிடுகின்றது. சில வரன்முறைகள் சந்திப்பதனைப் பொறுத்து வருவாயானது அங்கீகரிக்கப்படுகின்றது.

2.3 வரிச் செலவினம்

வங்கியானது வருமான வரி மற்றும நிதிச் சேவைகளிலான பெறுமதி சேர்த்தல் வரி உள்ளடங்கலான ஏனைய வரிகளுக்கு உட்பட்டதாகும். நிதிக் கூற்றுக்களில் SLFRS அமுல்படுத்தலின் கவனிப்பில் வரி வழிகாட்டிகள் மற்றும் வரிகளை விதிப்பதன் நோக்கத்திற்காக வரிவிதிக்கத்தக்க இலாபம் ஆகியவை முடிவுசெய்யப்படாத நிலையில் நடைமுறை, ஒத்திவைக்கப்பட்ட மற்றும் ஏனைய வரிகளை தீர்மானிப்பதற்கு குறிப்பிடத்தக்க நியாயப்பாடுகள் தேவைப்படுகின்றன. இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது வரிச் சட்டங்களின் பிரயோகத்தின் பொருள்விளக்கம் தொடர்பாக உறுதியின்மைகள் காணப்படுகின்றன.

வங்கியானது சொத்துக்களையும் பொறுப்புக்களையும் நடைமுறை, ஒத்திவைக்கப்பட்ட மற்றும் ஏனைய வரிகளுக்கு மேலதிக வரிகள் செலுத்தப்படவேண்டுமான என்பதன் மதிப்பீட்டின் அடிப்படையில் அங்கீரித்துள்ளது. இந்த விடயங்களிலான இறுதி விளைவானது ஆரம்பத்தில் பதிவுசெய்யப்பட்ட தொகைகளிலிருந்த வேறுபட்டிருக்குமாயின், அத்தகைய வித்தியாசங்கள் தீர்மானம் மேற்கொள்ளும் காலத்திற்கான வருமானத்தையும் ஒத்திவைக்கப்பட்ட வரித் தொகைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

2.3.1 IFRIC 23 – வருமானவரி கவனிப்பு தொடர்பான உறுதியின்மை

LKAS 12 - "வருமான வரிகள்" இன் பிரயோகத்தினை பாதிக்கும் உறுதியின்மையினை வரிக் கவனிப்புகள் உள்ளடக்கியிருக்குமாயின், பொருள் விளக்கமானது வருமான வரி கணக்கீட்டினை விளித்துரைக்கின்றது. இது LKAS 12 இன் நோக்கெல்லைக்கு அப்பால் வரிகள் அல்லது கட்டாய வரிகளுக்கு பிரயோகிக்கப்படாது என்பதுடன் அது நில வரிக் கவனிப்புகளுடன் இணைந்த வட்டி மற்றும் தண்டப்பணங்கள் தொடர்பான தேவைப்பாடுகளை குறிப்பாக உள்ளடக்கப்படாது. பொருள்விளக்கமானது பின்வருவனவற்றை குறிப்பாக விளித்துரைக்கின்றது:

- ஒரு நிறுவனம் நிச்சயமற்ற வரிக் கவனிப்புகளை தனித்தனியாக கருதுகின்றதா
- வரிவிதிப்பு அதிகாரிகளினால் வரிக் கவனிப்புகளின் பரிசீலனை பற்றி ஒரு நிறுவனம் மேற்கொள்ளும் அனுமானங்கள்
- ஒரு நிறுவனம் எவ்வாறு வரிவிதிக்கத்தன்ன இலாபம் (வரி நட்டம்) வரித் தளங்கள், பயன்படுத்தப்படாத வரி நட்டங்கள், பயன்படுத்தப்படாத வரி வரவுகள் மற்றும் வரி வீதங்களை தீர்மானிக்கின்றது.
- ஒரு நிறுவனம் எவ்வாறு விவரங்கள் மற்றும் சூழ்நிலைகளிலான மாற்றங்களை கருத்திலெடுக்கின்றது. வங்கி ஒவ்வொரு நிச்சயமற்ற வரிக் கவனிப்பினை தனித்தனியாக அல்லது கூட்டாக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஏனைய நிச்சயமற்ற வரிக் கவனிப்புகள் கருத்திலெடுக்கவேண்டுமா என தீர்மானித்து நிச்சயமற்றதன்மையின் தீர்மானத்தினை சிறப்பாக எதிர்வுகூறுவதற்கான அணுகுமுறையினை பயன்படுத்துகின்றது.

வங்கியானது வருமான வரி கவனிப்புகளை இனங்காண்பதில் கணிசமான நியாயப்பாடுகளை பிரயோகிக்கின்றது. வங்கியானது ஒரு சிக்கலான சூழலில் செயற்படுவதினால், அது பொருள்விளக்கமானது அதன் நிதிக் கூற்றுக்களில் ஒரு தாக்கத்தைக் கொண்டுள்ளதா என மதிப்பிடுகின்றது. பொருள்விளக்கத்தின் அமுலாக்கத்தின் மீது வங்கியானது அதற்கு ஏதேனும் நிச்சயமற்ற வரி நிலைமைகள் உள்ளதாக என கருத்திலெடுக்கின்றது. வெவ்வேறு நியாயாதிக்கங்களில் வங்கியின் வரி கோப்பிடல்களை வரிவிதிப்பு அதிகாரிகள் அந்த வரி கவனிப்புகளை சவால் செய்யலாம். வங்கியானது அதன் வரி இணக்கப்பாட்டின் அடிப்படையில், அதன் வரிக் கவனிப்புகள் வரிவிதிப்பு அதிகாரிகளினால் ஏற்றுக்கொள்ளப்படும் சாத்தியத்தினை தீர்மானிக்கின்றது. இந்த பொருள்விளக்கமானது வங்கியின் நிதிக் கூற்றுக்களில் ஒரு தாக்கத்தினையும் கொண்டிருக்கவில்லை. மேல் குறிப்பிட்ட மாற்றங்கள் தவிர, வங்கியானது இந்த நிதிக் கூற்றுக்களின் அனைத்து காலப்பகுதிக்கும் கணக்கீட்டுக் கொள்கைகளை தொடர்ச்சியாக பிரயோகித்துள்ளது.

2.3.2 வருமான வரிச் சட்டத்திற்கு அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட திருத்தங்கள்

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால், "2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கான முன்மொழியப்பட்ட மாற்றங்களில்" 08 ஏப்ரல் 20220 திகதியிடப்பட்ட அறிவித்தலின் பிரகாரம், 1 ஜனவரி 2020 முதல் அமுலாக்கப்படுகின்றது.

ஒக்டோபர் 01. 2022 முதல் கூட்டாண்மை வருமான வரி வீதமானது 24% இலிருந்து 30% ஆக திருத்தியமைக்கப்பட்டுள்ளது. நடைமுறை வருமான வரி பற்றிய விபரங்கள் குறிப்பு இலக்கம் 11 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

2.3.3 ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள்

ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் வரி நட்டங்கள் தொடர்பாக அங்கீகரிக்கப்படுவதுடன், இது எதிர்கால வரிவிதிக்கத்தக்க இலாபம் நட்டங்களுக்கு எதிராக பயன்படுத்துவதற்கு கிடைக்கப்பெறும் சாத்தியத்தின் அளவிற்காகும். அங்கீகரிக்கப்படக்கூடிய ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்களின் தொகையினை தீர்மானிப்பதற்கு நியாயாப்பாடு தேவைப்படுவதுடன், இடம்பெறக்கூடிய நேரம் மற்றுமு எதிர்கால வரிவிதிக்கத்தக்க இலாபங்களின் மட்டம் இவற்றுடன் எதிர்கால வரி திட்டமிடல் மூலோபாயம் என்பவற்றின் அடிப்படையிலாகும்.

ஒத்திவைக்கப்பட்ட வரியின் விபரங்கள் குறிப்பு இலக்கம் 20 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

2.3.4 நிதிச் சேவைகளிலான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT)

நிதிச் சேவைகளிலான பெ.சே.வ. ஆனது 2022 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்த்தல் வரிச் சட்டத்தின் மற்றும் அதனிலான திருததங்களின், பிரிவு 25ஏ இன் பிரகாரம் கணிப்பிடப்படுகின்றது. நிதிச் சேவைகளிலான பெ.சே.வ.,பெறுமதி சேர்த்தல் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி, ஊழியர்களின் வேதனங்கள் மற்றும் பொருளாதார பெறுமானத்தேய்வுக்கு செம்மையாக்கப்பட்டு அதற்கு முந்திய செயற்பாட்டு இலாபத்தில் 18% செலுத்தப்படல் வேண்டும்.

பெ.சே.வ. பொறுப்பின் விபரங்கள் குறிப்பு இலக்கம் 34 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

2.3.5 நிதிச் சேவைகளிலான சமூகப் பாதுகாப்பு பங்களிப்புக் கட்டணம் (ச.பா.க.க.)

2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்புதல் வரியின் (தே.க.வ.) பிரகாரம் வங்கியானது 1 ஜனவரி 2014 முதல் நிதிச் சேவைகளிலான பெ.சே.வ. நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் பெறுமதி சேர்க்கையில் 2% ஆக நிதிச் சேவைகளில் தே.க.வ. இனை கணிப்பீடு செய்து செலுத்துகின்றது. எவ்வாறாயினும், 12 ஒக்டோபர் 2020 திகதியிடப்பட்ட 2020 இன் 03 ஆம் இலக்க தேசத்தை கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டத்தின் பிரகாரம், வங்கியானது 1 டிசம்பர் 2019 முதல் நிதிச் சேவைகளிலிருந்தான தே.க.வ. இலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

2.3.6 நிதிச் சேவைகளிலான கடன் மீள்செலுத்துதல் கட்டணம் (னுசுடு)

2018 இன் 35 ஆம் இலக்க நிதியியல் சட்டத்தின் பிரகாரம், க.மீ.க. ஆனது 1 ஒக்டோபர் 2018 முதல் ஒவ்வொரு நிதியியல் நிறுவனத்திடமிருந்தும் அறவிடப்படல் வேண்டும். க.மீ.க. ஆனது நிதியியல் சேவைகளுக்கு உடைமையாக்கத்தக்க பெறுமதி சேர்ப்பில் 7% ஆக கணிப்பிடுகின்றது. 12 ஒக்டோபர் 2020 திகதியிடப்பட்ட 2020 இன் 02 ஆம் இலக்க நிதியியல் (திருத்தச்) சட்டத்தின் பிரகாரம், க.மீ.க. 01 ஜனவரி 2020 முதல் ஒழிக்கப்பட்டது.

2.3.7 பொருளாதார சேவைக் கட்டணம் (பொ.சே.க.)

2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணச் சட்டத்தின் ஏற்பாடுகளின் மற்றும் அதன்பின்னரான திருத்தங்களின் பிரகாரம், பொ.சே.க. 0.5% ஆக வங்கியின் விதிக்கத்தக்க புரள்வில் செலுத்தவேண்டியுள்ளதுடன், இது செலுத்தவேண்டிய வருவான வரியிலிருந்து கழிக்கப்படக்கூடியவையாகும். 12 ஒக்டோபர் 2020 திகதியிடப்பட்ட 2020 இன் 4 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டண (திருத்தச்) சட்டத்தின் பிரகாரம் 1 ஜனவரி 2020 முதல் பொ.சே.க. ஆனது ஒழிக்கப்பட்டது.

2.3.8 பயிர் காப்புறுதி கட்டணம் (ப.கா.க.)

2013 இன் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் 1 ஏப்ரல் 2013 முதல் ப.கா.க. அறிமுகப்படுத்தப்பட்டதுடன் வரிக்கு பிந்திய இலாபத்தில் 1% தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபைக்கு செலுத்தப்படல் வேண்டும்.

2.4 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் - சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் அங்கீகாரம்

2.4.1 ஊழியர் நலன் பொறுப்பு - பணிக்கொடை

1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின் கீழ் வங்கியின் ஒவ்வொரு ஊழியரும் பணிக்கொடைக்கு உரிமையுள்ளவர்கள். 5 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய ஊழியர்கள் அவர்கள் சேவையிலிருந்து விலகினால் அல்லது இளைப்பாறுதல் தவிர சேவைகள் நிறுத்தப்பட்டுள்ள ஊழியர்கள் 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு சட்டத்தின் கீழ் ஒவ்வொரு பூரணமாக்கப்பட்ட வருடச் சேவைக்கும், வேலையானது நிறுத்தப்பட்ட அல்லது பதவி விலகிய நிதியியல் ஆண்டின் இறுதி மாதத்தில் பிரயோகிக்கப்படும் மொத்த சம்பளத்தின் அரைவாசியில் ஒரு பகுதியினைப் பெறுவதற்கு உரிமையுடையவர்ளாவார்கள். வங்கியானது நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டமான உறுதிசெய்யப்பட்ட இளைப்பாறுதல் நலன் பணிக்கொடையில் காப்பீட்டுக் கணிப்பு பெறுமதியிடல் முறையினைப் பயன்படுத்தி நிகழ்காலப் பெறுமதியினை அளவிடுகின்றது.

வழக்கமான மற்றும் முன்னரான இளைப்பாறுதல்

ஒரு பங்குபற்றுனர், அவர் 3 வருடங்கள் சேவையாற்றியிருந்தால், வழமையான இளைப்பாறுதல் வயதான 55 வயதிற்கு உரிமையுடையவர். அனைத்து பங்குபற்றுனர்களும் 60 வயது வரைக்குமான நீடிப்பிற்கு உரிமையுடையவர்களாவர்.

வட்டிச் செலவு

நலன்கள் தீர்ப்பனவிற்கு ஒரு வருடம் நெருங்கியிருப்பதனால் திட்டத்தின் பொறுப்புக்களின் நிகழ்காலப் பெறுமதியானது இக்காலத்தின்போதான வட்டியினால் வட்டிச்செலவினம் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

நிதியளித்தல் ஏற்பாடுகள்

பணிக்கொடைப் பொறுப்பானது வெளிவாரியாக நிதியளிக்கப்படவில்லை.

காப்பிட்டுக்கணிப்பு பெறுமதியிடல்

நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டமான பணிக்கொடையின் கிரயமானது ஒரு காப்பிட்டுக் கணிப்பு பெறுமதியிடலை பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. காப்பிட்டுக் கணிப்பு பெறுமதியிடலானது ஏனையவற்றுக்கிடையில், கழிவிறக்க வீதங்கள், எதிர்கால சம்பள அதிகரிப்புகள், ஊழியர்களின் எஞ்சியுள்ள தொழில் வாழ்க்கை மற்றும் இறப்பு வீதங்ள் பற்றிய அனுமானங்கள் மேற்கொள்வதனை உள்ளடக்குகின்றது. இந்த கடப்பாடுகளின் நீண்டகால தன்மையின் காரணமாக, அத்தகை மதிப்பீடுகள் கணிசமான நிச்சயமற்றதன்மைக்கு உட்படுகின்றன. பயன்படுத்தப்பட்ட அனுமானங்கள் பின்வருமாறு.

	2023	2022
வட்டி வீதம்	13%	18.00%
வருடாந்த சம்பள அதிகரிப்பு வீதம்	10%	6.50%
இளைப்பாறுதல் வயது	55-60 வருடங்கள்	55-60 வருடங்கள்

பணிக்கொடை ஏற்பாட்டின் ஊழியர் நலன் கடப்பாடானது குறிப்பு இலக்கம் 24 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளும்

2.4.2 ஊழியர் நலன் பொறுப்பு - மருத்துவ நலன்

மருத்துவ நலன்களின் காப்பிட்டுக் கணிப்பு பெறுமதியிடலின் விபரங்கள் குறிப்பு இலக்கம் 24 இ வெளிப்படுத்தப்பட்டுள்ளன. நிரந்தர ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் மற்றும் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் இளைப்பாறுதலடைந்தோர் மருத்துவ செலவீட்டிற்கு உரித்துடையவர்கள், இது அவர்கள் இந்த திட்டத்தில் பங்குபற்றுவதற்கு அங்கீகரிப்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அவர்கள் அவர்களது அங்கத்துவ நிலுவைகளை செலுத்தியிருத்தல் வேண்டும். இளைப்பாறுதலடைந்த ஒரு அங்கத்தவரின் குடும்ப அங்கத்தவர்கள் விசேட கவனிப்பின் கீழ் மாத்திரமே (ஒன்றில் இளைப்பாறுதலடைந்த யாரேனும் ஒரு அங்கத்தவரின் அல்லது அதவரது குடும்ப அங்கத்தவர் உரித்துடையதாய் இருத்தல் வேண்டும்) உரித்துடையவர்கள்.

நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்ட மருத்துவ நலன்களின் கிரயமானது ஒரு காப்பிட்டுக் கணிப்பு பெறுமதியிடலை பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. காப்பிட்டுக் கணிப்ப பெறுமதியிடலானது ஏனையவற்றுக்கிடையில், கழிவிறக்க வீதங்கள், மருத்துவ பணவீக்கம் மற்றும் இறப்பு வீதங்கள் பற்றி அனுமானங்கள் மேற்கொள்வதனை உள்ளடக்கும். இந்த கடப்பாடுகளின் நீண்டகால தன்மையின் காரணமாக, அத்தகைய மதிப்பீடுகள் கணிசமான நிச்சயமற்றதன்மைக்கு உட்பட்டவையாகும். பயன்படுத்தப்பட்ட அனுமானங்கள் பின்வருமாறு.

	2023	2022
கழிவிறக்க வீதம்	18%	11.5%
மருத்துவ செலவு அதிகரிப்பு	12%	6.5%
பங்குபற்றுனர் தரவு (உயிர்ப்புள்ளவை) குடிமதிப்பு தகவல்கள்	31.12.2022	31.12.2021

காப்பிட்டுக் கணிப்பு நட்டங்கள் ∴ இலாபங்களின் அங்கீகாரம் - காப்பிட்டுக் கணிப்பு நட்டங்கள் / இலாபங்கள் ஏ.வி.வ. இல் அங்கீகரிக்கப்படுகின்றன.

சொத்துக்களில் எதிர்பார்க்கப்படும் விளைவு - சொத்துக்களில் எதிர்பார்க்கப்படும் விளைவு பூச்சயமாகும் ஏனெனில் இத்திட்டமானது முன் நிதியளிக்கப்படவில்லை.

வட்டிக் கிரயம் - வட்டிக் கிரயமானது நிர்ணயிக்கப்பட்ட நலன் கடப்பாட்டின நிகழ்காலப் பெறுமதியாகும் (PVDBO) மற்றும் நடைமுறை சேவைக் கிரயமும் (CSC) ஆகும்.

நிதியளித்தல் ஏற்பாடுகள் - மருத்துவ நலன் திட்டமானது வெளிவாரியாக நிதியளிக்கப்படவில்லை.

2.4.3 நிர்ணயிக்கப்பட்ட பங்ளிப்புத் திட்டம்

வங்கியானது ஓர நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டத்தினையும் செயலாற்றுகின்றது. நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டத்திற்கு செலுத்தவேண்டிய பங்களிப்பானது வங்கிக்கு ஊழியர்களினால் ஆற்றிய சேவையின் விகிதாசாரமாகும் என்பதுடன் இது 'ஆளணிச் செலவுகள்" என்பதன் கீழ் ஒரு செலவினமாக பதிவு செய்யப்படுகின்றது. செலுத்தப்படாத பங்களிப்புகள் ஒரு பொறுப்பாக பதிவுசெய்யப்படுகின்றன. வங்கியானது பின்வரும் திட்டங்களுக்கு பங்களிப்பு செய்கின்றது:

2.4.3.1 ஊழியர் சேமலாப நிதியம்

வங்கியும் ஊழியர்களும் முறையே 15% மற்றும் 10% இனை ஊழியர்களின் மாதாந்த சம்பளத்தில் (மேலதிக நேர கொடுப்பனவு நீங்கலாக) சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு செய்கின்றார்கள். வங்கியின் சேமலாப நிதியமானது ஊழியர் சேமலாப நிதியத்தின் சட்டத்தின் கீழ் அங்கீகரிப்பக்கப்பட்ட ஒரு நிதியமாகும்.

2.4.3.2 ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்

வங்கியானத மேலதிக கொடுப்பனவுகள் நீங்கலான ஊழியர்களின் மாதாந்த மொத்த சம்பளத்தில் 3% இனை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் சபையினால் பராமரிக்கப்படும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்பு செய்கின்றது. 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின் கீழ் ஊழியர்கள் பணிக்கொடைக்கு உரித்துடையவர்களாவார்கள்.

2.4.4 குத்தகைகள்

இந்த நிதிக் கூற்றுக்களில், வங்கியானது SLFRS 16 குத்தகைகள் முதற் தடவையாக 1 ஜனவரி 2019 இல் அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கும் காலங்களுக்கு பிரயோகித்துள்ளது. வங்கியானது SLFRS 16 குத்தகைகள 1 ஜனவரி 2019 இலிருந்து பின்னோக்கி கடைப்பிடித்துள்ளது, ஆனால் நியமத்தில் குறிப்பிட்ட மாறுநிலை ஏற்பாடுகளின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு, 2018 இல் அறிக்கையிடப்பட்ட காலத்திற்கு ஒப்பீட்டு தொகைகளை மீண்டும் எடுத்துக் கூறவில்லை.

2018 நிதியாண்டு வரைக்கும், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் குத்தகையானது ஒன்றில் நிதிக் குத்தகைகளாக அல்லது செயற்பாட்டு குத்தகைகளாக வகைப்படுத்தப்பட்டன. 1 ஜனவரி 2019 முதல், குத்தகைகள் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களாக அங்கீகரிக்கப்பட்டு SLFRS 16 குத்தகைகளிப் பிரகாரம் வங்கியினால் குத்தகைச் சொத்தினை பயன்படுத்துவதற்கு கிடைக்கும் திகதியில் ஒரு ஒத்த பொறுப்பானது அங்கீகரிக்கப்படுகின்றது.

குத்தகையிலிருந்து எழுகின்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒரு நிகழ்காலப் பெறுமதி அடிப்படையில் ஆரம்பத்தில் அளவிடப்படுகின்றது. குத்தகைப் பொறுப்புக்கள் பின்வரும் குத்தகைக் கொடுப்பனவுகளின் தேறிய நிகழ்காலப் பெறுமதியினை உள்ளடக்குகின்றன:

- நிலையான கொடுப்பனவுகள் (பொருள் உள்ளடங்கலான நிலையான கொடுப்பனவுகள்), வருமதியான ஏதேனும் குத்தகை ஊக்கத்தொகைகள் கழிக்கப்பட்டு
- ஒரு சுட்டி அல்லது வீதத்தின் அடிப்படையிலான மாற்றமடையும் குத்தகைக் கொடுப்பனவுகள், ஆரம்பிக்கப்படும் திகதியில் சுட்டி அல்லது வீதத்தினை பயன்படுத்தி ஆரம்பத்தில் அளவிடப்படுகின்றது.
- எச்சப் பெறுமதி உத்தரவாதத்தின் கீழ் குழுமத்தினால் செலுத்தவேண்டிய எதிர்பார்க்கப்படும் தொகைகள்
- ஒரு கொள்வனவுத் தெரிவின் செயலாக்க விலை, குழுமமானது அந்த தெரிவினை செயலாக்கும் என்ற நியாயமான நிச்சயம் காணப்படின்.
- குத்தகையினை முடித்துவைப்பதற்கான தண்டப்பணங்களின் கொடுப்பனவுகள், குத்தகை நியதிகள் குழுமம் அத்தெரிவினை செயலாக்கும் என்று பிரதிபலித்தால்.

குத்தகைக் கொடுப்பனவுகள் குத்தகையினுள் உள்ளார்ந்த வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி கழிவிறக்கம் செய்யப்படுகின்றன. வட்டிவீதமானது உடனடியாக தீர்மானிக்கப்பட இயலாவிடின், குழுமத்திலுள்ள குத்தகைகளுக்கு இது பொதுவானது, குத்தகைக்கு எடுத்தவரின் அதிகரிக்கும் வட்டி வீதம் பயன்படுத்தப்படுகின்றது.

குத்தகைக் கொடுப்பனவுகள் முதல் மற்றும் நிதிச் செலவினத்திற்கிடையே ஒதுக்கப்படுகின்றது. நிதிச் செலவானது குத்தகைக் காலத்தின் மீது இலாபம் அல்லது நட்டத்திற்கு செலவு வைக்கப்படுகின்றது. இது ஒவ்வொரு காலப்பகுதிக்கும் பொறுப்பின் எஞ்சியுள்ள மீதியில் ஒரு நிலையான காலத்திற்கான வட்டி வீத்தினை உருவாக்குவதற்காகும்.

2.4.4.1 ஒரு குத்தகையினை இனங்காணுதல்

மறுபயனுக்காக பரிமாற்றம் செய்யப்படும் காலப்பகுதிக்கு ஒரு இனங்காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டினை கட்டுப்படுத்துவதற்கான உரிமையினை ஒப்பந்தம் தெரிவித்தால் அந்த

ஒப்பந்தம் ஒரு குத்தகையாகும். எனவே, ஒரு ஒப்பந்தத்தின் ஆரம்பத்தில், குழுமமானது பின்வரும் அம்சங்களை கருத்திலெடுப்பதன் மூலம் ஒப்பந்தம் ஒரு குத்தகையாக அல்லது குத்தகையினை உள்ளடக்கியுள்ளதா என மதிப்பீடு செய்கின்றது. இனங்காணப்பட்ட சொத்தின் கிடைக்கப்பெறும்தன்மை, இனங்காணப்பட்ட சொத்தினை பயன்பாட்டினை கட்டுப்படுத்துவதற்கான உரிமை, இனங்காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டிலிருந்து அனைத்து பொருளாதார நலன்களையும் கணிசமாக பெற்றுக்கொள்ளுவதற்கான உரிமை, இதன்பிரகாரம் இனங்காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டினை வழிநடத்துவதற்கான உரிமை. வங்கியானது அனைத்து வாடகை உடன்படிக்கைகளை (குறுங்கால உடன்படிக்கைகள் தவிர்ந்தவை, கழி 12 மாதங்களுக்கு குறைந்தவை மற்றும் குறைவான பெறுமதி உடன்படிக்கைகள்) குழுமத்தினால் ஒரு கிளையினை செயற்படுத்துவதற்காக மற்றும் இயந்திரங்களை பயன்படுத்துவதற்காக SLFRS 16 குத்தகைகள் இன் கீழான ஒரு குத்தகையினை இனங்காண்கின்றது.

பயன்படுத்துவதற்கு உரியையுள்ள சொத்துக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கி கிரயத்தில் அளவிடப்படுகின்றன.

- குத்தகை பொறுப்பின் ஆரம்ப அளவீட்டின் தொகை
- ஆரம்ப திகதிக்கு முன்னர் அல்லது திகதியில் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் குத்தகை கொடுப்பனவுகளிலிருந்த பெறப்பட்ட ஏதேனும் குத்தகை ஊக்கத்தொகைகள்
- ஏதேனும் ஆரம்ப நேரடிச் செலவுகள்
- மறுசீரமைப்புக் கிரயங்கள்

பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் பொதுவாக சொத்தின் பயன்பாட்டுக் காலத்தில் குறைந்ததில் மற்றும குத்தகை காலத்தில் ஒரு நேர்கோட்டு அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றன.

குறுங்கால குத்தகைகளுடன் இணைந்த கொடுப்பனவுகள் மற்றும் குறைந்த பெறுமதி சொத்துகளின் அனைத்து குத்தகைகளும் ஒரு நேர்கோட்டு அடிப்படையில் இலாபம் அல்லது நட்டத்தில் ஒரு செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றது. குறுங்காலக் குத்தகைகள் என்பன 12 மாதங்கள் அல்லது குறைவான குத்தகைக் காலத்தினைக் கொண்ட குத்தகைகளாகும். காசும் குறுங்கால நிதியங்களின் தகவல்கள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 33 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

2.4.5 காசும் காசுக்குச் சமனானவைகளும்

காசும் குறுங்கால நிதிகளும் கையிலுள்ள காசு, வங்கிகளுடனான மீதிகள், வங்கிகளுடனான வைப்பீடுகள் அழைப்பில் மற்றும் குறுகிய அறிவித்தலிலுள்ள பணம் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. காசும் குறுங்கால நிதிகளின் விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 13 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

2.4.6 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணம் பற்றிய விபரங்கள் குறிப்பு இலக்கம் 16 இல் கொடுக்கப்பட்டுள்ளது. ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பன கிரயத்தில் அல்லது நாளாந்த சேவையிடல் கிரயம் நீங்கலான பெறுமதியிடலில், திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் பெறுமதியில் திரண்ட வலுக்குன்றல் கழிக்கப்பட்டு கூறப்பட்டுள்ளன. எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டு வாழ்நாளிலான மாற்றங்கள், பெறுமானத்தேய்வு காலத்தினை அல்லது முறையினை, பொருத்தமானவாறு, கணக்கீடு செய்யப்பட்டு கணக்கீட்டு மதிப்பீடுகளிளலான மாற்றங்களாக கருதப்படுகின்றது.

2.4.6.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மற்றும் அருவச் சொத்துக்களின் பயன்பாட்டு வாழ்நாள்

வங்கியானது ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் எச்சப் பெறுமதிகள், பயன்பாட்டு வாழ்நாட்கள், மற்றும் பெறுமானத் தேய்வு முறைகளை மீளாய்வு செய்கின்றது. முகாமைத்துவத்தின் நியாயப்பாடானது இந்தப் பெறுமதிகள், வீதங்கள், முறைகள் ஆகியவற்றின் மதிப்பீட்டில் பயன்படுத்தப்படுவதுடன், மற்றும் எனவே அவை நிச்சயமற்றதன்மைக்கு உட்பட்டவையாகும். ஒவ்வொரு சொத்து வகுப்பிற்கும் பயன்படுத்தப்பட்ட பெறுமானத்தேய்வு முறைகள் மற்றும் வீதங்களது விபரங்கள் குறிப்பு 2.4.6.4 இல் வழங்கப்பட்டுள்ளன.

2.4.6.2 அங்கீகாரத்தின் அடிப்படை

சொத்துடன் இணைந்துள்ள எதிர்கால பொருளாதார நலன்கள் வங்கிக்கு பாய்ச்சப்படும் என்ற சாத்தியம் காணப்பட்டால் மற்றும் சொத்தின் கிரயமானது நம்பகத்தன்மையாக அளவிடப்படக் கூடியதாயின் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் அங்கீகரிக்கப்படுகின்றது. பொறியும் உபகரணமும் கிரயத்தில் கூறப்பட்டுள்ளதுடன், இவை நாளாந்த சேவைப்படுத்தல் கிரயம நீங்கலாகும்.

2.4.6.3 அளவீட்டின் அடிப்படை

ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகிய கிரயத்திலிருந்து திரண்ட பெறுமானத்தேய்வு, கீழே குறிப்பிட்டுள்ளவாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன, கழிக்கப்பட்டு கூறப்பட்டுள்ளன.

2.4.6.4 பெறுமானத்தேய்வு

ஆதனம் மற்றும் உபகரணங்களின் கிரயத்தினை அவற்றின் எச்சப் பெறுமதிகளுக்கு அவற்றின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள வாழ்நாட்களில் மதிப்பு குறைப்பிற்காக பெறுமானத்தேய்வானது நேர்கோட்டு முறையினை பயன்படுத்தி கணிப்பிடப்படுகின்றது. அத்துடன் ஒரு சொத்தின் பெறுமானத் தேய்வானது அது பயன்படுத்துவதற்கு கிடைக்கும்போது ஆரம்பிக்கின்றது.

மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு வாழ்நாட்கள் பின்வருமாறு

சொத்தின் வகை	பெறுமானத்தேய்வு வீதம்
மோட்டார் வாகனங்கள்	25.00% p.a.
தளபாடமும் பொருத்திகளும்	12.50% p.a.
அலுவலக உபகரணம்	12.50% p.a.
கணினிகள்	25.00% p.a.
ஏனையவை	12.50% p.a.

அலுவலக கட்டிடங்களது நீடிப்பிற்கு மேற்கொள்ளப்படும் திருத்தங்களது கிரயமானது 4 வருடங்கள் அல்லது ஆரம்ப குத்தகைக் காலம், இதில் எது குறுகியதோ அதில், பெறுமதி குறைப்பு செய்யப்படுகின்றது.

2.4.6.5 பின்வரும் கிரயம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் ஒரு உருப்படியின பாகத்தினை மாற்றீடு செய்வதன் கிரயமானது, அந்த பகுதியினுள் புதைந்துள்ள எதிர்கால பொருளாதார நலன்கள் வங்கிக்கு பாய்ச்சப்படும் என்ற சாத்தியப்பாடு காணப்படுமாயின் மற்றும் அதன் கிரயமானது நம்பகமாக அளவீடு செய்ய இயலுமையாயிய் அது கொண்டு செல்லல் தொகையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

2.4.6.6 மறுசீரமைத்தல் கிரயம்

ஆதனம், பொறி முற்றும் உபகரணங்களின் பழுதுபார்த்தல் அல்லது பராமரிப்பில் ஆட்படும் செலவினமானது, அதனை எதிர்கால பொருளாதார நலன்களுக்காக மறுசீரமைக்க அல்லது பராமரிப்பதற்கானவை, அவை ஆட்படும்போது வருமானக் கூற்றில் செலவு வைக்கப்படுகின்றது.

2.4.6.7 மூலதன நடப்பு வேலை

கட்டிடத்தின் கட்டுமானம், பாரிய பொறி மற்றும் இயந்திரம் மற்றும் அமைப்புமுறை அபிவிருத்தி ஆகியவற்றில் நேரடியாக ஆட்படும் மூலதனத் தன்மையான செலவினங்கள் மூலதனமயமாக்கலை காத்திருத்தல். இவை நிதி நிலைமைக் கூற்றில் கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

2.4.6.8 அங்கீகார நீக்கம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பன விற்பனை செய்யப்படும்போது அல்லது அதன் பயன்பாட்டிலிருந்து எதிர்கால பொருளாதார நலன்கள் காணப்படாதபோது அங்கீகார நீக்கம் செய்யப்படுகின்றது. சொத்தின் அங்கீகார நீக்கத்திலிருந்து எழுகின்ற ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் (தேறிய விற்பனை வருவாய்க்கும் சொத்தின் கொண்டு செல்லல் பெறுமதிக்கும் இடையேயான வித்தியாசமாக கணிப்பிடப்படுகின்றது) சொத்து அங்கீகார நீக்கம் செய்யப்படும் வருடத்தில் வருமானக் கூற்றில் “ஏனைய செயற்பாட்டு வருமானத்தில்”

கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளும்

அங்கீகரிக்கப்படுகின்றது. விபரங்கள் குறிப்பு இலக்கம் 19 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

2.4.7 அருவச் சொத்துக்கள்

வங்கியின் ஏனைய அருவச் சொத்துக்கள் கணினி மென்பொருளின் பெறுமதியினை உள்ளடக்குகின்றது. ஒரு அருவச் சொத்தானது, அதன் கிரயமானது நம்பகமாக அளவிட இயலுமானபோது மற்றும் அத்துடன் உடைமையாக்கத்தக்க எதிர்பார்க்கும் எதிர்கால பொருளாதார நலன்கள் வங்கிக்கு பாயச்சப்படும் சாத்தியம் காணப்பட்டால் மாத்திரமே அங்கீகரிக்கப்படுகின்றது.

வேறாக கையகப்படுத்தப்பட்ட அருவச் சொத்துக்கள் ஆரம்ப அங்கீகாரத்தின்போது கிரயத்தில் அளவிடப்படுகின்றது. ஆரம்ப அங்கீகாரத்தினைத் தொடர்ந்து, அருவச் சொத்துக்கள் கிரயத்திலிருந்து ஏதேனும திரண்ட பெறுமதி குறைப்பு மற்றும் ஏதேனும் திரண்ட வலுக்கன்றல் நட்டங்கள் கழிக்கப்பட்டு கொண்டு செல்லப்படுகின்றன.

அருவச் சொத்துக்களின் பயன்பாட்டு வாழ்நாட்கள் முடிவுள்ளது அல்லது முடிவற்றதாக மதிப்பிடப்படுகின்றன. முடிவுள்ள வாழ்நாட்களைக் கொண்ட அருவச் சொத்துக்கள் பயனுள்ள பொருளாதார வாழ்நாட்கள் மீது பெறுமதி குறைப்பு செய்யப்படுகின்றன. ஒரு முடிவுள்ள வாழ்நாட்களைக் கொண்ட ஒரு அருவச் சொத்தின் பெறுமதி குறைப்புக் காலமானது மற்றும் பெறுமதி குறைப்பு முறையானது ஆகக்குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்படுகின்றன. சொத்தில் புதைந்துள்ள எதிர்கால் பொருளாதார நலன்களின் எதிர்பார்க்கப்படும் நுகர்வுப் போக்கானது அல்லது எதிர்பார்க்கப்படும் பயனுள்ளா வாழ்நாளானது பொருத்தமானவாறு பெறுமதி குறைப்புக் காலத்தினை அல்லது முறையினை மாற்றுவதன் மூலம் கணக்கீடு செய்யப்படுவதுடன், அவை கணக்கீட்டு மதிப்பீடுகளிலான மாற்றங்களாக கருதப்படுகின்றன. முடிவற்ற வாழ்நாட்களையுடைய அருவச் சொத்துக்களிலான பெறுமதிகுறைப்புச் செலவினமானது, அருவச் சொத்தின் செயற்பாட்டுடன் ஒத்து செலவினப் பிரிவில் வருமானக் கூற்றில் அங்கீரிக்கப்படுகின்றது.

அருவச் சொத்துக்களை அவற்றின் பயனுள்ள வாழ்நாட்களின் மீது அவற்றின் எச்சப் பெறுமதிகளுக்கு அருவச் சொத்துக்களின் கிரயத்திற்கு குறைத்தெழுவதற்காக நேர்கோட்டு முறையினை பயன்படுத்தி பெறுமதி குறைப்பானது கணிப்பிடப்படுவதுடன் அவை பின்வருமாறு:

அருவச் சொத்துக்களின் வகை	பயன்பாட்டு வாழ்நாள்	பெறுமதி குறைப்பு முறை
கணினி மென்பொருள்	4 வருடங்கள்	நேர்கோட்டு முறை

2.4.8 நிதியல்லாத சொத்துக்களின் வலுக்குன்றல்

வங்கியானது ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியில் ஒரு சொத்தானது வலுக்குன்றியுள்ளதா என்ற அறிகுறி காணப்படுகின்றதான என மதிப்பிடப்படுகின்றது. அவ்வாறான ஏதேனும் அறிகுறி காணப்பட்டால், அல்லது ஒரு சொத்துக்கு வருடாந்த வலுக்குன்றல் சோதனை தேவையாயின், வங்கியானது சொத்தின் மீட்கக்கூடிய தொகைழயை மதிப்பிடப்படுகின்றது. ஒரு சொத்தின் மீட்கத்தக்க தொகையானது ஒரு சொத்தின் அல்லது காசு உருவாக்கும் அலகின் நியாயப் பெறுமதி எது உயர்வானதோ, அதிலிருந்து பயன்பாட்டில் அதன் பெறுமதி மற்றும விற்பனைக்கான கிரயம் கழிக்கப்பட்டு கணிப்பிடப்படுகின்றது. ஒரு சொத்தின் அல்லது கா.உ.அ. ஆனது மீட்கத்தக்க தொகையினை விஞ்சியிருப்பின், சொத்தானது வலுக்குன்றியுள்ளது எனக் கருதப்பட்டு அதன் மீட்கத்தக்க தொகைக்கு குறைத்தெழுக்கப்படுகின்றது.

பயன்பாட்டிலான பெறுமதியினை மதிப்பிடுவதில், மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் அவற்றின் நிகழ்காலப் பெறுமதிக்கு ஒரு வரிக்கு முந்திய கழிவிறக்க வீதத்தினை பயன்படுத்தி கழிவிறக்கம் செய்யப்படுகின்றத. இவ்வீதமானது பணத்தின் நேரப் பெறுமதியினது நடைமுறை சந்தை அளவீடுகளை பிரதிபலிப்பதுடன் மற்றும் சொத்திற்கு குறித்த இடர்களையும் பிரதிபலிக்கின்றது. நியாயப் பெறுமதியிலிருந்து விற்பனைக்கான கிரயம் கழிக்கப்பட்டு தீர்மானிப்பதில், ஒரு பொருத்தமான பெறுமதியிடல் மாதிரியானது பயன்படுத்தப்படுகின்றது. இந்த கணிப்பீடுகள் பெறுமதியிடல் மடங்குகள், பொதுவாக வர்த்தகம் செய்யப்படும் துணைக்கம்பனிகள் அல்லது ஏனைய கிடைக்கக்கூடிய நியாயப் பெறுமதி அறிகுறிகளினால் உறுதிப்படுத்தப்படுகின்றன.

2.4.9 நிதியியல் உத்தரவாதங்கள்

வழமையான வணிகப் போக்கில், வங்கி நிதியியல் உத்தரவாதங்களை வழங்குகின்றது. நிதியியல் உத்தரவாதங்கள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் நிதிக் கூற்றுக்களில் ('ஏனைய பொறுப்புக்களினுள்', பெறப்பட்ட வட்டமாக அங்கீகரிக்கப்படுகின்றது. ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், ஒவ்வொரு உத்தரவாதத்திற்கும் கீழான வங்கியின் பொறுப்பானது, ஆரம்பத்தில் அங்கீகரித்த தொகையிலிருந்து உயர்வானது வருமானக் கூற்றில் அங்கீகரித்த திரண்ட பெறுமதி குறைப்பானது கழிக்கப்பட்டு மற்றும் உத்தரவாதத்தின் விளைவாக எழக்கூடிய ஏதேனும் நிதியியல் கடப்பாடுகளை தீர்ப்பனவு செய்வதற்கு தேவையான சிறந்த செலவு மதிப்பீடாகும்.

நிதியியல் உத்தரவாதம் தொடர்பான பொறுப்பிலான ஏதேனும அதிகரிப்பானது வருமானக் கூற்றில், "கடன் நட்டச் செலவினங்கள்" இல் பதிவு செய்யப்படுகின்றது. பெறப்பட்ட வட்டமானது வருமானக் கூற்றில், "தேறிய கட்டண மற்றும் தரகு வருமானத்தில்" உத்தரவாதத்தின் வாழ்நாள் மீது ஒரு நேர்கோட்டு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

2.4.10 ஏற்பாடுகள்

ஒரு கடந்த கால நிகழ்வின் விளைவாக வங்கியானது ஒரு நடைமுறை கடப்பாட்டினை (சட்ட அல்லது ஆக்கபூர்வமான) கொண்டிருக்கும்போது ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. இது பொருளாதார நலன்களை உள்ளடக்கிய வளங்களின் வெளிப்பாய்ச்சலானது கடப்பாட்டினை தீர்ப்பனவு செய்வதற்கு தேவைப்படும் என்ற சாத்தியம் காணப்படும்போது மற்றும் கடப்பாட்டின் தொகையில் ஒரு நம்பகமான மதிப்பீட்டினை மேற்கொள்ளலாம் என்ற போதாகும். ஏதேனும் ஏற்பாடு தொடர்பான செலவினமானது ஏதேனும் செலவிடுகள் நிகராக வருமானக் கூற்றில் முன்னிலைப்படுத்தப்படுகின்றது.

2.4.11 நிதிக் கருவிகள் - ஆரம்ப அங்கீகாரம்

2.4.11.1. அங்கீகாரத்தின் திகதி

வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டிய மீதிகள் நீங்கலாக, நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆரம்பத்தில் வர்த்தகத் தினத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. அதாவது, கருவியின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு வங்கி ஒரு தரப்பினராக வரும் திகதியாகும். இது வழமையான முறையான வர்த்தங்கள்: சந்தையில் ஒழுங்குமுறைகள்மற்றும் மரபுரீதியாக பொதுவாக நிறுவப்பட்டுள்ள கால வரம்பினுள் விநியோகம் தேவைப்படும் சொத்துக்களை உள்ளடக்குகின்றது. வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களும் வாடிக்கையாளர்களது கணக்குகளுக்கு நிதிகள் மாற்றல் செய்யப்படும்போது அங்கீகரிக்கப்படுகின்றன. வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவற்றை நிதிகள் வங்கிக்கு மாற்றல் செய்யப்படும்போது வங்கி அவற்றை அங்கீகரிக்கப்படுகின்றது.

2.4.11.2 நிதிக் கருவிகளின் ஆரம்ப அங்கீகாரம்

ஆரம்ப அங்கீகாரத்தில் நிதியியல் கருவிகளின் வகைப்படுத்தலானது அவற்றின் ஒப்பந்த விதிமுறைகள் மற்றும் கருவிகளை முகாமைப்படுத்துவதற்கான வணிக மாதிரி ஆகியவற்றில் தங்கியுள்ளது. நிதியியல் கருவிகள் ஆரம்பத்தில் அவற்றின் நியாயப் பெறுமதியில் அளவிடப்படுவதுடன், இது இ.ந.நி.பெ.

இல் பதிவுசெய்யப்பட்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்கள் தவிர்த்தவை என்பதுடன், கொடுக்கல் வாங்கல் கிரயமானது இத்தொகையுடன் சேர்க்கப்படுகின்றது அல்லது அதிலிருந்து கழிக்கப்படுகின்றது. வர்த்தக வருமதிகள் கொடுக்கல் வாங்கல் விலையில் அளவிடப்படகின்றன. ஆரம்ப அங்கீகாரத்தில் நிதியியல் கருவியின் நியாயப் பெறுமதியானது கொடக்கல் வாங்கல் விலையிலிருந்து வேறுபட்டிருந்தால், வங்கியானது கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு முதல் நாள் இலாபம் அல்லது நட்டமாக கணக்கீடு செய்கின்றது.

2.4.11.3 முதல் நாள் இலாபம் அல்லது நட்டம்

கருவியின் கொடுக்கல் வாங்கல் விலையானது ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியிலிருந்து வேறுபடும்போது மற்றும் நியாயப் பெறுமதியானது சந்தை கொடுக்கல் வாங்கல்களில் அவதானிக்கக்கூடிய உள்ளீடுகளை மாத்திரம் பயன்படுத்தும் பெறுமதியிடல் நுட்பத்தின் அடிப்படையில் காணப்படின், வங்கியானது கொடுக்கல் வாங்கல் விலைக்கும் நியாயப் பெறுமதிக்கும் இடையேயான வித்தியாசத்தினை தேறிய வர்த்தக வருமானத்தில் அங்கீகரிக்கின்றது. அவதானிக்கப்பட இயலாத சில உள்ளீடுகளின் அடிப்படையில் நியாயப் பெறுமதி காணப்படுமிடத்து கொடுக்கல் வாங்கல் விலைக்கும் நியாயப் பெறுமதிக்கும் இடையேயான வித்தியாசமானது ஒத்திவைக்கப்படுவதுடன், உள்ளீடுகள் அவதானிக்க இயலுமையாயின் மாத்திரம் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது, அல்லது கருவியானது அங்கீகார நீக்கம் செய்யப்படும்போதாகும்.

2.4.11.4 நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் அளவீட்டு வகைகள்

1 ஜனவரி 2018 முதல், வங்கியானது அதன் அனைத்து நிதிச் சொத்துக்களையும் சொத்தக்களை முகாமைப்படுத்துவதற்கான வணிக மாதிரிகள் மற்றும் சொத்துக்களின் ஒப்பந்த நியதிகளின் அடிப்படையில் வகைப்படுத்துவதுடன், பின்வருவனவற்றில் ஒன்றில் அளவீடு செய்கின்றது.

- பெறுமதி குறைப்புக் கிரயம்
- ஏ.வி.வ.நி.பெ.
- இ.ந.நி.பெ.

1 ஜனவரி 2018 இற்கு முன்னர், வங்கியானது அதன் நிதிச் சொத்துக்களை கடன்கள் மற்றும் வருமதிகளாகவும் (பெறுமதி குறைப்புக் கிரயத்தில்), இ.ந.நி.பெ., விற்பனைக்கு கிடைக்கக்கூடியவை இல்லது முதிர்வுவரை வைத்திருக்கப்படுபவையாக (பெறுமதி குறைப்புக் கிரயத்தில்)வகைப்படுத்தியது. கடன் கடப்பாடுகள் மற்றும் நிதியியல் உத்தரவாதங்கள் தவிர்த்த நிதிப் பொறுப்புக்கள் பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவிடப்படுகின்றன.

2.4.12 நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

2.4.12.1 வங்கிகளிடமிருந்து வரவேண்டியவை, வாடிக்கையாளருக்கான கடன்களும் முற்பணங்களும், பெறுமதி குறைப்புக் கிரயத்தில் நிதியியல் கருவிகள்

1 ஜனவரி 2018 இலிருந்து, வங்கியானது பின்வரும் இரண்டு நிபந்தனைகள் சந்திக்கப்பட்டிருக்குமாயின், வங்கிகளிடமிருந்து வரவேண்டியவை, வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களும் மற்றும் நிதியியல் முதலீடுகளை மாத்திரம் பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவிடு செய்கின்றது.

- ஒரு வணிக மாதிரியினுள் ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களை திரட்டுவதற்காக நிதிச் சொத்துக்களை வைத்திருக்கும் குறிக்கோளை நிதிச் சொத்துக்கள் கொண்டிருப்பின்.
- நிதிச் சொத்தின் ஒப்பந்த நியதிகள், நிலுவையிலுள்ள முதல் தொகையில் முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவினை மாத்திரம் உள்ளடக்கிய (மு.வ.கொ.மா.) காசுப் பாய்ச்சல்கள் குறிப்பிட்ட திகதிகளில் எழும்போது.

இந்த நிபந்தனைகளின் விபரங்கள் கீழே விளக்கப்பட்டுள்ளன.

2.4.12.2 வணிக மாதிரி மதிப்பீடு

வங்கியானது அதன் வணிக குறிக்கோள்களை அடைவதற்காக தொகுப்பான நிதிச் சொத்துக்களை எவ்வாறு முகாமைப்படுத்துகின்றது என்பதை சிறப்பாக பிரதிபலிக்கும் மட்டத்தில் அதன் வணிக மாதிரியினை தீர்மானிக்கின்றது. வங்கியின் வணிக மாதிரியானது கருவிவாரியான அடிப்படையில் மதிப்பிடாது, ஆனால் உயர்ந்த மட்டத்திலான திரண்ட தேக்கத்தின் மற்றும் பின்வருவன போன்ற அவதானிக்கக்கூடிய காரணிகளின் அடிப்படையிலாகும்:

- வணிக மாதிரியும் வணிக மாதிரியினுள் வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்களதும் செயற்திறனானது எவ்வாறு மதிப்பிடப்பட்டு நிறுவனத்தின முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கு அறிக்கையிடப்படுகின்றது.
- வணிக மாதிரியின் செயற்திறனை பாதிக்கும் இடர்கள் (மற்றும் வணிக மாதிரியினுள் வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்கள்) மற்றும், குறிப்பாக, அந்த இடர்கள் முகாமைப்படுத்தப்படும் முறை.
- வணிகத்தின் முகாமையாளர்களுக்கு எவ்வாறு வேதனமளிக்கப்படுகின்றது (உதாரணமாக, வேதனமானது முகாமைப்படுத்தப்படும் சொத்துக்களின் நியாயப் பெறுமதியின் அடிப்படையிலா அல்லது திரட்டிய ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களின் அடிப்படையிலா.)
- எதிர்பார்க்கப்படும் நிகழ்வெண், விற்பனையின் பெறுமதி மற்றும் நேரம் என்பனவும் வங்கியின் மதிப்பீட்டிற்கு முக்கியமான அம்சங்களாகும்.

வணிக மாதிரியின் மதிப்பீடானது நியாயமாக எதிர்பார்க்கப்படும் காட்சி நிலைகளின் அடிப்படையிலாகும். இது 'மோசமான நிலை" அல்லது "அழுத்தமான நிலை" காட்சிநிலைகளை கணக்கிலெடுக்காது ஆகும். ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர் வங்கியின் ஆரம்ப எதிர்பார்ப்புகளிலிருந்து வித்தியாசமான விதத்தில் காசுப் பாய்ச்சல்கள் எய்தப்பபெற்றிருக்குமாயின், வங்கியானது வணிக மாதிரியினுள் வைத்திருக்கப்படும் எஞ்சிய நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தலை மாற்றாது, ஆனால் முன்னோக்கிச் செல்லும்போது புதிதாக உருவாகிய அல்லது புதிதாக கொள்வனவு செய்யும் நிதிச் சொத்துக்களை மதிப்பீடு செய்யும்போது அத்தகைய தகவல்களை ஒருங்கிணைக்கின்றது.

2.4.12.3 முதல் மற்றும் வட்டி மாத்திரமான கொடுப்பனவு (மு.வ.மா.கொ.)மு. பரிசோதனை

அதன் வகைப்படுத்தல் செயன்முறையின் இரண்டாவது படியாக, வங்கியானது நிதியியல் கருவியின் ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல் நியதிகளை அவை மு.வ.மா.கொ. பரிசோதனையினை சந்திக்கின்றதான என்பதற்காக மதிப்பீடு செய்கின்றது. இந்த பரிசோதனைக்கான "முதல்" என்பது ஆரம்ப அங்கீகாரத்தின் போதான நிதிச் சொத்தின் நியாயப் பெறுமதி என வரையறை செய்யப்படுவதுடன், நிதிச் சொத்தின் வாழ்நாளில் மாற்றமடையலாம் (உதாரணமாக, முதலின் மீள்செலுத்துகை அல்லது கழிவு / வட்டத்தின் பெறுமதி குறைப்பு)

ஒரு கடனளித்தல் ஏற்பாட்டினுள் காணப்படும் மிகவும் முக்கியமான கூறான வட்டியானது பொதுவாக பணத்தின் நேரப்பு பெறுமதிக்கும் கடன் இடருக்குமான மறுபயனாகும். மு.வ.மா.கொ. மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு, வங்கியானது நியாயப்பாட்டினை பிரயோகித்து, நிதிச் சொத்து குறிப்பிடப்பட்டுள்ள நாணயம் மற்றும் வட்டி வீதம் குறிக்கப்பட்டுள்ள காலம் போன்ற பொருத்தமான காரணிகளையும் கருத்திலெடுக்கின்றது.

இதற்கு மாறாக, இடருக்கு ஆகவும் அற்பத்திற்கும் பார்க்க அதிகமான வெளிப்பாட்டினை அறிமுகப்படுத்தும் ஒப்பந்த நியதிகள் அல்லது அடிப்படை கடன்வழங்கல் ஏற்பாடுகளுடன் தொடர்புபடாத ஒப்பந்த காசுப் பாய்ச்சலிலான தளம்பல்கள் நிலுவையிலுள்ள தொகையில் முதல் மற்றும் வட்டிக் மாத்திரமான கொடுப்பனவு ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களுக்கு இடமளிக்காது. அத்தகைய சந்தர்ப்பத்தில், நிதிச் சொத்தானது இ.ந.நி.பெ. அளவிடும் தேவையினைக் கொண்டுள்ளது.

2.4.12.4 ஏ.வி.வ.நி.பெ. இல் கடன் கருவிகள்

வங்கியானது புதிய வகுப்பினை SLFRS 9 இன் கீழான கடன் கருவிகளை ஏ.வி.வ.நி.பெ. இல் அளவிடுகின்றது. இது பின்வரும் நிபந்தனைகள் இரண்டும் சந்தித்தால் மாத்திரமே ஆகும்:

கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளும்

- ஒரு வணிக மாதிரியினுள் வைத்திருக்கப்படும் கருவியானது, அதன் குறிக்கோளானது ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை திரட்டுதல் மற்றும் நிதிச் சொத்துக்களை விற்பனை செய்யதல் இரண்டையும் கொண்டுள்ளன.
- நிதிச் சொத்தின் ஒப்பந்த நிதியதிகள் மு.வ.கொ.மா. சோதனையினை சந்திக்கும் போதாகும்.

இந்த கருவிகள் பெரும்பாலும், LKAS 39 இன் கீழ் விற்பனைக்கு கிடைக்கும் நிதியியல் கருவிகளாக முன்னர் வகைப்படுத்தப்பட்டுள்ள சொத்துக்களை உள்ளடக்கும்.

ஏ.வி.வ.நி.பெ. ஆன கடன் கருவிகள் பின்னர் ஏ.வி.வ. இல் அங்கீகரித்த நியாயப் பெறுமதியிலான மாற்றங்களின் காரணமாக எழுகின்ற இலாபங்கள் மற்றும் நட்டங்களுடன் நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன. வங்கியானது ஒரே பிணையத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட முதலீட்டினைக் கொண்டிருந்தால், அவை LKAS இன் முதல் வருகை முதல் வெளியே அடிப்படையில் விற்பனை செய்யப்படும் எனக் கருதப்படுகின்றது. அங்கீகார நீக்கத்தின்போது ஏ.வி.வ. இல் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட திரண்ட இலாபங்கள் அல்லது நட்டங்கள் ஏ.வி.வ. இலிருந்து இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தப்படுகின்றன. வங்கியானது 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கு ஏ.வி.வ.நி. பெ. இல் அளவிடப்படும் கடன் கருவிகளைக் கொண்டிருக்கவில்லை.

2.4.12.5. ஏ.வி.வ.நி.பெ. இல் உரித்துவக் கருவிகள்

ஆரம்ப அங்கீகாரத்தின்போது, வங்கியானது அவ்வப்போது அதன் உரித்துவ முதலீடுகளில் சிலவற்றை மாற்றவியலாதவாறு ஏ.வி.வ.நி.பெ. உரித்துவ கருவிகளாக வகைப்படுத்துவதற்கு தெரிவுசெய்கின்றது. இது டுமுயுளு 32 நிதியியல் கருவிகளின் கீழான உரித்துவ வரைவிலக்கணத்தினை சந்திக்கும்போதாகும். இவை முன்னிலைப்படுத்துவதற்கு ஆனால் வர்த்தகத்திற்கு வைத்திருக்கப்படாதவை ஆகும். அத்தகைய வகைப்படுத்தலானது ஒரு கருவி வாரியான அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது.

இந்த உரித்துவக் கருவிகளிலான இலாபங்கள் மற்றும் நட்டங்கள் இலாபத்திற்கு ஒருபோதும் மீள்சுழற்சி செய்யப்படுவதில்லை. பங்கிலாபங்கள் இலாபம் அல்லது நட்டத்தில் ஏனைய செயற்பாட்டு வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது, இது கொடுப்பனவிற்கான உரிமை நிலைநாட்டப்படும்போது, அத்தகைய வருவாயிலிருந்து வங்கியானது நலனடையும்போது, கருவியின் கிரயத்தின் ஒரு பகுதியாக மீட்கப்படும்போது அத்தகை இலாபங்கள் ஏ.வி.வ. இல் பதிவுசெய்யப்படுகின்றன. ஏ.வி.வ.நி.பெ. இலான உரித்துவக் கருவிகள் வலுக்கன்றல் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுவதில்லை. வங்கி பட்டியலிடப்படாத உரித்துவ கருவிகளை விட்ச் ரேட்டிங் கம்பனி மற்றும் கடன் தகவல் மையம் ஆகியவற்றில் 2002 இல் நிறைவடைந்த ஆண்டில் வைத்துள்ளது. குறிப்பு இலக்கம் 18.

2.4.12.6 வழங்கப்பட்ட கடன் மற்றும் ஏனைய கடன்பெற்ற நிதிகள்

ஆரம்ப அளவீட்டின் பின்னர், வழங்கப்பட்ட கடன் மற்றும் ஏனைய கடன்பெற்ற நிதிகள் பின்னர் பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. பெறுமதி குறைப்புக் கிரயமானது வழங்கப்படும் நிதியங்களிலான ஏதேனம் கழிவு அல்லது வட்டத்தினையும் வி.வ.வீ. இன் ஒரு ஒருங்கிணைந்த பாகமான கிரயங்களை கணக்கிலெடுத்து கணிப்பிடப்படுகின்றது. ஒரு பொறுப்பு மற்றும் ஒரு உரித்துவக் கூறினைக் கொண்டுள்ள ஒரு கலவையான நிதியியல் கருவியானது வழங்கப்படும் திகதியில் வேறாக்கப்படுகின்றது.

2.4.12.7 இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் நிதிச் சொத்துக்களும் பொறுப்புக்களும்

இந்தப் பிரிவில் காணப்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிக் பொறுப்புக்கள் வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படுபவை மற்றும் ஒன்றில் ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர் முகாமைத்துவத்தினால் பெயரிடப்பட்டவை அல்லது SLFRS 9 இன் கீழ் நியாயப் பெறுமதியில் அளவிடுவதற்கான கட்டாயத்தினை கொண்டிருப்பதாகும். முகாமைத்துவமானது ஆரம்ப அங்கீகாரத்தன்போத பின்வரும் வரன்முறையில் ஒன்று சந்தித்தால் மாத்திரமே ஒரு கருவியினை இ.ந.வி. பெ. ஆக பெயரிடுகின்றது. அத்தகைய பெயரிடலானது கருவிவாரியான அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது.

- ஒரு வித்தியாசமான அடிப்படையில் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களை அளவிடும்போது அல்லது அவற்றிலான இலாபம் அல்லது நட்டங்களை அங்கீகரிக்கும்போது இல்லாவிடின் எழுகின்ற முரண்பாடான கவனிப்பினை இந்த பெயரிடலானது நீக்குகின்றது, அல்லது கணிசமான குறைக்கின்றது.

அல்லது

- பொறுப்புக்கள் (LKAS 39 இன் கீழ் சொத்துக்கள் 1 ஜனவரி 2018 வரைக்கும்) ஒரு தொகுப்பு பொறுப்புக்களின் ஒரு பாகமாயிருந்தால் (அல்லது நிதிச் சொத்து அல்லது இவ்விரண்டும் LKAS 39 இன் கீழ்) முகாமைப்படுத்தப்படுவதுடன் அவற்றின் செயற்திறனானது ஒரு நியாயப் பெறுமதி அடிப்படையில் மதிப்பிடப்படுமாயின், இது ஆவணப்படுத்தப்பட்ட இடர் முகாமைத்துவம் அல்லது முதலீட்டு மூலோபாயத்துடன் ஒத்ததாக இருத்தல் வேண்டும்.

இ.ந.நி.பெ. இல் காணப்படும் நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்கள் நியாயப் பெறுமதியில் நிதி நிலைமைக் கூற்றில் பதிவுசெய்யப்படுகின்றன. நியாயப் பெறுமதியிலான மாற்றங்கள், இலாபம் அல்லது நட்டத்தில் பதிவு செய்யப்படுவதுடன், வங்கியின் சொந்த கடன் இடரிலான மாற்றங்கள் காரணமாக இ.ந.நி.பெ. இல் பெயரிடப்பட்ட பொறுப்புக்களின் நியாயப் பெறுமதியிலான அசைவுகள் விதிவிலக்காகும். நியாயப் பெறுமதியிலான அத்தகைய மாற்றங்கள் ஏ.வி.வ. ஊடாக சொந்த கடன் ஒதுக்கத்தில் பதிவு செய்யப்படுவதுடன், இலாபம் அல்லது நடட்டத்திற்கு மீள்சுழற்சி செய்யப்படுவதில்லை. இ.ந.நி.பெ. இல் பெயரிடப்பட்ட கருவிகளில் பெறப்பட்ட அல்லது ஆட்பட்ட வட்டியானது முறையே வட்டி வருமானத்தில் அல்லது வட்டிச் செலவினத்தில் அட்டுறு செய்யப்படுவதுடன். இது ஏதேனும் கழிவு அல்லது வட்டம் மற்றும் கருவியின் ஒருங்கிணைந்த பாகமான தகைமை பெறும் கொடுக்கல் வாங்கல் கிரயங்கள் வி.வ.வீ. இனை பயன்படுத்தி கணிப்பிடப்படுகின்றது. கட்டாயமாக இ.ந.நி. பெ. இல் அளவிடப்படுவேண்டிய சொத்துக்களில் உழைத்த வட்டியானது ஒப்பந்த வட்டி வீதத்தினை பயன்படுத்தி பதிவுசெய்யப்படுபவதுடன் இ.ந.நி. பெ அளவிடப்படும் உரித்துவ கருவிகளிலான பங்கிலாப வருமானம் இலாபம் அல்லது நட்டத்தில் ஏனைய செயற்பாட்டு வருமானமாக பதிவு செய்யப்படுகின்றது. இது கொடுப்பனவிற்கான உரிமை நிலைநாட்டப்படும்போதாகும். 31 டிசம்பர் 2023 இல் வைத்திருக்கப்படும் யுனிட் ட்ரஸ்ட்கள் இ.ந.நி.பெ. இல் அளவிடப்படுகின்றன.

2.4.12.8 நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மீள்வகைப்படுத்தல்

வங்கியானது நிதிச் சொத்துக்களை அவற்றின் ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர் மீள்வகைப்படுத்துவதில்லை, இதற்கு வங்கியானது ஒரு வணிகப் பிரிவினை கையகப்படுத்தும்போது, விற்பனை செய்யும்போது அல்லது நிறுத்தும்போதான விதிவிலக்கான சூழ்நிலைகளுக்கு அப்பால் மீள்வகைப்படுத்தலாம். நிதிப் பொறுப்புக்கள் ஒருபோதும் மீள்வகைப்படுத்தப்படுவதில்லை. வங்கியானது ஏதேனும் அதன் நிதிச் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களை 2022 மற்றும் 2023 இல் மீள்வகைப்படுத்தவில்லை.

2.4.12.9 நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் அங்கீகார நீக்கம்

2.4.12.9.1 நியதிகளும் நிபந்தனைகளிலான கணிசமான திருத்தங்களின் காரணமான அங்கீகார நீக்கம்

வங்கியானது வாடிக்கையாளருக்கான கடன் போன்ற நிதிச் சொத்தினை, அதன் நியதிகள் மற்றம் நிபந்தனைகள் கணசிமாக அது ஒரு புதிய கடனான அளவிற்கு பேரம்பேசப்பட்டு இருக்கும்போது அங்கீகார நீக்கத்தினை செய்வதுடன், வித்தியாசமானது அங்கீகார நீக்க இலாபம் அல்லது நட்டமாக அங்கீகரிக்கப்படுகின்றது. இது ஒரு வலுக்குன்றல் நட்டம் ஏற்கனசேவ பதிவு செய்யப்படாதிருக்கும் அளவிற்காகும். புதிதாக அங்கீகரிக்கப்பட்ட கடன்கள் எ.க.ந. அளவீட்டு நோக்கங்களுக்காக கட்டம் 1 ஆக வகைப்படுத்தப்படுகின்றன, இங்கு புதிய கடனானது கொள்வனவு செய்யப்பட்ட அல்லது உருவாகிய கடன்

வலுக்குன்றலானவையாக (கொ.உ..க.வ.) கருதப்பட்டாலொழிய ஆகும்.

ஏனையவற்றுக்கிடையில், ஒரு வாடிக்கையாளருக்கான கடனை அங்கீகார நீக்கம் செய்வதா அல்லது இல்லையா என மதிப்பிடும்போது வங்கியானது பின்வரும் காரணிகளை கருத்திலெடுக்கின்றது:

- கடனின் நாணயத்திலான மாற்றம்
- ஒரு உரித்துவப் பண்பின் அறிமுகம்
- எதிர்தரத்தவரிலான மாற்றம்
- கருவியானது மு.வ.கொ.மா. வரன்முறையினை சந்திக்காவிடின் ஏற்படும் திருத்தம்.

திருத்தமானது கணிசமானளவு வித்தியாசமான காசுப் பாய்ச்சல்களை விளைவிக்காவிடின், அத்திருத்தமானது அங்கீகார நீக்கத்தினை விளைவிக்காது. ஆரம்ப வி.வ.வீ. இல் கழிவிறக்கம் செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல்களின் மாற்றத்தின் அடிப்படையில், வங்கியானது ஒரு திருத்த இலாபம் அல்லது நட்டத்தினை பதிவு செய்கின்றது, இது ஒரு வலுக்குன்றல் நட்டம் ஏற்கனவே பதிவுசெய்யப்படாத அளவு வரைக்குமாகும்.

2.4.12.9.2 கணிசமான திருத்தம் தவிர்த்த அங்கீகார நீக்கம்

நிதிச் சொத்துக்கள்

ஒரு நிதிச் சொத்தானது (அல்லது பொருத்தமானபோது, ஒரு நிதிச் சொத்தின் ஒரு பாகம் அல்லது ஒரு தொகுப்பான ஒத்த நிதிச் சொத்துக்களின் ஒரு பாகம்) நிதிச் சொத்திலிருந்து காசுப் பாய்ச்சலை பெறுவதற்கான உரிமைகள் முதிர்வடையும்போது அங்கீகார நீக்கம் செய்யப்படுகின்றன. நிதிச் சொத்தானது மாற்றல் செய்யப்பட்டிருப்பின் மற்றும் மாற்றலானது அங்கீகார நீககத்திற்கு தகைமை பெறுமாயின் நிதிச் சொத்தினை அங்கீகார நீக்கம் செய்கின்றது. வங்கியானது நிதிச் சொத்தினை ஒன்றில் இது இடம்பெற்றிருந்தால் மற்றும் இது இடம்பெற்றிருந்தால் மாத்திரமே மாற்றல் செய்கின்றது:

- வங்கியானது நிதிச் சொத்திலிருந்து காசுப் பாய்ச்சல்களை பெறுவதற்கான அதன் ஒப்பந்த உரிமைகளை மாற்றல் செய்திருப்பின்

அல்லது

- இது காசுப் பாய்ச்சல்களுக்கான உரிமைகளை தக்கவைத்திருந்தால், ஆனால் ஒரு 'ஊடுருவுதல்' ஏற்பாட்டின் கீழ் ஒரு மூன்றாம் தரப்பினருக்கு பொருண்மையான தாமதமின்றி பெறப்பட்ட காசுப்பாய்ச்சல் முழுவதையும் செலுத்துவதற்கான ஒரு கடப்பாட்டினை பொறுப்பேற்றிருப்பின்.

ஊடுருவுதல் ஏற்பாடுகள் என்பன ஒரு நிதிச் சொத்தின் (ஆரம்பச் சொத்து) காசுப் பாய்ச்சல்கிள பெறுவதற்கான ஒப்பந்த உரிமைகளை வங்கி தக்கவைக்கும் கொடுக்கல் வாங்கல்கள், ஆனால் பின்வரும் மூன்று நிபந்தனைகளும் சந்திக்கப்படும்போது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிறுவனங்களுக்கு அந்த காசுப் பாய்ச்சல்களை செலுத்துவதற்கான ஒரு ஒப்பந்த கடப்பாட்டினை பொறுப்பேற்றால்:

- ஆரம்ப சொத்திலிருந்து சமனான தொகைகளை திரட்டியிருந்தாலொழிய, இறுதி பெறுநர்களுக்கு தொகைகளை செலுத்தவேண்டிய கடப்பாட்டினை வங்கி கொண்டிருக்காதபோது, சந்தை வீதங்களில் அட்டுறு வட்டியுடன் சேர்த்து கடன் வழங்கிய தொகையின் முழுமையான மீட்புடனான குறுங்கால முற்பணங்கள் நீங்கலானவை.
- வங்கியானது இறுதி பெறுநருக்கான பிணையாக தவிர்த்து ஆரம்ப சொத்தினை விற்பனை செய்யவோ பிணைஈடு வைக்கவோ இயலாது.
- இறுதி பெறுநர்கள் சார்பில் திரட்டிய ஏதேனும் காசுப் பாய்ச்சல்களை பொருண்மையான தாமதமின்றி வங்கி பணமனுப்பல் வேண்டும்.

மேலாக, வங்கியானது அத்தகைய காசுப் பாயச்சல்களை மீள்முதலீடு செய்வதற்கு உரிமையினை கொண்டிருக்காததுடன், இது இறுதி பெறுநர்களுக்கு பணமனுப்பத் தேவையான திகதிக்கும் திரட்டிய திகதிக்கும் இடையேயான காலத்தின்போது உழைத்த வட்டி உள்ளடங்கலான காசு அல்லது காசுக்குச் சமனானவற்றில் முதலீடுகள் தவிர்த்தவையாகும்.

ஒரு மாற்றலானது பின்வருவனவற்றில் ஒன்று காணப்பட்டால் மாத்திரமே அங்கீகார நீக்கத்திற்கு தகைமை பெறும்:

- சொத்தின் அனைத்து இடர்கள் மற்றும் வெகுமதிகளை கணிசமாக வங்கியானது மாற்றல் செய்திருப்பின்

அல்லது

- வங்கியானது சொத்தின் அனைத்து இடர்கள் மற்றும் வெகுமதிகளை மாற்றல் செய்யவுமில்லை தக்கவைக்கவுமில்லை, ஆனால் சொத்தின் கட்டுப்பாட்டினை மாற்றல் செய்துள்ளது.

வங்கியானது பின்வரும் சந்தர்ப்பத்தில் மாத்திரமே கட்டுப்பாட்டினை மாற்ற் செய்வதனை கருதுகின்றது: மாற்றம் பெறுநர் ஒரு தொடர்பற்ற மூன்றாம் தரத்தவருக்கு முழுமையாக சொத்தினை விற்பனை செய்வதற்கான நடைமுறையான ஆற்றலைக் கொண்டிருப்பின் மற்றும மாற்றலில் மேலதிக கட்டுப்பாடுகளை சுமத்தாது ஒரு தலைப்பட்சமாக அந்த ஆற்றலை நிறைவேற்ற இயலுமையாயின் மாத்திரமே.

வங்கி சொத்தின் அனைத்து இடர்கள் மற்றும் வெகுமதிகளை கணிசமான மாற்றல் செய்யாது அல்லது தக்கவைத்திருக்காதிருக்கும்போது மற்றும் சொத்தின் கட்டுப்பாட்டினை வைத்திருக்கும்போது, வங்கியின் தொடர்ச்சியான ஈடுபாடு காணப்படுமளவிற்கு சொத்தானது தொடர்ந்தும் அங்கீகரிக்கப்படுவதுடன், வங்கியானது அத்துடன் இணைந்த ஒரு பொறுப்பினையும் அங்கீகரிக்கின்றது. மாற்றல் செய்யப்பட்ட சொத்தும் இணைந்த பொறுப்பும் வங்கி தக்கவைத்துள்ள உரிமைகள் மற்றும் கடப்பாடுகளை பிரதிபலிக்கும் அடிப்படையில் அளவிடப்படுகின்றன.

மாற்றல் செய்யபப்பட்ட சொத்தின் மீது ஒரு உத்தரவாத வடிவத்தினை எடுக்கும் தொடர்ச்சியான ஈடுபாடானது சொத்தின் ஆரம்ப கொண்டுசெல்லல் தொகையின் குறைந்ததற்கும் வங்கி செலுத்துவதற்கு வேண்டப்படும் ஆகக் கூடிய மறுபயன் தொகைக்கும் அளவிடப்படுகின்றது.

தொடர்ச்சியான ஈடுபாடானது மாற்றல் செய்யப்பட்ட சொத்தில் ஒரு எழுத்துமூல அல்லது கொள்வனவுத் தெரிவு (அல்லது இரண்டையும்) வடிவத்தினைக் கொண்டிருப்பின், தொடர்ச்சியான ஈடுபாடானது மீள்கொள்வனவின்போது வங்கி செலுத்தவேண்டிய பெறுமதியில் அளவிடப்படும். நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட ஒரு சொத்திலான ஒரு எழுத்துமூல விற்பனைத் தெரிவின்போது, நிறுவனத்தின் தொடர்ச்சியான ஈடுபாட்டின் அளவானது மாற்றல் செய்யப்பட்ட சொத்தின் குறைவான நியாயப் பெறுமதிக்கு மற்றும் தெரிவு நிறைவேற்றல் விலைக்கும் வரையறை செய்யப்பட்டுள்ளது.

நிதிப் பொறுப்புக்கள்

பொறுப்பின் கீழான கடப்பாடானது வெளியேற்றப்படும்போது, ரத்துசெய்யப்படும்போது அல்லது முதிர்வடையும்போது ஒரு நிதிப் பொறுப்பானது அங்கீகார நீக்கம் செய்யப்படுகின்றது. நடைமுறையிலுள்ள ஒரு நிதிப் பொறுப்பானது அதே கடன் வழங்குநரிடமிருந்து மற்றுமோர் பொறுப்பினால் மாற்றீடு செய்யப்பட்டிருப்பின், கணிசமாக வித்தியாசமான நியதிகளில் அல்லது நடைமுறையிலுள்ள பொறுப்பின் நியதிகள் கணிசமாக திருத்தப்பட்டிருப்பின், அத்தகைய ஒரு பரிமாற்றல் அல்லது திருத்தமானது ஆரம்ப பொறுப்பின் அங்கீகார நீக்கமாக கருதப்பட்டு ஒரு புதிய பொறுப்பானது அங்கீகரிக்கப்படுகின்றது. ஆரம்ப நிதிக் பொறுப்பின் கொண்டு செல்லல் பெறுமதிக்கும் செலுத்தப்பட்ட மறுபயனுக்கும இடையிலான வித்தியாசம் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளும்

2.4.12.10 நிதிச் சொத்துக்களின் வலுக்குன்றல்

சாத்தியமான வலுக்குன்றல் நட்டங்களுக்கான ஏற்பாடானது நிதிக் கருவிகளிலான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் (SLFRS) 09 இன் பிரகாரம் - வங்கிகளின் நிதிக் கூற்றுக்களிலான அங்கீகாரம் மற்றும் அளவீட்டிற்கான ஏற்பாடு - வாடிக்கையாளர்க்கான அனைத்து கடன்கள் மற்றும் முற்பணங்களில் தொடர்ச்சசியான மீளாய்வின் அடிப்படையில் மேற்கொள்ளப்டுகின்றது, அவசியமாயின், பின்வரும் பெறுமதியிடல் நுட்பங்கள் கடன்களின் நியாயப் பெறுமதியினை கணிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படுகின்றன. நிதிச் சொத்துக்களின் வலுக்குன்றலது விபரங்கள் குறிப்பு 16 மற்றும் 17 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

2.4.12.10.1 தனித்தனியான வலுக்குன்றல் முறை

i. ரூபா 5 மில்லியனுக்கும் அதிகமான அல்லது தனித்தனியாக முக்கியமானவையாக கருதப்படும் 0.1% மூலதன தளத்தையுடைய அனைத்து கடன்கள் உள்ளடங்கலான ஆனால் காசுப் பின்னணயிலான கடன்கள் தவிர்ந்த கடன்களுக்கு தனித்தனியான வலுக்குன்றல் மேற்கொள்ளப்படுகின்றது. தனித்தனியான வலக்குன்றல் பரிசோதனைக்கான கடன் வசதிகள் வலுக்குன்றலின் புறநிலையான சான்று கிடைக்கப்பெறுவதன் அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்றது.

ii. தனித்தனியான முக்கியமானவை மற்றும் தனித்தனியான வலுக்குன்றாதவை

தனித்தனியாக முக்கியமான கடன்கள் ஆனால் வலுக்குன்றாதவை ஒன்றில் கட்டம் 1 அல்லது கட்டம் 2 இன் கீழ் கூட்டாக வலக்குன்றலுக்கான மதிப்பீடு செய்யப்படுவதுடன், இது ஆரம்பத்திலிருந்த கடன் கணிசமாக சீர்கேட்டுள்ளதா என்ற வரன்முறையின் அடிப்படையிலாகும். தனித்தனியான வலக்குன்றலின் கீழான கடன் வசதிகளுக்கு கணிசமான கடன் சீர்கேட்டினை நிலைநாட்டுவதில் பின்வரும் வரன்முறையானது கருத்திலெடுக்கப்படுகின்றது.

வழங்குநரின் அல்லது கடன் பெறுநரின் கணிசமான நிதியியல் சிரமம், கடன் பெறுநர் அல்லது மற்றைய நிதி நிறுவனம் வங்கி முறிவடைந்தவராக கருதும் சாத்தியம் வருதல். நிதியியல் சிரமத்தின் காரணமாக அந்த நிதிச் சொத்துக்கான ஒரு துடிப்பான சந்தை இல்லாதுவிடின். கடன் பெறுநர் மோசடியான ஆவணங்களை சமர்ப்பித்துள்ளார் என்ற் சான்று அல்லது சாத்தியம் காணப்படுமாயின் மற்றும் நிலைவையிலுள்ள மீதியினை மீட்டல் சந்தேகமானது ஆயின், அதே கடன் பெறுநரின் ஏனைய நிதியியல் கருவிகளின் கடன் இடரில் கணிசமான அதிகரிப்பு காணப்படுமாயின்.

2.4.12.10.2 கூட்டு வலுக்குன்றல் முறை

சாத்தியமான கடன் நட்டங்களுக்கான கூட்டு வலுக்குன்றல் ஏற்பாடுகள் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் இலக்கம் 09 - நிதியியல் கருவிகள் .இன் பிரகாரம் வங்கியின் நிதிக் கூற்றுக்களில் அங்கீகாரம் மற்றும் அளவீடு. வங்கியானது எ.க.ந. கொள்கையின் பிரகாரம் கூட்டு வலுக்குன்றல் ஏற்பாடுகளை மேற்கொள்கின்றது. இங்கு தனித்தனியான வலுக்குன்றல் பொருண்மையற்றவையாகும்.

2.4.12.10.2.1 எ.க.ந. கொள்கைகளின் கண்ணோட்டம்

SLFRS 9 இன் அமுலாக்லானது வங்கியின் கடன் வலுக்குன்றல் முறையினை அடிப்படையில் மாற்றியுள்ளதுடன் அது LKAS 39 இன் ஆட்பட்ட நட்ட அணுகுமுறையினால் மாற்றீடு செய்யப்பட்டுள்ளது. இது முன்னோக்கிய எ.க.ந. அணுகுமுறையிலாகும். 1 ஜனவரி 2018 முதல் வங்கியானது அனைத்து கடன்கள் மற்றும் இ.ந.நி.பெ. இல் கைத்திருக்கும் ஏனைய கடன் நிதிச் சொத்துக்களுடன் ஏனைய கடன் கடப்பாடுகள் மற்றும் நிதியியல் உத்தரவாத ஒப்பந்தங்களின் எதிர்பார்த்த கடன் நட்டங்களுக்காக தள்ளுபடிகளை பதிவு செய்கின்றது. இந்த பிரிவில் இவையனைத்தும் நிதியியல் கருவிகளாக குறிப்பிடப்படுகின்றன. SLFRS 9 இன் கீழ் உரித்துவ கருவிகள் வலுக்குன்றலுக்கு உட்படுவதில்லை.

12 மாத எ.க.ந. என்பது நீ.கா.எ.க.ந. இன் ஒரு பகுதி என்பதுடன் இது அறிக்கையிடப்படும் திகதிக்குப் பின்னர் 12 மாதங்களினுள் ஒரு நிதியியல் கருவியில் சாத்தியமான தவறுதல் நிகழ்வின் விளைவான எ.க.ந. ளை பிரதிநிதித்துவம் செய்கின்றது. நீ.க.எ.க.ந. மற்றும் 12மா.எ.க.ந. ஆகிய இரண்டும் ஒன்றில் ஒரு தனித்தனியான அடிப்படையில் அல்லது ஒரு கூட்டான அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது. இது நிதியியல் கருவிகளின் உள்ளார்ந்த தேக்கத்தின் தன்மையில் தங்கியுள்ளது. ஒரு கூட்டான அடிப்படையில் அளவிடப்படும் நிதிச் சொத்துக்களின் தொகுப்பிற்கான வங்கியின் கொள்கை.

வங்கியானது ஒவ்வொரு அறிக்கையிடப்படும் காலத்தின் இறுதியியல் ஒரு மதிபீட்டினை செயலாற்றுவதற்கு ஒரு கொள்கையினை நிறுவியுள்ளது, இது ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து நிதியியல் கருவியின் கடன் இடரானது கணிசமாக அதிகரித்துள்ளதா, நிதியியல் கருவியின் எஞ்சிய வாழ்நாள் மீது ஏற்படக்கூடிய தவறுதல் இடரிலான மாற்றம் கருத்திலெடுக்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட செயன்முறையின் அடிப்படையில், வங்கியானது அதன் கடன்களை கட்டம் 1, கட்டம் 2, கட்டம் 3 மற்றும் கொ.உ.க.வ., கீழே விபரிக்கப்பட்டுள்ளது:

கட்டம் 1	கடன்கள் முதற்தடவையாக அங்கீகரிக்கப்படும்போது, வங்கியானது 12 மாத எ.க.ந. இன் அடிப்படையில் ஒரு தள்ளுபடியினை அங்கீகரிக்கின்றது. கட்டம் 1 கடன்கள் கடன் இடர் மேம்பட்டுள்ள மற்றும் கடனானது கட்டம் 2 இலிருந்து மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளதை உள்ளடக்குகின்றது.
கட்டம் 2	ஆரம்பத்திலிருந்து ஒரு கடனானது கடன் இடரில் கணிசமான அதிகரிப்பினைக் காண்பித்தால், வங்கியானது நீ.கா.எ.க.ந. இற்கான ஒரு தள்ளுபடியாக பதிவுசெய்கின்றது. கட்டம் 2 கடன்கள் கடன் இடர் மேம்பட்டுள்ள மற்றும் கடனானது கட்டம் 3 இலிருந்து மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளதை உள்ளடக்குகின்றது.
கட்டம் 3	கடன் வலுக்குன்றியுள்ளதாக கருதப்படும் கடன்கள் (குறிப்பு 13 இல் குறிப்பிட்டுள்ளவாறு). வங்கியானது நீ.க.எ.க.ந. இற்கு ஒரு தள்ளுபடியினை பதிவு செய்கின்றது.
கொ.உ.க.வ.	கொள்வனவு செய்யப்பட்ட அல்லது உருவாகிய கடன் வலுக்குன்றல் (கொ.உ.க.வ.) சொத்துக்கள் என்பன ஆரம்ப அங்கீகாரத்தின்போது கடன் வலுக்குன்றியுள்ள நிதிச் சொத்துக்களாகும். கொ.உ.க.வ. சொத்துக்கள் ஆரம்ப அங்கீகாரத்தின்போது நியாயப் பெறுமதியில் பதிவு செய்யப்படுவதுடன், வட்டி வருமானமானது பின்னர் ஒரு கடன் செம்மையாக்கப்பட்ட வி.வ.வீ இன் அடிப்படையில் அங்கிகரிக்கப்படுகின்றது. எ.க.ந., எதிர்பார்க்கும் கடன் நட்டங்களில் பின்னரான மாற்றம் காணப்படும் அளவிற்கு மாத்திரம் அங்கீகரிக்கப்படுகின்றது அல்லது விடுவிக்கப்படுகின்றது.

வங்கியானது ஒன்றின் நிலுவையிலுள்ள முழுத்தொகையினை அல்லது அதனில் ஒரு பகுதியினை மீட்பதற்கான நியாயமான எதிர்பார்ப்புக்களை கொண்டிரான நிதிக் சொத்துக்களுக்கு, நிதிச் சொத்தின் மொத்த கொண்டு செல்லல் தொகையானது குறைக்கப்படுகின்றது. இது நிதிச் சொத்தின் ஒரு பகுதி அங்கீகார நீக்கமாக கருதப்படுகின்றது.

2.4.12.10.2.3 எ.க.ந. இன் கணிப்பீடு

வங்கியானது எதிர்பார்க்கப்படும் ' காசு பற்றாக்குறைகளை அளவிடுவதற்கு சாத்தியப்பாடு நிறையிடப்பட்ட காட்சிநிலைகளின் அடிப்படையில் எ.க.ந. இனை கணிப்பிடுகின்றது. இவை ஒரு அண்ணளவான வி.வ.வீ. இல் கழிவிறக்கம் செய்யப்படுகின்றது. ஒரு காசுப் பற்றாக்குறையானது ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒரு நிறுவனத்திற்கு வரவேண்டிய காசுப் பாயச்சல்களுக்கும் நிறுவனம் பெறுவதற்கு எதிர்பார்க்கும் காசுப் பாய்ச்சல்களுக்கும் இடையேயான வித்தியாசமாகும். எ.க.ந. கணிப்பீடுகளின் நுட்பங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளதுடன், முக்கிய கூறுகள் பின்வருமாறு:

த.சா. தவறுதலுக்கான சாத்தியமானது ஒரு கொடுக்கப்பட்ட கால எல்லை மீது தவறுவதற்கான நிகழ்தகவினைக் கொண்டுள்ளது. ஒரு தவறுதலானது மதிப்பிடப்படும் காலத்தின் மீது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மாத்திரமே நிகழலாம், இது இவ்வசதியானது முன்னர் அங்கீகரிக்கப்படவில்லை மற்றும் இன்னமும் தேக்கத்தில் உள்ளதாகும்.

த.வெ. தவறுதலிலான வெளிப்பாடானது ஒரு எதிர்கால தவறுதல் தினத்தில் காணப்படும் வெளிப்பாட்டின் ஒரு மதிப்பீடாகும். இது அறிக்கையிடப்படும் திகதியின் பின்னர், வெளிப்பாட்டிலான எதிர்பார்க்கப்படும் மாற்றங்களை கணக்கிலெடுப்பதுடன், ஒப்பந்தத்தினால் திட்டமிடப்பட்ட அல்லது இல்லாவிடின், முதல் மற்றும் வட்டியின் மீள்செலுத்தல் மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட கடன் வசதிகளிலான பெறுகைகள், மற்றும் தவறிய கொடுப்பனவுகளில் அட்டுறு வட்டி உள்ளடங்கலாகும்.

க.வ.த. கடன் வழங்கப்பட்ட தவறுதல் என்பது ஒரு கொடுக்கப்பட்ட நேரத்தில் ஒரு தவறுதல் இடம்பெறுவதில் எழுகின்ற நட்டத்திலான ஒரு மதிப்பீடாகும். இது வரவேண்டிய ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களுக்கும் கடன் வழங்கியவர் பெறுவதற்கு எதிர்பார்ப்பதற்கு இடையேயான வித்தியாசத்தின் அடிப்படையிலாகும், இது ஏதேனும் பிணைச் சொத்திலிருந்து எய்தப்பெறுபவை உள்ளடங்கலானது. இது பொதுவாக தவறுதலிலான வெளிப்பாட்டின் (த.வெ.) சதவீதமாக தெரிவிக்கப்படுகின்றது.

எ.க.ந. இனை மதிப்படும்போது வங்கியானது மூன்று காட்சி நிலைகளை கருத்திலெடுக்கின்றது, அடித்தன நிலைமை, சிறந்த நிலைமை, மற்றும் மோசமான நிலைமை. இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு த.சா., த.வெ. மற்றும் க.வ.த. உடன் இணைந்தவையாகும். பொருத்தமானபோது, பன்முக காட்நிலைமைகளின் மதிப்பீடானது எவ்வாறு தவறுதலடைந்த கடன்கள் மீட்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்பதனையும் ஒருங்கிணைக்கின்றது. இது கடன்கள் நலனடையும் மற்றும் பிணைச்சொத்தின் பெறுமதி அல்லது சொத்தினை விற்பதற்காக பெறக்கூடிய தொகையின் சாத்தியப்பாட்டினை உள்ளடக்குகின்றது.

வலுக்குன்றல் நட்டங்கள் மற்றும் வெளியீடுகள் கணக்கீடு செய்யப்படுவதுடன், மற்றும் திருத்தல் நட்டங்கள் அல்லது இலாபங்களிலிருந்து வேறாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன் இவை நிதிச் சொத்தின் மொத்த கொண்டு செல்லல் பெறுமதிக்கான ஒரு திருத்தமாக கணக்கீடு செய்யப்படுகின்றது.

2.4.12.10.2.4 எ.க.ந. முறையின் நுட்பங்கள் கீழே சுருக்கமாய் விபரிக்கப்பட்டுள்ளன:

கட்டம் 1 12 மா.எ.க.ந. ஆனது நீ.கா.எ.க.ந. இன் ஒரு பகுதியாக கணிப்பீடு செய்யப்படுவதுடன், இது அறிக்கையிடப்படும் திகதியின் பின்னர் 12 மாதங்களினுள் நிதிக் கருவியியல் சாத்தியமான தவறுதல் நிகழ்வின் விளைவாக எ.க.ந. இனை பிரதிநிதித்துவம் செய்கின்றது. வங்கியானது அறிக்கையிடப்படும் திகதியினைத் தொடர்ந்து ஒரு தவறின் எதிர்பார்ப்பின் அடிப்படையில் 12 மா.எ.க.ந. இனை கணிப்பீடு செய்கின்றது. இந்த எதிர்பார்த்த 12 மாத தவறுதல் சாத்தியங்கள் த.வெ. இனை எதிர்வுகூறுவதற்கு பிரயோகிக்கப்படுவதுடன், எதிர்பார்க்கப்படும் க.வ.த. இனால் பெருக்கப்பட்டு ஆரம்ப வி.வ.வீ. இற்கு அண்ணளவாக கழிவிறக்கம் செய்யப்படுகின்றது. இந்த கணிப்பீடானது மேலே விபரிக்கப்பட்டுள்ளவாறு, ஒவ்வொரு நான்கு காட்சிநிலைகளுக்கும் மேற்கொள்ளப்படுகின்றது.

கட்டம் 2 ஆரம்பத்திலிருந்து கடன் இடரில் ஒரு கணிசமான அதிகரிப்பினை ஒரு கடன் காண்பித்தால், வங்கியானது நீ.கா.எ.க.ந. இற்காக ஒரு தள்ளுபடியினை பதிவு செய்கின்றது. நுட்பங்கள் மேலே விபரிக்கப்பட்டுள்ளவற்றிற்கு ஒத்ததாகும், பன்முக காட்சிநிலைகள் பயன்படுத்தப்படுவதனை உள்ளடக்கும், ஆனால் த.சா. மற்றும் க.வ.த. ஆகியன கருவியின் வாழ்நாள் மீது மதிப்பிடப்படுகின்றது. எதிர்பார்க்கப்படும் காசுப் பற்றாக்குறைகள் ஆரம்ப வி.வ.வீ. அண்ணளவாக கழிவிறக்கம் செய்யப்படுகின்றது.

கட்டம் 3 கடன் வலுக்குன்றியுள்ளதாக கருதப்படும் கடன்களுக்கு வங்கியானது இந்த கடன்களுக்கான வாழ்நாள் எதிர்பார்த்த கடன் நட்டங்களை அங்கிகரிக்கின்றது. இந்த முறையானது கட்டம் 2 சொத்தக்களுக்கு ஒத்ததாகும், தவறுதலுக்கான சாத்தியம 100% இல் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் ஆகும்.

கொ.உ.க.வ. கொ.உ.க.வ. உள்ள சொத்துக்கள் என்பன ஆரம்ப அங்கீகாரத்தில் கடன் வலுக்குன்றிய நிதிச் சொத்துக்களாகும். வங்கியானது ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து வாழ்நாள் எ.க.ந. இலான திரண்ட மாற்றங்களை மாத்திரம் அங்கீகரிக்கின்றது. இது நான்கு காட்சி நிலைகளின் சாத்தியம் நிறையிடப்பட்டதன் அடிப்படையில் கடன் செம்மையாக்கப்பட்ட வி.வ.வீ. இனால் கழிவிறக்கம் செய்யப்படுகின்றது.

2.4.12.11 ஏ.வி.வ. ஊடான நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட கடன் கருவிகள்

ஏ.வி.வ.நி.பெ. இல் அளவிடப்படும் கடன் கருவிகளுக்கான எ.க.ந., நிதி நிலைமைக் கூற்றில் இந்த நிதிச் சொத்துக்களின் கொண்டு செல்லும் தொகையினை குறைக்காது, அவை நியாயப் பெறுமதியில் காணப்படும். பதிலாக, சொத்துக்கள் பெறுமதி குறைப்புக் கிரயத்தில் அளவிடப்பட்டிருக்குமாயின், எழுகின்ற தள்ளுபடிக்கு சமனான தொகையானது ஒரு திரண்ட வலுக்கன்றல் தொகையாக ஏ.வி.வ. இல் அங்கீகரிக்கப்படுவதுடன் இலாபம் அல்லது நட்டத்திற்கு அதன் மறுபகுதி செலவு வைக்கப்படுகின்றது. ஏ.வி.வ. இல் அங்கீகரிக்கப்பட்ட திரண்ட நட்டமானது சொத்தானது அங்கீகார நீக்கம் செய்யப்படும்போது இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்சுழற்சி செய்யப்படுகின்றது.

2.4.12.12 கொள்வனவு செய்யப்பட்ட அல்லது உருவாகிய கடன் வலுக்குன்றிய நிதிச் சொத்துக்கள் (கொ.உ.க.வ.)

கொ.உ.க.வ. நிதிச் சொத்துக்களுக்கு, வங்கியானது ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து நீ.கா.எ.க.ந. இலான திரண்ட மாற்றங்களை மாத்திரம் நட்ட தள்ளுபடியாக அங்கீகரிக்கின்றது.

2.4.12.13 முன்னோக்கிய தகவல்கள்

அதன் எ.க.ந. மாதிரிகளில், வங்கியானது பொருளாதார உள்ளீடுகளாக பின்வருவனவற்றை ஒரு பரவலான முன்னோக்கிய தகவல்களில் தங்கியுள்ளது.:

- மொ.உ.உ. வளர்ச்சி வரன்முறை
- பணவீக்க வீதம்
- வட்டி வீதங்கள்
- பரிமாற்றல் வீதம்
- வேலையில்லா வீதங்கள்

எ.க.ந. கணிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படும் உள்ளீடுகள் மற்றும் மாதிரிகள் எந்நேரமும் நிதிக் கூற்றுக்களின் திகதியில் சந்தையின் அனைத்து பண்புகளையும் உள்ளடக்காதிருக்கலாம். இதனை பிரதிபலிப்பதற்காக, பண்புசார் செம்மையாக்கல்கள் அல்லது மேலடுக்குகள் தற்காலிக செம்மையாக்கல்களாக அவ்வப்போது மேற்கொள்ளப்படுவதுடன், இவை அத்தகைய வித்தியாசங்கள் பொருண்மையாக காணப்படும்போதாகும். எனவே, வங்கியானது பின்வரும் பண்புசார் காரணிகளையும் கருத்திலெடுக்கின்றது,

கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளும்

- சராசரி பெறுமதிக்கான கடன்
- அரசாங்கக் கொள்கைகள்
- துறைசார் வணிகத்தின் நிலைமை
- முறைமைப்படுத்தல் தாக்கம்

2.4.12.14 பிணைச்சொத்து பெறுமதியிடல்

நிதிச் சொத்துக்களிலான அதன் கடன் இடர்களை தணிப்பதற்காக வங்கியானது சாத்தியமானபோது பிணைச் சொத்துக்களை பயன்படுத்துவதற்கு முனைகின்றது. பிணைச்சொத்தானது பல்வேறு வடிவில் வருகின்றன, காசு, பிணையங்கள், நாணயக் கடிதங்கள் / உத்தரவாதக் கடிதங்கள், ஆதனங்கள், வருமதிகள், இருப்புகள், ஏனைய நிதியல்லா சொத்துக்கள் மற்றும் ஈடுகட்டல் ஏற்பாடுகள் போன்ற கடன் மேம்படுத்தல்கள் போன்றவையாகும். SLFRS 9 கீழ் கடன்வழங்கல் ஏற்பாடுகளூடாக ஒப்படைக்கப்பட்ட பிணைச் சொத்துக்கான வங்கியின் கணக்கீட்டுக் கொள்கையானது LKAS 39 கீழ் வருவதற்கு ஒத்ததாகும்.

2.4.12.15 பிணைச்சொத்து திரும்பப்பெறல்

SLFRS 9 இன் கீழான வங்கியின் கணக்கீட்டுக் கொள்கையானது அது LKAS 39 கீழ் காணப்படுவதற்கு ஒத்ததாகும். வங்கியின் கொள்கையானது ஒரு மீள்கைப்பற்றப்பட்ட சொத்தானது அதன் உள்ளக செயற்பாடுகளில் சிறப்பாக பயன்படுத்த இயலுமா அல்லது அது விற்பனை செய்யவேண்டுமா என்று தீர்மானிப்பதற்காகும். உள்ளக செயற்பாடுகளுக்கு பயன்படுத்தக்கூடியவை என தீர்மானிக்கப்படும் சொத்துக்கள் அவற்றின் உரிய பிரிவிற்கு மாற்றல் செய்யப்படுகின்றது. இது அவற்றின் மீள்கைப்பற்றப்பட்ட பெறுமதி அல்லது ஆரம்ப பிணைசார் சொத்தின் கொண்டு செல்லல் பெறுமதி இவற்றில் எது குறைந்ததோ அத்தொகைக்கு மாற்றல் செய்யப்படுகின்றது. விற்பனை செய்தல் சிறந்த தெரிவாகத் தீர்மானிக்கப்படும் சொத்துக்கள் விற்பனைக்கு வைத்திருக்கப்படும சொத்துக்களுக்கு அவற்றின் நியாயப் பெறுமதியில் (நிதிச் சொத்துக்களாயின்) நிதியல்லா சொத்துக்களுக்கு மீள்கைப்பற்றப்பட்ட திகதியிலுள்ள நியாயப் பெறுமதியிலிருந்து விற்பனைக்கான கிரயம் கழிக்கப்பட்டு வங்கியின் கொள்கைக்கு அமைய மாற்றல் செய்யப்படுகின்றது.

அதன் வழமையான வணிகப் போக்கில், வங்கியானது அதன் சிற்றளவு தேக்கத்தில் ஆதனங்கள் அல்லது ஏனைய சொத்துக்களை இயற்பியலாக மீளக்கைப்பற்றுவதில்லை, ஆனால் நிதியினை மீட்பதற்கு வெளிவாரி முகவர்களுடன் ஈடுபடுகின்றது, நிலுவையிலுள்ள தொகையினை தீர்ப்பனசு செய்வதற்கு பொதுவாக ஏலவிற்பனை. ஏதேனும் மிகை நிதியானது வாடிக்கையாளருக்கு / கடனாளிக்கு திருப்பியளிக்கப்படுகின்றது. இந்த நடைமுறையின் விளைவாக, சட்ட மீள்கைப்பற்றல் செயன்முறையின் கீழ் வதிவித ஆதனங்கள் நிதி நிலைமைக் கூற்றில் பதிவு செய்யப்படவில்லை.

2.4.12.16 பதிவழித்தல்

SLFRS 9 இன் கீழான வங்கியின் கணக்கீட்டுக் கொள்கையானது அது LKAS 39 கீழ் காணப்படுவதற்கு ஒத்ததாகும். வங்கியானது மீட்டலை நிறுத்தியுள்ளபோது மாத்திரமே நிதிச் சொத்துக்கள் ஒன்றில் பகுதியளவில் அல்லது அதன் முழுவதும் பதிவழிப்பு செய்யப்படுகின்றன. பதிவழிக்கவேண்டிய தொகையானது திரண்ட நட்ட தள்ளுபடிகளுக்கும் பார்க்க உயர்வாயின், வித்தியாசமானது முதலில் தள்ளபடிக்கான ஒரு சேர்க்கையாக கவனிக்கப்பட்டு பின்னர் மொத்த கொண்டு செல்லல் தொகைக்கு எதிராக பிரயோகிக்கப்படுகின்றது. ஏதேனும் பின்னரான மீட்டல்கள் கடன் நட்ட செலவுக்கு வரவு வைக்கப்படுகின்றன.

2.4.13 அறிக்கையிடப்படும் காலத்திற்கு பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடப்படும் திகதிக்கு பின்னரான அனைத்து பொருண்மையான நிகழ்வுகளும் கருத்திலெடுக்கப்பட்டு பொருத்தமானவாறு செம்மையாக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் நிதிக் கூற்றுக்களின் உரிய குறிப்புகளில் மேற்கொள்ளப்படுகின்றன. மே 2021 இலங்கை மத்திய வங்கி 2021 இன் 05 ஆம் இலக்க சுற்றறிக்கையினை வழங்கியது, இது கோவிட்-19 தொற்றின் மூன்றாம் அலையின் காரணமாக வணிகங்கள் மற்றும் தனிநபர்களினால் முகங்கொடுக்கும் சவால்களை சந்திப்பதற்கு வசதியளிக்கும் நோக்கத்தினாலாகும். இது செப்டம்பர் 2021 இல் 2021 இன் 08 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் மேலும் நீடிக்கப்பட்டது. இதன் பிரகாரம், வங்கியானது இந்த சலுகையினை மே 2021 இல் வழங்கியதுடன் தற்போது வங்கியானது நீடிக்கப்பட்ட நிவாரண வழிமுறைக்காக தகைமையுள்ள கடன் பெறுநர்களினால் அனுப்பப்பட்ட வேண்டுதல்களை மதிப்பிடும் செயன்முறையிலுள்ளது.

நிதிச் சேவைகளிலான பெ.சே.வ.வீதத்திலான மாற்றம்

7 ஜனவரி 2022 இல் வழங்கப்பட்ட அரசாங்க சட்டமூலத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிச் சேவைகளிலா பெ.சே.வ. இனை அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

புதிய செயற்திறனற்ற கடன் (செ.க.) பணிப்புரை

இ.ம.வ. இனால் சமீபத்தில் கடன் வசதிகளின் வகைப்படுத்தல், அங்கீகாரம் மற்றும் அளவீட்டில் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட புதிய செ.க. பணிப்புரையானது 1 ஜனவரி 2022 முதல் அமுலுக்கு வந்தது. செயற்திறனற்ற கடன்களாக (செ.க.) வகைப்படுத்தல், தொங்கலிலுள்ள வட்டியின் நிறுத்தம், SLFRS 9 கட்ட வகைப்படுத்தலின் அமுலாக்கம், நடைமுறையிலுள்ள கலப்பு தவறுதல் விதிகள், கட்டம் ஒன்று கடன்களுக்காக கட்டாய ஏற்பாடுகள் விகிதம், மற்றும் கட்டங்களிடையே நிதிச் சொத்துக்களை நகர்த்துவதற்கான புதிய விதிகள் என்பவையாகும். எவ்வாறாயினும், புதிய பணிப்புரையானத 1 ஜனவரி 2022 இன் பின்னர் செ.க. ஆக மாறும் கடன்களுக்கு மாத்திரமே பிரயோகிக்கப்படுவதுடன், முன்னைய பணிப்புரையின் கிழ் செ.க. ஆக வகைப்படுத்தப்பட்டட பழைய கடன்கள் அவை தீர்ப்பனவு செய்யப்படும்வரை அவ்வாறே காணப்படும்.

2.4.14 அரசாங்கம் மற்றும் அரசு தொடர்பான நிறுவனங்களுடனான தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்

LKAS 24 இன் 32 ஆம் பந்தியின் கீழ் வங்கியானது வெளிப்படுத்தல் விடுவிப்பினை தெரிவுசெய்யவில்லை.

2.5 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் - நிதிக் கருவிகளுக்கான வருமானம் மற்றும் செலவினங்களின் அங்கீகாரம்

2.5.1 வட்டி வருமானம்

வட்டி வருமானம் பற்றிய விபரங்கள் குறிப்பு இலக்கம் 03 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

2.5.2 வட்டி மற்றும் ஒத்த வருமானம்

கடன் வலுக்குன்றியுள்ள சொத்துக்கள் தவிர்த்து நிதிச் சொத்துக்களின் மொத்த கொண்டுசெல்லல் தொகைக்கு வி.வ.வீ.இனை பிரயோகிப்பதன் மூலம் வங்கி வட்டி வருமானத்தினை கணிப்பீடு செய்கின்றது. ஒரு நிதிச் சொத்தானது வலுக்குன்றியதாக வரும்போது, எனவே "கட்டம் 3" ஆக கருதப்படுபகின்றது. வங்கியானது நிதிச் சொத்தின் தேறிய பெறுமதி குறைப்புக் கிரயத்திற்கு விளைவுறு வட்டி வீதத்தினை பிரயோகிக்கின்றது. .

அனைத்து வர்த்தகச் சொத்துக்கள் மற்றும் நிதிச் சொத்துக்களிலான வட்டி வருமானமானது இ.ந.நி.பெ. அளவிடப்படல் வேண்டும் என்ற கட்டாயத் தேவை காணப்படுவதுடன், இது தேறிய வர்த்தக வருமானத்தில் ஒப்பந்த வட்டி வீதத்தினை பயன்படுத்தியும், இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் நிதிச் சொத்துக்களிலான தேறிய இலாபங்கள் / (நட்டங்களாக) அங்கீகரிக்கப்படுகின்றன.

2.5.3 கட்டண மற்றும் தரகு வருமானம்

“தரகு வருமானம் மற்றும் செலவினங்களின்’ விபரங்கள் குறிப்பு 5 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

2.6 31 டிசம்பர் 2020 இல் வழங்கப்பட்ட நியமங்கள் ஆனால் இன்னும் அமுலுக்கு வராதவை

1 ஜனவரி 2020 முதல் அமுலுக்கு வந்த நடைமுறையிலுள்ள பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கான திருத்தங்கள் வங்கியின் நிதிக் கூற்றுக்களில் ஒரு பொருண்மையான தாக்கத்தினை கொண்டிருக்கவில்லை.

2.6.1 01.01.2020 முதலான LKAS 1 மற்றும் LKAS 8 இற்கான திருத்தங்கள்

LKAS 1 "நிதிக் கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல்" மற்றும் LKAS 8 "கணக்கீட்டு கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளிலான மாற்றங்கள் மற்றும் தவறுகள்" ஆகியவற்றிற்கான பொருண்மையான திருத்தங்களின் வரைவிலக்கணமானது, நியமம் பூராவும் "பொருண்மை"எனப்படும வரைவிலக்கணத்துடன் ஒத்ததாக இருப்பதற்கும் வரைவிலக்கணத்தின் சில அம்சங்களை தெளிவுபடுத்துவதற்கும் ஆகும். புதிய வரைவிலக்கணமானது பின்வருமாறு குறிப்பிடுகின்றது, " தகவல்களை தவிர்த்தல் மற்றும் மறைத்தல், நிதிக் கூற்றுக்களின் பொது நோக்குடைய பிரதான பயனாளர்கள் ஒரு குறிப்பிட்ட அறிக்கையிடும் நிறுவனத்தைப் பற்றி நிதியியல் தகவல்களை வழங்கும் அந்த நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் மேற்கொள்ளும் தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்று நியாயமாக எதிர்பார்த்தால் அத்தகலானது பொருண்மாயானதாகும்" பொருண்மை என்பதன் வரைவிலக்கணத்திற்கான திருத்தங்கள் வங்கியின் நிதிக் கூற்றுக்களில் ஒரு கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படவில்லை.

2.6.2 SLFRS 16 - "குத்தகைகள்" ஆன திருத்தங்கள் - கோவிட்-19 தொடர்பான வாடகைச் செலுகைகள்

கோவிட்-19 தொற்றின் நேரடியான விளைவாக எழுகின்ற வாடகைச் சலுகைகளுக்கான குத்தகை திருத்தக் கணக்கீட்டில் SLFRS 16 வழிகாட்டியினை பிரயோகிப்பதிலிருந்து இத்திருத்தங்கள் நிவாரணம் வழங்குகின்றன. ஒரு நடைமுறை உபாயமாக, ஒரு குத்தகை எடுத்தவர் குத்தகைதாரரிடமிருந்து ஒரு கோவிட்-19 தொடர்பான வாடகைச் சலுகையானது ஒரு குத்தகை திருத்தமாக என மதிப்பீடு செய்யாதிருப்பதற்கு தெரிவு செய்யலாம். ஒரு குத்தகை எடுத்தவர் இந்த தெரிவினை மேற்கொள்வதுடன், மாற்றமானது ஒரு குத்தகை திருத்தமாக இல்லாவிடின், SLFRS 16 இன் கீழான மாற்றத்திற்கு கணக்கீடு செய்யும் அதே விதத்தில் கோவிட்-19 தொடர்பான வாடகை சலுகையின் விளைவான குத்தகை கொடுப்பனவுகளிலான ஏதேனும் மாற்றத்திற்கு. கணக்கீடு செய்யலாம். திருத்த அறிவிப்பானது வங்கியின் நிதிக் கூற்றுக்களில் ஒரு பொருண்மையான தாக்கத்தினைக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கவில்லை.

கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளும்

03. மொத்த வருமானம்

கணக்கீட்டுக் கொள்கை
மொத்த வருமானமானது வங்கிக்கு பொருளாதார நலன்கள் பாய்ச்சப்படும் என்ற சாத்தியமான அளவிற்கு மற்றும் வருமானமானது நம்பகமாக அளவிடப்படலாம் என்ற அளவிற்கு அங்கீகரிக்கப்படுகின்றது. வருமானம் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர் குறிப்பிட்ட அங்கீகரித்தல் வரன்முறையானது சந்திக்கப்படல் வேண்டும்.

டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது	2023 ரூ.	2022 ரூ.
வட்டி வருமானம்	9,324,132,408	7,401,968,299
கட்டண மற்றும் தரகு வருமானம்	96,293,245	91,724,320
நிதியியல் சொத்துக்களிலிருந்தான தேறிய நியாயப் பெறுமதி இலாபங்கள் /(நட்டங்கள்) இ.ந.நி.பெ. இல்	157,533,227	(2,134,408)
தேறிய ஏனைய செயற்பாட்டு வருமானம்	21,943,478	25,569,713
மொத்த வருமானம்	9,599,902,358	7,517,127,924

04. தேறிய வட்டி வருமானம்

கணக்கீகட்டு கொள்கையானது குறிப்பு 2.2.1 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது	2023 ரூ.	2022 ரூ.
வட்டி வருமானம்		
வங்கிகளுடனான வைப்பீடுகள் (நிலையான+சேமிப்பு கணக்குகள்)	1,975,533,930	2,330,660,489
பெறுமதி குறைப்புக் கிரயத்தில் நிதிச் சொத்துக்கள்		
- கடன்களும் முற்பணங்களும்	5,600,330,193	4,709,774,315
கடன் காலம் தாழ்த்திச் செலுத்தும் கடன்களின் முதல் நாள் தாக்கம்	3,031,481	1,478,839
கடன் காலம் தாழ்த்திச் செலுத்துவதிலான 5ஆம் அலை வட்டியிலான ஒத்திவைக்கப்பட்ட 7% வட்டி	-	1,097,973
கழி- மீட்டப்பட்ட 1,3,4,5 அலைகளின் 7% கடன் காலம் தாழ்த்திச் செலுத்தல் வங்கிக் கட்டணங்கள்	(532,942)	(1,576,156)
- கடன் மற்றும் ஏனைய கருவிகள்	1,745,769,745	360,532,839
மொத்த வட்டி வருமானம்	9,324,132,408	7,401,968,299
வட்டிச் செலவினங்கள்		
வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவைகள்	51,052	68,915
பெறுமதி குறைப்புக் கிரயத்தில் நிதிப் பொறுப்புக்கள்		
- வைப்பீட்டாளர்களுக்கு செலுத்தப்படவேண்டியவை	8,706,701,092	5,433,421,943
- ஏனைய கடன் வழங்குனர்களுக்கு செலுத்தப்படவேண்டியவை	25,842,475	29,490,550
மொத்த வட்டி செலவினங்கள்	8,732,594,619	5,462,981,408
தேறிய வட்டி வருமானம்	591,537,789	1,938,986,892

a. இலங்கை அரசாங்கப் பிணையங்களிலிருந்தான தேறிய வருமானம்

	2023 ரூ.	2022 ரூ.
வட்டி வருமானம்	1,286,407,489	262,575,535
(கழி):வட்டிச் செலவினம்	-	-
தேறிய வட்டி வருமானம்	1,286,407,489	262,575,535

05. தேறிய கட்டண மற்றும் தரகு வருமானம்

காலப்போக்கில் வழங்கப்படும் பல வகையான சேவைகளிலிருந்து வங்கியானது கட்டண மற்றும் தரகு வருமானத்தினை உழைக்கின்றது.

டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது	2023 ரூ.	2022 ரூ.
கட்டண மற்றும் தரகு வருமானம்	96,293,245	91,724,320
தேறிய கட்டண மற்றும் தரகு வருமானம்	**96,293,245**	**91,724,320**
உள்ளடக்கம்		
வங்கி சேவைக் கட்டணம் - கடன்களும் முற்பணங்களும்	84,074,511	84,406,618
சட்ட மற்றும் தொழில்நுட்ப கட்டணம் - கடன்களும் முற்பணங்களும்	1,841,929	80,317
ஏனைய கட்டணங்கள்	10,376,804	7,237,386
தேறிய கட்டண மற்றும் தரகு வருமானம்	**96,293,245**	**91,724,320**

06. இலாபம் அ ல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியிலுள்ள நிதிக் கருவிகளிலிருந்து தேறிய நியாயப் பெறுமதி இலாபங்கள் (நட்டங்கள்)

கணக்கீட்டுக் கொள்கை
தேறிய வர்த்தக வருமானமானது, வட்டி வருமானத்தினைத் தவிர, "இலாபம் அல்லது நட்டத்தினூடாக அங்கீகரிக்கப்பட்ட நிதிச் சொத்துக்களிலான" அனைத்து இலாபங்கள் மற்றும் நட்டங்கள் மற்றும் அவற்றுக்கான தொடர்புடைய பங்கிலாபங்களை உள்ளடக்குகின்றது.

டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது	2023 ரூ.	2022 ரூ.
இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியிலுள்ள நிதிச் சொத்துக்களிலான இலாபங்கள்	157,533,227	-
இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியிலுள்ள நிதிச் சொத்துக்களிலான நட்டங்கள்	-	(2,134,408)
மொத்தம்	**157,533,227**	**(2,134,408)**

07. ஏனைய செயற்பாட்டு வருமானம் (தேறியது)

கணக்கீட்டுக் கொள்கை
ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் அளவீடு செய்யப்பட்ட நிதிச் சொத்துக்களிலிருந்து உழைத்த பங்கிலாபமானது, கொடுப்பனவினை குழுமம் பெறுவதற்கான உரிமையானது நிலைநாட்டப்படும்போது அங்கீகரிக்கப்படுகின்றது.

டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது	2023 ரூ.	2022 ரூ.
பங்கிலாப வருமானம்	15,950,352	21,324,000
நானாவித வருமானம்	5,993,126	4,245,713
ஏனைய செயற்பாட்டு வருமானம் (தேறியது)	**21,943,478**	**25,569,713**

கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளும்

08. கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான வலுக்குன்றல் கட்டணங்கள் (திருப்புதல்)

கணக்கீட்டுக் கொள்கை

வங்கி அனைத்து நிதிச் சொத்துக்களுக்குமான வலுக்குன்றல் ஏற்பாடுகளிலான மாற்றங்களை அங்கீகரிக்கின்றது, இது இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் - SLFRS 9 - "நிதியியல் கருவிகள்" இன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்படுகின்றன. அனைத்து வகையான நிதியியல் சொத்துக்களிலான SLFRS 9 இன் கீழான வலுக்குன்றல் நட்டங்களின் அளவீடானது நியாயப்பாடு, குறிப்பாக, வலுக்குன்றல் நட்டங்களை தீர்மானிக்கும்போது மற்றும் கடன் இடரில் ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை மதிப்பிடும்போது எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் மற்றும் பிணையத்தின் பெறுமதிகளின் தொகையின் மற்றும் நேரத்தின் மதிப்பீடு என்பன தேவைப்படுகின்றது.

டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது	2023 ரூ.	2022 ரூ.
பெ.கு.கி. இல் நிதிச் சொத்துக்கள் - கடன்களும் முற்பணங்களும்		
கட்டம் 1	(34,814,940)	130,450,499
கட்டம் 2	167,142,810	114,418,254
கட்டம் 3	423,926,677	119,179,592
பெறுமதி குறைப்புக் கிரயத்தில் ஏனைய நிதிச் சொத்துக்கள்		
கட்டம் 1	5,137,783	2,691,805
கட்டம் 2	-	(993,122)
கட்டம் 3	-	-
மொத்தம்	561,392,330	365,747,028

09. ஆளணிச் செலவினங்கள்

கணக்கீட்டுக் கொள்கை

01. நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்

வங்கியானது 2023 நிதியாண்டின்போது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களை செயற்படுத்துகின்றது. மேற்கொள்ளப்பட்ட பங்களிப்புகள் "ஆளணிச் செலவினங்கள்" என்பதன் கீழ் ஒரு செலவினமாக பதிவு செய்யப்படுகின்றது. செலுத்தப்படாத பங்களிப்புகள் ஒரு பொறுப்பாக பதிவு செய்யப்படுகின்றன.

(a) ஊழியர் சேமலாப நிதியம்

கணக்கீட்டுக் கொள்கை குறிப்பு 2.4.1 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

(b) ஊழியர் நம்பிக்கை நிதியம்

கணக்கீட்டுக் கொள்கை குறிப்பு 2.4.1 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஊழியர் செலவினங்கள்	2023 ரூ.	2022 ரூ.
சம்பளங்களும் ஊக்க ஊதியங்களும்	717,390,410	830,283,079
நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் - ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி.	126,556,908	118,346,815
நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்கள் - பணிக்கொடை ஏற்பாடு	59,542,589	41,353,107
நோய் விடுப்பினை காசாக்குதல்	29,964,922	31,020,486
மேலதிக நேர மற்றும் கைச்செலவு கொடுப்பனவு	5,850,366	8,648,568
ஊழியர் கல்வி மற்றும் பயிற்சி	1,944,205	1,044,050
மருத்துவ திட்டம் - கொடுப்பனவுகள்	62,874,231	70,936,477
மருத்துவ திட்டம் - ஏற்பாடு (IFRS)	54,114,387	15,568,572
நல்வாழ்வு	7,171,626	4,128,876
காப்புறுதி	469,387	1,061,997
ஊழியர் கடன் நாள் 1 வித்தியாசம் (IFRS)	(51,453,677)	(38,525,209)
இழப்பீடு	867,538	459,558
ஊழியர் வருமானத்தில் PAYE வரி	-	5,628,889
மொத்தம்	1,015,292,893	1,089,955,263

	2023 ரூ.	2022 ரூ.
கழி - IFRS ஏற்பாடுகள்		
ஊழியர் கடன் நாள் 1 வித்தியாசம் (IFRS)	51,453,677	38,525,209
மருத்துவ திட்டம் - ஏற்பாடு (IFRS)	(54,114,387)	(15,568,572)
மெய்யான மொத்தம்	1,012,632,183	1,112,911,900

09.1 பங்களிப்பு - இளைப்பாறுதலடைந்த ஊழியர் மருத்துவ திட்டம்

டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது	2023 ரூ.	2022 ரூ.
செலவினமாக அங்கீகரிக்கப்பட்ட தொகை	54,114,387	30,993,049

09.2 இளைப்பாறுதலடைந்த ஊழியர் மருத்துவ திட்டமானது வங்கியின் அனைத்து ஊழியர்களுக்கும் நிறுவப்பட்டுள்ளது. காப்பீட்டுக் கணிப்பு பெறுமதியிடலானது தொழில்சார் காப்பீட்டுக் கணிப்பு நிறுவனமான எக்சுயேரியல் அன்ட் மெனேஜ்மன்ட் கன்சல்ட்டன்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்டின் திரு. எம். பூபாலநாதன், யுஐயு அவர்களினால் 31 டிசம்பர் 2023 இல் மேற்கொள்ளப்பட்டது (குறிப்பினை பார்க்கவும்).

பங்களிப்பு - பணிக்கொடை

	2023 ரூ.	2022 ரூ.
செலவினமாக அங்கீகரிக்கப்பட்ட தொகை	59,542,589	41,353,107

10. ஏனைய செலவினங்கள்

கணக்கீட்டுக் கொள்கை

இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய செயற்பாட்டு செலவினமானது ஆட்பட்ட செலவினம் மற்றும் குறிப்பிட்ட உருப்படி வருமானத்தின் உழைத்தல் என்பவற்றுக்கான நேரடி இணைப்பின் அடிப்படையிலாகும். வணிகத்தினை கொண்டுசெல்வதிலான மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியவற்றை பயனுறுதியான விதத்தில் பராமரிப்பதற்காக ஆட்படும் அனைத்து செலவினமும் வருடத்திற்கான இலாபத்திற்கு வருவதற்காக இலாபம் அல்லது நட்டக் கூற்றில் செலவு வைக்கப்படுகின்றது. ஏனைய செலவினங்கள் தொடர்பான ஏற்பாடானது பின்வரும் சந்தர்ப்பத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. கடந்த நிகழ்வின் விளைவாக வங்கிக்கு ஒரு தற்போதைய கடப்பாடு (சட்ட அல்லது கட்டுமான) காணப்படுமாயின், பொருளாதார நலன்களை உள்ளடக்கிய வளங்களின் வெளிப்பாய்ச்சல் கடப்பாட்டினை தீர்ப்பனவு செய்வதற்கு தேவைப்படும் மற்றும் கடப்பாட்டின் தொகை குறித்து ஒரு நம்பகமான மதிப்பீடு செய்யப்படலாம் என்ற சாத்தியத்தின் அடிப்படையிலாகும். ஆதனம், பொறி மற்றும உபகரணம் மற்றும் அருவச் சொத்துக்களினலா பெறுமானத்தேய்வு மற்றும் பெறுமதிகுறைப்பு செலவினங்கள் ஏனைய செலவினங்களிலிருந்து வேறுபடுத்தப்பட்டு வருமானக் கூற்றில் வெளிப்படுத்தப்படுகின்றன.

டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது	2023 ரூ.	2022 ரூ.
பணிப்பாளர்களின் பணியூதியங்கள்	1,998,974	3,565,629
கணக்காய்வாளரின் வேதனம்	5,564,435	3,000,000
தொழில்சார் மற்றும் சட்டச் செலவினங்கள்	7,399,866	4,338,676
அலுவலக நிர்வாக மற்றும் நிலையச் செலவினங்கள்	156,567,575	135,892,205
விளம்பரச் செலவினங்கள்	9,359,051	17,329,178
மோட்டார் வாகனப் பராமரிப்பு மற்றும் பிரயாணச் செலவினங்கள்	7,984,571	11,084,248
பொது செலவினங்கள்	11,690,094	20,042,587
ஏனைய நட்டங்கள், அறவிடமுடியாக் கடன் மற்றும் பதிவழிப்புகள்	-	-
இ.ம.வ. வைப்புக் காப்புறுதி	51,678,387	47,776,181
ஏனைய செலவினங்கள்	103,626,794	110,399,574
அறிக்கையிடப்படும் திகதியின் பின்னர் உள்ள நிகழ்வுகள் என்பன அறிக்கையிடப்படும் திகதிக்கும் விநியோகிப்பதற்கு நிதிக் கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுவதற்கும் இடையில் ஏற்படும் நிகழ்வுகளாகும். நிதிக் கூற்றுக்களில் செம்மையாக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல் தேவையான பொருண்மையான நிகழ்வுகள் எதுவும் நிதி நிலைமைக் கூற்று திகதியின் பின்னர் இடம்பெறவில்லை.

36. நியாயப் பெறுமதியின் தீர்மானம் மற்றும் நியாயப் பெறுமதி படிநிலை

பெறுமதியிடலின் மூலம் நிதிக் கருவிகளின் நியாயப் பெறுமதியினை தீர்மானிப்பதற்காக மற்றும் வெளிப்படுத்துவதற்காக பின்வரும் படிநிலையினை வங்கி பயன்படுத்துகின்றது.

நுட்பம்

மட்டம் 1 ஒரேமாதிரியான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்கான துடிப்பான சந்தையில் விலைகூறப்பட்ட (செம்மையாக்கப்படாத) விலைகள்

மட்டம் 2 அவதானிக்கத்தக்க உள்ளீடுகளை பயன்படுத்தி பெறுமதியிடல் நுட்பம்: ஒத்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கு துடிப்பான சந்தையில் விலைகூறப்பட்ட விலைகள் அல்லது விலைகூறப்பட்ட விலைகள்

மட்டம் 3 கணிசமாக அவதானிக்கவியலாத உள்ளீடுகளுடன் பெறுமதியிடல் நுட்பங்கள்: ஒன்று அல்லது அதற்கு மேலான முக்கியமான பெறுமதியிடல் நுட்பங்களை பயன்படுத்தி மதிப்பிடப்படும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

31 டிசம்பர் 2023 இல்	மட்டம் 1 ரூ.	மட்டம் 2 ரூ.	மட்டம் 3 ரூ.	மொத்தம் ரூ.
நிதிச் சொத்துக்கள்				
நிதியியல் முதலீடுகள் இ.ந.நி.பெ.				
விலையிடப்பட்ட முதலீடுகள் - யுனிட் ட்ரஸ்ட்	3,552,533,227	-	-	3,552,533,227
நிதியியல் முதலீடுகள் ஏ.வி.வ.நி.பெ.				
CRIB	-	-	4,754,078	4,754,078
விட்ச் ரேட்டிங்	-	-	625,000	625,000
மொத்த நிதிச் சொத்துக்கள்	3,552,533,227	-	5,379,078	3,557,912,305
நிதிப் பொறுப்புக்கள்	-	-	-	-

37. நியாயப் பெறுமதியில் கொண்டுசெல்லப்படாத நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நியாயப் பெறுமதி

நிதிக் கூற்றுக்களில் நியாப் பெறுமதியில் ஏற்கனவே பதிவுசெய்யப்படாத நிதிச் சொத்துக்கள் மற்றம் பொறுப்புக்களின் நியாயப் பெறுமதியினை தீர்மானிப்பதற்கு பயன்படுத்தப்படும் செய்முறைகள் மற்றும் அனுமானங்களை பின்வருவன விபரிக்கின்றன.

நியாயப் பெறுமதியினை அண்ணளவாக ஒத்ததான கொண்டு செல்லல் பெறுதியுடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்பக்கள்

குறுங்கால முதிர்வினைக்கொண்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கு, வங்கிகளுடனான வைப்பீடுகள், ஏனைய சொத்துக்கள், வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவை மற்றம் ஏனைய பொறுப்புக்கள் போன்றவற்றின் நியாயப் பெறுமதியானது அவற்றின் கொண்டுசெல்லல் தொகைகளுக்கு அண்ணளவாக ஒத்துள்ளன எனக் கருதப்படுகின்றது. இந்த அனுமானமானது, ஒரு குறிப்பிட்ட முதிர்வினைக் கொண்டிராத கேள்வி வைப்புகளுக்கும் சேமிப்பு வைப்புகளுக்கும் பிரயோகிக்கப்படுகின்றன.

நிலையான வட்டியுடைய நிதியியல் கருவிகள்

நிலையான வட்டியினைக் கொண்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நியாயப் பெறுமதியானது பெறுமதி குறைப்புக் கிரயத்தில் கொண்டு செல்லப்படும் போது அவை முதலில் அங்கீகரிக்கப்பட்டபோது காணப்பட்ட சந்தை வட்டி வீதங்களை ஒத்தி நிதிக் கருவிகளுக்கான நடைமுறை சந்தை வட்டி வீதங்களுடன் ஒப்பிடுவதன் மூலம் மதிப்பிடப்படுகின்றன. நிலையான வட்டியினைக் கொண்டுள்ள வைப்புக்களின் மதிப்பிடப்பட்ட நியாயப் பெறுமதியானது முதிர்வில் ஒத்த கடன் இடரினைக்கொண்ட கடன்களுக்கான நடைமுறையிலுள்ள சந்தை வட்டி வீதங்களை பயன்படுத்தி கழிவிறக்கம் செய்யப்படும் காசுப் பாய்ச்சல்களின் அடிப்படையிலாகும். வழங்கப்பட்ட விலை கூறப்பட்ட கடன்களுக்கு, விலைகூறப்பட்ட சந்தை விலைகளின் அடிப்படையில் நியாயப் பெறுமதிகள் தீர்மானிக்கப்படுகின்றன.

மாற்றமடையும் வட்டி வீத நிதியியல் கருவிகள்

மாற்றமடையும் வட்டி வீதமானது சந்தை அசைவுகளை பிரதிபலிக்கும் ஒரு நியாயமான அளவீடாகும். எனவே, கொண்டுசெல்லல் பெறுமதியானது மாற்றமடையும் வட்டி வீத கருவிகளின் நியாயப் பெறுமதியினை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

	2023		2022	
சொத்துக்கள்	கொண்டுசெல்லல் தொகை ரூ.	நியாயப் பெறுமதி ரூ.	கொண்டுசெல்லல் தொகை ரூ.	நியாயப் பெறுமதி ரூ.
காசும் காசுக்குச் சமனானவைகளும்	122,600,853	122,600,853	126,480,437	126,480,437
வங்கிகளுடனான வைப்பீடுகள்	2,923,132,097	2,923,132,097	13,002,272,044	11,811,735,024
கடன்களும் வருமதிகளும்	38,603,322,207	37,660,523,528	39,267,237,754	38,907,219,312
கடன் மற்றும் ஏனைய கருவிகள்	12,162,743,730	12,392,310,881	2,574,993,439	2,113,414,423
நிதிச் சொத்துக்கள் - இ.ந.நி.பெ.	3,552,533,227	3,552,533,227	-	-
நிதிச் சொத்துக்கள் - ஏ.வி.வ.நி.பெ.	5,379,078	5,379,078	5,379,078	5,379,078
ஏனைய சொத்துக்கள்	1,696,799,486	1,696,799,486	1,988,582,230	2,011,376,008
மொத்த நிதிச் சொத்துக்கள்	**59,066,510,678**	**58,353,279,150**	56,964,944,983	54,975,604,282
பொறுப்புக்கள்				
வங்கிகளுக்கு செலுத்தப்படவேண்டியவை	2,732,792	2,732,792	23,380,935	23,380,935
வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்படவேண்டியவை	52,138,134,453	52,138,134,453	49,139,971,357	49,139,971,357
ஏனைய கடன் பெறுகைகள்	178,986,770	178,986,770	278,050,561	278,050,561
ஏனைய பொறுப்புக்கள்	1,292,487,628	1,292,487,628	1,049,057,424	1,049,057,424
மொத்த நிதிப் பொறுப்புக்கள்	**53,612,341,643**	**53,612,341,643**	50,490,460,277	50,490,460,277

37.1 நியாயப் பெறுமதி படிநிலையினை தீர்மானித்தல்

மட்டம் 1

ஒத்த கருவிகளுக்கான ஒரு துடிப்பான சந்தையில் விலைகூறப்பட்ட சந்தை விலைகள் (செம்மையாக்கப்படாதவை) உள்ளீடுகளாகக் காணப்படுகின்றன. கிடைக்கப்பெறும்போது, வங்கியானது கொடுக்கல் வாங்கல் கிரயங்களுக்காக ஏதேனும் கழிவுகளை மேற்கொள்ளாது துடிப்பான விலைகூறப்பட்ட விலைகள் அல்லது வர்த்தகர் விலைமேற்கோள்களை பயன்படுத்தி ஒரு கருவியின் நியாயப் பெறுமதியினை அளவிடுகின்றது.

மட்டம் 2

ஒன்றில் நேரடியாக அல்லது மறைமுகமாக அவதானிக்கப்படக்கூடிய மட்டம் 1 இனுள் உள்ளடக்கப்பட்ட விலைகூறப்பட்ட விலைகளை தவிர்த்த உள்ளீடுகள்

மட்டம் 3

இந்தப் பிரிவானது, அவதானிக்க தரவு மற்றும் அவதானிக்கவியலாத உள்ளீடுகளின் அடிப்படையில் இல்லாத உள்ளீடுகளை உள்ளடக்கும் பெறுமதியிடல் நுட்பங்களையுடைய அனைத்து கருவிகளையும் உள்ளடக்குவதுடன், இவை கருவியின் பெறுமதியிடலில் ஒரு குறிப்பிடத்தக்க விளைவினை கொண்டுள்ளது.

கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளும்

37.1 நியாயப் பெறுமதி படிநிலையினை தீர்மானித்தல் (தொடர்ச்சி...)

2023	மட்டம் 1 ரூ.	மட்டம் 2 ரூ.	மட்டம் 3 ரூ.	மொத்தம் ரூ.
நிதிச் சொத்துக்கள்				
திறைசேரி உண்டியல்களும் முறிகளும்	12,392,310,881	-	-	12,392,310,881
யுனிட் டரஸ்ட்	3,552,533,227	-	-	3,552,533,227
கடன்களும் முற்பணங்களும்	-	-	37,660,523,528	37,660,523,528
மொத்தம்	15,944,844,108	-	37,660,523,528	53,605,367,636
2022				
திறைசேரி உண்டியல்களும் முறிகளும்	2,113,414,423	-	-	2,113,414,423
யுனிட் டரஸ்ட்	-	-	-	-
கடன்களும் முற்பணங்களும்	-	-	38,907,219,312	38,907,219,312
மொத்தம்	2,113,414,423	-	38,907,219,312	41,020,633,735

38. இடர் முகாமைத்துவம்

வங்கியானது அதன் உள்ளார்ந்த இடர்களை முகாமைப்படுத்துவதற்காக ஒரு முறையான இடர் முகாமைத்துவ நடைமுறைகளை நிறுவியுள்ளது, அத்தகைய செயன்முறைகள், இனங்காணுதல், அளவிடுதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றை உள்ளடக்குவதுடன் இவை வங்கியின் இடர் ஆர்வம் மற்றும் இடர் சகிப்புத்தன்மை வரையறுகளுக்கு உட்பட்டவையாகும். வங்கியானது பிரதானமாக, கடன் இடர், திரவத்தன்மை இடர் மற்றும் செயற்பாட்டு இடருக்கு வெளிப்பாட்டினைக் கொண்டுள்ளது.

38.1 இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு

பணிப்பாளர்கள் சபையானது வங்கியின் இடர் முகாமைத்துவ கட்டமைப்பின் நிறுவுதலுக்கும் மேற்பார்வைக்கும் ஒட்டுமொத்த பொறுப்பினைக் கொண்டுள்ளது. அதன் ஆளுகை பொறுப்பினை நிறைவேற்றுவதில், அது இரண்டு முக்கிய குழுக்களான சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (BIRMC) மற்றும் சபை கணக்காய்வு குழு ஆகியவற்றினூடாக செயற்படுகின்றன. சபையும் BIRMC யும் இடர் முகாமைத்துவப் பொறுப்பினை பின்வரும் நிறைவேற்று தரத்திலான முகாமைத்துவ குழுக்களுக்கு ஒவ்வொரு முன்னிறுத்தமான பிரிவுகளுக்கும் இடர் விடயங்களை ஒருங்கிணைப்பதற்காக ஒப்படைத்துள்ளன.

- நிறைவேற்று ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (EIRMC)
- நிறைவேற்று கடன் குழு (ECC)
- சொத்து மற்றும் பொறுப்புக் குழு (ALCO)

சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு

சபை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு**(BIRMC)** வங்கியின் இடர் முகாமைத்துவக் கொள்கைகளை விருத்திசெய்வதற்கும் கண்காணிப்பதற்கும் பொறுப்பாளியாயுள்ளது. இக்குழுவானது நான்கு நிறைவேற்றுனரல்லா பணிப்பாளர்களை உள்ளடக்குகின்றது.

நிறைவேற்று ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழு (EIRMC)

EIRMC ஆனது வங்கியின் பொது முகாமையாளர் / பி.நி.அ. ஆல் தலைமை தாங்கப்படுவதுடன், குழுவானது வங்கியின் இடர் வெளிப்பாட்டினை மீளாய்வு செய்து கண்காணிப்பதற்கும், இடர் சகிப்புத்தன்மை வரையறைகளை நிறுவுவதற்கும் வங்கியின் இடர் முகாமைத்துவக் கொள்கைகளில் விருத்தி மற்றும் மீளாய்வினை பரிந்துரைப்பதற்கும் பொறுப்பாளியாயுள்ளது. EIRMC 12 முக்கிய முகாமைத்துவ நபர்களைக் கொண்டதாகும்.

கடன் குழு

கடன் குழுவானது வங்கியின் பொது முகாமையாளர் / பி.நி.அ. ஆல் தலைமை தாங்கப்படுவதுடன், குழுவானது கடன் கொள்கை, கடன் கையேடு, மற்றும் வங்கியின் கடன் இடரினை கண்காணிப்பதற்கும் மற்றும் முகாமைப்படுத்துவதற்கும் கடன் கொள்கையினை விருத்திசெய்வதற்கும் காலாகாலம் மீளாய்வு செய்வதற்கும் பொறுப்பாளியாயுள்ளது. இக்குழுவானது ஏழு முக்கிய முகாமைத்துவ நபர்களைக் கொண்டதாகும்.

சொத்து / பொறுப்பு முகாத்துவக் குழு (ALCO)

ALCO ஆனது வங்கியின் பொது முகாமையாளர் / பி.நி.அ. ஆல் தலைமை தாங்கப்படுவதுடன், குழுவானது வங்கியின் வட்டிவீத இடரினை முகாமைப்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும், வங்கியின் சொத்து மற்றும் பொறுப்புக்களை கண்காணித்து முகாமைப்படுத்தவும் மற்றும் வங்கியின் ஒட்டுமொத்த திரவத்தன்மை நிலையினை கண்காணித்து முகாமைப்படுத்துவதற்கும் பொறுப்பாளியாயுள்ளது.

38.2 இடர் முகாமைத்துவம் மற்றும் அறிக்கையிடல்

கடன் இடர்

கடன் இடரானது ஒரு கடனாளி ஒன்றில் ஒரு கடப்பாட்டில் செயலாற்றுவதற்கு விருப்பமின்றி உள்ளார் அல்லது அத்தகைய கடப்பாட்டினை செயலாற்றுவதற்கான அதன் ஆற்றல் வலுக்குன்றலடைந்திருந்தால், வங்கிக்கு பொருளாதார நட்டத்தை விளைவிக்கலாம். இது வங்கி கையாளவேண்டிய ஒரு பிரதான பிரிவு இடராகும், ஏனெனில் அதன் சொத்துக்களில் பாரிய பங்கானது கடன்களை மற்றும் முற்பணங்களை உள்ளடக்கியதாகும்.

கடன் இடர் கொள்கையானது நாளாந்த வணிக நடவடிக்கைகளை முகாமைப்படுத்துவதில் மத்திய பங்கினை வகிக்கின்றது. வங்கியானது வாடிக்கையாளர் தெரிவு, உரிய மதிப்பாராய்வு, முன்னதான எச்சரிக்கை அறிக்கையிடல், வங்கியின் இடர் ஆர்வத்துடன் ஒத்த தேக்க கண்காணிப்பு மற்றும சகிக்கத்தக்க செறிவு இடர் மட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியவற்றை வரையறை செய்யும் ஒரு கொள்கையினை விருத்திசெய்துள்ளது.

ஆரம்ப சலித்தல் மற்றும் கடன் மதிப்பாராய்வு செயன்முறையில் சீரான நியமங்களை பராமரித்தல், சுயாதீன இடர் பரிந்துரைத்தல், கடன் அனுமதி செயன்முறையில் அதிகார ஒப்படைப்பு ஆகியன கடன் இடர் தணிப்பிற்கு பயன்படுத்தப்படும் சில முறைகளாகும். பெறப்பட்ட பிணைச்சொத்துக்கள் முறைமைப்படுத்துபவரின் வழிகாட்டிகளின் பிரகாரம் காலாகாலம் மதிப்பிடப்படுகின்றன. வங்கியின் இடர் முகாமைத்துவப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் கடன் மீளாய்வு பொறிமுறையானது சாத்தியமான நட்டங்களுக்கு எதிராக வங்கியினை பாதுகாப்பதற்காக சிக்கலான கடன்களை நேரத்துடன் இனங்காண்பதனை உறுதிப்படுத்துகின்றது.

38.2.1. எதிர்பார்க்கப்படும் கடன் நட்டங்களுக்கான அளவீடு (எ.க.ந.)

SLFRS 9 இன் கீழ் எ.க.ந. இன் மதிப்பீட்டிற்கு பயன்படுத்தப்படும் முக்கிய அனுமானங்கள், மாதிரிகள் மற்றும் நுட்பங்கள் கணக்கீட்டுக் கொள்கைகள் குறிப்பு 2.4.12.10 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

எ.க.ந. இன் அளவீடு

கட்டம் 1 : 12 மாதங்கள் எ.க.ந.

ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து கடன் இடரில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காணாத மற்றும் ஆரம்பத்திலிருந்து கடன் வலுக்குன்றியிருக்காது வெளிப்படுத்தல்களுக்கு, அடுத்த 12 மாதங்களுக்குள் தவறுவதல் நிகழ்வுகளுக்கான சாத்தியத்துடன் இணைந்துள்ள வாழ்நாள் எ.க.ந. இன் பகுதியானது அங்கீகரிக்கப்படுகின்றது. வங்கியானது கணிசமானளவு கடன் சீர்கெடாத வாடிக்கையாளர்களிடமிருந்து (அதாவது, 30 நாட்களுக்கும் குறைவான கடந்த நிலுவை) 12 மாதங்கள் எ.க.ந. இனை தீர்மானிக்கின்றது.

கட்டம் 2 : வாழ்நாள் எ.க.ந. - கடன் வலுக்குன்றாதவை

ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து கடன் இடரில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் கொண்டுள்ள ஆனால் கடன் வலுக்குன்றாத வெளிப்படுத்தல்களுக்கு, ஒரு வாழ்நாள் எ.க.ந. (அதாவது நிதிச் சொத்தின் எஞ்சியுள்ள வாழ்நாளை பிரதபலிக்கின்ற) அங்கீகரிக்கப்படுகின்றது. வங்கியின் கொள்கைகளுடன் மாறாத, நியமத்தின் தேவைப்பாடுகளுக்கு ஏற்றாற்போல், கட்டம் 3 இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட கடன் வசதிகள் தவிர்ந்த மறுக்கத்தக்க அனுமானமான 30 நாட்கள் கடந்த நிலுவையினூடாக, குறிப்பிடத்தக்க சீர்கேடானது அளவிடப்படுகின்றது. வங்கி அனைத்து மீள்கட்டமைக்கப்பட்ட கடன்களையும் கருத்திலெடுப்பதுடன், இவை இரண்டு தடவைகள் மீள்கட்டமைக்கப்பட்டவை, ஆனால் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வழிகாட்டியின் பிரகாரம் கட்டம் 2 இன் கீழ் ஒரு உயர்ந்த கட்டத்திலிருந்து ஒரு குறைவான கட்டத்திற்கு கடன் வசதிகள் / வெளிப்பாடுகள், தரமுயர்த்தப்பட்ட கடன் வசதிகள் தவிர்ந்தவையாகும்.

கட்டம் 3: வாழ்நாள் எ.க.ந. - கடன் வலுக்குன்றியுள்ளவை

குறிப்பிட்ட சொத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களில் ஒரு கேடுவிளைவிக்கும் தாக்கம் இடம்பெற்றிருப்பின், கடன் வலுக்குன்றியுள்ளதாக வெளிப்பாடுகள் மதிப்பிடப்படுகின்றன. கடன் வலுக்குன்றியுள்ளதாக வந்துள்ள வெளிப்பாடுகளுக்கு, ஒரு வாழ்நாள் எ.க.ந. அங்கீகரிக்கப்பட்டு, மொத்த தொகைக்கல்லாது பெறுமதி குறைப்புக் கிரயத்தில் (ஏற்பாடு நிகராக) விளைவுறு வட்டி வீதத்தினை பிரயோகிப்பதன் மூலம் வட்டி வருவாயானது கணிப்பிடப்படுகின்றது. ஒரு வாடிக்கையாளரின் ஒப்பந்தக் கொடுப்பனவுகள் 90 நாட்களுக்கு மேல் காலம் கடந்த நிலுவையுடையவற்றுக்கு வங்கியானது கடன் வசதிகள் SLFRS 9 இல் குறிப்பிட்டுள்ள மறுக்கத்தக்க அனுமானத்திற்கு உட்பட்டவையாக மத்திய வங்கி வகைப்படுத்தலின் பிரகாரம் அனைத்து செயலற்ற கடன்களுடன் சேர்த்த தீர்மானிக்கப்படுகின்றது. இரண்டு தடவைகளுக்கு மேல் மீள்கட்டமைக்கப்பட்ட அனைத்து மீள்கட்டமைக்கப்பட்ட கடன்கள் மற்றும் கடன் வசதிகள் / வெளிப்பாடுகள் உயர்ந்த கட்டத்திலிருந்து குறைந்த தகட்டத்திற்கு தரமுயர்த்தப்பட்ட கடன் வசதிகள் நீங்கலாக அனைத்து மீளதவணையிடப்பட்ட கடன்களும் மற்றும் அனைத்து கடன்வசதிகள் / வாடிக்கையாளர்கள் கட்டம் 3 இன் கீழ் இ.ம.வ. பணிப்புரைகளின் பிரகாரம் செயலற்றவையாக வகைப்படுத்தப்படுகின்றன.

தவறுதலுக்கான சாத்திய (த.சா.) மதிப்பிடல் செயன்முறை

தவறுதலுக்கான சாத்தியமானது ஒரு கொடுக்கப்பட்ட கால எல்லையின் மீது தவறுதலுக்கான வாய்ப்பின் மதிப்பீடாகும். SLFRS 9 இன் கீழ் ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான த.சா. மதிப்பீடானது பெரும்பாலும் வாடிக்கையாளர்களது காலம் கடந்த நாட்கள் (கா.க.நா.) அடிப்படையிலாகும் என்பதுடன் இது தற்போது நாட்டிலுள்ள அனேகமான வங்கிகளுக்கு பொதுவானதாகும். இதன் பிரகாரம், கா.க.நா. இன் அடிப்படையில் வெளிப்படுத்தல்கள் 5 தொகுதிகளினுள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

- பூச்சிய நாட்கள் காலம் கடந்தவை
- 1-30 நாட்கள் காலம் கடந்தவை
- 31-60 நாட்கள் காலம் கடந்தவை
- 61-90 நாட்கள் காலம் கடந்தவை
- 90 நாட்களுக்கு மேல் காலம் கடந்தவை

தவறுதலிலான வெளிப்பாடு (த.வெ.)

தவறுதலிலான வெளிப்பாடானது (த.வெ.) வலுக்குன்றல் கணிப்பீட்டிற்கு உட்பட்டு நிதிக் கருவிகளின் மொத்த கொண்டுசெல்லல் தொகையினையும் பிரதிநிதித்துவம் செய்வதுடன், இதன்போது வாடிக்கையாளரின் வெளிப்பாட்டினை அதிகரிப்பதற்கான ஆற்றல் மற்றும் இது தவறுதலை அண்மித்தல் மற்றும் சாத்தியமான முன்னே மீள்செலுத்தலையும் விளித்துரைக்கின்றது. வங்கியானது கடன் மாற்றல் காரணிகளை (க.மா.கா.) பயன்படுத்துவதுடன், இது தவறுதல் நிகழும்போது தவறப்பட்ட வசதிகளின் வரலாற்றுரீதியான பயன்பாட்டினை விளக்குவதுடன், இது சுழலும் வசதிகளின் த.வெ. இனை கணிப்பிடுவதற்கும் ஆகும், இங்கு வாடிக்கையாளர்கள் அவர்களது வெளிப்பாட்டினை அதிகரிப்பதற்கான ஆற்றலைக் கொண்டுள்ளார்கள். சுழற்சியல்லாத வசதிகளுக்கு, ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட தொகையுடன் சேர்த்து அதனிலான ஏதேனும் அட்டுறு வட்டியும் த.வெ. ஆக கருதப்படுகின்றது.

தவறுதலிலான நட்டம் (த.ந.)

தவறுதலிலான நட்டம் (த.ந.) என்பது வெளிப்பாட்டிலான சாத்தியமான நட்டத்தின் அளவு, மற்றும் இது வெளிப்பாட்டின் சதவீதமாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த த.ந. வீதங்கள் ஏதேனும் வைத்திருக்கப்படும் பிணைச்சொத்திலிருந்து எய்தப்பெறும் அல்லது மீட்கப்படக்கூடிய எதிர்பார்க்கப்படும் தொகையுடன் ஒப்பீடு செய்யப்பட்டு எதிர்பார்க்கப்படும் த.ந. கணக்கிலெடுக்கப்படுகின்றது.

கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளும்

38. இடர் முகாமைத்துவம் (தொடர்ச்சி...)

38.2.1. எதிர்பார்க்கப்படும் கடன் நட்டங்களின் அளவீடு (எ.க.ந.) (தொடர்ச்சி...)

பூகோள பிராந்தியத்தின் பன்முகமான பொருளாதார காட்சிலைகளின் கீழ் எ.க.ந. மாதிரியின் மதிப்பீடு (பொருளாதாரக் காரணி செம்மையாக்கல் - பொ.கா.செ.) எ.க.ந. நிதிக் கருவியின் எதிர்பார்க்கும் வாழ்நாள் மீது சாத்தியம் நிறையிடப்பட்ட மற்றும் பாரபட்சமற்ற கடன் நட்டங்களின் மதிப்பீட்டினை பிரதிபலித்தல் வேண்டும். ஒவ்வொரு சாத்தியமான பாரியபொருளாதார மாறிலிகள் மற்றும் காட்சிநிலைகளை கருத்திலெடுப்பது நடைமுறைக்குகந்ததல்ல எனவே வங்கியானது சொத்து வலுக்குன்றலின் எ.க.ந. இல் மிகவும் சாத்தியமான தாக்கத்தினை பயன்படுத்துகின்றது. முழுமைத்தன்மை மற்றுத் துல்லியத்தினை உறுதிசெய்வதற்காக, வங்கியானது பொ.கா.செ. க்கு பயன்படுத்தப்பட்ட தரவுகளை ஏற்புடையாக்குவதற்கு வங்கியானது மூன்றாம் தரப்பினரிடமிருந்து சுயாதீன உறுதிமொழியினை பெற்றுக்கொண்டது. 2021 இன் இறுதியில் பொருளாதார சூழலில் உறுதியின்மை தொடர்வதுடன், பாரியபொருளாதார மாறிலிகளில் மீளெழுச்சி எதிர்மறையான கண்ணோட்டத்தினை விளைவிக்கின்றது. 31.12.2023 இல் மோசமான காட்சிநிலையானது 20மூ இலிருந்து 60மூ ஆக திருத்தியமைக்கப்பட்ட அனுமானத்திற்கு முகாமைத்துவ மேலடுக்கு பயன்படுத்தப்பட்டது.

38.2.2. எதிர்பார்க்கப்படும் கடன் நட்டங்களுக்கான மொத்த வலுக்குன்றலுக்கான பகுப்பாய்வு பின்வருமாறு

டிசம்பர் 31 இல் உள்ளவாறானது		2023				2022			
	குறிப்பு	ரூ 000 கட்டம் 1	ரூ 000 கட்டம் 2	ரூ 000 கட்டம் 3	ரூ 000 மொத்தம்	ரூ 000 கட்டம் 1	ரூ 000 கட்டம் 2	ரூ 000 கட்டம் 3	ரூ 000 மொத்தம்
காசும் காசுக்குச் சமனானவைகளும்		-	-	-	-	-	-	-	-
வங்கிகளுடனான வைப்பீடுகள்	14	8,084,817	-	-	8,084,817	2,947,034	-	-	2,947,034
பெறுமதி குறைப்புக் கிரயத்தில் நிதிச் சொத்துக்கள்									
கடன்களும் முற்பணங்களும்	16	428,135,938	431,229,101	1,530,112,891	2,389,477,929	462,950,878	264,086,290	1,106,186,214	1,833,223,382
கடனும் ஏனைய கருவிகளும்		-		-	-				
எதிர்பார்க்கும் கடன் நட்டங்களுக்கான மொத்த தள்ளுபடி		436,220,755	431,229,101	1,530,112,891	2,397,562,746	465,897,912	264,086,290	1,106,186,214	1,836,170,416

கடன் நட்ட வெளிப்பாடு

பின்வரும் அட்டவணையானது வருமானக் கூற்றில் இவ்வாண்டுக்காக பதிவுசெய்த நிதியியல் கருவிகளில் எதிர்பார்க்கும கடன் நட்ட (எ.க.ந.) செலவினத்தை காண்பிக்கின்றது.

31 டிசம்பர் 2023 இல்	கட்டம் 1	கட்டம் 2	கட்டம் 3	மொத்தம்
காசும் காசுக்குச் சமனானவைகளும்	-	-	-	-
மத்திய வங்கியுடனான காசும் மீதிகளும்	-	-	-	-
இலங்கை அரசாங்கப் பிணையங்கள்		-	-	-
ஏனைய வங்கிகளுடனான வைப்பீடுகள்	5,137,783	-	-	5,137,783
வாடிக்கையாளர்களுக்கு கடன்களும் முற்பணங்களும்	(34,814,940)	167,142,810	423,926,677	556,254,547
மொத்த வலுக்குன்றல் நட்டம்	**(29,677,158)**	**167,142,810**	**423,926,677**	**561,392,330**

31 டிசம்பர் 2022 இல்	கட்டம் 1	கட்டம் 2	கட்டம் 3	மொத்தம்
காசும் காசுக்குச் சமனானவைகளும்	-	-	-	-
மத்திய வங்கியுடனான காசும் மீதிகளும்	-	-	-	-
இலங்கை அரசாங்கப் பிணையங்கள்	-	-	-	-
ஏனைய வங்கிகளுடனான வைப்பீடுகள்	2,691,805	(993,122)	-	1,698,683
வாடிக்கையாளர்களுக்கு கடன்களும் முற்பணங்களும்	130,450,499	114,418,254	119,179,592	364,048,345
மொத்த வலுக்குன்றல் நட்டம்	133,142,304	113,425,132	119,179,592	365,747,028

தவணை தவறுதல் நிலைமை	நிலைமை	விபரம்
கட்டம் 1	வழமையானது	செயற்படுகின்றது
	1 முதல் 30 நாட்கள்	செயற்படுகின்றது
கட்டம் 2	30 முதல் 60 நாட்கள்	குறைச் செயலாக்கம்
	61 முதல் 90 நாட்கள்	குறைச் செயலாக்கம்
கட்டம் 3	90 நாட்களுக்கு மேல்	செயலாக்கமற்றது

டிசம்பர் 31 இல் உள்ளவாறானது	2023			2022		
	கட்டம் 1	கட்டம் 2	கட்டம் 3	கட்டம் 1	கட்டம் 2	கட்டம் 3
பெறுமதி குறைப்புக் கிரயத்தில் நிதிச் சொத்துக்கள் - கடன்களும் முற்பணங்களும்						
கட்டம் 0 இலிருந்த 2 இற்கு செயற்படும் கடன்கள்	25,022,039,747	5,325,583,522	52,577,161	24,290,940,953	2,835,765,303	113,965,281
கட்டம் 03: செ.அ.சொ. - சிறப்பு குறிப்பு	-	-	1,671,924,623	-	-	1,598,081,449
கட்டம் 04: செ.அ.சொ. - தரங்குறைவானது	-	-	1,009,602,129	4,217,834,729	712,279,881	796,963,793
கட்டம் 05: செ.அ.சொ. - ஐயப்பாடானது	-	-	4,518,286,737	-	-	660,042,650
கட்டம் 05: செ.அ.சொ. நட்டம்	-	-	3,406,634,006	-	-	5,891,466,366
மொத்த கடன்களும் முற்பணங்களும்	25,022,039,747	5,325,583,522	10,659,024,657	28,508,775,681	3,548,045,184	9,060,519,541
எதிர்பார்க்கப்படும் கடன் நட்ட தள்ளுபடிகள்	(428,135,938)	(431,229,101)	(1,530,112,891)	(462,950,878)	(264,086,290)	(1,106,186,214)
தேறிய கடன்களும் முற்பணங்களும்	24,593,903,809	4,894,354,422	9,128,911,765	28,045,824,804	3,283,958,894	7,954,333,327
பெறுமதி குறைப்புக் கிரயத்தில் கடன்களும் ஏனைய கருவிகளும்						
யுனிட் ட்ரஸ்ட் மற்றும் பட்டியலிடப்படா பங்குகள்	3,557,912,305	-	-	5,379,078	-	-
அரச கடன் பிணையங்கள் - திறைசேரி உண்டியல்களும் முறிகளும்	10,255,697,045	-	-	2,204,460,957	-	-
மறுதலை மீள்கொள்வனவு உடன்படிக்கைகள்	970,572,268	-	-	70,055,770	-	-
தொகுதிக்கடன்கள்	781,224,416			300,476,712		
வணிகத் தாள்கள்	155,250,000					
வங்கிகளுடனான வைப்புகள்	2,931,216,914	-	-	13,002,272,044	-	-
மொத்த கடன்களும் ஏனைய கருவிகளும்	18,651,872,949			15,582,644,562		
எதிர்பார்த்த கடன் நட்ட தள்ளுபடிகள்	(8,084,817)		-	(2,947,034)		
தேறிய கடனும் ஏனைய கருவிகளும்	18,643,788,132	-	-	15,579,697,527		

38.2.3 இடர் செறிவின் பகுப்பாய்வு

வங்கியின் இடரினது செறிவானது தொழில்துறைவாரியாக முகாமைப்படுத்தப்படுகின்றது. பின்வரும் அட்டவணையானது தொழில்துறைவாரியான இடர் செறிவினை நிதி நிலைமைக் கூற்றின் கூறுகளுக்கு காண்பிக்கின்றது. செறிவான சொத்துக்களினுள் 'ஏனையவை' விவசாயக் கடன்களை உள்ளடக்குகின்றன.

31.12.2023 இல் உள்ளவாறானது	நிதியியல் சேவைகள்	அரசாங்கப் பிணையங்கள்	கட்டுமானமும் வீடமைப்பும்	நுகர்வோர்கள்	ஏனையவை	மொத்தம்
நிதிச் சொத்துக்கள்						
காசும் காசுக்குச் சமனானவைகளும்	122,600,853					122,600,853
ஏனைய வங்கிகளுடனான வைப்பீடுகள்	2,931,216,914					2,931,216,914
வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் வருமதிகளும்						
ஈட்டுக்கடன்			10,179,549,598			10,179,549,598
ஊ.சே.நி.			8,857,459,543			8,857,459,543
ஊழியர் கடன்கள்			1,208,081,194			1,208,081,194
தனிப்பட்ட கடன்கள்				19,295,356,966		19,295,356,966
ஏனையவை					1,864,188,107	1,864,188,107
நிதிக் கருவிகள் - இ.ந.நி.பெ.	3,552,533,227					3,552,533,227
நிதிக் கருவிகள் – பெ.கு.கி.	970,572,268	10,255,697,045				11,226,269,313
நிதிக் கருவிகள் – ஏ.வி.வ.நி.பெ.	5,379,078					5,379,078
மொத்தம்	7,582,302,340	10,255,697,045	20,245,090,335	19,295,356,966	1,864,188,107	59,247,624,950

கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளும்

38. இடர் முகாமைத்துவம் (தொடர்ச்சி...)

38.2.3 இடர் செறிவின் பகுப்பாய்வு (தொடர்ச்சி...)

31.12.2022 இல் உள்ளவாறானது	நிதியியல் சேவைகள்	அரசாங்கப் பிணையங்கள்	கட்டுமானமும் வீடமைப்பும்	நுகர்வோர்கள்	ஏனையவை	மொத்தம்
நிதிச் சொத்துக்கள்						
காசும் காசுக்குச் சமனானவைகளும்	126,480,437					126,480,437
ஏனைய வங்கிகளுடனான வைப்பீடுகள்	13,005,219,079					13,005,219,079
வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் வருமதிகளும்						-
ஈட்டுக்கடன்			10,836,307,405			10,836,307,405
ஊ.சே.நி.			6,643,862,163			6,643,862,163
ஊழியர் கடன்கள்			911,037,873			911,037,873
தனிப்பட்ட கடன்கள்				20,751,939,449		20,751,939,449
ஏனையவை					1,973,856,456	1,973,856,456
நிதிக் கருவிகள் - இ.ந.நி.பெ.	-					-
நிதிக் கருவிகள் – பெ.கு.கி.	70,055,770	2,204,460,957				2,274,516,727
நிதிக் கருவிகள் – ஏ.வி.வ.நி.பெ.	5,379,078					5,379,078
மொத்தம்	13,207,134,364	2,204,460,957	18,391,207,441	20,751,939,449	1,973,856,456	56,528,598,666

38.3 திரவத்தன்மை இடர் மற்றும் நிதியளித்தல் முகாமைத்துவம்

திரவதன்தன்மை இடர் என்பது, பணத்தினை அல்லது மற்றுமோர் நிதிச் சொத்தினை விநியோகிப்பதன் மூலம் தீர்ப்பனவு செய்யப்படும் நிதிப் பொறுப்புக்களுடன் இணைந்த கடப்பாடுகளை சந்திப்பதில் எதிர்கொள்ளும் சிரமமாகும். திரவத்தன்மை இடரானது வங்கியானது அதன் கொடுப்பனவு கடப்பாடுகளை வழக்கமான மற்றும் நெருக்கடியான சூழ்நிலையில் அவற்றின் உரிய கெடுவின்போது சந்திப்பதற்கு இயலாமலிருக்கும் சாத்தியத்தின் காரணமாக எழுகின்றது. இந்த இடரினை வரையறை செய்வதற்கு, முகாமைத்துவமானது அதன் மையமாக வைப்புத் தளத்திற்கு மேலாக பன்முகமான நிதியளித்தல் மூலங்களை ஒழுங்குசெய்துள்ளதுடன் சொத்துக்களை திரவத்தன்மையினை கருத்திற்கொண்டு சொத்துக்களை முகாமைப்படுத்தும் கொள்கையினை கடைப்பிடிப்பதுடன் ஒரு நாளாந்த அடிப்படையில் எதிர்கால காசுப் பாய்ச்சல்களையும் திரவத்தன்மையினையும் கண்காணிக்கின்றது. திரவத்தன்மை இடரினை முகாமைப்படுத்துவதற்காக, வங்கியானது உள்ளகக் கட்டுப்பாட்டுச் செயன்முறைகள் மற்றும் வருநிகழ்வுத் திட்டங்களையும் விருத்திசெய்துள்ளது. இது எதிர்பார்க்கப்படும் காசுப் பாய்ச்சல்களில் ஒரு மதிப்பீடு மற்றும் தேவையாயின் மேலதிக நிதியளிப்பினை பெற்றுக்கொள்வதற்காக பயன்படுத்துவதற்காக கிடைக்கக்கூடிய உயர் தரத்திலான பிணைச் சொத்துக்களையும் உள்ளடக்குகின்றது.

திரவத்தன்மை விகிதங்கள்

திரவச் சொத்துக்கள் பிரதானமாக, காசு, வங்கிகளுடனான மீதிகள் மற்றும் அரசாங்கப் பிணையங்களை உள்ளடக்குகின்றன. வங்கியானது பின்பரும் திரவத்தன்மை விகிதங்களை நிதியளித்தல் அவசியத்தினை மதிப்பிடுவதற்காக கண்காணிக்கின்றது.

திரவச் சொத்து விகிதம்

	2023 ரூ.	2022 ரூ.
வருட இறுதியில்	29.37%	34.62%
ஆகக்கூடியது	41.83%	35.02%
ஆகக்குறைந்தது	29.37%	31.25%
சராசரி	35.60%	33.15%

38.4 எஞ்சியுள்ள ஒப்பந்த முதிர்வுவாரியாக நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பகுப்பாய்வு

கீழ்காணும் அட்டவணையானது 31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறான கழிவிறக்கம் செய்யப்படாத வங்கியின் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் காசுப் பாய்ச்சல்களின் முதிர்வுத் தோற்றுருவத்தின் பொழிப்பினை வழங்குகின்றது.

நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்பக்களின் கழிவிறக்கம் செய்யப்படாத காசுப் பாய்ச்சல்களின் ஒப்பந்த முதிர்வுகள்.

31 டிசம்பர் 2023 இல் உள்ளவாறானது	7 நாட்களுக்குக் குறைவானது ரூ.	7-30 நாட்கள் ரூ.	1-3 மாதங்கள் ரூ.	3-6 மாதங்கள் ரூ.	6-12 மாதங்கள் ரூ.	1-3 வருடங்கள் ரூ.	3-5 வருடங்கள் ரூ.	5 வருடங்களுக்கு மேல் ரூ.	மொத்தம்
மொத் சொத்துக்கள்	564,141,639	3,986,065,474	9,261,606,143	4,972,882,214	2,504,567,640	12,035,307,915	11,577,663,120	14,336,195,556	59,238,429,700
காசும் காசுக்குச் சமனானவைகளும்	122,600,853								122,600,853
வங்கிகளுடனான வைப்பீடுகள்	1,217,815		2,921,914,282			-	-	-	2,923,132,097
நிதிச சொத்துக்கள்- இ.ந.நி. பெ. மற்றும் ஏ.வி.வ.நி.அப.								3,552,533,227	3,552,533,227
கடன்களும் ஏனைய கருவிகளும்	350,252,404	2,341,923,224	4,614,550,856	3,379,888,037	279,440,769	287,509,523	909,178,916		12,162,743,729
கடன்களும் முற்பணங்களும்	84,438,394	1,603,656,762	1,631,104,179	1,542,509,923	1,455,135,997	11,605,698,107	10,550,587,823	10,307,489,123	38,780,620,308
ஏனைய சொத்துக்கள்	5,632,173	40,485,488	94,036,827	50,484,254	769,990,873	142,100,285	117,896,381	476,173,205	1,696,799,486
									-
மொத்த பொறுப்புக்கள் பொறுப்புக்கள்	3,698,439,945	2,451,635,277	5,291,285,233	23,251,260,742	16,288,429,838	3,354,330,071	5,413,003,268	6,051,517,791	65,799,902,165
மொத்த உரித்துவம்								5,454,169,036	5,454,169,036
வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை	2,732,792								2,732,792
வைப்பீட்டா. செலுத்தவேண்டியவை	3,493,800,904	2,445,658,534	5,285,308,491	22,744,197,135	16,174,378,812	3,192,827,801	5,320,517,009	214,837,253	58,871,525,940
ஏனைய கடன் வழங்குன. செ.வே.	-	-	-	2,202,967	90,144,057	77,827,879	8,811,867		178,986,770
ஊழியர் நலன் பொறுப்பு	-	5,976,742	5,976,742	11,953,484	23,906,969	83,674,391	83,674,391	382,511,502	597,674,223
ஏனைய பொறுப்புக்கள்	201,906,250	-	-	492,907,156	-	-	-		694,813,406
முதிர்வு இடைவெளி	(3,134,298,306)	1,534,430,197	3,970,320,910	(18,278,378,528)	(13,783,862,198)	8,680,977,844	6,164,659,852	8,284,677,765	
திரண்ட மு.இடைவெளி		(1,599,868,109)	2,370,452,800	(15,907,925,728)	(29,691,787,926)	(21,010,810,082)	(14,846,150,230)	(6,561,472,465)	

கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளும்

38. இடர் முகாமைத்துவம் (தொடர்ச்சி...)

38.4.1 முதிர்வுப் பகுப்பாய்வு

பின்வரும் அட்டவணையானது வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் குறுங்கால மற்றும நீண்டகால அசைவுகளை கடந்த வருடத்துடன் ஒப்பிட்டுக் காண்பிக்கின்றன.

	2023			2022		
சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் (a)	ரூ. 000 12 மாதங்களுக்குக் குறைவானது	ரூ. 000 12 மாதங்களுக்கு மேலானவை	ரூ. 000 மொத்தம்	ரூ. 000 12 மாதங்களுக்குக் குறைவானது	ரூ. 000 12 மாதங்களுக்கு மேலானவை	ரூ. 000 மொத்தம்
மொத்த சொத்துக்கள்	**21,289,263,109**	**37,777,247,568**	**59,066,510,677**	28,116,286	28,848,658	56,964,943
காசும் காசுக்குச் சமனானவைகளும்	**122,600,853**	**-**	**122,600,853**	126,480		126,480
வங்கிகளுடனான வைப்பீடுகள்	**2,923,132,097**	**-**	**2,923,132,097**	13,002,272	-	13,002,272
நிதியியல் சொத்துக்கள்-இநநிபெ. மற்றும் ஏவிவநபெ	**-**	**3,552,533,227**	**3,552,533,227**		-	-
நிதியியல் சொத்துக்கள் - பெ.கு.கி.	**-**	**-**	**-**	-	-	-
கடனும் ஏனைய கருவிகளும்	**10,966,055,289**	**1,196,688,439**	**12,162,743,729**	2,049,543	525,450	2,574,993
கடன்களும் முற்பணங்களும்	**6,316,845,255**	**32,286,476,952**	**38,603,322,207**	11,130,165	28,137,072	39,267,238
			-			-
நிதிச் சொத்துக்கள் - ஏ.வி.வ.நி.பெ.	**-**	**5,379,078**	**5,379,078**	-	5,379	5,379
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	**-**	**171,651,164**	**171,651,164**	-	78,213	78,213
பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள்	**-**	**156,519,188**	**156,519,188**	108,903	92,834	201,737
ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள்	**745,677,898**	**-**	**745,677,898**	632,155	-	632,155
ஏனைய சொத்துக்கள்	**214,951,718**	**407,999,518**	**622,951,236**	1,066,767	9,709	1,076,476
மொத்த பொறுப்புக்கள்	**47,710,868,394**	**11,355,642,282**	**59,066,510,677**	46,069,623	10,895,321	56,964,944
மொத்த உரித்துவம்	**-**	**5,454,169,036**	**5,454,169,036**	-	6,474,485	6,474,485
வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை	**2,732,792**	**-**	**2,732,792**	23,381	-	23,381
பெறுமதி குறைப்புக் கிரயத்தில் நிதிப் பொறுப்புக்கள்			**-**			-
வைப்பீட்டாளருக்கு செலுத்தவேண்டியவை	**46,873,161,238**	**5,264,973,215**	**52,138,134,453**	45,446,061	3,693,910	49,139,971
ஏனைய கடன் வழங்குனர்களுக்கு செலுத்த வேண்டி.	**92,347,023**	**86,639,746**	**178,986,770**	35,173	242,878	278,051
ஊழியர் நலன் பொறுப்பு	**47,813,938**	**549,860,285**	**597,674,223**	37,778	484,049	521,827
ஏனைய பொறுப்புக்கள்	**694,813,404**	**-**	**694,813,404**	527,231	-	527,231
முதிர்வு இடைவெளி	**(26,421,605,285)**	**26,421,605,286**		(17,953,337)	17,953,337	

38.5 மூலதன முகாமைத்துவம்

38.5.1 ஆகக்குறைந்த ஒழுங்குமுறை மூலதனம்

“ஆகக்குறைந்த ஒழுங்குமுறை மூலதனத் தேவைப்பாடு ரூ 5 பில்லியன் உடன் 01.01.2018 இல் வங்கியினால் இணக்கப்பாடு காணப்பட்டது (இ.ம.வ. இன் 12.07.2016 திகதியிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம்). இது 26 ஒக்டோபர் 2017 திகதியிடப்பட்ட 2017 இன் பணிப்புரை இலக்கம் 05 இன் பிரகாரம் 31.12.2020 இலிருந்து ரூபா 7.5 பில்லியனாக மேம்படுத்தப்பட்டதுடன், அதன் பின்னர் 2022 இல் 04 ஆம் இலக்க மத்திய வங்கியின் ஆளுனரிவ் பணிப்புரையின் பிரகாரம் இது 31.12.2023 வரை நீடிக்கப்பட்டது. இதன் பிரகாரம், அடுத்த இரண்டு வருடங்களில் 1975 இன் 13 ஆம் இலக்க அரச ஈட்டு வங்கியின் ஏற்பாடுகளின் பிரகாரம் வணிகத்தினை விரிவாக்குவதன் மூலம் உள்வாரிய உருவாக்கப்படும் நிதிகளுடான வங்கியானது ரூபா 7.5 பில்லியனுடன் இணக்கப்பாடு காண்பதற்கு எதிர்பார்க்கின்றது.

38.5.2. மூலதனப் போதுமை விகிதம் மற்றும் வங்கியின் ஒழுங்குமுறை மூலதனம்

அனைத்து உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியானது எந்நேரத்திலும், 01 ஜனவரி 2019 முதல் மூலதனப் பாதுகாப்பு தாங்கல் வீதமான 8.5% உள்ளடங்கலாக, ஆகக்குறைந்த அடுக்கு 1 மூலதனம் மற்றும் மொத்த மூலதன விகிதமாக 12.5% இனை பராமரித்தல் வேண்டும். ஒழுங்குமுறை மூலதனம் மற்றும் வங்கியின் மூலதனப் போதுமை விகிதங்களின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

i. மூலதன அடித்தளம்

மூலதனப் போதுமை உருப்படி	ரூ. 000 31.12.2023	ரூ. 000 31.12.2022
செம்மையாக்கலின் பின்னரான சாதாரண உரித்துவ மூலதனம்	4,729,812	5,828,557
மொத்த அடுக்கு 1 மூலதனம்	4,708,491	6,123,551
31.12.2023 இல் நிறைவேற்றவேண்டிய ஆகக்குறைந்த ஒழுங்குமுறை மூலதனம்	7,500,000	7,500,000
மூலதனப் பற்றாக்குறை	2,770,188	1,671,443
மொத்த அடுக்கு 1 மூலதனப் பற்றாக்குறை	2,791,509	1,376,449
மூலதனப் போதுமை விகிதம்		
சாதாரண உரித்துவ அடுக்கு 1 மூலதன விகிதம்	18.81%	18.81%
மொத்த மூலதன விகிதம்	18.89%	19.76%

ii. ஐந்தொகை வெளிப்பாடுகளில் இடர் செம்மையாக்கப்பட்டவை

	2023		2022	
	ஐந்தொகையிலுள்ள உருப்படிகளின் பிரதான தொகை	இடர் நிறையிடப்பட்ட சொத்துக்களின் தொகை	ஐந்தொகையிலுள்ள உருப்படிகளின் பிரதான தொகை	இடர் நிறையிடப்பட்ட சொத்துக்களின் தொகை
வெளிப்பாடுகள்				
இலங்கை மத்திய வங்கியிலான கோரல்கள்	11,226,269	-	2,274,517	-
பொதுத்துறை நிறுவனங்களிலான கோரல்கள் (PSEs)	3,534	3,534	23,276	23,276
வங்கியின் வெளிப்பாடுகளிலான கோரல்கள்				
உள்ளூர் வங்கிகளிடமிருந்து வரவேண்டியவை 03 மாதங்களுக்கு குறைவானவை(AAA to BBB)	56,968	11,394	2,177,610	435,522
உள்ளூர் வங்கிகளிடமிருந்து வரவேண்டியவை 03 மாதங்களுக்கு மேலானவை (A+ to BBB)	2,921,914	1,460,957	736,146	368,073
A to BBB	1,213	607	10,123,760	4,440,801
இ.ம.வ. இனால் முறைமைப்படுத்தப்படும் நிதி நிறுவனங்களிலான கோரல்கள்	155,250	77,625	-	-
ஏனைய நிதி நிறுவனங்களிலான கோரல்கள்	5,380	5,380	5,379	5,379
சிற்றளவு கோரல்கள்				
தனிநபர் வெளிப்பாடுகள்	16,650,956	12,488,217	20,313,315	15,234,986
வதிவிட ஆதனத்தினால் பாதுகாக்கப்பட்ட கோரல்கள்	8,878,131	3,107,346	10,088,337	3,530,918
வதிவிட ஆதனத்தினால் பாதுகாக்கப்பட்ட கோரல்கள்				
ஒழுங்குமுறை மூலதன நோக்கங்களுக்கான தகைமை பெறும் கோரல்கள்	-	-	-	-
செயற்திறனற்ற சொத்துக்கள் (NPAs)				
குறிப்பிட்ட ஏற்பாடுகள் 20% இற்கு சமானனவை அல்லது அதிகமானவை	1,881,288	1,881,288	1,466,643	1,466,643
20% இற்கு குறைவான குறிப்பிட்ட ஏற்பாடுகள்	108,710	163,064	9,383	14,074
வதிவிட ஆதனத்தினால் பாதுகாக்கப்பட்ட செயற்திறனற்ற சொத்துக்கள்				
20% இற்கு மேலான குறிப்பிட்ட ஏற்பாடுகள்	124,134	62,067	64,523	32,262
20% இற்கு குறைவான குறிப்பிட்ட ஏற்பாடுகள்	1,399,493	1,399,493	1,354,550	1,354,550
காசு உருப்படிகள் மற்றும் ஏனைய சொத்துக்கள்				
சொந்த பெட்டகத்திலுள்ள தாள்களும் நாணயங்களும்	62,941	-	67,856	-
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	334,572	334,572	279,950	279,950
ஏனைய சொத்துக்கள் / வெளிப்பாடுகள்	622,951	622,951	1,076,476	1,076,476
கடன் இடருக்கான இடர் நிறையிடப்பட்ட தொகை	44,433,705	21,618,495	50,061,721	28,262,910

கணக்கீட்டுக் கொள்கைகளும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளும்

38. இடர் முகாமைத்துவம் (தொடர்ச்சி...)

38.6 சந்தை இடர்

சந்தை இடர் என்பது, வட்டி வீதங்கள், நாணயமாற்று வீதங்கள் மற்றும் உரித்துவ விலைகள் போன்ற சந்தை மாறிலிகளிலான மாற்றத்தின் காரணமாக நிதிக் கருவிகளின் நியாயப் பெறுமதி அல்லது எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் தளம்பலடையும் இடராகும். வங்கி தற்போது எவ்விதமான வர்த்தக தேக்கத்தினையும் வைத்திருக்கவில்லை, எனவே வங்கியின் தேக்கமானது பிரதானமாக வர்த்தகம் செய்யப்படாதவையாகும்.

38.6.1. சந்தை இடர் - வர்த்தகம் செய்யப்படாதவை

வட்டி வீத இடர்

நிதிக் கருவிகளின் எதிர்காலக் காசுப்பாய்ச்சல்களை அல்லது நியாயப் பெறுமதிகளை பாதிக்கும் வட்டி வீதங்களிலான மாற்றங்களிலிருந்து சாத்தியமாக வட்டி வீத இடர்கள் எழுகின்றன. வங்கியின் கொள்கையானது, நாளாந்தம் நிலைகளை கண்காணித்தல் மற்றும் இந் நிலைகள் நிறுவப்பட்ட வரையறையினுள் பராமரிக்கப்படுவதனை உறுதிசெய்வதற்காக இழப்புக்காப்பு மூலோபாயங்களை பயன்படுத்தல்.

வட்டி உணர்திறனான வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் வட்டி வீதங்களில் ஏற்படும் நியாயமான மாற்றங்களுக்கு பதிலளிப்பாக 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான வங்கியின் வருமானக் கூற்றின் உணர்திறனானது கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

டிசம்பர் 31 இல் உள்ளவாறானது	2023 ரூ. 000	2022 ரூ. 000
வட்டி உணர்திறனுடைய சொத்துக்கள் - RSA	20,140,558	20,562,859
வட்டி உணர்திறனுடைய பொறுப்புக்கள் RLA	46,880,001	45,441,813
RSA - RLA	(26,739,443)	(24,878,954)

வட்டி வீத அதிர்ச்சியின் நிமித்தம் வருமானக் கூற்றிலான தாக்கம்

டிசம்பர் 31 இல் உள்ளவாறானது	2023 ரூ. 000	2022 ரூ. 000
0.50%	(57,299)	(60,108)
1%	(113,841)	(119,555)
-0.50%	56,920	59,777
-1%	113,841	119,555

முற்கொடுப்பனவு இடர்

முன்கொடுப்பனவு இடர் என்பது, நிலையான வட்டி ஈட்டுக்கடன்கள் வட்டி வீதங்கள் வீழ்ச்சியடையும்போது போன்ற, வாடிக்கையாளர்கள் அல்லது எதிர்தரத்தவர்கள் எதிர்பார்த்ததிலும் பார்க்க முன்னர் அல்லது பின்னர் மீள்செலுத்தினால் அல்லது மீள்செலுத்துவதற்கான வேண்டுதனை விடுத்தால் வங்கியானது ஒரு நிதியியல் நட்டத்திற்கு ஆட்படும் என்ற இடராகும்.

38.7 செயற்பாட்டு இடர்

செயற்பாட்டு இடர் என்பது அமைப்புமுறை செயலிழப்பு, மனித பிழை, மோசடி அல்லது வெளிவாரி நிகழ்வுகளினால் எழக்கூடிய நட்டத்திற்கான இடர் ஆகும். கட்டுப்பாடுகள் வினைத்திறனாக செயற்படுவதற்கு தவறும்போது, செயற்பாட்டு இடர்கள் நன்மதிப்பினை பாதிக்கலாம், சட்ட அல்லது முறைமைப்படுத்தல் தாக்கங்கள், அல்லது நிதியியல் நட்டங்களுக்கு இட்டுச்செல்லலாம். வங்கியானது அனைத்து செயற்பாட்டு இடர்களையும் இல்லாதொழிப்பதனை எதிர்பார்க்க இயலாது ஆனால் சாத்தியமானன இடர்களை கண்காணித்து பதிலளிப்பதன் மூலம் மற்றும் ஒரு கட்டுப்பாட்டு வரன்முறையினூடாக இந்த இடர்களை முகாமைப்படுத்துவதற்கு முயற்சிக்கின்றது. கட்டுப்பாடுகள், வினைத்திறனான கடமைகளின் பிரிப்பு, அணுக்கம், அங்கீகாரம் மற்றும் கணக்கிணக்க செயன்முறைகள், உள்ளகக் கணக்காய்வின் பயன்பாடு போன்ற ஊழியர் கல்வி மற்றும் மதிப்பிடல் செயன்முறைகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

39 ஐந்தொகைத் திகதிக்கு பின்னர் இடம்பெறும் நிகழ்வுகள்

கோவிட்-19 தொற்றின் மூன்றாம் அலையின் காரணமாக வணிகங்கள் மற்றும் தனிநபர்களினால் முகங்கொடுக்கும் சவால்களை சந்திப்பதற்கு வசதியளிக்கும நோக்கில் இலங்கை மத்திய வங்கி மே 2021 இல் 2021 இன் 05 ஆம் இலக்க சுற்றறிக்கை ஒன்றினை வழங்கியது. இது 2021 இன் 08 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் செப்டம்பர் 2021 இல் மேலும் நீடிக்கப்பட்டது. இதன் பிரகாரம், வங்கியானது மே 2021 இல் ஏற்கனவே சலுகைகளை வழங்கியது மற்றும் தற்போது வங்கியானது நீடிக்கப்பட்ட நிவாரண வழிமுறைகளுக்கு தகைமையுடைய கடன் பெறுநர்களினால் அனுப்பப்பட்ட வேண்டுதல்களை மதிப்பிடும் செயன்முறையிலுள்ளது.

40 ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள்

பொறுப்புக்காக எவ்விதமான சொத்துக்களும் ஈடாக வைக்கப்படவில்லை.

41 தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியானது ஒரு அரச கட்டுப்பாட்டுடைய நிறுவனமாகும். வழக்கமான வணிகப் போக்கில் அது ஏனைய அரச கட்டுப்பாட்டு நிறுவனங்களுடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதுடன் அவை தொடர்புடைய தரப்பினர் இலங்கை கணக்கீட்டு நியமம் 4 (டி) பந்திக்கு ஏற்ப வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

42 ஒப்பந்தங்கள் மற்றும் முன்மொழியப்படும் ஒப்பந்தங்களிலான பணிப்பாளர்களது நலன்கள்

1975 இன் 13 ஆம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிச் சட்டத்தின் பிரகாரம், ஒரு பணிப்பாளர், அல்லது அவரது துணைவியார் அல்லது சார்ந்திருக்கும் பிள்ளை, சபையினால் கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்ட அல்லது கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு முன்மொழியப்பட்ட ஏதேனும் வணிகத்தில் நேரடியாக அல்லது மறைமுகமான அக்கறையினைக் கொண்டிருப்பின் கலந்துரையாடப்பட்ட அந்த அக்கறையின் தன்மையினை வெளிப்படுத்தல் வேண்டும். இந்த வெளிப்படுத்தலானது சபையின் செயற்குறிப்பில் பதிவுசெய்யப்படல் வேண்டும் மற்றும் அத்தகைய பணிப்பாளர் அந்த வணிகத்துடன் தொடர்புடைய சபையின் தீர்மானம் அல்லது ஏதேனும் கலந்துரையாடலில் கலந்துகொள்ளலாகாது என்பதுடன் அத்தகைய கலந்துரையாடல் செயன்முறையிலிருக்கும்போது அல்லது தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுக்கொண்டிருக்கும்போது அத்தகைய கூட்டத்திலிருந்து பின்வாங்குதல் வேண்டும். சட்டத்தின் பிரகாரம், வங்கியினால் எந்தவிதமான கடன்களும் வங்கியின் எந்த பணிப்பாளருக்கோ அல்லது ஊழியருக்கோ அல்லது ஒரு பணிப்பாளரின் துணைவியாருக்கோ அல்லது தங்கியுள்ள பிள்ளைக்கோ அல்லது ஏதேனும் கம்பனியில் அல்லது நிறுவனத்தில் ஒரு பணிப்பாளரோ அல்லது ஊழியரோ கணிசமான அக்கறையினைக் கொண்டிருப்பின் வழங்கப்படலாகாது: இந்த சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள விதிகளினால் விதந்துரைக்கப்பட்ட வேறு ஏதேனும் நோக்கத்திற்காக அல்லது ஒரு குடியிருக்கும் மனையின் கொள்வனவுக்கு, கட்டுவதற்கு, பழுதுபார்ப்பதற்கு, புதுப்பிப்பதற்கு அல்லது ஏதேனும் நீடிப்பிற்கு அல்லது ஒரு குடியிருக்கும் மனையினை கட்டுவதற்காக ஏதேனும் காணியினை கொள்வனவு செய்வதற்காக வங்கியானது ஊழியர்களுக்கு கடன்களை வழங்கலாம்". இந்த பந்தியின் பிரகாரம் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவையிலுள்ள மீதியானது நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 32 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. SMIB இன் பணிப்பாளர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அக்கறை கொண்டிருக்கவில்லை.

43 பெறுமதி சேர்க்கப்பட்ட கூற்று

டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது	2023 ரூ.	2022 ரூ.
வட்டி வருமானம்	9,324,132,408	7,401,968,299
ஏனைய வருமானம்	275,769,950	115,159,625
மொத்த வருவாய்	9,599,902,358	7,517,127,924
வட்டிச் செலவினங்கள்	(8,732,594,619)	(5,462,981,407)
சேவைகளின் கிரயம்	(355,795,039)	(590,873,759)
வலுக்குன்றல் ஏற்பாடு	(561,392,330)	(365,747,028)
பெறுமதி சேர்க்கப்பட்டவையின் மொத்த விநியோகம்	(49,879,630)	1,097,525,730

டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது	2023 ரூ.	2022 ரூ.
ஊழியர்களுக்கு		
சம்பளங்களும் ஏனைய நலன்களும்	1,015,292,892	1,089,955,264
அரசாங்கத்திற்கு		
கூட்டாண்மை வரி	(161,649,247)	(290,803,108)
பெறுமானத்தேய்வு	99,608,144	96,575,584
நிறுத்திவைக்கப்பட்ட இலாபம்	(1,003,131,419)	201,797,990
மொத்தம்	(49,879,630)	1,097,525,730

44 பயன்பாட்டின் மூலம்

டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது	2023 ரூ.	2022 ரூ.
வருமானத்தின் மூலம்		
கடன்களும் முற்பணங்களும்	5,602,828,733	4,710,774,972
அரசாங்கப் பிணையங்களும் ஏனைய முதலீடுகளும்	3,721,303,675	2,691,193,328
கட்டண மற்றும் தரகு வருமானம்	96,293,245	91,724,320
ஏனைய வருமானம்	179,476,705	23,435,305
மொத்தம்	9,599,902,358	7,517,127,924
வருமானத்தின் பயன்பாடு		
ஊழியர்களுக்கு		
ஊழியர்களுக்கான சம்பளங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	1,015,292,893	1,089,955,264
வழங்குனர்கள்		
செலுத்தப்பட்ட வட்டி	8,732,594,619	5,462,981,407
ஏனைய செலவினங்கள்	1,016,795,513	1,053,196,371
அரசாங்கம்		
கூட்டாண்மை வரிகள்	(161,649,247)	(290,803,108)
நிறுத்திவைக்கப்பட்ட இலாபம்	(1,003,131,419)	201,797,990
மொத்தம்	9,599,902,358	7,517,127,924

பத்து வருட புள்ளிவிபரச் சுருக்கம்

டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது (ரூ. மில்லியன்))	2023	2022	2021	2020	2019	2018	2017	2016	2015	2014
வருமானக் கூற்று										
வட்டி வருமானம்	9,324	7,402	5,254	6,082	5,982	5,524	4,745	4,241	3,879	3,633
வட்டிச் செலவினம்	8,733	5,463	2,951	3,960	3,951	3,577	3,102	2,425	2,057	2,214
தேறிய வட்டி வருமானம்	591	1,939	2,302	2,122	2,030	1,947	1,643	1,815	1,822	1,419
ஏனைய செயற்பாட்டு வருமானம்	276	115	172	178	142	134	171	131	120	113
மொத்த செயற்பாட்டு வருமானம்	867	2,054	2,474	2,300	2,174	2,081	1,814	1,947	1,941	1,532
வட்டியல்லாச் செலவினங்கள்	2,032	1,540	1,490	1,239	1,226	1,164	1,435	1,240	1,260	1,119
வரிக்கு முந்திய தேறிய இலாபம்	(1,165)	(89)	405	572	500	480	379	706	681	413
வரிவிதிப்பு	162	291	(152)	(216)	(81)	(235)	200	270	271	140
வரிக்கு பிந்திய தேறிய இலாபம்	(1,003)	202	253	356	419	244	179	436	410	273
சொத்துக்கள்										
முதலீட்டுப் பிணையங்கள்	4	-	25	21	19	18	18	17	432	19
கடன்களும் முற்பணங்களும்	38,603	39,267	38,103	36,857	35,893	34,225	32,987	28,164	26,523	24,038
ஏனைய சொத்துக்கள்	623	1,076	891	1,104	1,178	932	8,946	7,073	7,201	6,148
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	172	78	56	52	56	64	71	94	74	96
மொத்த சொத்துக்கள்	59,067	56,965	53,323	52,802	47,311	42,597	42,022	35,347	34,232	30,301
பயன்படுத்தப்பட்ட நிதி										
பங்களிக்கப்பட்ட மூலதனம்	890	890	890	890	890	890	890	890	890	890
ஒதுக்கங்கள்	4,564	5,585	5,394	5,130	4,769	4,297	4,067	4,028	3,373	3,128
மொத்த உரித்துவம்	5,454	6,475	6,284	6,020	5,659	5,187	4,957	4,918	4,263	4,018
பொறுப்புக்கள்										
வைப்புக்கள்	52,138	49,140	45,738	45,388	38,872	34,272	33,620	28,845	27,836	24,146
தொகுதிக்கடன்கள்	-	-	-	-	110	110	110	110	110	195
ஏனைய பொறுப்புக்கள்	1,474	1,350	1,301	1,394	2,670	3,028	3,336	1,474	2,022	1,942
மொத்த பொறுப்புக்கள்	53,612	50,490	47,039	46,782	47,311	42,597	42,022	35,347	34,232	30,301
விகிதாசாரங்கள்										
சராசரி சொத்தக்களிலான விளைவு - வ.மு.தே.இ.% (ROA)	-2.01	-0.16	0.76	1.15	1.11	1.13	0.98	2.03	2.11	1.44
பயன்படுத்தப்பட்ட சராசரி நிதியங்களிலான விளைவு%(ROE)	-16.82	3.17	4.11	6.06	7.73	4.82	3.62	9.50	9.90	6.87
ஊழியர்களின் எண்ணிக்கை	354.00	387.00	365.00	369.00	378.00	385.00	392.00	392.00	392.00	407.00
ஊழியர் ஒருவருக்கான தேறிய இலாபம் (ரூ. மில்.)	-2.83	0.52	0.69	0.96	1.11	0.63	0.46	1.11	1.05	0.67
நியதிச்சட்ட ஒதுக்க நிதியம்	306.65	306.65	296.56	283.91	270.92	261.67	246.64	231.36	203.05	191.36
வைப்பீட்டாளர்களுக்கான முற்பணங்கள் (மடங்குகள்)	0.74	0.80	0.83	0.81	0.92	1.00	0.98	0.98	0.95	1.00
உரித்துவ சொத்துக்கள் விகிதம் (மடங்குகள்)	0.09	0.11	0.12	0.11	0.12	0.12	0.12	0.14	0.12	0.13
பங்களிப்பு செய்யப்பட்ட ரூபா ஒன்றுக்கான மொத்த சொத்துக்கள்	66.37	64.01	59.91	59.34	52.79	47.87	47.22	39.72	38.46	34.05
விளைவுறு கருதப்பட்ட பங்கிலாப வீதம் %	-	-	-	59.34	-	25.00	25.00	25.00	25.00	25.00
கருதப்பட்ட பங்கிலாபக் காப்பு	-	-	-	-	-	-	1.91	2.52	2.44	3.57
நாட்டிற்கான எமது பங்களிப்பு										
கருதப்பட்ட பங்கிலாப வரி	-	-	-	-	-	(40.36)	93.27	173.35	167.86	76.42
திரண்ட நிதியத்திற்கான கொடுப்பனவுகள்	-	-	-	-	-	-	10.00	10.00	10.00	10.00

குறிப்புகள்

குறிப்புகள்

நிறுவன தகவல்

வங்கியின் பெயர்

அரச ஈட்டு முதலீட்டு வங்கி

சட்ட ரீதியான அமைப்பு

1975இன் 13 ஆம் இலக்க அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட நிருவனம்

பதிவு செய்த அலுவலகம்

இல. 269, காலி வீதி, கொழும்பு 03,
இலங்கை.

தலைமையகம்

இல. 269, காலி வீதி, கொழும்பு 03.
011-2573561,011-7722722-3
Fax.011-2573346
E-Mail:gm@smib.lk
Web:www.smib.lk

தலைமையகம் / கொள்ளுப்பிட்டி

இல. 269, காலி வீதி, கொழும்பு 03.
011-7722808 011-2575031
butb@smib.lk

கண்டி

இல. 61, 61 1/1, 1வது மாடி, இராஜ வீதி, கண்டி.
081-7722722-3 081-2222819
kandy.mgr@smib.lk

கம்பஹா

இல. 40, யக்கல வீதி. கம்பஹா.
033-7722722-3 033-2221317
gampaha.mgr@smib.lk

காலி

இல. 119, வக்வெல்ல வீதி, காலி
091-7722722-3 091-2246788
galle.mgr@smib.lk

குருநாகல்

இல. 46/1, மிகிந்து மாவத்தை, குருநாகல்.
037-7722722-3 037-2231234
kurunegala.mgr@smib.lk

மத்துகம

இல. 441/1, அகலவத்த வீதி, மத்துகம.
034-7722722-3 034-2243714
matugama.mgr@smib.lk

சிலாபம்

இல.41, குருநாகல் வீதி, சிலாபம்.
032-7722722-3 032-2223996
chilaw.mgr@smib.lk

மாத்தறை

இல. 58 1/1, எப்லான்ட வீதி மாத்தறை.
041-7722722-3 041-2222204
matara.mgr@smib.lk

பத்தரமுல்ல

இல. 56/1, 56 1/1, கடுவெல வீதி,
பத்தரமுல்ல.
011-7723570-1 011-2882144
battaramulla.mgr@smib.lk

கிரிபத்கொட

இல. 140/பி, கண்டி வீதி, கிரிபத்கொட.
011-7723575-6 011-2908833
kiribathgoda.mgr@smib.lk

கேகாலை

இல. 190/3, கண்டி வீதி, கேகாலை..
035-7722722-3 035-2222877
kegalle.mgr@smib.lk

ஹொரண

இல. 155, இரத்தினபுரி வீதி, ஹொரண.
034-7722733-4 034-2265400
horana.mgr@smib.lk

அம்பலாந்தோட்டை

இல. 122, பிரதான வீதி, அம்பலாந்தோட்டை
047-7722722-3 047-2225516
ambalantota.mgr@smib.lk

மட்டக்களப்பு

இல. 245, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு.
065-7722722-3 065-2228480
batticaloa.mgr@smib.lk

யாழ்ப்பாணம்

இல. 127, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
021-7722722-3 021-2220263
jaffna.mgr@smib.lk

அம்பாறை

இல. 864, டி. எஸ். சேனநாயக்க வீதி,
அம்பாறை..
063-7722722-3 063-2223888
ampara.mgr@smib.lk

இரத்தினபுரி

இல. 101, பிரதான வீதி, இரத்தினபுரி.
045-7722722-3 045-2232473
rathnapura.mgr@smib.lk

கதுறுவெல

இல. 892, மட்டக்களப்பு வீதி, மரவாலை சந்தி,
கதுறுவெல.
027-7722722-3 027-2227427
kaduruwela.mgr@smib.lk

வவுனியா

இல. 137, கண்டி வீதி, வவுனியா.
024-7722722-3 024-2227590
vavuniya.mgr@smib.lk

ஹற்றன்

இல. 62/1/2, திம்புலா வீதி, ஹட்டன்.
051-7722722-3 051-2224722
hatton.mgr@smib.lk

பதுளை

இல. 38, வங்கி வீதி, பதுளை.
055-7722722-3 055-2228666
badulla.mgr@smib.lk

மொனராகலை

இல. 218, கச்சேரி வீதி, மொனராகலை.
055-7722733-4 055-2055430
monaragala.mgr@smib.lk

அனுராதபுரம்

இல. 521/7, புதிய பேருந்து நிலையம்,
பிரதான வீதி, அனுராதபுரம்.
025-7722722-3 025-2237476
anuradapura.mgr@smib.lk

மாத்தளை

இல. 343, திருகோணமலை வீதி, மாத்தளை.
066-7722722-3 066-2227878
matale.mgr@smib.lk

பாணந்துறை

இல. 26, சுசன்ந்த மாவத்தை, பாணந்துறை
038-7722722-3 038-2243293
panadura.mgr@smib.lk

optima
Designing Your Year!
Designed & Produced by
Optima Designs (Pvt) Ltd.
A full service design and print company.
www.optimadesigns.lk

அரச ஈட்டு முதலீட்டு வங்கி
இல. 269, காலி வீதி, கொழும்பு 03.
Visit : www.smib.lk | E Mail : info@smib.lk | Dial : 011 - 7722722